Δ2y7 M36
N19

78431

ஓம்

# ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் திவ்விய சரித்திரம்

ஸ்ரீ சுப்பிரமணிய சிவம்
இயற்றியது

[illegible] அச்சியந்திரசாலை,
87, தம்புசெட்டி வீதி, சென்னை.

1919

விலை அணா 2

[All Rights Reserved]

78431

# விஷய ஸூசிகை


| அத்தியாயம் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| | பீடிகை ... ... ... | 1 |
| 1 | ஸ்ரீராமகிருஷ்ணர் ஜனனம் ... | 9 |
| 2 | ஸ்ரீராமகிருஷ்ணருடைய வாலிபப் பருவம் ... ... ... | 27 |
| 3 | ஸ்ரீராமகிருஷ்ணருடைய விவாஹம் ... | 44 |
| 4 | சாக்ஷாத் தேவி தர்சனம் ... ... | 62 |
| 5 | அப்பியாசம் ... ... ... | 75 |
| 6 | பொன்னுசையும் போக்கினுர் ... | 95 |
| 7 | கடுந்தவம் ... ... ... | 111 |
| 8 | தோதாபுரி தர்சனம் ... ... | 133 |
| 9 | ஒன்றேயுள்ளது ... ... | 152 |
| 10 | பிற மதங்கள் ... ... ... | 164 |
| 11 | ஸ்ரீ சாரதா தேவியார் ... ... | 178 |
| 12 | ஸ்ரீராமகிருஷ்ணருடைய அநுபவம் ... | 193 |
| 13 | ஸ்ரீராமகிருஷ்ணர் யாத்திரை ... | 212 |
| 14 | ஸ்ரீவிவேகாநந்தர் ஜனனம் ... ... | 229 |
| 15 | குருவும் சிஷ்யனும் ... ... | 244 |
| 16 | நீங்கள் ஈய்வரனைப் பார்த்ததுண்டா?... | 257 |
| 17 | குரு ஸ்பர்சம் ... ... ... | 268 |
| 18 | சிஷ்ய வாத்சல்யம் ... ... | 277 |
| 19 | ஷை தொடர்ச்சி ... ... | 295 |

| அத்தியாயம் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 20 | ஸ்ரீ ராமகிருஷ்ணர் பெருமை ... | 314 |
| 21 | சிஷ்ய வர்க்கம் ... ... ... | 326 |
| 22 | நரேந்திரருடைய குருபக்தி ... | 338 |
| 23 | போதனைகள் ... ... ... | 353 |
| 24 | ஸ்ரீ ராமகிருஷ்ணரும் நரேந்திரரும் ... | 365 |
| 25 | விசேஷ ஞானம்... ... ... | 393 |
| 26 | நரேந்திரருக்கு அருளினார்... ... | 411 |
| 27 | கேசவ சந்திரஸேனர் ... ... | 441 |
| 28 | ஜீவகாருண்யமே சிவபூஜை ... | 463 |
| 29 | அரிய சம்பாஷணை ... ... | 477 |
| 30 | சில சோதனைகள் ... ... | 513 |
| 31 | ஸ்ரீ ராமகிருஷ்ணரும் கர்மயோகமும்... | 538 |
| 32 | „ பக்தியோகமும் | 548 |
| 33 | மாயை யென்றால் என்ன? ... ... | 583 |
| 34 | துறவு ... ... ... | 597 |
| 35 | சில விசேஷ சக்திகள் ... ... | 615 |
| 26 | ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய ஜீவகாருண்யம் | 629 |
| 37 | நரேந்திரரும் சிலரும் சந்யாசிகளானார்கள்... ... ... | 646 |
| 38 | காசிபுரம் தோட்டம் ... | 663 |
| 39 | என்னைப்பற்றி என்ன நினைக்கிறாய்? ... | 679 |
| 40 | தானே வருவான் ... ... | 684 |
| 41 | ஸ்ரீ ராமகிருஷ்ணர் மகா ஸமாதி ... | 692 |


ஓம்

ஸ்ரீ ராமகிருஷ்ணாய நம:

# பீடிகை

"ஏகம் சத் விப்ரா பெகுதா வதந்தி" என்பது சுருதி மொழி. இம்மொழியே உலகிலுள்ள எம்மொழிகட்கும் ஆதாரமா யுள்ளது; எம்மதங்கட்கும் ஆணிவேரா யுள்ளது. உலகிலுள்ள சாஸ்திரங்க ளெல்லாம் ஓய்வடைந்து நிற்பது இம்மொழியிலேயே. பண்டித பாமர சாதாரண சர்வ ஜனங்களும், இப்பொழு தல்லாவிடினும் எப்பொழுதாவது இம்மொழியின் உண்மையை அறிந்தே தீரவேண்டும். இம்மொழியின் உண்மையை அறியாவிடில், வேறு யாதிருந்தும் எப்பயனுமில்லை. மனிதன் கோடீச்வரனு யிருக்கலாம்; மாடமாளிகை கூடகோபுரங்கள் கட்டி வாழலாம்; எடுக்கப் பிடிக்க எண்ணாயிரம்பேர் சூழ்ந்து ராஜபோகத்திலே வாழலாம்; திரிலோகாதிபதியென தேவேந்திர பட்டம் பெற்றும் வாழலாம்; மண்ணவரும் விண்ணவரும் மற்றுமுள்ளவரும் வந்தெதிர்வணங்க, அணிமா-மகிமா முதலிய அஷ்டமா சித்திகளையும் அடைந்து, அண்ட பிண்ட சராசராதிகள் அனைத்தையும் பிரமிக்கும்படி செய்து வாழலாம்; ஆயினும், இவர்கட்கு மனச்சாந்தி யுண்டாவதில்லை; துக்க நிவர்த்தி யுண்டாவதில்லை; ஆநந்தப்பிராப்தி யுண்டாவதில்லை. இவர்கள், தேகமே நித்யம், போகமே மோக்ஷம் என்கிற கொள்கையினை யுடையவர்களாய் இந்நாற்றச் சடலத்

தைச் சுமந்து திரிவதிலே சந்தோஷமுடையவர்களாகி, விட்டிற்பூச்சி விளக்கினிடத்தே சுகத்தைக் கருதுவது போல, ஸ்தூல சூட்சும சரீரங்களால் அநுபவிக்கும் சுகமே சுகமெனக் கருதி வாணாளை வீணாளாகக் கழித்து, ஜனன மரண சக்கரத்திலே சுழன்று திரிந்து உழல்கின்றனர். எத்தனையோ கோடி ஜன்மங்களாக இவர்களிடம் குடித்து வந்திருக்கும் மனோவாசனையானது இவர்களை மென்மேலும் தன்னுடைய போக்கிலேயே இழுத்துக்கொண்டு செல்கிறது. இந்த மனத்தை ஜயித்து, பின்புறம் திரும்பித் தங்களுடைய யதாஸ்தானம் இன்னதென்று கண்டுபிடித்துக் கொள்வதற்கு இவர்களுக்குச் சக்தியில்லை; சமர்த்து இல்லை; திடசங்கற்பமில்லை. மனத்தை ஜயிக்கவேண்டுமென்கிற எண்ணங்கூட இவர்களுக்குக் கிடையாது. இவர்கள் பிரபஞ்சத்தை நித்தியமாகக் கருதியவர்களாயிற்றே! இவர்களுக்கு எங்ஙனம் சத்தியத்தினிடத்திலே புத்தி தோன்றும்? "ஒன்றேயுள்ளது; பெரியோர் பலவிதமாகக் கூறுகின்றனர்." இந்தச் சத்தியம் உணரப்படாதவரையில், ஈரேழு பதினான்கு உலகங்கட்கும் இறைவனாயிருந்தும் பயனில்லையென்பது சத்தியம்! சத்தியம்!! சத்தியம்!!!

பார்க்கப்படுகின்ற இந் நாமரூபங்களுக்கு அஸ்திவாரமாக ஏதோ ஒன்று, இன்னதென்றும் இத்தகையதென்றும் கூறப்பட முடியாதது, இருக்கின்றது என்பது எள்ளறிவோருக்கும் புலப்படும். இப்பொழுது நாய், மனிதன் என்னும் இரண்டு பிராணிகளை எடுத்துக்கொள்வோம். இந்த



இரண்டு பிராணிகளிடத்திருந்தும் முறையே நாய் என்கிற நாமத்தையும், மனிதன் என்கிற நாமத்தையும், நான்கு கால், ஒரு வால் முதலியவற்றாலாகிய நாயினுடைய வடிவத்தையும், இரண்டு கால், இரண்டு கை, முகம் முதலியவற்றாலாகிய மனிதனுடைய வடிவத்தையும் எடுத்து நீக்கிப்பார்த்தால், ஏதோ ஒன்று இருக்கின்றது. அது இத்தகையதென்று விளங்குவதில்லை, இன்னதென்று சொல்ல முடிவதில்லை. ஆனால், ஒன்று உள்ளதென்பது மாத்திரம் உண்மையென்று புலப்படும். அந்த ஒன்றே ஏகம் எனப்படுகிறது. ஒன்று என்று கூறினவுடனே இரண்டு, மூன்று முதலிய எண்கள் தாராளமாகத் தோன்றிவிடுவது வழக்கம். ஆதலால், இங்குச் சத்திய வஸ்துவைக் குறிக்கின்ற ஒன்றுக்கு அதன் பின்னே பல தோன்றும்படியான பொருள் இருக்கக்கூடாது. இதனாலேயே ஆன்றோர் ஏகம் என்ற பதத்திற்கு ஸஜாதீய, விஜாதீய ஸ்வகதபேதரகிதமானது என்று லக்ஷணம் கற்பித்துள்ளார். ஸஜாதீயம் என்றால் அந்த ஜாதியைச் சேர்ந்தது என்று பொருள்; அதாவது, உதாரணமாக: ஒரு மனிதனுக்கு இன்னொரு மனிதன் ஸஜாதீயம்; ஒரு நாய்க்கு இன்னொரு நாய் ஸஜாதீயம்; ஒரு கழுதைக்கு இன்னொரு கழுதை ஸஜாதீயம். இப்பொழுது நாமரூபங்கட்கு அதீதமாயுள்ள இந்த ஏக வஸ்து ஸஜாதீயரகிதமெனப்பட்டது. அதாவது, அந்த வஸ்துவைப்போல இன்னொரு வஸ்து கிடையாது. இன்னும், விஜாதீயரகிதமெனப்பட்டது; விஜாதீயம் என்றால் வேறு ஜாதியென்று பொருள். மனிதனுக்கு நாய் விஜாதீயம், நாய்க்குக் கழுதை விஜா

தீயம். இப்பொழுது நாமரூபங்கட்கு அதீதமாயுள்ள இந்த ஏகவஸ்து விஜாதீய ரகிதமெனப்பட்டது; அதாவது, அந்த வஸ்துவுக்கு அந்நிய ஜாதியாக இன்னொரு வஸ்து கிடையாது. இன்னும், அது சுவகதபேதரகித மெனப்பட்டது. ஸ்வகதம் என்றால் ஒரே பொருளின் கிளைகள் என்று பொருள். விருக்ஷத்துக்குக் கிளை ஸ்வகதம்; மனிதனுக்குக் கை ஸ்வகதம்; நாய்க்கு அதன் ஒவ்வொரு அங்கமும் ஸ்வகதம். இப்பொழுது நாமரூபங்கட்கு அதீதமாயுள்ள இந்த ஏகவஸ்து ஸ்வகதபேத ரகித மெனப்பட்டது; அதாவது, அந்த வஸ்துவுக்கு இணையாக இன்னொரு வஸ்து கிடையாது. இப்படி ஸஜாதீய, விஜாதீய ஸ்வகதபேத ரகிதமான வஸ்துவே ஏகம்—ஒன்று.

இனிமேல் சத் என்கிற பதத்தின் பொருளைப் பார்ப்போம். சத் என்பதற்கு உள்ளது என்று பொருள். அதாவது: எப்பொழுதும், என்றும், எந்த நிமிஷத்திலும் உள்ளது. நேற்று இருந்து இன்று இல்லாதது சத் ஆகாது. இன்று இருந்து நாளை இல்லாமற்போவது சத் ஆகாது. நேற்றும் இன்றும் நாளையும், என்றும் ஒரேதரத்ததாய், ஒரே மாதிரியாய், மாறுதலற்றதாய், அழிவற்றதாய் உள்ளதே சத். ஒருவன் பழுதையைக் கண்டு பாம்பென மயங்குகின்றான். அவன், அதைக் காண்பதற்கு முந்தியும், கண்டு பிரமித்தபொழுதும், அப்பிரமை நீங்கியபொழுதும், அந்தப் பழுதை அங்கேயே உள்ளது. அதுபோலவே, அந்த ஏகவஸ்துவும் திரிகாலத்திலும் உள்ளது.



### ஏகம் சத்—ஒன்றே யுள்ளது.

விப்ரா பெகுதா வதந்தி—ஆன்றோர் அதனைப் பலவிதமாகக் கூறுகிறார்கள்.

இவ்வுண்மையை அநுபவத்தி லறிந்தவுடன், மனிதர் அநேகமாகிய துன்பத்தினின்றும் விடுபட்டு, ஏகமாகிய நித்தியசுகத்தை யடைவார்களென்பது திண்ணம். இல்லையேல், துன்பமாகிய சாகரத்தில் அமிழ்ந்து அமிழ்ந்து, துக்கமாகிய உப்புத்தண்ணீரைக் குடித்துக் குடித்து, மூச்சுத் திணறித் திண்டாடிக்கொண் டிருக்கவேண்டியதுதான். ஆனால், இவ்வுண்மை மொழியை அநுபவத்திலே அறிந்து ஆநந்தம் எய்துபவர்கள் ஆயிரத்திலே, பதினாயிரத்திலே, லக்ஷத்திலே ஒருவர் உண்டோ? என்பதுதான் சந்தேகம். வேதவேதாந்தக் கிரந்தங்களையும், உபநிஷத்துக்களையும், பகவத்கீதையையும் தலைகீழாகப் படித்தறிந்து, மழைக்காலத்துத் தவளைகள்போலக் கத்தத் தெரிந்தவர்கள் பலர் இருக்கலாம். தாங்கள் சொல்வது தங்களுக்கும் தெரியாமல், கேட்பவருக்கும் தெரியாமல் பெரிய பெரிய சம்ஸ்கிருத பதங்களைப் பிரயோகித்துத் தாங்களும் பிரமித்துப் பிறரையும் பிரமிக்கும்படி செய்யவல்ல பண்டிதர்கள் பலர் உண்டு. ஆனால், இவர்களையெல்லாம் உலகம் ஞானிகளென்று கொண்டாடுகிறதில்லை; மெச்சுகிறதில்லை. இவர்கள் வெறும் புஸ்தகப் பூச்சிகளாகவே யிருக்கிறார்கள். ஒரு பெரிய அலமாரி நிரம்ப விலையுயர்ந்த புஸ்தகங்கள் பல வைக்கப்பட்டிருந்தாலும், அதனால் அவ்வலமாரி வித்வானாய்

விடுமா? அஜாக்கிரதையாக அடுக்கிவைக்கப்பட்டுள்ள விசேஷ கிரந்தங்களை யெல்லாம் அரித்துத் தின்றுவிடுகின்ற கறையான் பூச்சி ஞானியாய்விடுமா? அதுபோலவே, வெறுமே புஸ்தகங்களை மாத்திரம் படித்து அணுவளவும் அநுபவமில்லாது, வாசாஞானம் பேசித் தம்மிடம் வந்தவர்களை யெல்லாம் வாயடக்கி ஏமாற்றுகின்றவர்கள் ஞானிகளாகார்கள். மனத்தை ஒருமுகப்படுத்தி, ஆத்மவஸ்துவினிடத்திலே லயம் செய்து, பிரஹ்மநிஷ்டாதத்பரர்களாய், சுகஸ்வரூபிகளாய், எவ்வித அவஸ்தையிலிருக்கும்படி நேரிட்டாலும் எப்பொழுதும் ஒன்றேயா யிருப்பவர்களாய், கலங்காத நெஞ்சுடைய ஞானதீரர்களாய் உள்ளவர்களே உண்மை ஞானிகளாவர். இவர்கள் எப்பொழுதோ, எங்கோ அபூர்வமாகத் தோன்றுவார்கள். எத்தனையோ கோடி ஜன்மங்களிலே செய்துவந்த நிஷ்காமத்தின் பலனாக மனது சுத்தமாகி, தெளிவடைந்து, திடவைராக்கியத்தினாலே ஒருமுகம் பெற்று, ஆத்மவஸ்துவினிடத்திலே லயிக்கவேண்டும். இம்மாதிரி ஞானிகள் உண்டாவது வெகு அருமை. இத்தகைய ஞானி ஒருவர் இருக்கும் இடத்தைச் சுற்றி ஒருயோசனை தூரத்திலுள்ள ஜீவராசிகள் அனைத்தும் உயர்பதவி யடைந்துவிடுமென்று வேதங்கள் கோஷிக்கின்றன. அத்தகைய மகாஞானிகளிலே யொருவர் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர். இவரை அவதாரபுருஷரென்றும் கூறலாம். ஏனெனில், இவர் பிரஹ்மநிஷ்டாதத்பரர்க ளென்று சொல்லப்படுகின்ற பிறர்போன்று, அந்தர்முக ஆநந்தத்தை யடைந்துகொண்டு அப்படியே யிருந்துவிடவில்லை. தாம் அடைந்த ஆநந்தா



மிருதத்தை எல்லோருக்கும் பங்கிட்டுக் கொடுத்தார். எத்தனையோ ஆயிரக்கணக்கானவர்கள் இவருடைய உபதேசமொழிகளைக் கேட்டு உய்ந்துவிட்டார்கள். இவருடைய ஜீவித சரித்திரமானது அதியற்புதமானது. "ஏகம் சத் விப்ரா பெகுதா வதந்தி" என்னும் மொழியை அவர் பிரத்தியக்ஷத்தில், கண்கூடாகத் தமது அநுபவத்தில் உண்மையே யென்று காட்டினார். இவர் போன்ற மகான்களை நமது இந்தியாதேசம்—பாரதமாதா—சமீபகாலத்தில் அளித்துள்ளதாக நமக்குத் தெரியவில்லை. இதற்கு முன்னமே இவருடைய ஜீவித சரித்திரமொன்று சிறு புஸ்தகமாக வெளியிடப்பட்டிருந்தபோதிலும், அவருடைய சரித்திரத்தையும், அதிலுள்ள ரகஸ்யங்களையும் ஒரு பெரும் புத்தகரூபத்திலே எழுதி வெளியிடவேண்டுமென்று நெடுநாட்களாக நான் கொண்டிருந்த அவா இப்பொழுது நிறைவேறப்போகிறதைப்பற்றி நான் சந்தோஷிக்கிறேன். இந்தியா தேசமானது வீழ்ச்சியடைந்து மறுபடியும் எழுந்திருந்து தனது மேன்மையைப் பிரகாசிக்கச் செய்த சமயங்களிலெல்லாம், முன் அறிகுறியாக மகான்கள் உண்டாயிருந்திருக்கிறார்கள் என்பது சரித்திர உண்மை. ஆதலால், இப்பொழுதும் ஸ்ரீராமகிருஷ்ணர் அவதரித்ததின் பின்னரே, இந்தியா முன்னேற்ற மடைதற்கு வேண்டிய ஏற்பாடுகள் ஸ்தாபிக்கப்படலாயின. இந்தியா முன்னேற்றம் அடைவது நிச்சயம் என்பதற்கு அறிகுறியாகவே ஸ்ரீராமகிருஷ்ணர், ஸ்வாமி விவேகாநந்தர் முதலியோர் அவதரித்தனர். இவருடைய சரித்திரத்தை வாசித்துணர்ந்தபிறகு ஞானுபவவிசேஷத்தில் மாத்திரம் இவர்

பெரியார் என்று சொல்ல எனக்கு மனம் வரவில்லை. பாரத தேசம் முழுமைக்குமே ஒருவித நூதன சக்தியையும் சம்பிரதாயத்தையும் அளித்து, இந்தியாவுக்கு ஒருபுதிய உயிர் கொடுத்து ஊக்கிவிட்டது ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சக்தியேயென்பதில்சந்தேகமில்லை. ஆகையால், அவருடைய சரித்திரம் நமது தமிழ் ஜனங்களால் பெரிதும் படிக்கப்படத்தக்கது; அத்தியாச்சர்யமானது; அதிவினோதமானது; இப்படியும் நடக்குமோவென்று எல்லோராலும் அதிசயிக்கப்படத்தக்கது. என்னுடைய சிற்றறிவுக்கு எட்டியமட்டில் எழுதப்பட்ட இப்புத்தகம் நமது தமிழ் நாட்டு லக்ஷக்கணக்கான ஜனங்களுக்குப் பயன்பட்டு, அவர்கள் உய்யுமாறு சாக்ஷாத் மகாசக்தி அருள்புரிவாளாக! இம்மகாசக்திக்கும் காரணமாய் "ஏகம் சத் விப்ரா பெகுதா வதந்தி" என்ற சுருதி மொழியினாலே உபதேசிக்கப்படுகின்ற சத்திய வஸ்துவானது எல்லாருடைய அநுபவத்திலும் இரண்டற்று ஒன்றேயா யிலங்குவதாக!

சுப்ரமணிய சிவா

பீடிகை முற்றிற்று.

---

ஓம்

ஸ்ரீ ராமகிருஷ்ணாய நம:

# ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் சரித்திரம்

## 1-ம் அத்தியாயம்

## ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஜனனம்

உலகிலுள்ள தேசங்கட்கெல்லாம் பண்டைக்காலம் தொட்டு உயிரையும் ஒளியையும் அளித்துப் பிரகாசிக்கச் செய்த நமது பாரதவர்ஷமானது சென்ற ஓராயிரம் வருஷங்களாக அந்நிய நாட்டினருடைய ஆட்சிக் குட்பட்டு, அதனால் குணத்திலும் தன்மையிலும் நாகரிகத்திலும் பலவிதமான மாறுதல்களை யடைந்திருக்கிறது. ஆனால், இந்தியாவுக்குப் பிரத்தியேகமான ஒரு நாகரிக முண்டு; இந்தியாவுக்குப் பிரத்தியேகமான ஒரு உயிர்நாடி யுண்டு; இந்தியாவுக்குப் பிரத்தியேகமான ஜீவாதாரம் ஒன்று உண்டு. இந்த ஜீவாதாரக் கட்டடம் அழிந்துபோகாம லிருக்கும் வரையில் இந்தியாதேசமும் அழிந்துபோகாது. இந்த ஜீவாதாரமாவது இந்தியா தேசத்து ஸநாதனதர்மமே. காட்டேறி, கருப்பண்ணன் முதலிய தேவதைகளைக் கள், சாரா

யம் முதலியன வைத்துப் பூஜிப்பவர்கள்முதல், ஏகமேவாத்விதீயம் பிரஹ்மம் என்று சுத்தாத்வைத லக்ஷியாநுபூதியடைந்து தானே தானாய் இலங்கும் மகனீயர்கள் வரையில் சகலவிதமான பரிபக்குவிகளுக்கும் அவரவர்களுடைய மன பரிபாகத்துக்குத் தகுந்த பிரகாரம் வேண்டுவதைத் தெரிந்தெடுத்துக்கொண்டு, அதைப் பின்பற்றி நடந்து மேன்மேலும் முன்னேறி உய்வதற்கு இடம் கொடுக்கின்ற மதமே ஸநாதன தர்மமாகும். கிறிஸ்தவமதம், பௌத்த மதம், மகம்மதியமதம் முதலிய சகல மதங்களும் ஸநாதன தர்மத்துக்குள் அடங்கியவையேயாம். ஏனெனில், அம் மதங்களிலே கூறப்பட்டுள்ள கொள்கைகளெல்லாம் ஸநாதன தர்மத்தி லடங்கியுள்ளன. ஸநாதனதர்ம மென்பது ஒரு பெரிய முழுப்பொருளென்றும், மற்ற மதங்களெல்லாம் அதன் சிறிய பெரிய பாகங்களென்றும் கூறுவது தகும். ஆகையால், பிரபஞ்சம் முழுவதையும் சேர்த்தணைத்து இன்பாநுபூதிக்கு இட்டுச் செல்லவல்ல இந்த ஸநாதனதர்மமே இந்தியாதேசத்தை ஆதிமுதல் காத்துவருகிறது. அந்நிய தேசத்தினருடைய கல்வியும், ஒழுக்கமும், நாகரிகமும் இந்தியாதேசத்து ஸநாதனதர்மத்தை அழித்துவிடுமோ என்று பெரியோர்கள் பயந்து நடுங்கியபொழுதெல்லாம், அதாவது: தேகமே ஆத்மா போகமே மோக்ஷம் என்கிறகொள்கையொன்றையே ஆதாரமாக உடைய பிறநாட்டுப் போதனைகளும் நாகரிகமும் இந்தியர்களிற் பெரும்பான்மையோருடையவும் மனத்தில் ஏறி, அவர்கள் ஸநாதன தர்மத்தைக் கைவிட்டு, அதனால் அதை



அழிந்து போகும்படி செய்துவிடுவார்களோ என்று ஆன்றோர் ஆறாத் துயரமடைந்து வருந்திய காலத்திலெல்லாம், சத்தாமாத்திரமாயுள்ள சத்தியவஸ்துவைத் துரத்திவிட்டு ஜடமானது சிம்ஹாசனம் வகிக்க முயன்றபொழுதெல்லாம், தர்மம் க்ஷீணித்து அதர்மம் ஓங்க முயற்சித்தபொழுதெல்லாம், புண்ணியம் குறைந்து பாபம் வளர ஆரம்பித்தபொழுதெல்லாம்,—இக் காலங்களிலெல்லாம், அவ்வப்பொழுது உண்டாகின்ற சந்தர்ப்பங்களை ஜயித்து, மறுபடியும் ஸநாதன தர்மத்தை உலகிலே நிலைநிறுத்துவதற்காக ஆன்றோர் அவதரிக்கின்றனர் என்பது சரித்திரப் பிரமாணம். சாக்ஷாத் எம்பெருமானுக்கு இந்தத் தேசத்தினுடைய க்ஷேமத்திலே பிரத்தியேக காருண்ய திருஷ்டிபோலும்! பூமியானது நமது சித்திர விற்பன்னர்களாலே பசுரூபமாக வரையப்படுகின்றது. அதிலே பால் சுரக்கும் மடி இந்தியா தேசமேயாம். ஆதிகாலம் தொட்டு உலகு முழுதுக்கும் உபசாந்தியையும் சமாதானத்தையும் அளிக்கவல்ல அமிருதசஞ்சீவி இங்கிருந்தே ஏராளமாகத் தாராளமாகச் சுரந்துபெருகிஎல்லாத்தேசங்கட்கும் இன்பத்தைக்கொடுத்திருக்கின்றது. இன்னும் உலகு உய்ய வேண்டுமானால் இங்கிருந்தேதான் ஞானவொளி வீசவேண்டும். இல்லையேல், உலகு அந்தகாரத்திலே அழிந்துவிடு மென்பது நிச்சயம். ஆகையால், ஈச்வரனுடைய பிரத்தியேக காருண்யம் இந்தத் தேசத்தின்மீது எப்பொழுதும் செலுத்தப்படுவது ஆச்சர்யமன்று. இந்தத் தேசத்தின்மீது காருண்யம் செலுத்தினால்

உலகு முழுதின்மீதும் காருண்யம் செலுத்தியதுபோல் அல்லவா?

ஆதலால், பாரதவர்ஷத்தைப் பாதுகாப்பதற்கு ஈச்வரன் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை. ஈச்வரனுடைய காருண்யம் மாத்திரம் இல்லாதிருந்திருந்தால், ஈச்வரனுடைய காருண்யமாகிய ஸநாதன தர்மம் மாத்திரம் இந்தியாவிலே இல்லாதிருந்திருந்தால், பாபிலோன், ரோமாபுரி, கிரேக்கதேசம் முதலியவற்றின் சக்ராதிபத்தியங்களெல்லாம் அழிந்து இருந்த இடம் தெரியாமற் போய்விட்டன போலவே, இந்தப் பாரதவருஷமும் அழிந்துபோயிருக்குமென்பது திண்ணம். ஈச்வரனுடைய பிரத்தியேக கிருபைமாத்திரம் இந்தத் தேசத்தின்மீது இல்லாதிருந்திருந்தால், அமெரிக்காவிலே, ஆப்பிரிக்காவிலே, ஆஸ்டிரேலியாவிலேயிருந்த பூர்வீகக் குடிகள் எப்படியவர்களுடைய வகுப்புப் பெயர்கள்கூடத் தெரியாமல் மறைந்துவிட்டார்களோ, அப்படியேதான் இந்திய தேசவாசிகளாகிய நாமும் மறைந்துபோயிருப்போம். பகவான் ஸ்ரீ கிருஷ்ணனும், “புண்ணியம் க்ஷீணித்துப் பாபம் ஓங்குகிறபொழுதெல்லாம், நான் சிஷ்டர்களை ரக்ஷித்துத் துஷ்டர்களைச் சிக்ஷிக்கும்பொருட்டு அவதரிக்கிறேன்’ என்று கூறுகிறார். ஆதலால், நமது இந்திய தேசத்திலே இப்பொழுது ஸ்ரீ ராமகிருஷ்ணர்போன்ற அவதார புருஷர் ஜனிப்பதற்கு இப்பொழுது அவசரம் உண்டாயிற்று? என்று கவனிப்போம்.



ஆரிய நாட்டிலே ஐரோப்பியர்கள் புகுந்து பலமாக ஸ்தாபித்துக்கொண்டுவிட்டார்கள். காச்மீரம் முதல் கன்னியாகுமரிவரையில் உள்ள பூமியெல்லாம் ஆங்கிலேயர்களுடைய ஆட்சிக்குள் வந்துவிட்டது. வங்காளத்திலே கல்கத்தா நகரமானது ஆங்கிலேயர்களுடைய இந்திய சக்ராதிபத்தியத்துக்கு ராஜதானி நகரமாய்விட்டது. ஆகவே, வங்காளதேசத்திலே ஐரோப்பியர்கள் மிகுந்து, அவர்களுடைய நாகரிகம் பெருகிவிட்டது. மேனாட்டு மினுமினுக்கும், பளபளப்பும் அநியாயமாக ஹிந்து ஜனங்களுடைய மனத்தைக் கவர ஆரம்பித்துவிட்டது. ஏற்கனவே மண், பெண், பொன் ஆகிய மூவாசையாலும் பிடிக்கப்பட்ட பெரும்பான்மையோருக்கும் இந்த மேனாட்டு நாகரிகமானது மிகவும் சௌகர்யமானதாகவும், அநுகூலமானதாகவும் தோன்றிற்று. ஹிந்துக்கள் வர்ணாச்ரம தர்மவிதிகளையெல்லாம் அறவே கைவிடத் தொடங்கிவிட்டார்கள். வைதிக மார்க்கமானது அழிய ஆரம்பித்துவிட்டது. ஆசாரங்களெல்லாம் பறந்துவிட்டன. எவருக்கும் ஈச்வர ஞாபகமில்லாமற் போய்விட்டது. பிரபஞ்சவாசனை தடித்துப் பருத்துவிட்டது. தர்மத்தினிடத்திலே, சிருஷ்டி நீதியினிடத்திலே பயமென்பதில்லாமற்போய்விட்டது. கிறிஸ்தவமத மொருபக்கம் பல அலங்கோலங்கள் செய்துவந்தது. பெரும்பான்மையோரும் நாஸ்திக மார்க்கத்தை யநுசரிக்கப் புறப்பட்டார்கள். தேசத்திலே புண்ணியம் குன்றிவிட்டது; பாபம் அதிகரித்தது. பெரியோர் ஏங்கினார்கள், பரதவித்தார்கள். மேனாட்டு நாகரிகமாகிய பெருவெள்ளத்திலே எங்கே இ-

தியா அடித்துக்கொண்டு போகப்பட்டு, அந்தகாரமாகிய அஞ்ஞானக் கடலிலே அமிழ்ந்திவிடுமோ? என்று ஆங்காங்கிருந்த ஆன்றோர் பலரும் பயந்தனர். ஆனால், இந்தியாவுக்கு அழிவு நேரிடுமா? ஒருபொழுதும் நேரிடாது. இந்தியாவைக் காத்து ரக்ஷிக்கும் பொருட்டு ஈச்வரனே, மகா ஞானியாகிய பகவான் பரமஹம்சராகிய ஸ்ரீ ராமகிருஷ்ணராக அவதரித்தார்.

வங்காளத்திலே டேரி என்று ஒரு கிராமம் உளது. அந்தக் கிராமத்திலே க்ஷுதிராம் சட்டோபாத்தியாயர் என்று ஒரு விப்பிர சிரேஷ்டர் இருந்தார். இவர் ஒழுக்கத்தில் உயர்ந்தவர், தர்ம நிஷ்டர், ஈச்வரபக்தி மிகுந்தவர். இத்தகைய உயர் குணங்கள் வாய்ந்தவர் ஸ்வதந்திரப் பிரியராயிருப்பா ரென்பதில் சந்தேகமு முண்டோ? அவ்வூரிலே அப்பொழுது ஒரு ஜமீந்தார னிருந்தான். அவன் மிகவும் கெட்டவன். தனக்குக் கீழ் இருந்த குடித்தனக்காரர்களிடத்திலே அக்கிரமங்கள் மிகச்செய்து, அநியாயமான வரிகள் விதித்துக் கொடுமைகள் பல புரிந்துவந்தான். சட்டோபாத்தியாயருக்கு அவனுடைய குணங்கள் பிடிக்கவில்லையாதலால், சந்தர்ப்பம் நேரிட்டபொழுதெல்லாம் அவர் அவனைக் கண்டித்துக்கொண்டே வந்தார். சட்டோபாத்தியாயர் அவ்வளவு தனவந்த ரல்லாவிடினும், அந்த ஜமீந்தாரனுக்கு அவரிடத்திலே சிறிது பயமுண்டு. ஏனெனில், அவர் நேர்மையும் ஒழுக்கமும் உண்மையாய் வாய்ந்தவரல்லவா? இத்தகையோரைக் கண்டால் ஈச்வரனும் நடுங்க



வேண்டுமே! அந்த ஜமீந்தாரனுக்கு விரோதமாக ஒரு வியாஜ்யம் ஏற்பட்டது; அந்த வழக்குப் பிரதிகூலமாய்விடும் போலிருந்தது; ஆனால், சட்டோபாத்தியாயர் மாத்திரம் ஜமீந்தாரனுக்கு அநுகூலமாகச் சாட்சி சொல்லும்பக்ஷத்தில், அந்த வழக்கில் ஜமீன்தாரனே ஜயித்துவிடுவான். எதிர் கக்ஷியிலே ஆயிரம் சாக்ஷிகள் சொன்னபொழுதிலும், சட்டோபாத்தியாயருடைய ஒரு சாக்ஷியம் வழக்கை ஜயித்துக்கொண்டு வந்துவிடுமென்பது நிச்சயம். இது அந்தப் பிரதேசத்து நியாயாதிபதிகளெல்லோருக்கும் தெரியும். ஆதலால், ஜமீந்தாரன் சட்டோபாத்தியாயரிடம் வந்து, தனக்கு அநுகூலமாக அவர் பொய்ச் சாக்ஷியம் கூறவேண்டுமென்று முதலில் மிகவும் பணிந்து கேட்டுக்கொண்டான். சட்டோபாத்தியாயர் மறுத்துவிடவே, அவன் எவ்வளவோ சொல்லிப்பார்த்தான்; ஏராளமான பூஸ்திதிகள் கொடுப்பதாக வாக்களித்தான். அவன் என்னதான் சொன்னபொழுதிலும், சட்டோபாத்தியாயருடைய மனம் இசையவில்லை. ஜமீந்தாரனுக்குக் கோபம் வந்துவிட்டது. அவர் தனக்கு அநுகூலமாகச் சாட்சியம் சொல்லாவிட்டால், அவருடைய சொத்துக்களை ஜப்திசெய்து தன்னுடைய சொத்துக்களுடனே சேர்த்துக்கொள்வது மன்றியில், அவரை அவ்வூரைவிட்டுத் துரத்திவிடுவதாயும் பயமுறுத்தினான். ஜமீன்தாரன் அப்படிச் செய்வான்தான்! ஆங்கில அரசாங்கம் பலமாக ஸ்தாபிக்கப்பட்டு அக்கிரமங்களை யெல்லாம் அடியோடு வேரறுத்துவிட்ட இந்நாட்களிலேயே ஜமீந்தார்கள் பஞ்சமாபாதகங்கள் பட்டப்பகலில் செய்யத்துணிகின்றார்க ளென்றால், கிழக்கு

இந்தியா கம்பெனியார் பலஹீனமாக அரசாங்கம் நடாத்தி வந்த அக்காலத்திலே, ஜமீந்தார்களுடைய அக்கிரமங்களைப் பற்றிக் கேட்பானேன்?

ஆனால், நமது சட்டோபாத்தியாயர் அந்த ஜமீன்தாரனுடைய இந்த மிரட்டுக்குப் பயந்து பொய் சொல்பவரா? அவர் உண்மையான பிராஹ்மணர்; அசத்திய மார்க்கத்திலே தேவேந்திர பதவி கிடைத்தாலும் அதைத் திரணமாகக் கருதுபவர். ஆகையால், அவர், இனிமேலங்கிருந்தால் அந்த ஜமீந்தாரன் தமக்கு ஏதேனும் தீங்கிழைப்பானென்று கருதி, தமது சொத்து ஸ்வதந்திரங்களையெல்லாம் விட்டுவிட்டு, தமது மனைவியை யிட்டுக்கொண்டு அவ்வூருக்குக் கிழக்கே இரண்டு மூன்று மைல் தூரத்திலுள்ள காமார்புகூர் என்ற சிறு கிராமத்துக்கு வந்து சேர்ந்து, அங்கே சில பிரபுக்களுடைய ஆதரவடைந்து உபாய காலக்ஷேபம் செய்துவந்தார். மிகுந்த வறுமையிற் காலம் கழிக்கும்படி நேரிட்டும், இவருக்கு இயற்கையாயிருந்த ஈச்வரபக்தி சிறிதும் குன்றவில்லை. வீட்டிற்குத் திடீரென்று எவரேனும் அதிதிகள் வந்துவிட்டால், தமக்காக ஆக்கியிருக்கும் அன்னத்தை அவர்களுக்கு இட்டு உபசாரணை செய்துவிட்டுத் தாம் உபவாசம் இருந்துவிடுவார். ஆழ்ந்த வறுமையிலே அகப்பட்டு உழன்றாராயினும், அவர் தமது வைதீக ஆசாரத்தினின்றும் அணுவளவேனும் தவறார். இவருக்கு வாக்குச் சித்தி முதலிய பலசக்தி யுண்டென்று அவ்வூராருக்கு நம்பிக்கை யதிகம். அவ்வூரார் இவரிடத்தில் ஈச்வர விச்வாஸம் வைத்



திருந்தார்கள். இவர் நின்றுகொண்டிருக்க இவர் முன்னே எவரும் உட்காரத் துணியார்கள், இவர் இருக்கும்பொழுது, இவர் எதிரே எவரும் பயபக்தியுடனே மௌனமாயிருப்பார்கள், அல்லது மெல்லக் காதோடு காதுவைத்துப் பேசுவார்கள். இவருடைய இஷ்ட தெய்வம் ஸ்ரீ ராமபிரானேயாயினும், இவர் தினந்தோறும் விடாது ஆராதித்து வந்தது பெருமாளை யாயினும், இவருக்குச் சிவபிரானிடத்திலே வெறுப்புக் கிடையாது. சர்வமூர்த்தங்களும் ஏகமூர்த்தமே என்னும் உண்மையை இவர் நன்றாயறிந்திருந்தார். ஸ்ரீ ராம பூஜை சமயத்திலே அவருக்கு எவ்வளவு குதூகலமுண்டாகுமோ, அவ்வளவு குதூகலம் சிவபூஜை சமயத்திலும் உண்டாவதுண்டு. எந்த எந்த தேவதைகளுக்கு எந்த எந்த சாமக்கிரியைகளை வைத்துக்கொண்டு பூஜைசெய்ய வேண்டுமோ, எப்படி யெப்படி உபாசிக்க வேண்டுமோ, அந்த அந்த சாமக்கிரியைகளினாலே அப்படியப்படி விதி வழுவாது பூஜிப்பார்.

ஒரு சமயத்திலே அவர் அவ்வூரிலிருந்து சுமார் 15 மைல் தூரத்திலிருந்த தமது புத்திரியைப் பார்க்க அவாமிகுந்தவராகி, அந்தக் கிராமத்தை நோக்கி நடந்துசென்றார்; பாதிவழிக்குமேல் போய்விட்டார். அங்கே ஒரு வில்வமரம் தளிர்த்துத் துளிர்த்துப் பசிய இலைகளை நிரப்பிக்கொண்டிருந்ததைக் கண்டு, இவர் ஆநந்தமடைந்து, உடனே தம்மால் சுமந்து கொண்டுபோகக் கூடியமட்டும் வில்வதளங்களைப் பறித்துக்கொண்டு, சிவபூஜை செய்வதற்காக வீட்டுக்

குத் திரும்பினர். சில நாட்களாக இவருக்குச் சிவபூஜை சமயத்திலே நல்ல வில்வதளங்கள் கிடைக்கவில்லை. ஆகையால், இப்பொழுது இப்பசிய தளங்களைக் கண்டவுடனே அவருக்குத் தமது புத்திரியின்மேலுள்ள பிரியத்தைவிட சிவபக்தி மேலிட்டது.

இன்றும், இவருக்கு அவ்வூருக்கு வெளியே சொற்ப நிலம் இருந்தது. விதை விதைக்கும் காலத்தில் இவர் அவ்வயலை உழுவித்துத் தாமே நேரிற் சென்று தமது இஷ்ட தெய்வமாகிய ஸ்ரீராமன் பெயரைச் சொல்லிச் சிலவிதைகளைத் தாமே தமது கையால் விதைத்து, பின்னர் வேலைக்காரர்களைக் கொண்டு விதைக்கும்படி கட்டளையிடுவார். அந்நிலம் சிறியதேயாயினும், அவருடைய பக்தி விச்வாசமகிமையினாலே அவருடைய குடும்பத்துக்குப் போதுமான பலன் அந்த நிலம் அளித்து வந்தது.

இத்தகைய உத்தமகுணங்கள் வாய்ந்த மகாநுபாவராகிய க்ஷுதிராமசட்டோபாத்தியாயருக்குச் சந்திரமணி தேவி யென்னும் பெயரையுடைய ஒரு பதிவிரதாசிரோன்மணி மனைவியாக வாய்ந்திருந்தாள். நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு* என்னும் நாற்குணங்களையும் ஒருங்கே கைக்கொண்ட உத்தமி; ஏழை எளியோர் துன்புறச் சகிக்கமாட்டாள்; புருஷனை ஈச்வரனாகவே கொண்டாடும் புண்ணியவதி; மகாகம்பீரகுணம் வாய்ந்தவள். இவருடைய கடைசிப் புதல்வன் மகாஞானியாகி ராமகிருஷ்ண பரமஹம்ஸரென வங்காளநாடெங்கும் பிரக்கியாதி ஏற்பட்டுவிடவே, இந்த ராமகிரு-



ஷ்ண பரமஹம்சரிடத்திலே தொண்டுசெய்து மகாபக்தி செலுத்திவந்த மதுரநாதன் என்ற ஐச்வர்யவான் இவ்வம்மையிடம் வந்து, சில ஆயிரம் ரூபாயைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்க, அவ்வம்மை மகா திடமனத்துடனே தமக்கு அது வேண்டவே வேண்டாமென்று ஒரே பிடிவாதமாக மறுத்துவிட்டார்.

இத்தகைய உத்தமோத்தம குணங்கள் வாய்ந்த சதிபதிகள் இருவருக்கும் இரண்டு புத்திரர்களும் இரண்டு புத்திரிகளும் பிறந்திருந்தார்கள். ஒரு சமயத்திலே சட்டோபாத்தியாயரும் அவருடைய மனைவியும் தங்கள் குழந்தைகளை யிட்டுக்கொண்டு கயா க்ஷேத்திரத்துக்கு யாத்திரை சென்றிருந்தார்கள். அந்த க்ஷேத்திரத்திலே மகாவிஷ்ணு கதாதர மூர்த்தமாய் எழுந்தருளியிருக்கிறார். ஸதிபதிகள் இருவரும் திரிகரண சுத்தியாய் அம்மூர்த்தத்தின் முன்னே சாஷ்டாங்கமாகத் தண்டனிட்டு வெகுநேரம் வரையில் இகபர சுகங்கள் இரண்டையும் கருதிக் கண்ணை மூடித் தீர்க்க தியானத்திலேயிருந்துவிட்டுப் பின்னர் கதாதரரை வாயாரவாழ்த்தி அன்றுமுழுதும் ஈச்வர சிந்தனையாகவே யிருந்தார்கள். மாலைநேரம் நெருங்கிற்று; அந்த க்ஷேத்திரத்திலேயே கொஞ்சம் பிரசாதங்கள் வாங்கித் தாங்களும் தங்கள் குழந்தைகளுமாக உண்டுவிட்டு, சத்திரத்திலே படுத்து உறங்கினார்கள். அருணோதய சமயம், சட்டோபாத்தியாயர் இன்னும் உறங்கிக்கொண்டிருக்கின்றார். ஆ! ஆ! அவருக்கு ஸ்வப்பனம் ஒன்று உண்டாயிற்று. உலகுக்கு நற்காலம் பிறந்துவிட்டது. பாரததேசத்தைப் பிடித்த பீடைகளெல்லாம்

தொலையப்போகின்றன. சாக்ஷாத் மகாவிஷ்ணு சட்டோபாத்தியாயருக்குமுன்னே சங்கு சக்கர கதாதர மூர்த்தியாய்ப் பிரசன்னமாகி, "ஏ, க்ஷுதிராம்! நீயும் உனது முன்னோர்களும் அபூர்வ புண்ணியம் பண்ணியவர்கள்; நான் உனக்குக் குமாரனாக அவதரிக்கப்போகின்றேன்; உனது குலம் ஈடேறிவிட்டது; நீ செய்துவந்த உபாசனை பலித்துவிட்டது" என்று சொல்லி மறைந்துவிட்டார். சட்டோபாத்தியாயர் திடுக்கென்று கண்களை விழித்துக்கொண்டார்; சுற்றுமுற்றும் பார்த்தார்; ஒருவரையுங் காணவில்லை. கண்களைப் பிசைந்துகொண்டு பார்த்தார். ஆ! ஆ! என் முன் தோன்றியவர் எம்பெருமான்தானோ? ஐயோ! அப்பொழுது நான் மதிமயங்கிவிட்டேனே! அவருடைய இரண்டு பாதங்களையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு ஆநந்தப்பிராப்தியை ஆசிக்காமல் விட்டுவிட்டேனே! போகட்டும்! இப்பொழுதுதான் என்ன? அவரோ நமக்குப் புத்திரராக அவதரிக்கப்போகின்றார்; அப்பொழுதுகூடவா விட்டுவிடுவேன்?" என்று தானே வருந்திக்கொண்டும், தம்மனத்தைத் தாமே தேற்றிக்கொண்டும் எழுந்திருந்து தமது மனைவியிடத்திலே தாம் கண்ட கனவைப் புகன்றார். சந்திரமணி தேவிக்கு உண்டான ஆநந்தத்துக்கு ஒரு அளவேயில்லை. "ஆ! என்ன சொன்னீர்கள்? இவ்வண்டபிண்ட சராசரங்களையும் தமது கருப்பத்துக்குள்ளே அடக்கி வைத்திருக்கும் எம்பெருமானா என்னது கர்ப்பத்துக்குள்ளே வந்து ஒடுங்கியிருந்து உற்பவிக்கப்போகின்றார்? நான் செய்த தவமே தவம்" என்று அவ்வம்மையார் ஆநந்த நடனம் புரிந்தார்



இச்சொப்பனத்தின் பிரகாரமே அவ்வம்மையார் கருத்தரித்துப் பத்துமாதங்கள் கழிந்தவுடனே, சொர்ண விக்கிரகம் போன்ற ஒரு ஆண் குழந்தையை ஈன்றனர். கி. பி. 1834-ம் வருஷம் பெப்ரவரி 20-ம் தேதி துவிதியைதிதி புதவாரம் இந்த ஞான ஆதித்தன் உலகிலே தோன்றினான். இவ்வருங்குழந்தையினுடைய குழந்தைச் செயல்களே யற்புதமாம். அதிசிசுவாயிருந்தபொழுதே இவர் தமது தகப்பனார் மணியடித்துப் பூஜைசெய்யும் வேளைகளிலே தவழ்ந்து தவழ்ந்து தகப்பனாரருகில் சென்று, தகப்பனார் பூஜைசெய்யும் விக்கிரகத்தையே பார்த்தவராய் அப்படியே பசையற்று இருந்துவிடுவாராம். சட்டோபாத்தியாயர் பூஜைசெய்வதற்கு முன்னே ஸ்நாநம் செய்து மடியுடுத்து விபூதி சந்தனாதிகள் தரித்துக்கொள்வது முதலியவற்றை இந்தக் குழந்தை யுற்றுற்றுப் பார்த்துக்கொண்டேயிருக்குமாம். இந்தக் குழந்தை முரண்டு செய்துகொண்டு அழ ஆரம்பித்துவிட்டால், இதன் பெற்றோர்கள் இதை யெடுத்துக் கொண்டு வந்து பூஜாவிக்ரகத்தின் முன்னே விட்டுவிடுவார்கள்; உடனே அழுகை நின்றுவிடும். இவ்வருங் குழந்தை நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்து வந்தது. நடக்கும் பருவம் வந்தது. ஆயினும், மற்றக் குழந்தைகளுடனே சேர்ந்துகொண்டு தெருமண்ணிலே புரண்டு உருண்டு விளையாடும் வழக்கம் ஸ்ரீராமகிருஷ்ணரிடத்திலேயில்லை. சாதுக்கள், சந்நியாசிகள், இவர்கள் கூடுகிற இடத்திலே ராமகிருஷ்ணர் இல்லாமலிருக்கமாட்டார். பஜனைகள் நடந்தால் அங்கே ராமகிருஷ்ணர் இருப்பது நிச்சயம். கௌபீனம்

கட்டவும் செய்யாத சிறு குழந்தை-அதிசுந்தரமான அலங்காரக் குழந்தை, கதாதரன்-இதுதான் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய முதலாவது பெயர். கயா க்ஷேத்திரத்திலே கதாதர மூர்த்தத்தினுடைய கிருபையினாலே இவர் அவதரித்தபடியால் இவருக்கு இவருடைய பெற்றோர்கள் அப்பெயர் வைத்தனர். பஜனை மந்திரங்களிலே பாடும் பாடல்களுக்கு ஏற்ற பிரகாரம் தாளம் போட்டு நிர்த்தனம் செய்வார். இவருக்கு வயது பத்து ஆயிற்று. இவர் கோவில்களில் நடைபெறுகின்ற உற்சவாதிகளையும் பூஜைகளையும் மற்றும் கண்டு கண்டு ஆய்ந்து அம்மாதிரியே தாமும் செய்யக்கருதி, மண்ணினாலே சிறு பொம்மைகள் செய்து அவற்றுக்குப் பூஜை முதலியன செய்து, தேர்-திருவிளையாடல்களையும் பண்ணி, தமது வயதுப் பிள்ளைகளைச் சேர்த்து உற்சவங்கள் மாதிரி கொண்டாடுவார். இவருடைய குணமானது இவரைக் கண்டவர்கள் யாவரும் இவரைத் தமது பந்துபோல-தமது புத்திரன்போல-தமது சகோதரன்போலக் கருதி அவரை மிகுந்த அன்புடனும் வாற்சல்யத்துடனும் பாவித்து நடத்திவந்தார்கள். அவர் பகவத் சங்கீர்த்தனங்களைப் பாடும்பொழுது அவருடைய குரலானது குயிலினது குரல்போன்றிருக்கும். அவர் பஜனை காலத்திலே அப்படியே பகவந்நாம சங்கீர்த்தனங்களில் லயித்து மெய்மறந்திருப்பார். மண்ணினால் பிரதிமைகள் செய்வதிலே அவருக்குச் சமர்த்து அதிகம் உண்டு. சித்திர சிற்பலக்ஷண விதிகளின் பிரகாரம் அவர் அவ்விக்ரகங்களை அவ்விளம் வயதிலேயே ஆக்கிவந்தது அவருடைய கிராமத்தாருக்கு ஆச்சர்யத்தையும் ஆநந்தத்தையும் அளித்



தது. அவருக்கு ஆறுவயதா யிருக்கையிலேயே இதிகாச புராணாதிகளின் சாராம்சத்தைக் கிரகிக்கும் சக்தியுண்டாயிற்று. பௌராணிகர்கள் ராமாயண பாரத இதிகாசங்களை வியாக்கியானத்துடனே எடுத்துரைக்கும் இடங்களிலே நமது ராமகிருஷ்ணர்—குழந்தை—ஆறுவயதுக் குழந்தை—சென்று, மிகுந்த கவனத்தோடு கேட்டுக்கொண்டிருப்பார். அவற்றின் உட்கருத்துக்களை நன்றாகக் கிரகித்துக்கொள்வார். ஐயமுற்றபொழுது, அவர் அப்பௌராணிகர்களிடம் வீட்டுக்குச் சென்று, தமது சந்தேகங்களை அவர்களுக்குத் தெரிவித்து அவர்களிடம் வாதாடி விடைபெற்றுத் தெளிந்துகொள்வார். சிலசமயங்களிலே தாமாகவே தனியே உட்கார்ந்துகொண்டு தாம் ச்ரவணம் செய்ததை மனனம் செய்து தெளிந்துகொள்வார்.

இவருடைய கிராமம் ஜகந்நாதத்துக்குப் போகும் மார்க்கத்திலே யிருந்தபடியால், ஜகந்நாத க்ஷேத்திரத்துக்கு யாத்திரை செல்லும் பல சாதுக்களும் அவ்வூரிலே தங்கி ஆகாரமாக்கியுண்டு செல்வதுண்டு. அவ்வூரிலே லாஹாகுடும்பமென்று ஒரு குடும்பம் உண்டு. இவர்கள் பெருத்த பணக்காரர்கள், அவ்வூர் ஜமீந்தார்கள்-இவர்கள் அந்த வழிப்போக்கர்கள் தங்குவதற்கு வசதியான சத்திரம் ஒன்று கட்டிவைத்திருக்கிறார்கள். இன்னும் யாத்திரை வாசிகளாகிய சாதுக்களுக்குப் பல சௌகர்யங்களும் செய்து கொடுக்கப்படுகின்றன. ஆகையால், ஜகந்நாத க்ஷேத்திரம் யாத்திரை செல்லும் சாதுக்கள் இங்கு இறங்கிக் களைப்பாற்றிக்கொ

ளாமல் போகிறதில்லை. ராமகிருஷ்ணர்—குழந்தை—தினந்தோறும் இசசத்திரம் சென்று, அங்கு வந்திருக்கும் பெரியோர்களுடன் சம்பாஷணை புரிந்து, அப் பெரியோர்கள் தர்சித்த ஸ்தலங்களையும் அவற்றிலுள்ள விசேஷங்களையும் பற்றிக் கேட்பார். அவர் பேசுகின்ற வாக்சாதுர்யமும் அவருடைய இனியகுரலும் இளம்பிள்ளை வடிவமும் அப்பெரியோர்களையெல்லாம் வசப்படுத்தி, அவருடன் சம்பாஷிப்பது ஓர்வித ஆநந்தமென அவர்கள் கருதும்படி செய்துவிடும். ஒருசமயத்தில் இந்த “லாஹா” குடும்பத்தாருடைய வீட்டில் விசேஷம் ஒன்று நடக்க, அதற்காக நாலாபக்கங்களிலிருந்தும் பல பண்டிதர்கள் வந்திருந்தார்கள். ராமகிருஷ்ணர் அவர்களுடைய சம்பாஷணையைக் கேட்கச் சென்றார். அவர்கள் தங்களுக்குள்ளே வேதாந்த விஷயமாக விசாரணை செய்ய ஆரம்பித்தார்கள். ராமகிருஷ்ணரும் அவ்சாரணையில் கூடக் கலந்துகொண்டார். அவர்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் ராமகிருஷ்ணர் யுக்தி பூர்வகமாக விடையளித்து, அவர்களுடைய ஸித்தாந்தங்களையெல்லாம் கண்டித்து, “ஏகமேவாத்விதீயம் பிரஹ்மஃ” என்ற அத்வைதக் கொள்கையை ஸ்தாபித்ததைக் கண்டு அந்தப் பண்டிதர்கள் இக்குழந்தையினுடைய புத்திநுட்பத்தைப்பற்றி ஆச்சர்யமுற்று இவர் ஒரு மகாபுருஷனென்று வியந்தார்கள்.

இவருக்கு வயது பதினொன்று. ஒருநாள் இவர் ஊருக்கு வெளியே ஆழ்ந்த சிந்தனையிலாழ்ந்தவராயுலாவிக்கொண்டிருந்தார். திடீரென்று ஆகாயத்தை நிமிர்ந்து பார்த்தார்.



நிர்மலமுற்று நீலநிறத்துடன் விளங்கிய ஆகாயத்திலே ஒரு கூட்டம் வெண்புறுக்கள் பறந்துசெல்வதைக் கண்டார். அப்படியே மெய் மறந்தார். ஈச்வர சிருஷ்டியின் மகிமையினை நினைந்து நினைந்து அந்நினைப்பிலே லயமானார். அப்பொழுது “நான்” என்ற வியஷ்டி யவரிடத்திலில்லாது போய்விட்டது. சர்வப்பிரபஞ்சமாகிய சமஷ்டியுடனே இரண்டறக் கலந்து ஏகமேயாய் இன்புற்று விளங்கினார். இதுதான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் “நான்” என்பதற்றுத் தானாய் விளங்கியதற்கு ஆரம்பம்.

இவருக்குச் சித்திர சிற்பவிஷயங்களிலே வாசனை யதிகமுண்டென்று முன்னமேயே கூறியிருக்கிறோம். இவர் சாஸ்திர விதிகளின்படி நூதனமாக விக்ரகங்கள் செய்து விளையாடுவதுமன்றியில்; அவ்வயதிலேயே பல பழங் கோவில்களிலே சிதிலமாய்க் கிடந்த பல விக்கிரகங்களையும் செப்பனிடவும் தொடங்கினார். இதற்கு அறிகுறியாக, இப்பொழுதும் தக்ஷிணேச்வராலயத்திலே இவரால் செப்பனிடப்பட்ட ஸ்ரீ கிருஷ்ணவிக்கிரகம் ஒன்று இருக்கின்றது.

இவருடைய பையற்பருவத்திலே இவர் ஒரு நாடகம் பார்க்கச் சென்றார். அந்நாடகம் ஸ்ரீ கிருஷ்ணனுடைய லீலையைப்பற்றியது. மிகுந்த பக்தி ரசத்துடனே பார்த்தோர் அனைவரும் இவ்விகலோகத்தை மறந்து சாட்சாத் எம்பெருமான் ஸ்ரீகிருஷ்ணனிடத்திலே லயித்துவிடுமாறு அவ்வளவு உருக்கத்துடனே அந்நாடகம் ஆடப்பட்டது. ராமகிருஷ்ணர் அதைப் பார்த்துவிட்டுத் திரும்பிவந்தார். அவருக்கு

அதே பித்துப் பிடித்துவிட்டது. தமது வயதுப்பிள்ளைகளை ஒவ்வொரு வேஷமிடும்படிசெய்து ஊருக்கு வெளியிலுள்ள ஒரு தோட்டத்தின் விருக்ஷங்களின் கீழே அந்நாடகத்தை யப்படியே நடிக்க ஆரம்பித்தார். ஆ! ஆ! எவ்வளவு அற்புதமாயிருந்தது! பார்த்தோர் அனைவரும் வியந்தார்கள். இன்னொரு சமயத்திலே மண்ணினாலே சிவலிங்க மொன்று செய்து, தமது தோழர்களுடன் கூடிக்கொண்டு அதற்குப் பூஜை முதலியன செய்து ஆநந்தித்தார். அவர் தமது வீட்டிலேயிருந்த ருத்திராட்சமாலையை யெடுத்துக் கழுத்திலணிந்துகொண்டு, சரீரத்தியந்தமும் பஸ்மோக்தூளிதராய் சிவலிங்கத்தின் முன்னே யுட்கார்ந்து இருகண்களையும்மூடி ஏகலிங்கமாகிய இன்பப்பொருளினிடத்தே தமது மனத்தைச் செலுத்தியதைப் பார்த்தபொழுது, சண்டிகேச்வரன், ராவணேச்வரன், நந்திகேச்வரன் முதலிய ஈச்வர பக்தர்களுடைய ஞாபகம் வந்ததாம் பார்த்தவர்களுக்கு. இது மாத்திரமன்று. தாம் கேட்கின்ற புராண இதிகாசக் கதைகளையெல்லாம் தமது தோழர்களுடனே சேர்ந்து நாடகரூபமாக நடித்து விளையாடி யாநந்தித்தார். இவ்விதமாக அவருடைய விளையாட்டுக்கள்கூட ஈச்வர விஷயங்களிலேயே பற்றி நின்றனவேயொழிய, இவ்வுலகத்து வீண் விஷயங்களின் விளையாடல்களா யிருக்கவில்லை. இக்காலத்துக் குழந்தைகள் புருஷன் பெண்சாதி விளையாட்டு விளையாடி, பிற்காலத்திலே பிரபஞ்சப் பித்துப்பிடித்துப் பன்றி, குட்டிகள் போடுவதுபோலப் பல குழந்தைகளை யீன்று, அக் குழந்தைகளும் அம்மாதிரியே - தங்களைப்போன்றே - ஆகும்படி



செய்துவிடுகிறார்கள். விளையாட்டுப் பருவத்திலேயே குழந்தைகள் எம்மாதிரி திருப்பப்படுகின்றனவோ, அம்மாதிரியே அவர்களுடைய பிற்கால ஜீவிதமும் அமையுமென்பதே அநுபவத் துணிபு. குழந்தைகட்குப் பூர்வஜன்ம வாசனையென்று ஒன்று இருந்தபொழுதிலும், பெற்றோர் அவர்களை மெல்ல மெல்ல நன்மார்க்கத்திலே திருப்பிவிடுவார்களாயின், இப்பொழுதல்லாவிடினும் எப்பொழுதாவது அவர்களுடைய நன்மார்க்க போதனையானது பிள்ளைகளுடைய மனத்திலே வேரூன்றிப் பக்குவமாகிப் பலமடைந்து, அவர்களுடைய பூர்வ ஜன்மவாசனையைப் பறக்கடித்துவிடுமென்பதில் சந்தேகமில்லை.

---

## 2-ம் அத்தியாயம்

## ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய வாலிபப்பருவம்

ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு அதிகம் கல்வி கிடையாது. அவர் பெருத்த வித்தியாசாலைகளிலேபோய்ப் படிக்கவில்லை; எழுதவும் படிக்கவும்மாத்திரம் கற்றுக்கொண்டார். ஆயினும் உபநிஷத்துக்கள், பகவத்கீதைபோன்ற அரிய பெரிய சாஸ்திரங்களை அவர் படித்தவரல்லர். படிக்கவேண்டுமென்று ஆசையும் அவருக்கு உண்டாகவில்லை. ஏனெனில், வெறும் புத்தகப் பூச்சியாக இருப்பதற்கு அவர் விரும்பவில்லையே. கல்வி கேள்விகளில் வல்லுநராகிய பண்டிதர்களும் வித்துவான்களும் நிறைந்த ஊரிலும் அவர் பிற

ந்து வரவில்லை. அவருடைய குக்கிராமத்திலே அவரைச் சுற்றி யிருந்ததெல்லாம், ஆடுமாடுகள், கள்ளங்கபடற்ற நாட்டுப்புறத்து ஜனங்கள், எங்குப் பார்த்தாலும் பசுமையா யிருக்கும் செடி கொடி விருக்ஷாதிகள், தெளிந்த நீல் வர்ணமான ஆகாயம், எல்லோருக்கும் இன்பத்தைக் கொடுத்து எழில் மிகுந்து விளங்கும் சிருஷ்டி, இவையேயாம். ஆனால், இவருடைய கிருகம் ஒன்றே அந்தக்கிராமத்தில் பிராஹ்மணர்களுடைய கிருகம். இவருடைய குடும்பமோ மகா முரட்டு வைதீக ஆசாரமுடையது. ஆதலால், ராமகிருஷ்ணர் தம்மைச்சுற்றிலும் அழகிய, லாவல்யமான தோழர்களைக் கொண்டிருந்தபொழுதிலும் வைதீக ஆசாரத்திலேயே வளர்ந்துவந்தார். அவருடைய குரல் மிகமிக இனிமையானதென்று முன்னமேயே கூறியிருக்கிறோம். அவ்வூர்வழியே செல்லும் சாதுக்கள் ஒருதரம் அவருடைய பகவந்நாம சங்கீர்த்தனப் பாடல்களைக் கேட்டுவிட்டால், மறுமுறை அவ்வூருக்கு வந்தால், ராமகிருஷ்ணரைத் தேடிச் செல்வார்கள். இவ்விளம் வயதிலேயே சாதுக்களைத் தம்மிடம் ஆகருஷிக்கும் சக்தி அவரிட மிருந்தது. சாதுக்களுக்குச் சகல விதபணிவிடைகளும் செய்வார்; அவர்கள் கேட்டதை இல்லையென்னாது எப்படியேனும் சம்பாதித்துக் கொடுப்பார்.

இப்படி யிருக்கையிலே அவருடைய பிதா பரலோக ப்ராப்தி யடைந்தார். அவருடைய மூத்த சகோதரர்களுள் ஒருவர்—ராமகுமார சட்டோபாத்தியாயர் என்னும் பெயருடையார் சம்ஸ்கிருதத்திலே மகாநிபுணர். இவர் கல்கத்தா



நகரிலே ஒரு ஸம்ஸ்கிருதப் பாடசாலை ஸ்தாபித்துக்கொண்டு அங்கேயே வசித்துவந்தார். இப்பொழுது ராமகிருஷ்ணருக்கு அவருடைய பிதாவின் மரணத்தினாலே அந்தக் கிராமத்திலே அவரை யாதரிப்பவர்களொருவரும் இல்லாது போய்விடவே, அவர் கல்கத்தாவிலே யிருந்த தமது தமையனார் ராமகுமார சட்டோபாத்தியாயரிடம் செல்லவேண்டி வந்தது. ராமகுமார சட்டோபாத்தியாயர் இவரைத் தமது பாடசாலையிலே சம்ஸ்கிருதம் நன்றாகக் கற்று, வேதவேதாந்தங்களின் ரகஸ்யங்களை யறிந்துகொள்ளும்படி ஏற்பாடு செய்தார்.

ராமகிருஷ்ணர் சின்னாட்கள் அப்பாடசாலையிலே சேர்ந்து படித்தார். அங்குக் கொடுக்கப்படும் படிப்பெல்லாம் வெறும் வாசாஞானமே யென்றும், உண்மையான ஆநந்தப் பிராப்திக்கு இவை யுபயோகப்படா வென்றும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் நன்றாகக் கண்டுகொண்டார். இப்பாடசாலையிலே படிக்கும் சம்ஸ்கிருத மாணவர்கள் இச்சரீரம் நாற்றமுடையதென்றும், நவத்துவாரங்களாலும்—ஏன்? மூன்றரைக் கோடி ரோமத் துவாரங்களினால் கூட—மலஜலம் கசியப் பெற்றதென்றும், மலமூட்டை யென்றும், மற்றும் படித்தும் தர்க்கித்தும் வர, அதே சமயத்திலே இந்த மலமூட்டையினுடனே இன்னொரு மலமூட்டையைச் சேர்த்துக் கொள்வதற்குச் செய்யும் முயற்சிபோல, தங்களுடைய விவாகத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்துகொள்கிறார்களென்றும் கண்டு, ராமகிருஷ்ணர் அவர்களுடைய

ஆஷாடபூதி வேஷத்துக்காகப் பரிதபித்தார். இம்மாதிரி அவர்கள் பேசுவதொன்றும் செய்வதொன்றுமா யிருக்கப் பார்த்து மனம் சகியாதவராய், ஒரு நாள் தமது தமயனாரை நோக்கி, "அண்ணா! இந்த வேஷதாரிகளா பிரஹ்மாநுபூதி யடையப்போகிறவர்கள்? இத்தகைய படிப்பா பிரஹ்மாநுபூதியை யளிக்கப்போகின்றது? தியாகம் வேண்டுமே; தியாகம், தியாகம் என்று கிரந்தங்களில் படித்துவிட்டு, போகத்தினிடத்தே யுழல்கின்ற மானிடப் புழுக்களுக்கு ஆநந்தப்ராப்தி யுண்டாகுமோ? அருமையான மானிடஜன்ம மடைந்தும் இந்த வீண் வாதங்களிலே காலத்தைக் கழிப்பது தகுதியாமோ? இவர்களுக்கு வாசனாத்திரயம் நசிக்கவில்லையே; ஜனன மரண சக்கரத்திலேபட்டுச் சுழல்கின்றோமே என்ற துக்கம் உண்டாகவில்லையே,—"வெயில் சகித்திடாப் புழுப்போல வெம்ப" வில்லையே; இப் பிரபஞ்சத்தினிடத்திலே அதிருப்தி, அருசி யுண்டாகவில்லையே; இவர்களுடைய உபயோகமற்ற வாதங்களாற் பயனென்? எனக்கு இவர்களுடன் கலந்து இந்தமாதிரி ஆஷாடபூதி வேஷம் போடுவதற்கு இம்மாதிரி வாசாஞானம் மாத்திரம் அளிக்கின்ற வெறுங்கல்வியை அடைவதற்குப் பிரியமில்லை. பிரஹ்ம நிஷ்டாதத்பரனாய்ப் பிரபஞ்சமெல்லாம் தானேயாய் விளங்கும் பிரஹ்மாநுபூதியே எனக்கு வேண்டியது. அதற்கு உன்னுடைய பாடசாலை உபயோகமானதன்று" என்று நேருக்குநேரே கூறவே, ராமகுமார சட்டோபாத்தியாயர் பிரமித்துவிட்டார். "இது ஏது? பையன் சிறுவனாயிருந்தும் நாமும் வெட்கும்படி பேசிவிட்டானே! பையன் அந்த



மார்க்கத்தைத்தான் அநுசரித்துவிடுவானோ? அப்படி விட்டுவிடக் கூடாது. எப்படியாயினும் அவனைக் குடும்பத்திலேயே நிறுத்திவிடவேண்டும்" என்று இப்படியெல்லாம் ராமகுமார சட்டோபாத்தியாயர் சிந்தித்துத் தீர்மானித்துக் கொண்டார்.

ராமகிருஷ்ணர், பாடசாலையை விட்டுவிட்டார். இப்பொழுது அவர் முன்போல சாதுக்களையும் சந்யாசிகளையும் தேடித்திரியலானார். ராமகுமார சட்டோபாத்தியாயருக்குத் திகில் உண்டாயிற்று. ஒருநாள் இவர் ராமகிருஷ்ணரை நோக்கி, "கதாதர! நடுவிலவன் உன்னைப் பார்ப்பதற்கு ஆசை மிகக் கொண்டிருக்கிறானாம்; எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறான். தக்ஷிணேச்வரத்திலே அவன் தனியே யிருப்பது அவனுக்குப் பிடிக்கவில்லையாம். கொஞ்சநாள் அங்குச் சென்று இருந்து வருகிறாயா?" என்று கேட்க, ராமகிருஷ்ணருக்கும் அந்த சகோதரரைப் பார்க்கவேண்டுமென்ற ஆசை யதிகமாயிருந்தபடியால், உடனே யதற்கு இசைந்தார்.

கல்கத்தா நகருக்கு ஐந்துமைல்தூரத்திலே தக்ஷிணேச்வரம் என்று ஒரு ஸ்தலம் உள்ளது. அதன் அருகே கங்கை நதியானது அகன்று பரந்து ஆடி யுல்லாசமா யோடுகின்றது. இவ்விடத்திலே ராணி ரஸமணியம்மாள் என்னும் ஒருமாது 1853-ம் வருஷத்திலே ஏராளமான பொருள் செலவிட்டுப் பிரமாண்டமாகக் காளிகோவிலொன்று கட்டினார். ராணியென்ற பட்டத்தைக் கேட்டவுடனே நமது வாசகர்க

ளிர் பெரும்பான்மையோரும் இவர் ஏதேனும் ஒரு அரச குடும்பத்தைச் சேர்ந்தவரோ? என்று ஐயுறலாம். அன்று, அன்று. அவ்வம்மையாருடைய பிதா அவருக்குப் பெயரிட்ட காலத்திலேயே ராணிரஸமணி யென்றே பெயரிட்டுவிட்டார். ஆனால், ராணியென்ற அப்பெயருக்குப் பொருத்தமாகவே அவ்வம்மையாருடைய குணங்களும் வாய்ந்திருந்தன. இவர் உயர் குலத்து உற்பவித்தவரல்லர். ஆயினும், இவருடைய ஹிருதயமானது மிகவும் விசாலமானதாயிருந்தது; தம்முடைய ஜாதி ஜனங்களை எப்படியேனும் உயர்த்தி விர்து ஜனசமுகத்திலே பிரதானமான ஒரு ஸ்தானத்தை யடையுமாறு செய்யவேண்டுமென்று இவ்வம்மையார் இரவு பகலாகப் பாடுபட்டார்; இவருடைய ஜாதி ஜனங்கள் அனைவரும் மிகமிக ஏழைகள்; இவருடைய ஜாதியிலே இவர் ஒருவரே ஏராளமான சொத்துடைய தனவந்தர். இவ்வளவு ஐச்வர்ய முடையவராயிருந்தும், தமது ஜாதிஜனங்களை மறக்கவில்லை. செம்படவ ஜாதி ஜனங்களிடத்திலே இவருக்கு அநுதாபம் மிகுதி. கங்கையிலே மீன்பிடிக்கக் கூடாதென்றும், அப்படி மீன்பிடிக்க வேண்டுமானால் அரசாங்கத்தாருக்கு வரிகட்ட வேண்டுமென்றும் அரசாங்கத்தார் விதித்துவிட்டார்கள். செம்படவர்களுக்கு இது வெகு கஷ்டமாய்விட்டது. ஐயோ! பாபம்! என் செய்வார்கள்? இன்னது செய்வதென்று தெரியாமல் விழிக்க ஆரம்பித்தார்கள். சமீபத்திலேயிருந்த ராணிரஸமணியம்மாளுக்கு இது தெரியவந்தது. உடனே அவ்வம்மையார் அச்செம்படவர்களையெல்லாம் வரவழைத்து அவர்கள் வருந்தவேண்டாமென்று



தைரியம் கூறி, தாம் அரசாங்கத்துக்கு எழுதி அந்த வரியை எடுத்துவிடும்படி செய்வதாக வாக்குறுதி கொடுத்தாள். அப்படியே, அவ்வம்மையார் அரசாங்கத்தாருக்கு எழுதி, ஏழைச் செம்படவர்களுடைய குறைகளையும் கஷ்டங்களையும் எடுத்துக் காட்டி, பெரியதோர் வாது செய்து, ஏராளமான பொருள் செலவழித்து அச்செம்படவர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த வரியை ரத்து செய்துவிடும்படி செய்தாள். இன்றைக்கும் கங்காநதியின் சிலபாகங்களில் இவ்வம்மையாருடைய ஔதார்யத்தினாலேயே செம்படவர்கள் வரியில்லாது மீன்பிடித்து ஜீவனம் செய்து வருகிறார்கள். இவ்வம்மையாருடைய தேசாபிமானமும் அப்படியே அளவற்றதாம்.

இவ்வம்மையார்தான் இப்பொழுது தக்ஷிணேச்வரத்திலே காணப்படுகின்ற பிரமாண்டமான காளிகோவிலைக் கட்டி முடித்து ஸ்தாபித்தவர். இந்த க்ஷேத்திரத்திலே இவ்வம்மையார் லக்ஷக்கணக்காகத் தமது திரவியத்தைச் செலவு செய்திருக்கிறார். இக்கோவிலினருகிலேயே ஒரு மாளிகை கட்டிக்கொண்டு, கோவிலில் பூஜை நைவேத்தியங்களெல்லாம் சரிவர நடந்துவருகின்றதா என்று கவனிக்கும்பொருட்டு அங்கேயே வசித்துவந்தார். இக்கோவிலையடுத்தாற்போல, ஏழைகளும் சாதுக்களும் எந்த நேரத்தில் வந்தாலும் அவர்களுக்கு அன்னமிடும்படி பிரமாண்டமான சத்திரங்களைக் கட்டிவைத்தார். ராணிரஸமணிதேவி இந்தப் பெரிய க்ஷேத்திரத்தைக் கட்டி முடித்து, தமது புரோஹிதராகிய

ஒரு பிராஹ்மணோத்தமரைக் கொண்டு அந்த க்ஷேத்திரத்திலே காளிதேவியைப் பிரதிஷ்டை செய்வித்தாள். இந்தக் காளிதேவியைப் பூஜிப்பதற்குத்தான் அர்ச்சகராக ராமகிருஷ்ணருடைய சகோதரர் நியமிக்கப்பட்டிருந்தார். இராமகிருஷ்ணர் அவரிடம் சென்றபொழுது, அந்த க்ஷேத்திரத்திலே காளிதேவி பிரதிஷ்டையாகிற சமயம். அங்கே போனவுடனே அந்தக் கோவில் சூத்திரஸ்திரீயால் கட்டப்பெற்றதென்று அறிந்துகொண்டார் ராமகிருஷ்ணர். உடனே அவருடைய வைதீக ஆசாரம் முன்னே வந்து நின்றது. அவர் தமது சகோதரரைப்பார்த்து, "சூத்திரஸ்திரீயினால் கட்டப்பெற்ற ஒரு கோவிலில் அர்ச்சகராகஅமர்வது இழிவானது" என்று கூறி, அவ்வாலயத்திலே பிரசாதங்கள் முதலியவற்றைப் பிராஹ்மணர்கள் புசிக்கலாகாது" என்று சொன்னா அன்றையதினம்தான் காளிமகாதேவி பிரதிஷ்டை செய்யப்படுகிறாள். ராணிரஸமணிதேவி அன்று பணத்தைப் பணமென்று பாராமல் ஓட்டாஞ்சில்லிகளாக நினைத்து வாரிவாரியிறைத்துக்கொண்டிருக்கிறாள். கல்கத்தா நகரம் முழுதும் வந்து கூடியிருக்கின்றது. ஏறக்குறைய இருபதினாயிரம் ஜனங்களுக்குமேல் அவ்வாலயத்துக் கடுத்த சத்திரத்திலே போஜனமளிக்கப்பட்டார்கள். கல்கத்தா நகரிலிருந்தும் சுற்றுப்புறத்துக் கிராமங்களிலிருந்தும் மஹா மஹோபாத்தியாயர்களும் ஜடாவல்லவர்களும் கனபாடிகளுமாக நூற்றுக்கணக்கானவர்கள் வந்திருந்தார்கள். இவர்களுடைய வைதிக ஆசாரப் பிடிவாதமெல்லாம் எங்கே போய்விட்டதோ?



இவ்வளவு ஆடம்பரத்துடனும் ஔதார்யத்துடனும் அந்த க்ஷேத்திரத்திலே காளிமகாதேவி சிம்ஹாசனமேறியபொழுதிலும், நமது ராமகிருஷ்ணர்மாத்திரம் மனவெறுப்புடையாராய், கோவிற் பிரசாதத்தை முகர்ந்தும் பாராதவராய், அன்றெல்லாம் உபவாசமிருந்துவிட்டு, மறுநாள் கல்கத்தா நோக்கி நடந்தார். ஆ! ஆ! தேவி! மகாசக்தி! உன்னுடைய சமர்த்துத்தான் என்னே? இராமகிருஷ்ணனை நாளைக்கு நீ இழுத்துக்கொள்ளப்போகிறாயே; இன்றுமாத்திரம் ஏன் தூரத்துகிறாய்? உன்னுடைய உட்கருத்துத்தான் என்னே? ஆடம்பரங்கட்கு நடுவே, ஆயிரக்கணக்கானவர்கள் சூழ்ந்திருக்க, அவரிடத்திலே அந்தரங்கம் உரைப்பதற்கு இது சமயமன்று என்று நினைத்து அவரைத் தூரத்திவிட்டாயோ?

இராமகிருஷ்ணர் கல்கத்தாவிலே தமது சகோதரர் ராமகுமார சட்டோபாத்தியாயரிடம் சென்றார். ஆயினும், அவருக்கு அங்கு இருப்புக் கொள்ளவில்லை. மறுபடியும் தக்ஷிணேச்வரத்திலே யுள்ள சகோதரரைப் பார்க்கவேண்டுமென்கிற அவா ராமகிருஷ்ணருக்கு உண்டாவதுபோலத் தோன்றிற்று. அவருக்கு தக்ஷிணேச்வரம் செல்லவேண்டுமென்று இச்சை யுண்டாகின்றது. ஆனால், அவருடைய வைதீக ஆசாரமானது அவருடைய வழியில் குறுக்கே வந்து நிற்கின்றது. ஏதோ ஒரு சக்தி சகோதரவாஞ்சை ரூபமாக அவருடைய மனத்திலே தோன்றி அவரை தக்ஷிணேச்வரம் பக்கம் இழுக்கின்றது. ஆனால், அவருடைய வைதீகவாசனை இசைகிறதில்லை. இப்படி இவருடைய மன

த்தினுள்ளேயே ஒரு போராட்டம் சின்னாட்கள் நடந்தது. கடைசியாக, சகோதரவாஞ்சை வடிவாக வந்த சக்தி ஜயம் பெற்று இவரைத் தக்ஷிணேச்வரம் கொண்டு சென்றது. இவரை யிங்கு இட்டுச்சென்றது சகோதரவாஞ்சையென்று எவரும் நினைப்பதற் கிடமில்லை. ஏனெனில், இவருடைய மனத்துக்கு ஒத்தவர் மூத்த சகோதரராகிய ராமகுமார சட்டோபாத்தியாயரே யன்றி இளையவரல்லர். இவருடைய வைதிகப் பிடிவாதம்போன்றதே ராமகுமார சட்டோபாத்தியாயருடையதும். இளையவரோ தமது வைதிக ஆசாரத்தை விட்டுவிட்டு வயிற்றுப் பிழைப்பின் நிமித்தம் சூத்திர ஸ்திரீயினால் நிர்மாணிக்கப்பட்ட ஒரு ஆலயத்திலே அர்ச்சகராய் அமர்ந்தவர். தவிர, ராமகிருஷ்ணருடைய மனப்போக்கையும் ஞான வாசனையையும் ராமகுமார சட்டோபாத்தியாயர் சம்ஸ்கிருத நிபுணராகையாலே நன்றாக அறிந்துகொண்டவர் ஆதலால், அவர் இராமகிருஷ்ணரை மிகவும் அருமையாகவும் பெருமையாகவும் நடத்திவந்தார். இளைய சகோதரருக்கோ படிப்பு அதிகம் கிடையாது; ராமகிருஷ்ணர் போன்று ஞான வாசனையுமில்லை. ஆதலால், ராமகிருஷ்ணருடைய அருமை பெருமைகளை அவர் அறியார். இக் காரணங்களை யெல்லாம் எடுத்து யோசித்துப் பார்த்தால், ராமகிருஷ்ணருக்குத் தமது இளைய சகோதரரிடத்தில் பார்க்கிலும் மூத்தவராகிய ராமகுமார சட்டோபாத்தியாயரிடத்திலேயே அதிக வாஞ்சை யுண்டாகவேண்டும். ஆனால், இப்பொழுது அதற்கு நேர்மாறாக வல்லவா அவருக்கு இளைய சகோதரரிடத்தில் வாஞ்சை யுண்டா



யிற்று. ஆகையால், இது சாதாரணமான சகோதர வாஞ்சை யன்று; சகோதரவாஞ்சை யுருவெடுத்துவந்த சாட்சாத் மகா சக்தியினுடைய அருட் கிருபையேயாகும். மாதா கூப்பிடுகிறாள்; இனிமேல் ராமகிருஷ்ணர் கல்கத்தாவிலே (உலக வியவகாரங்களிலே) யிருக்கமுடியாது; போய்த்தான் தீரவேண்டும். அவர் கல்கத்தாவினின்றும் புறப்பட்டு தக்ஷிணேச்வரத்துக்கு மறுபடியும் சென்றார். அங்கே அவருடைய தமயனார் அவரை அங்கேயே தம்முடன் இருக்கும்படி வேண்டிக்கொள்ள, அவர் அவ்வேண்டுகோளுக் கிசைந்து அங்கேயே தங்கினார். ஆயினும், அவர் அந்தக் கோவிற் பிரசாதத்தைப் புசிப்பதில்லை. அவருடைய தமயனார் தக்ஷிணேச்வரத்திலே தனியே வசித்துவந்ததினால், தினந்தோறும் அவர் கோவிற் பிரசாதத்தையே உண்டு காலங் கழித்துக்கொண்டுவந்தார். ஆனால், ராமகிருஷ்ணர் தாம் தக்ஷிணேச்வரம் வந்ததுமுதல், கங்காதீரத்தில் ஓரிடத்தில் தாமாகவே சமையல் செய்துகொண்டு சாப்பிட்டுவந்தார். ஏ, ராமகிருஷ்ணா! என்ன? உனக்குச் சித்தப்பிரமையா? அநந்தங்கோடி ஜன்மங்களிலே தடித்துவந்த அந்த முரட்டு வாசனையா? இதோ சீக்கிரத்தில் நீ எந்தத் தேவியினுடைய பிரசாதத்தை எடுத்துக்கொள்ளமாட்டேனென்று வெறுக்கிறாயோ, அதே தேவிக்கு நீ அடிமையாய்விடப் போகிறாயே; ஏ, பூர்வஜன்ம வாசனைகளே! ஓடுங்கள்! ஓடுங்கள்!! எங்கள் ராமகிருஷ்ணனிடத்திலே இனிமேல் உங்களுக்கு வேலையில்லை. எங்கள் ராமகிருஷ்ணன் அம்பாள் சந்நிதானத்திலே வந்துவிட்டான். அவனை யிதுகாறும் பிடித்திரு

ந்த பேய் பைசாசங்களாகிய கர்மக் கூட்டங்களே! இனிமேல் நீங்கள் அவனை விட்டுவிட்டு ஓடாமலிருக்க முடியுமா?

இப்படிக் கொஞ்சகாலம்செல்ல, ராமகிருஷ்ணருடைய தமயனார் வியாதியாய்ப் படுத்தார்; தேவிக்கு அர்ச்சனை புரிவதற்கு ஆளில்லாது போய்விட்டது. இப்பொழுது அவர் தமக்குப் பதிலாக வேறு எவரையேனும் கொண்டு கோவிற் பூஜையை நடப்பிக்கவேண்டும். இல்லையேல், வேறு அர்ச்சகர் நியமிக்கப்பட்டுவிடுவார். அவருக்கு அந்த அர்ச்சகர் வேலையை விட்டுவிடுதற்கு மனம் வரவில்லை. இந்த வேலையில்போன்று சம்பாத்தியம் அவருக்கு வேறு எங்கும் கிடைப்பது அருமை. ஆதலால், அவர் தமது தம்பியாகிய ராமகிருஷ்ணரை நோக்கி, தமக்குப் பதிலாகக் கோவிலில் சென்று தேவிக்குப் பூஜை புநஸ்காரங்கள் செய்துவரும்படி கேட்டுக்கொண்டார். இராமகிருஷ்ணருக்குச் சம்மதமில்லையாயினும், வியாதியில் விழுந்துகிடக்கின்ற சகோதரருடைய வேண்டுகோளை மறுப்பதற்குப் பிரியமில்லை. ஆகவே, ராமகிருஷ்ணர் அந்த க்ஷேத்திரத்திலே அர்ச்சகரானார். ஆ! ஆ! தாயே! பராசக்தி! என்ன ஆச்சர்யமாக ராமகிருஷ்ணரைக் கொண்டுவந்துவிட்டாய்? உனது ஆக்ஞையை எதிர்த்து எவர் நடக்கமுடியும்? சூத்திரஸ்திரீயால் நிர்மிக்கப்பெற்றதென்றும், அக்கோவிலிலே அர்ச்சகத் தொழில் புரிவது கூடாதென்றும் எந்த க்ஷேத்திரத்தை ராமகிருஷ்ணர் [illegible] கூறினரோ, அதே க்ஷேத்திரத்தில் அவர் அர்ச்சகராகும்படி நேரிட்டுவிட்டது.



சென்றார் கோவிலுக்குள்ளே; விதிப்படி பூஜை புநஸ்காரங்களை முடித்தார். தேவியை நோக்கிப் பத்மாசனமிட்டு உட்கார்ந்துகொண்டார். "தாயே! எனக்கு எப்பொழுது பிரசந்நமாகப்போகிறாய்? நான் அந்தகாரத்தில் அகப்பட்டு அலைந்து திரிகின்றேனே; நான் உய்யுமாறு எங்ஙனம்? நான் உன்னை வெறுத்து வெறுத்துத் தள்ளிவிட்டு ஓடினேன்; நீ எப்படியோ என்னுடைய புத்தியை மயக்கி உன்னிடத்திலேயே கொண்டுவந்து சேர்த்துக்கொண்டுவிட்டாய்; வா! வா! என் முன்னே வா! பிரத்தியக்ஷத்தில் வா! என்று பலவிதமாக ஸ்தோத்திரம் செய்து, பின்னர்ப் பகவதி விஷயமான கீர்த்தனைகளைப் பாடினார். சில நேரம் கழிந்தபிறகு பார்க்க, அவர் உட்கார்ந்தது உட்கார்ந்தபடியே, இரு கண்களையும் மூடி, பகிர்முக இந்திரியங்களை யெல்லாம் உள்ளுக்கு இழுத்துக்கொண்டு, திரிகரணமு மொத்து சாக்ஷாத் சச்சிதாநந்த சொரூபிணியான பரமேச்வரியினிடத்திலே மனத்தை லயம்செய்து ஆநந்த நிஷ்டையில் அமர்ந்திருந்தார்.

வெகுநேரம் கழித்து அவருடைய மனமானது பகிர்முகப்பட்டது. கண்களை விழித்தார்; சுற்றிலும் பார்த்தார்; தாம் ஒருபுதிய உலகத்தைக் கண்டார்; முன்னிருந்த உலகம் அவருக்கு மாறிவிட்டது; அவருடைய பூர்வஜன்மவாசனைகளெல்லாம் பறந்தோடிப் போய்விட்டன; அவருடைய பிராஹ்மணப் பிடிவாதங்களெல்லாம் போனவிடம் தெரியவில்லை. இப்பொழுது அவர் சுத்தமான, நிர்மலமான, களங்கமற்ற ஸ்படிகம் போன்று ஆ[illegible]ர். பிரபஞ்சமானது

அன்றுமுதல் அவருக்குக் கரைய ஆரம்பித்துவிட்டது. இப்பொழுது இவருக்கு வயது இருபதிருக்கலாம். தினந்தோறும் இம்மாதிரியே இவர் பூஜை முதலியவற்றை முடித்துவிட்டு, தேவிக்கு எதிர் முகமாக உட்கார்ந்துகொண்டு தேவியை மனத்தினிடத்திலே நிறுத்தித் தியானம் செய்வார். இங்ஙனம் சின்னாட்கள் சென்றன. இவரிடத்திலே தேவி பக்தி பழுத்துவிட்டது; இவருடைய ஹிருதயம் உருக ஆரம்பித்துவிட்டது; இவருடைய மனம் கனிந்துவிட்டது. இவருக்குத் தேவியைத் தவிர வேறு நினைப்பு உண்டாவதில்லை. "ஏ, தேவி! மகாமாயி! எப்பொழுதுதான் வரப்போகிறாய்? ஐயோ; நாட்கள் வீணே கழிகின்றனவே; என் மாதா என் முன்னே வாராளோ? நானென்செய்வேன்? மாதாவின்மடியினின்றும் பிரிந்திருக்க முடியவில்லையே" என்று கதறுவார்; தூபமெடுத்துத் தேவிக்கெதிரே காட்டிக்கொண்டேயிருப்பார்; திடீரென்று அவருடைய மனமானது தேவியினிடத்தில் லயித்துவிடும்; தூபமெடுத்த கை அப்படியே நின்றுகொண்டிருக்கும்; மறுபடியும் மனமானது பகிர்முகப்படுவதற்குச் சிலநேரம்செல்லும்; பகிர்முகப்பிரக்ஞையடைந்தவுடனே, அவர் "இது என்ன? கையிலெடுத்த தூபம் அப்படியே யிருக்க, நாம் எங்கோ சென்றிருந்தோமே; தேவி! மகாமாயி! மகிஷாசுரமர்த்தனி! உன்னிடத்தில்தானா நான் வந்திருந்தேன்" என்று இரைந்து சத்தமிட்டுக் கேட்பார்.

இருந்தாற்போலிருந்[illegible] முன்னே தேவியி[illegible] [illegible]சுதந்திர சாமர்த்தியங்களெல்லாம் விகசிதமாகத்



தோன்றிவிடும். "ஆ, என் அம்மா! என்னை ஈன்றெடுத்த தாயே! என்னை மாத்திரமன்று, இவ்வண்டபிண்ட சராசரங்களை யெல்லாம் ஈன்றருளிய தாயே! நீ வரைந்துள்ள இப்பிரபஞ்சமாகிய படமானது, ஆ! ஆ! எவ்வளவு அழகு வாய்ந்ததாயிருக்கிறது! உன்னுடைய கைச்சமர்த்துத்தான் என்னே? ஆகாயமாகிய வெட்டவெளிப் பந்தலிலே எண்ணற்ற நக்ஷத்திரமணிகளை நீ எப்படிக் கோர்த்துத்தொங்கவிட்டாய்? ஒரே புஷ்பத்தினிடத்தில், எத்தனை நிறங்களை நீ அழகுறப் பொருத்தியிருக்கிறாய்? ஜீவராசிகள் அனைவரும் ஜனனமரண துக்கத்தை யுணர்ந்தபொழுதிலும், அவர்களுடைய கண்களை யெல்லாம் நீ எப்படியோ கட்டிவிட்டு, உன்னுடைய இச்சைப்படிக்கு அவர்கள் சுழன்றுகொண்டே யிருக்கும்படி செய்கிற உன்னுடைய சாமர்த்தியந்தான் என்னே? அரசனை யாண்டி யாக்குகின்றாய், ஆண்டியை அரசனாக்குகின்றாய். இத்தகைய மகா மகிமைவாய்ந்த நீ எனக்கு மாதாவாயிருக்க, எனக்கு என்ன குறை?" என்று தமக்குள் தாமே சொல்லிக்கொள்வார்; உடனே சிரிப்புப் பொங்கிவிடும்; விழுந்து விழுந்து சிரிப்பார். மாதாவினுடைய மகிமையை நினைக்க நினைக்க, அவருக்கு அபரிமிதமான ஆநந்தம் உண்டாகும். ஆடுவார், பாடுவார், ஓடுவார், அவருடைய முகத்திலே ஒரு வித புன்நகை தவழும்

திடீரென்று குணம் மாறிவிடும்; கோவென்று அழ ஆரம்பித்துவிடுவார்; தேம்பித்தேம்பி யழுவார்; கதறியழுவார்: வாய்விட்டு அரற்றி யழுவார். "தாயே! உன்னைப்

பாராது நாட்கள் வீணாகக் கழிகின்றனவே; இரவு பகலாக உன்னைத் தவிர, நான் வேறெவரையும் நினைக்கிறதில்லையே. நீ ஏன் என்முன் வரமாட்டேன் என்கிறாய்? நான் செய்த குற்றம் என்ன? எக்குற்றமும் செய்ததாக எனக்குத் தோற்றவில்லையே; அப்படியே நான் ஒருக்கால் குற்றம் செய்திருந்தாலும், தாயாகிய நீ அதைப் பொருக்கவல்லை யல்லையோ? நீ என்ன, எனக்குப் பிரசன்னமாகப்போகிறாயா? இல்லையா? நீ பிரசன்னமாகாவிட்டால், பிரஹ்மஹத்தி உன்னைச் சூழ்ந்துகொள்ளும்" என்று பலவாறு பிதற்றி யழுவார்.

வரவர, கோவில் பூஜை முதலியவற்றை இவரால் சரிவர நடத்த முடியவில்லை. இவருக்கு உண்மைப் பக்தி யுண்டாகி இரவு பகலாக உருகத்தொடங்கிவிட்டார்; ஒவ்வொரு சமயங்களிலே காளிதேவி விக்கிரகத்துக்குப் பூஜை செய்ய மறந்துவிடுவார்; ஒவ்வொரு வேளைக் கோவிலைத் திறக்கக்கூடயாட்டார். ஒவ்வொரு சமயத்திலே பூஜை பாதியிலே நின்றுவிடும். அக்கம் பக்கத்தாரெல்லோரும், சுற்றியுமிருந்தார்கள். "இவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது" என்று கூற ஆரம்பித்தார்கள். பலரும், "இவருடைய வாலிப வைதீகப் பிடிவாதமே இப்பைத்தியத்துக்குக் காரணம்" என்று கூறினார்கள். சிலர், "அந்த தக்ஷிணேச்வர ஆலயத்துத் தோட்டத்திலேயுள்ள பிரஹ்மராக்ஷஸு ஏதோ இவரைப் பிடித்திருக்கின்றதுபோலும்" என்றார்கள். சிலர், "இவர் தேவி தர்சனம்செய்ய இச்சித்து, சாக்தேயமார்க்க அநுஷ்டானங்களைப் பின்பற்றப் புகுந்து, அவ்வநுஷ்டான



விதிகளிலே ஏதோ தவறிவிட்டார்போலத் தோன்றுகிறது" என்றும், "அதனால்தான் மூளை குழம்பிவிட்டது" என்றும், கூறினார்கள். சிலர், "இவருக்கு இது காமப் பைத்தியமோ?" என்று கூடச் சொன்னார்கள். இவர் "பக்த சிரேஷ்டர்" என்றும், "உலகத்தாருக்கு இவர் பித்தரெனத் தோன்றுவது இயற்கையே" என்றும், "ஏனெனில், உலகினர் போல உலக வியவகாரங்களிலே உழன்றுகொண்டிராது, ஒருபடி உயரக் கிளம்ப ஆரம்பித்துவிட்டார்" என்றும், "மனுஷ்யவர்க்கமானது தன்னுடைய சமத்துவத்துக்குக் கீழ்ப்படியி லுள்ளாரையும் தனக்கு மேலே சென்று விட்டவர்களையும் பித்தர்களென்று கூறுவது இயற்கையே" என்றும், "ஆதலால், இவர் மகாபுருஷர்என்பதில் சந்தேகமில்லை" என்றும், உண்மையை யறிந்த ஒரு சிலர் சொல்லிக்கொண்டார்கள்.

இதெல்லாம் ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குத் தெரியும். ஆனால், யார் என்ன சொல்லிக்கொண்டாலென்ன? பிறருடைய அபிப்பிராயங்கட்குத் தக்கவாறு அவர் தமது குணத்தைமாற்றிக்கொள்ளப்போகிறார்? இந்தப் பாழ் (சூந்ய) உலகம், ஓர்ந்து பார்த்தால் ஒன்றுமே யில்லாமற் போகின்ற இவ்வுலகம் என்ன சொன்னாலென்ன? ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது மார்க்கத்தினின்றும் சற்றும் வழுவவில்லை. அவருடைய சகோதரர்கள் அவருக்கு எவ்வளவோ புத்திசொல்லிப் பார்த்தார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணர் அசையவில்லை. அவருடைய மனமானது அடியோடு அப்படியே தேவியினிடத்

தில் ஒப்புவிக்கப்பட்ட பின்னர், தேவிக்குத் தாம் அடிமை யென்று முறிச்சீட்டு எழுதிக் கொடுப்பதுபோல எழுதிக் கொடுத்துவிட்ட பின்னர், இனிமேல் பின்வாங்க முடியுமா?

---

## 3-ம் அத்தியாயம்

## ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய விவாஹம்

"தாயே! மகாகாளி! ஜகதீச்வரி! இன்னும் உனக்கு என்மீது கிருபை வரவில்லையோ? அந்தோ! என் செய்வேன்? பொழுது போய்விடுகின்றதே!" என்று புலம்பிக்கொண்டே ஸ்ரீராமகிருஷ்ணர் தக்ஷிணேச்வராலயத்தினருகே கங்கைக் கரையோரமாக உலாவிக்கொண்டிருந்தார். அப்பக்கத்திலே எத்தனையோ ஜனங்கள் போய்க்கொண்டும் வந்துகொண்டும் இருந்தார்கள். இவர் அவர்களை ஏறெடுத்துப் பார்க்கவில்லை. தாமும் தமது தியானமுமொழிய வேறெவ்விதப் பிரக்ஞையு மில்லாதவரா யிருந்தார். மாலை நேரமாய்விட்டது; தக்ஷிணேச்வர ஆலயத்திலே காளி மகாதேவிக்கு சாயரக்ஷை பூஜை நடக்கவேண்டிய சமயம். அர்ச்சகரைக் காணவில்லை. ராணிரஸமணிதேவியின் பந்துவாகிய மதுரநாதன், வேலைக்காரர்களை விட்டு, நாலா பக்கங்களிலும் தேடி யிட்டுக்கொண்டு வரும்படி சொன்னான். முதலில் அர்ச்சகராக நியமிக்கப்பட்டு இப்பொழுது வியாதியினாலே பீடிக்கப்பட் டிருக்கும் அவருடைய வீட்டிற்கும்



ஆள் அனுப்பப்பட்டது. இதற்குள்ளாக ஸ்ரீ ராமகிருஷ்ணர் தாம் உலாவிக்கொண் டிருந்ததை நிறுத்திவிட்டு, அங்குக் கங்கைக் கரையிலேயிருந்த ஒரு ஆல விருக்ஷத்தினடியிலே சாய்ந்து உட்கார்ந்துகொண்டிருக்கிறார்; அவருடைய கண்கள் மூடப்பட் டிருக்கின்றன; ஆனால், இரு கண்களினின்றும் கண்ணீர் தாரைதாரையாகப் பொழிகின்றது. வியாதியஸ்தராகிய அர்ச்சகர் இச் சங்கதியைக் கேள்வியுற்று, தாம் மிகவும் பலயீனரா யிருந்தபொழுதிலும் அந்தக் கோவிலிலே தமக்கு வேலை போய்விடுமோ என்ற பயத்தினாலும் சகோதர வாற்சரியத்தினாலும் தூண்டப்பட்டு, ராமகிருஷ்ணரைத் தேடிக்கொண்டு புறப்பட்டார். அவர் நேரே கோவிலினுள்ளே வந்து பார்த்து அங்கு எங்கும் ராமகிருஷ்ணரைக் காணாமையால் மிகவும் வாடி, "ஐயோ, சின்னாட்களாக அவன் பித்துப் பிடித்தவன்போ லிருந்தானே; எங்குப் போய்விட்டானோ? கங்கையிலே குதித்துவிட்டானோ? அல்லது வேறெங்கேனும் சென்றுவிட்டானோ? நான் எங்கே சென்று தேடுவேன்?" என்று வருந்திக்கொண்டே கங்கைக் கரையோரமாகப் பார்த்துக்கொண்டேவந்தார். மதுரநாதனுடைய வேலைக்காரன் ஒருவனும் ராமகிருஷ்ணரைத் தேடிக்கொண்டு அவ்வழியே வந்தான். ராமகிருஷ்ணர் உட்கார்ந்திருந்த அம்மரத்தினடியிலே இருவரும் சந்தித்தார்கள். அப்பொழுது இருவரும் ஒருவருக்கொருவர் பேசிவிட்டு, கோவிலை நோக்கித் திரும்பினார்கள். திரும்பினதுதான் தாமதம், எவரோ ஒருவர் அம்மரத்தினடியிலே உட்கார்ந்திருப்பதுபோல இவர்களுக்குத் தென்

பட்டது. அந்திநேரமாகையால், மந்தாந்தகாரமாயிருந்ததினால், இவர்களுக்கு அவர் இன்னாரென்று புலப்படவில்லை; கீழே குனிந்து உற்றுப்பார்த்தார்கள்; ஆயினும் தெரியவில்லை. உடனே அந்த வேலைக்காரன் கோவிலுக்குள் சென்று ஒரு விளக்கேற்றி அதை யெடுத்துக்கொண்டு வந்தான். இப்பொழுது பார்க்கையிலே அது ராமகிருஷ்ணர்தான் என்று தெளிவாகத் தெரிந்துவிட்டது. அவருடைய தமயனார், "கதாதர! கதாதர!!" என்று அவருடைய பெயரைச் சொல்லிக் கூப்பிட்டார். பதிலேயில்லை. இராமகிருஷ்ணருடைய கண்களிலிருந்தோ கண்ணீர் பொழிந்து வழிந்துகொண்டேயிருக்கிறது. தமயனார் ராமகிருஷ்ணரைத் தட்டியெழுப்பினார். இராமகிருஷ்ணர் கண்களை விழித்துப் பார்த்தார்; தமயனாரைக் கண்டார். "ஏன் அண்ணா! இவ்வளவு வியாதியாயும் பலயீனமாயும் இருக்க வெளியே வந்தீர்கள்?" என்று கேட்டார். "அப்பா! கோவிலில் பூஜை செய்வதற்கு நேரமாகவில்லையோ? நம்மை இவ்வர்ச்சக வேலையிலே நியமித்திருக்கும் ராணிரஸமணியம்மாளும் மதுரநாதரும் ஆள்மேல் ஆள்விட்டு உன்னைத் தேடுகிறார்களே; ஒருவரிடத்தில் கூலிவாங்கினால், அதற்குத் தகுந்தபடி வேலை செய்ய வேண்டாமா?' என்று சொல்ல, ராமகிருஷ்ணர், "நான் இப்பொழுதும் பூஜைசெய்து கொண்டுதான் இருந்தேன்! ஆனால் கூலிக்குப் பூஜை செய்யவேண்டுமென்ற ஒரு கடமையும் இருக்கின்றதோ?" என்று சொல்லிக்கொண்டே எழுந்திருந்து, கோவிலினுள் சென்று, செய்ய வேண்டிய பூஜையை விதிப்படி செய்து முடித்தார்.



இங்ஙனம் சிலநாட்கள் சென்றன. ஆயினும், இவருடைய பக்திப்பைத்தியம் நாளுக்கு நாள் பழுத்து வருகின்றது. ஒருநாள் மதுரநாதன் சில நண்பர்களுடனே கோவிலினுள் வந்து பார்க்க, இவர் தேவியின் முன்னே சித்திரப் பதுமைபோல அசைவற்று நின்றுகொண்டிருக்கிறார்; இவருடைய வலதுகை ஒரு தூபத்தை யெடுத்துத் தேவிக்கு எதிரே காட்டித் தாங்கியவண்ணமா யிருக்கிறது. மதுரநாதன் மூலஸ்தானத்தினருகேபோகக் கூடாதவனாதலால், இவர் கையிலே தூபத்தை யெடுத்துக்கொண்டு, ஏதோ மந்திரம் ஜபித்துக்கொண் டிருக்கிறார்" என்று நினைத்து, சிறிதுநேரம் தனது நண்பர்களுடனே காத்து நின்றுகொண்டிருந்தான். ஆயினும், இவருடைய மந்திரஜபம் ஓய்ந்து, இவர் அசைவதாகக் காணவில்லை. இதென்ன இது? பதினைந்து நிமிஷம் ஆய்விட்டது, அரைமணிநேரமாய்விட்டது, முக்கால்மணிநேரமாய்விட்டது; ராமகிருஷ்ணர் ஸ்தம்பம் போல நிற்கிறார். மதுரநாதன் கோவில் மடப்பள்ளியிலேயுள்ள சமையற்காரப் பிராஹ்மணனை யழைத்து ராமகிருஷ்ணரைப் கூப்பிடச் சொல்லினான். அந்தப் பிராஹ்மணன் ராமகிருஷ்ணருடைய முன்னே சென்றபொழுது, ராமகிருஷ்ணர் தேவியினுடைய விக்கிரகத்தை விழித்துப் பார்த்தது பார்த்தபடியே யிருக்கிறார்; அவர் கண்களினின்றும் கண்ணீர் ஓடுகின்றது. இந்த பிராஹ்மணன் ராமகிருஷ்ணரைக் கூப்பிடவே, இரண்டு மூன்றுதரம் உரக்க அவருடைய பெயரைச் சொல்லிக் கூப்பிடவே, ராமகிருஷ்ணர் கண்விழித்துப்பார்த்து, "என்னசங்கதி?" என்று கேட்டார்.

பிராஹ்மணன் ராமகிருஷ்ணரை மதுரநாதன் கூப்பிடுவதாகச் சொல்லவே, ராமகிருஷ்ணர் மதுரநாதனிடம் வந்தார். மதுரநாதன் "நான் வந்து முக்கால்மணிநேரமாய்விட்டது; நீங்கள் இவ்வளவு நேரம் நின்றது நின்றபடியே யிருந்துவிட்டீர்கள். இப்படிப் பூஜை செய்தால் ஆலயத்துக்கு வருகிற ஜனங்களுக்கு அது உபகாரமா யிருக்குமா?" என்று கேட்டுவிட்டு, தனது வீட்டுக்குச் சென்று, ஒரு வேலைக்காரனை யனுப்பி ராமகிருஷ்ணருடைய தமயனை இட்டுக்கொண்டு வரும்படி உத்தரவு செய்தான். அப்படியே, பாபம்! அவர் மிகவும் பலயீனராயிருந்தும், மெல்ல மெல்ல மதுரநாதனிடம் வந்து சேர்ந்தார்.

"ஐயா! உம்முடைய தம்பி இனிமேல் கோவில் பூஜைக்கு உதவமாட்டார்; வேறு எவரையேனும் அனுப்பிப் பூஜை செய்யச் சொல்லுங்கள்! இல்லையேல் நானே வேறு எவரையாவது நியமித்துக்கொள்ளட்டுமா?" என்றான் மதுரநாதன். அர்ச்சகர் என்ன செய்வார், பாபம்; "நானே தினந்தோறும் வந்து பூஜைசெய்கிறேன்" என்றார். அன்று முதல் அவர் கோவிலுக்கு ராமகிருஷ்ணரை யனுப்பாமல் 'மெல்ல மெல்ல உலகவழிகளிலேஅவருடைய மனம் செல்லுமாறு செய்வதற்கு என்ன செய்யலாம்?' என்று யோசிக்கலானார். ராமகிருஷ்ணரோ, தமக்குக் கோவிலிலே பூஜையில்லாவிட்டாலுங்கூட, அந்தக் கோவிலைச் சுற்றிக்கொண்டேதான் இருப்பார். அங்குதான் எங்கேனும் ஒருபுறத்தில் உட்கார்ந்து அழுதுகொண் டிருப்பார். அவருடைய தமய



னார். அவரைத் தினந்தோறும் தேடிப்பிடித்து வீட்டுக்கு இட்டுச் சென்று எத்தனையோ புத்திமதிகள் சொல்லிப் பார்த்தார்; ஒன்றும் பயன்படவில்லை. தாம் மூத்தவர் என்ற எண்ணத்தைக்கூட யிழந்துவிட்டு, ராமகிருஷ்ணருடன் இவர் சிற்றின்பப் பேச்சுக்கள் பேசுவார்; உலகப் பெருமைகளை யெடுத்து உரைப்பார்; மண், பெண், பொன் ஆகிய மூன்றின்மீதும் ஆசையை உண்டுபண்ணுவார். ஸ்ரீராமகிருஷ்ணருடைய மனமானது அவருடைய செவியினிடத்தில் இருந்தால்தானே, அவருடைய செவி இதை யெல்லாம் ஏற்றுக்கொள்ளப்போகின்றது. அர்ச்சகருடைய பேச்செல்லாம் செவிடன் காதிலூதிய சங்குபோலாயிற்று. "அவருக்கு ஒரு விவாகம் செய்துவைத்துவிட்டால், அது அவருக்கு விலங்கிட்டதுபோலாய்விடும்" என்று நினைத்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய ஆரம்பித்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணருடைய தாயார் கல்கத்தாவிலே மூத்த பிள்ளையாகிய ராமகுமார சட்டோபாத்தியாயருடன் வசித்துவந்தாள். அவ்வம்மையார தமது புத்திரனுடைய ஸ்திதியைக் கேள்விப்பட்டு, மிகமிக வருந்தி, உடனே புறப்பட்டு தக்ஷிணேச்வரம் வந்து, ராமகிருஷ்ணரைக் கட்டிக்கொண்டு கோவென்று அழுதாள். அப்பொழுதும் ராமகிருஷ்ணருடைய மனமானது மாறவில்லை. "இனிமேல் இவரை தக்ஷிணேச்வரத்திலே வைத்திருக்கக் கூடாது" என்றும், "அங்குள்ளவரையில் அவர் அப்படியேதான் இருப்பார்" என்றும், "உடனே கல்கத்தாவுக்குக் கொண்டுபோய்விட வேண்டும்",

என்றும் தீர்மானமாயிற்று. அப்படியே அவ்வம்மையார் தமது மூன்றாவது புத்திரனாகிய ஸ்ரீ ராமகிருஷ்ணனை யிட்டுக்கொண்டு கல்கத்தாவில் தமது மூத்த பிள்ளையினிடம் வந்து சேர்ந்தாள்.

இங்கே ராமகுமார சட்டோபாத்தியாயரும் சும்மா யிருக்கவில்லை. "தம்பியினுடைய மனத்தை எப்படியாவது பிரபஞ்சமுகமாகத் திருப்பிவிட வேண்டும்" என்று தம்மாலான பிரயத்தனங்களெல்லாம் செய்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணரை யடிக்கடி யங்கே நடக்கும் கூத்துக்களுக்கும் நாடகங்களுக்கும் இட்டுக்கொண்டு செல்லும்படி ஏற்பாடு செய்தார். கல்கத்தா இந்திய ராஜாங்கத்துக்கே ராஜதானி நகர் ஆகையினாலே, மேல்நாட்டு நாகரீகமும் பளபளப்பும் அங்கு வந்து குவிந்துகிடந்தன. ஐரோப்பியர்கள் வசிக்கும் பாகங்களின் தெருக்கள் வழியாக ராமகிருஷ்ணரை யிட்டுக்கொண்டு வரும்படி ஏற்பாடு செய்தார். விவாகப் பேச்சோ பலமாக நடக்க ஆரம்பித்தது. தமக்குச் சமமான யோக்கியதையுள்ள குடும்பங்களிலே ராமகுமார சட்டோபாத்தியாயர் தமது தம்பிக்குப் பெண் பார்க்கலானார். "ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய மனநிலைமை பித்துப் பிடித்ததுபோ லிருக்கின்றது" என்று கேள்விப்பட்ட பலரும் பெண் கொடுப்பதற்கு யோசிக்கலானார்கள். வேறு சிலர் ராமகுமார சட்டோபாத்தியாயருடைய யோக்கியதாம்சத்தைக் குறித்து, அவருடன் சம்பந்தம் செய்துகொள்ள விரும்பினார்கள். இராமகிருஷ்ணர் இவ்விதமாக உலகவியவகாரங்களிலே



மெல்லமெல்ல மனத்தைச் செலுத்தி மயங்கிவிடும்படி ஏற்பாடுகள் செய்யப்பட்டு வந்தபோதிலும், ராமகிருஷ்ணருடைய மனநிலை மாறவில்லை. இவர் தமது தமயனாருடைய மாணவர்களுடனே கூத்துக்களுக்குச் செல்வார்; பாட்டுக் கச்சேரிகளுக்குச் செல்வார்; அழகிய நாகரிகம் மிகுந்த தெருக்களினூடே உலாவிவருவார். ஆயினும், அவருடைய மனமானது தேவியின் பாதார விந்தங்களை விட்டு நீங்க முடியவில்லை.

ஒரு நாள் ராமகிருஷ்ணர் பகலில் போஜனம் செய்துவிட்டுத் திண்ணையிலே வந்து உட்கார்ந்து, திண்ணைச் சுவற்றிலே சாய்ந்துகொண்டு பெருமூச்சு ஒன்று விட்டார். அச்சமயத்திலே அவருடைய தமயனாராகிய ராமகுமார சட்டோபாத்தியாயர் வெளியே போவதற்காக உள்ளேயிருந்து வந்தவர், தம்பி ஏதோ பெருமூச்சு விடுகிறதைக் கவனித்து, சட்டென்று "இன்னும் கவனிக்கலாம்" என்று பின்புறத்திலேயே நின்றுகொண்டார். ராமகிருஷ்ணர் அவரைப் பார்க்கவில்லை. பெருமூச்சு விட்டுவிட்டு, ராமகிருஷ்ணர், "ஆ, அம்மா! தேவி! ஜகதீச்வரி! சச்சிதானந்த சொரூபிணி! இதெல்லாம் உனக்கு வேடிக்கையா யிருக்கின்றதோ? உனக்குப் பரிகாசமா யிருக்கின்றதோ? நீ, என்ன, விளையாடுகிறாயோ? நான் இரவுபகலாக உன்னை எண்ணிப் புழுங்கிக் கொண்டிருக்க, நீ என்னுடன் விளையாடவா செய்கிறாய்? இது தர்மமா? இது நியாயமா? உன் கோவிலை வெறுத்து ஓடின என்னை நீ எப்படியோ திரும்பவும் இழுத்துக்கொண்டாய்; அதுமாத்திரமன்று; உன்னிடத்திலே எனக்கு அத்

தியந்த பக்தியையும் ஊட்டிவிட்டாய்; இரவுபகலாக உன்னுடைய சிந்தையேயன்றி வேறு சிந்தையில்லை; அப்படியிருந்தும் இப்பொழுது என்னை நீ எனது பந்துக்களெனப்பட்டவர்களிடத்திலே காட்டிக்கொடுத்துவிட்டாய்; ஐயோ, அவர்கள் எனக்கு விவாகமாகிற விலங்கிட்டு, பிரபஞ்ச வியவகாரமாகிற காராக்கிரகத்திலே தள்ளத் துணிந்துவிட்டார்களே; நான் என்னசெய்வேன் தாயே! பராசக்தி! மகாசக்தி! மகாமாயி! மகத்ஸ்வரூபி! எளியேனை இச்சமயம் காப்பாற்றல்வேண்டும்; இல்லையேல், எனது இஷ்டத்துக்கு விரோதமாக, எனது சங்கற்பத்துக்கு விரோதமாக நான் இவ்வநித்தியப் பிரபஞ்ச வியவகாரங்களிலே தலையிட்டு உழலும்படி நேர்ந்துவிட்டால், எனது ஞானாபிவிருத்தியைத் தடுத்தபழி வீண்போகாது; பரமேச்வரி!" என்றார். அவ்வளவுதான்; அப்புறம் ஒரு வார்த்தையும் அவருடைய வாயிலிருந்துவரவில்லை. ஸ்ரீராமகுமார சட்டோபாத்தியாயர் சுமார் ஐந்து நிமிஷம் அப்படியே நின்றிருந்து பார்த்தார். பேச்சுமூச்சைக் காணவில்லை; மெல்ல வெளியேவந்து ராமகிருஷ்ணரைப் பார்த்தார்; ராமகிருஷ்ணர் சுவற்றின்மீது சாய்ந்தவண்ணமாய்க் கால்களை நீட்டிக்கொண்டும் கைகளைக் கட்டிக்கொண்டும் உட்கார்ந்திருக்கிறார்; கண்கள் மூடியிருக்கின்றன; முகமானது ரௌத்திராகாரமாக விளங்கிற்று; ராமகுமார சட்டோபாத்தியாயர் அப்படியே நின்று கவனித்தார்; முகம் மாறுதலடைந்து வாடி, துக்கசொரூபமாயிற்று. ராமகுமார சட்டோபாத்தியாயர் அதையும் கவனித்தார்; சில நிமிஷங்களுக்கெல்லாம் இரு கண்களினின்



றும் கண்ணீர் தாரைதாரையாக ஒழுகத் தொடங்கிற்று. சட்டோபாத்தியாயர் கண்டு பிரமித்தார். "ஆ! ஆ! இது அன்றோ உண்மையான பக்தி?" என்றார். "என்னுடைய தம்பியைப் பித்தனென்று சொன்னவன் எவன்?" என்று ராமகிருஷ்ணரைப் பைத்தியக்காரர் என்று கூறினவர்கள் மீது கோபித்துக்கொண்டார்; உள்ளேயோடினார்; தாயாரையிட்டுக்கொண்டுவந்து ராமகிருஷ்ணரைக் காண்பித்தார். அவ்வம்மையார் பிள்ளை யழுவது கண்டு மனம் பொறாராகி, "ஐயோ, என் கண்ணே! கதாதரா! வரப்பிரசாதத்தால் உதித்த எந்தன் அருந்தவப் புதல்வனே! நீ அழவேண்டிய காரணமென்ன?" என்று கேட்க, பதிலொன்றும் வரவில்லை. தூங்குபவரைத் தட்டி எழுப்புவதுபோல, ராமகிருஷ்ணரைத் தட்டி எழுப்பி விழிக்கும்படி செய்து, "குழந்தாய்! என் செல்வமே! நீ ஏன் அழுகிறாய்?" என்று கேட்டார் அவ்வம்மையார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது கண்களைத் துடைத்துக்கொண்டு, "ஒன்றுமில்லை" என்றார். தாயார் எவ்வளவோ கேட்டுப் பார்த்தும், ராமகிருஷ்ணர் தகுந்த விடை யளிக்கவில்லை.

அன்று மாலையாயிற்று. போஜனத்தருணம். ராமகிருஷ்ணர் தெருத்திண்ணையில் உட்கார்ந்திருக்கிறார்; சாதாரணமாகக் கலந்துகொள்வதில்லை; அதுவும் இப்பொழுது அவர் அநேகமாகத் தனித்திருக்கவே விரும்பினார்.

உள்ளே ராமகுமார சட்டோபாத்தியாயர் தமது தாயாரிடத்திலே தாம் பகலில் ராமகிருஷ்ணர் தமக்குத்தாமே

கூறிக்கொண்ட விஷயத்தை மறைந்திருந்து கேட்டவாறு எடுத்துக் கூறி, "இனிமேல் ராமகிருஷ்ணருக்கு விவாகம் செய்விக்கவேண்டிய விஷயத்திலே மிகவும் அவசரப்படவேண்டும்" என்றும், "மெல்லமெல்லப் பிரபஞ்சப் பிரக்ஞையையே இழந்து, மனமானது இராப்பகலாக லயிக்கும் நிலைமை வந்துவிட்டால், பின்னர் மனத்தைப் பிரபஞ்ச வழியில் இழுப்பது கஷ்டம்" என்றும், "ஆதலால், இப்பொழுது அவர் அந்த மார்க்கத்திலே அபிவிருத்தியடைந்துவிடாதபடி தடுக்கவேண்டியது தங்கள் கடமை" என்றும் கூறினார். இவர்கள் இதுகாறும் பார்த்த பெண்களுக்குள்ளே ஒரு பெண்ணை நிச்சயித்துக்கொண்டு, "இந்த விஷயத்தை மெல்ல ராமகிருஷ்ணரிடத்திலே கூறுவது" என்று தீர்மானித்துக்கொண்டார்கள்.

"கதாதரா! கதாதரா!" என்று கூப்பிட்டாள் ராமகிருஷ்ணருடைய தாயார். திண்ணையிலே உட்கார்ந்திருந்த ராமகிருஷ்ணர் மெல்ல எழுந்து உள்ளே சென்றார். எல்லோரும் சாப்பிட உட்கார்ந்தார்கள். ராமகிருஷ்ணரும் ஒரு ஓரமாக உட்கார்ந்தார். பாதி சாப்பிட்டுக்கொண்டிருக்கையிலே, ராமகுமார சட்டோபாத்தியாயர், தம்பியைப் பார்த்து, "அப்பா, கதாதரா! நமது தாயாருக்கு வயதாகித் தள்ளாமை வந்துவிட்டது; தனக்கு ஐம்புலன்களும் நன்றாயிருக்கையிலேயே உனக்கு விவாகம் செய்துவைத்துவிடவேண்டுமென்று ஆசைப்படுகிறாள்; நீ என்ன சொல்கிறாய்? உனது அபிப்பிராயமென்ன?" என்று கேட்டார். ஸ்ரீராமகிருஷ்ணர் பதில் கூறவேயில்லை; தலைகுனிந்து மௌனமாகச் சாப்பிட்டுக்கொண்டிருந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய தாயார்—சந்திரமணிதேவி—தனது கடைப்பிள்ளையினருகில் சென்று, "என் கண்ணே! கனகமே! பொன்னே! பூஷணமே! அண்ணா கேட்டதற்கு ஏன் பதில் சொல்லவில்லை? செல்வக் குழந்தாய்! என் கண் நன்றாயிருக்கையிலேயே, என் காது கேட்டுக்கொண்டிருக்கையிலேயே, உனக்குக் கல்யாணம் செய்து கண்குளிரப் பார்க்கவேண்டுமென்று ஆசை என்னுள்ளத்திலே பொங்குகின்றது; நீ என்ன சொல்கிறாய்?" என்று கேட்டாள். ஸ்ரீராமகிருஷ்ணர் அதற்கும் ஒன்றும் பதிலுரைக்கவில்லை. தாயார் இரண்டு மூன்று தடவை கேட்க, ராமகிருஷ்ணர், "அம்மா! ஏன் என்னைத் தொந்தரவு பண்ணுகிறாய்? நான் 'சரி' என்று சொன்னால், விவாகம் நடந்தேறிவிடுவது நிச்சயம்தானோ? நான் 'கூடாது' என்று சொல்லிவிட்டால், விவாகம் நின்றுவிடுமா? எல்லாம் நம்மையெல்லாம் பம்பரம்போ லாட்டுவிக்கின்ற மகாசக்தியின் செயலல்லவா? நம்முடைய இஷ்டப்படியே எல்லாம் நடந்துவிடுகின்றனவா இவ்வுலகில்? அப்படி நடப்பதானால் நமக்கு ஏன் துன்பமும் துக்கமும் உண்டாகின்றன?" என்று மறுமொழி கூறினார். இம் மறுமொழியிலே வேதாந்தசாரம் நிறைந்து கிடக்கின்றதாயினும் அவ்வம்மையார் தமது புத்திரன் விவாகத்துக்குச் சம்மதித்துவிட்டதாகவே கருதி, ராமகிருஷ்ணரை நோக்கி, "எனதரும் கதாதரா! (ஒருவருடைய வீட்டுப்பெயரைச் சொல்லி) இன்னார் வீட்டிலே ஒரு பெண் உள்ளது; அப்பெண்ணுக்கு வயது பதி

ளென்று ஆகின்றது; இன்னும் ஒன்று அல்லது இரண்டு வருஷத்திலே அது ருதுவாகிவிடும்; பெண்ணோ அதிசௌந்தர்யவதி; முற்காலத்துப் பெண்களாகிய எங்களைப்போல மூடப்பெண் அன்று; நன்றாக எழுதப்படிக்கத் தெரிந்தவள்; சங்கீதமும் கொஞ்சம்வரும்; மிகுந்த தனவந்தர்கள் குடும்பத்தைச் சார்ந்தவளல்லளாயினும் நம்போன்ற உயர்குடும்பத்துப் பெண்ணேயாம்'' என்று சொல்லிக்கொண்டு வருவதற்குள்ளே, ராமகிருஷ்ணர், ''அம்மா! இதெல்லாம் என்னிடம் ஏன் சொல்லவேண்டும்?'' என்று சொல்வதற்குள், சாப்பாடு ஆய்விட்டது; எழுந்திருந்து, கை கழுவிவிட்டு, வழக்கம்போல் திண்ணையில்போய் உட்கார்ந்துகொண்டார்.

இரவு மணி பத்து ஆய்விட்டது. இராமகுமார சட்டோபாத்தியாயருடைய மாணவருள் ஒருவர், ராமகிருஷ்ணருக்கு அத்தியந்த நண்பர்போல நடித்துப் பிரபஞ்ச வியவகாரங்களிலே ராமகிருஷ்ணரை அழுத்திவிடும்படி சட்டோபாத்தியாயருடைய வீட்டிலேயே வசித்துக்கொண்டு, வீட்டு வேலைகளையெல்லாம் வெகு அன்புடனே செய்துவருபவர், திண்ணையிலே ஆழ்ந்த ஆலோசனையிலமிழ்ந்து கிடக்கும் ராமகிருஷ்ணரைக் கண்டு, ''ஏன், கதாதரா! படுத்துக்கொள்ளவில்லையா?'' என்று சொல்லிவிட்டு, உள்ளே சென்று, அவருக்கு ஜமுக்காளமும் தலையணையும் கொண்டுவந்து திண்ணையில் போட்டுவிட்டுத் தாமும் தமது படுக்கையை விரித்துத் திண்ணையில் படுத்துக்கொண்டார். இருவருமாகத் தினந்தோறும் திண்ணையில்தான் படுப்பது வழக்-



கம். இரவு பன்னிரண்டுமணி, ஒருமணி வரையில் வாதாடிக்கொண்டிருப்பார்கள். சம்ஸ்கிருத பாடசாலை மாணவர் தாம் படித்த வித்தையெல்லாம் ராமகிருஷ்ணரிடத்தில் காட்டிவிடுவார்; பிரபஞ்ச சுகத்தைப் பரிபூர்ணமாக அநுபவித்து, தானே சலிப்படைந்துவிடாத மனிதன் பேரின்பத்துக்குப் பாத்திரனாகான் என்பதற்குப் பல நியாயங்களும் ஆதாரங்களும் மேற்கோற்களும் எடுத்துக்காட்டி, தொண்டைகிழியக் கத்துவார். ஸ்ரீராமகிருஷ்ணரோ எல்லாவற்றையும் வெகு பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருந்துவிட்டு, கடைசியாக இர்ண்டொரு வார்த்தைகளில் அவருக்கு மறுமொழியளிப்பார். இன்றையதினத்திலே, அந்த மாணவர் கிரகஸ்தாச்ரம தர்மத்தின் பெருமைகளைப்பற்றி வர்ணிக்கத் தொடங்கினார்; தமக்குத் தெரிந்த ஆதாரங்களையெல்லாம் காட்டிவிட்டார். தமக்குத் தெரிந்த நியாயங்களையெல்லாம் சொல்லிவிட்டார். இங்ஙனம் இவர் சுமார் அரைமணி நேரம் பேச, ராமகிருஷ்ணர் வாய்திறந்து ஒன்றுமே பேசவில்லை; மௌனமாயிருந்தார். அந்த மாணவர், ''என்ன கதாதரா! சும்மா யிருக்கிறாய்? நான் கூறியதில் உனக்கு ஆக்ஷேபனைகள் உண்டானால் சொல்!'' என்றார். அப்பொழுதும் ராமகிருஷ்ணர் பேசவில்லை. ''சரிதான், கதாதரன் சாய்ந்துகொண்டேயுறங்குகிறான்போலத் தோன்றுகிறது'' என்று அந்த மாணவர் சொல்லிக்கொண்டு, நித்திரை செய்யத் தொடங்கினார்.

உண்மையாதெனில், ராமகிருஷ்ணர் உறங்கவில்லை. ''இது என்னடா? இது! விவாகமுயற்சி பலமாக நடக்

கிறது; விவாகம் செய்துகொள்ள மாட்டேனென்றால் மாதாவின் மனம் நோகும்; சகோதரர்களுக்கு வருத்தம் உண்டு, ஆனால், விவாகம் செய்துகொண்டுவிட்டால் மனிதனுடைய புத்தி சக்தி வெளிப்பட்டுப் பிரகாசிப்பதற்குத் தருணம் ஏற்படாமற்போய்விடும்; பெரும்பான்மையும் மனைவியே மனிதனுக்கு நற்கதி கிடைக்காமற் செய்யும் சத்துருவாகும்; உலகிற் பெரும்பான்மைக் கேடுகளுக்கும் காரணம் பெண்களேயாம்; அவர்கள் தங்களுடைய மாயா வலைகளை வீசி எப்பெரியோர்களையும் இழுத்துக் கீழே எறிந்துவிட வல்லவர்கள்; ஆதலால், அகண்ட சச்சிதானந்த சொரூபிணி! அன்னபூரணி! பகாமாயி! மகிஷாசுரமர்த்தனி! மகாகாளி! என்ன சொல்கிறாய்? நீயும் பிரசன்னமாகிறதில்லை; உன்னை விடுவதில்லை யென்று பிடிவாதமாயிருந்தாலோ, இத்தகைய இடையூறுகள் பல கொண்டுவந்துவிட்டு, எளியேனாகிய என்னைத் திண்டாடச் செய்துவிடுகிறாய்; உலகில் எது எப்படி வேண்டுமோ போகட்டும்; என் விஷயத்திலே எனது நண்பர்களும் பந்துக்களும் என்ன வேண்டுமோ செய்து கொள்ளட்டும்; அதெல்லாம் எனக்கு லக்ஷியமில்லை; நீமாத்திரம் என்னைக் கைவிட்டுவிடாதே; உலகப் பிசாசங்களிடத்திலே என்னைக் காட்டிக் கொடுத்துவிடாதே; ஆனால், நீ என்ன செய்தாலும் எனது நன்மைக்கேதான் செய்வாய் யென்ற திடநம்பிக்கை யெனக்கு மிகவும் அதிகமாக உண்டு; ஆதலால், நான் இப்பிரபஞ்சக் கூனர்களுடைய வலையில் அகப்பட்டுத் தத்தளிக்க மாட்டேனென்பது திண்ணம்'' என்று இவ்வாறாக எல்லாம் சிந்தித்துக்கொண்டும், தியா



னித்துக்கொண்டும் படுத்திருக்க, நித்திரை வந்துவிட்டது; நன்றாக உறங்கினார். விடியற்கால சமயம் மணி மூன்று இருக்கலாம்; ஒரு சொப்பனம் கண்டார்; விழித்துக் கொண்டார்; தமது தாயார், சகோதரன் முதலியவர்களை எழுப்பினார்; அவர்களிடத்திலே தாம் கண்ட சொப்பனத்தைக் கூறினார். ''அம்மா! நம்முடைய பூர்வீக கிராமத்திலே, டேரி என்ற ஊரிலே ராமச்சந்திர முகோபாத்தியாயர் என்று ஒருவர் இருக்கிறாரா? அவருக்கு ஒரு பெண் இருக்கிறதா? அந்தப் பெண்தான் எனக்கு இசைந்தது; வேறு எந்தப் பெண்ணை நீங்கள் கோரினாலும், அது நடவாது; ஒருவேளை நடந்துவிட்டாலும், எனது வாழ்க்கை மாதிரிக்கு அப்பெண் இடையூறாகவே யிருந்து வருவாள்; அதனால், எனக்கு எப்பொழுதும் துன்பமும் துக்கமுமே நிலைபாய்விடும்; ஆதலால் டேரியிலே விசாரியுங்கள்'' எனவே, அவர்களும் ''சரி'' என்றார்கள். டேரி ராமச்சந்திர முகோபாத்தியாயர் இவர்களுக்கு ஒரு முறையில் பந்துக்களேயாவார். அவர் ஒழுக்கமும் உயர்வுமுள்ள ஒப்பற்ற குடும்பத்தினர். அவருக்கு ஒரே பெண்தான். ஆனால் அது சிறு குழந்தை—ஐந்து வயதுக் குழந்தை. சட்டோபாத்தியாயர், முகோபாத்தியாயர், இவர்கள் வைதிக கோஷ்டியிலே சேர்ந்தவர்கள். பால்ய விவாகத்தை ஆதரிப்பவர்கள்.

ஸ்ரீராமகிருஷ்ணர் அன்றிரவு தேவியைத் தீர்க்கமாகப் பிரார்த்தனை செய்துவிட்டு உறங்கவே, அவருடைய கனவிலே தேவி வந்து தனது முகத்தை ராமகிருஷ்ணருக்குக்

காட்டாமல், ஒரு திரையின் பின்புறத்தே நின்றுகொண்டே “நீ டேரி கிராமத்திலே யுள்ள ராமச்சந்திர முகோபாத்தியாயருடைய பெண்ணை விவாகம் செய்துகொள்; அப்பெண் உனக்காகப் பிறந்திருக்கிறாள்; இதனால் உனக்கு ஒரு துன்பமும் நேரிடாது; உன்னுடைய மனோபீஷ்டத்துக்கு விரோதமாக நடக்கமாட்டாள்” என்று கூறியது போலத் தோன்றிற்று. இதனாலேதான் இவர் மனம் தெளிந்து, தைர்யமுற்று, இக்கனவைத் தமது மாதாவிடத்திலே கூறினார். சரியென்று சொல்லி, அவருடைய தமயனார் ராமகுமார சட்டோபாத்தியாயரும் அவருடைய மாதாவும் டேரி கிராமத்துக்குப் புறப்பட்டுச் சென்று ராமச்சந்திர முகோபாத்தியாயரைக் கண்டு பெண் விசாரிக்கவே, அவர் தமக்கு ஒரே பெண்தான் உள்ளதென்றும், அதற்கு வயது ஐந்துதான் ஆகிறதென்றும், அதனால் இப்பொழுதென்ன அவசரமென்றும், குழந்தைப் பருவத்திலே விவாகம்செய்து கொள்ளுதல் தகாதென்றும் கூறினார். அதற்கு ராமகுமார சட்டோபாத்தியாயர் தாம் தமது பூர்விக கிராமத்திலே சம்பந்தம் செய்துகொள்ளக் கருதி வந்துள்ளதாகவும், ஆதலால் முகோபாத்தியாயர் எவ்விதத்திலும் தடை சொல்லலாகாதென்றும், குழந்தைப் பர்வ விவாக விஷயத்தைப் பற்றிப் பேசப்புகின், ராமாயணத்திலே ராமருக்கும் சீதைக்கும் விவாகமானபொழுது, ராமருக்கு வயது 13 அல்லது 14 தான் என்றும், சீதைக்கு வயது ஆறு அல்லது ஏழுதானென்றும் ஆரண்ணிய காண்டத்தில் 47-வது சர்க்கம் 3 முதல் 10 வரையில் உள்ள சுலோகங்களில் கூறப்பட்டிருக்



கிறதெனவும், இன்றும் உஸஸ்தி சக்கராயண ரிஷியென்பவர் ஸ்தனங்கள் பக்குவமடையாத குழந்தை மனைவியுடனே அதிக வறுமையில் வாழ்ந்து வந்தாரென்று சாந்தோக்கிய உபநிஷத்தில் முதலாவது அத்தியாயம் 10-வது காண்டத்தில் முதலாவது சுலோகத்தில் கூறப்பட்டிருக்கிறது; ஆதலால், பாலிய விவாகம் நமது முன்னோர்கள் அநுசரித்து வந்ததே யென்றும் கூறினார்.

விவாகமானது மேல் நாட்டாருக்குள் செய்துகொள்ளும் ஒப்பந்தங்கள் போல, இந்துக்களாகிய நமக்கு ஒப்பந்தங்கள் அல்ல. கர்ம விதியை ஆதாரமாகக்கொண்டு அநந்தங்கோடி ஜன்மங்களாகப் புருஷன், மனைவியாகிய இருவரும் அந்தரங்க அன்பினால் கட்டப்பட்டவர்களாகி, எக்காலத்திலும் வேற்றுமையென்பதே யின்றி ஒற்றுமையாக யொருவரை யொருவர் விடாது பற்றி இருவருமாக எப்படியாவது இவ்வுலகப் பற்றுக்களினின்றும் நீங்கி இன்பாநுபூதியை யடைந்து, இருவரும் ஏக வஸ்துவாய் லயிப்பதற்கு அஸ்திவாரமாக இடும் விதியே விவாகம் எனப்படும். ஆதலால் விவாகத்தினுடைய பரிசுத்தத்தன்மையையும் மேன்மையையும் உலகுக்குக் காண்பிக்கும்பொருட்டுத்தான் இராமகிருஷ்ணர் விவாகம் செய்துகொண்டார்போலும்! அப்பெண்ணின் பெயர் சாரதா தேவியாம். அப்பெண், “சத்துவகுணம் மிகுந்தவள்” என்றும் “சாக்ஷாத் மகாதேவியின் அம்சத்தால் உண்டானவள்” என்றும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது தாயாரிடத்தில் உரைத்தனராம்.

விவாகம் நிச்சயிக்கப்பட்டுவிட்டது. ஸ்ரீராமகிருஷ்ணரும் சிறிது பைத்தியந் தெளிந்தவர்போலக் காணப்பட்டார். அவருடைய தாயாரும் சகோதரர்களும் மற்றவர்களும் "இராமகிருஷ்ணர் பிரபஞ்ச முகமாகத் திரும்பிவிட்டார்" என்று கருதிச் சந்தோஷ மடைந்தார்கள். தக்ஷிணேச்வராலயத்திலே அர்ச்சகவேலை செய்யுமவர் ராமகிருஷ்ணருக்குப் பிரபஞ்சத்திலே பற்று விழுந்துவிட்டதென்று கேள்விப்பட்டு மிகமிகச் சந்தோஷித்தார். ஏனெனில், தான் நோயாளியா யிருப்பதினால் தமக்கு உதவியாயிருந்து கோவில்பூஜைவேலையைச் செய்துவருவாரென்று கருதியேயாம்.

சுபதினத்திலே நல்ல சுபமுகூர்த்தத்திலே விவாகமும் நடந்துவிட்டது. ஸ்ரீராமகிருஷ்ணர் தமது ஏகாந்த சிந்தனைத்தன்மையை யெல்லாம் விட்டுவிட்டு, எல்லோருடனும் தாராளமாகக் கலந்து, களிக்கடலி லாழ்ந்து, பிரபஞ்சத்தவரைப்போலவே ஆடிக்கொண்டிருந்தார். "இனிமேல், ராமகிருஷ்ணர் அகப்பட்டுக்கொண்டார்" என்று எல்லோரும் நினைத்தார்கள்.

---

## 4-ம் அத்தியாயம்
## சாக்ஷாத் தேவி தர்சனம்

ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குத்தான் பிரபஞ்சத்திலே பற்று விழுந்துவிட்டதே. விவாகசமயத்திலே அவர் ஆநந்தக் கடலி லாழ்ந்திருந்தாரல்லவா? அதனால் "அவருக்கு இல்லறத்திலே ஆசை விழுந்துவிட்டது" என்று எல்லோரும் ஊகித்தார்கள். விவாகசமயத்திலே அவர் ஆநந்தமா யிருந்ததற்குக் காரணம் தமது மனைவி தமது அப்பியாசத்துக்கும் அநுபூதிக்கும் ஒருக்காலும் இடையூறாகமாட்டா ளென்று அவருக்கிருந்த திடநிச்சயமேதான். ஆனால்; ஸ்ரீராமகிருஷ்ணருடைய உள்ளத்தை அவர்கள் காணுமா றெங்ஙனே?



தக்ஷிணேச்வராலயத்து அர்ச்சகராகிய சகோதரர் ராமகிருஷ்ணரை யுடனே தம்மிடம் அழைத்துக்கொண்டு, கோவில் பூஜை வேலையை முன்போலப் பார்த்து வரும்படி சொன்னார். இவர் விவாகமான பின்னர் தக்ஷிணேச்வரம் சென்ற முதலாவது நாள் பூஜை செய்வதற்காகக் கோவிலுக்குள்ளே சென்று, காளிகாதேவியின் விக்கிரகத்தி னெதிரிலே போனதுதான் தாமதம், ரோமம் சிலிர்த்துவிட்டது; பயந்து நடுநடுங்க ஆரம்பித்தார். எவரோ ஒருவர் சர்வசக்தி வாய்ந்தவரைப்போல எதிரே நின்று அதட்டுவது போலத் தோன்றிற்று. அவர் அப்படியே நின்று கண்களை மூடிக்கொண்டு, இருகரங்களையும் கூப்பி, "என் அம்மையே! என்மீது இவ்வளவு கோபம் ஏனோ? எக்குற்றம் செய்யினும் பொறுத்திடுக; உன்னையல்லால் எனக்கொரு துணையுமுண்டோ?" என்று இறைஞ்சலும், "நீ என்னை மறந்தாய், நீ என்னை மறந்தாய்" என்று அவ் விக்கிரகத்தினின்றும் ஒரு சப்தம் உண்டாவதுபோலத் தோன்றிற்று. "இல்லை, இனிமேல் இல்லை; எனக்குப் புத்திவந்தது; நான் உன்னை இனி விடுவதில்லை."

வழக்கம்போலப் பூஜை செய்துவந்தார். ஆனால் பழய வழக்கங்களும் கூடவே ஆரம்பித்தன. தூபதீபாராதனை செய்துகொண்டே யிருப்பார்; அப்படியே மெய்மறந்து தேவியினிடத்தே லயித்துவிடுவார்; விக்கிரகத்தைப் பூஜை செய்வதற்காகப் புஷ்பத்தைக் கையிலெடுப்பார்; அப்படியே சித்திரப் பதுமைபோல உட்கார்ந்துவிடுவார். "ஏ, தேவி! எங்கேபோய் ஒளிந்துகொண்டாய்? உனது புருஷனாகிய தேவதேவன் மகாதேவன் உன்னை என்னிடம் போகக் கூடாதென்று ஆக்ஞாபித்தானோ? அப்படி யாக்ஞாபிப்பதற்கு அவனுக்கு அதிகாரமும் இல்லை, பாத்தியதையும் இல்லையே; எப்பொழுதுதான் வருவாய்?" என்று ஹிருதயம் உருகிக் கண்ணீர் ஆறாய் ஓடச்சொரிந்து அழுவார். எவர் சொன்னாலும் கேளாமல், சமாதான மடையாமல், தேம்பித் தேம்பி யழுவார். பழய பைத்தியம் இவருக்கு இப்பொழுது முன்னிலும் அதிகமாகப் பிடித்துவிட்டது. மதுரநாதன் என்கிற தனவந்தனுக்கு இவரிடத்தில் கொஞ்சம் பக்தியும் விசுவாசமும் இயற்கையாகவே யுண்டு; அவன் மகா பக்தனாயினும் முதலில் இவருடைய பக்தியைப் பைத்தியமென்றே கருதி, கல்கத்தாவிலே பெயர்பெற்ற வைத்தியர்கள் பலரிடத்தும் கொண்டுசென்று காட்டினான். அவர்கள் பற்பல மருந்துகளும் கொடுத்துச் சிகிச்சைசெய்து பார்த்தார்கள்; இந்தப் பைத்தியம் நீங்குவதாயில்லை. இதற்குத் திருஷ்டாந்தமாக ஒருகதை; இது சரித்திரக் கதை.

ஆதி சங்கரர் அவதாரமாகி ஆங்காங்கு திக்விஜயம் செய்துவந்த காலத்திலே அவருக்கு அஸ்தாமலகர் என்று



சிஷ்யர் ஒருவர் இருந்தார். இந்த சிஷ்யரின் வரலாறு பின் வருமாறு:—

ஒரு ஊரிலே—அந்த ஊரின் பெயர் எனக்கு இப்பொழுது ஞாபகமில்லை—ஒரு கோடீச்வரர் இருந்தார். அவருக்கு ஒரேயொரு செல்லக் குழந்தை-ஆண்குழந்தை. அவருடைய மனைவியார் அக் குழந்தையை யெடுத்துக்கொண்டு ஆற்றுக்குக் குளிக்கச் சென்றார். அங்கே ஒருவர் பித்தர் போன்று தாடி மீசைகள் வளர்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். இவர் ஒரு மகான்; 'யோகநிஷ்டாபரர். இவ்வம்மையார் அக் குழந்தையை இவருக்குச் சமீபத்திலே கொண்டுபோய்விட்டு, "கொஞ்சம் இந்தக் குழந்தையைப் பார்த்துக்கொள், அப்பா! நான் குளித்துவந்து குழந்தையை எடுத்துச் செல்கிறேன்," என்று சொல்லிவிட்டு ஆற்றிலிறங்கினாள். அவ்வூரிலே அம்மாதினுடைய புருஷனுக்கு அவ்வளவு தனமும் செல்வாக்கும் உண்டு; அவருடைய வார்த்தையை எவரும் தட்டமாட்டார்கள். ஆதலால்தான், அவ் வம்மையாரும் இம் மகானைத் தன் ஊராருள் ஒருவனெனக் கருதி, அங்ஙனம் உத்தரவிட்டு நடந்தாள். அம் மகான் கண்ணைமூடி நிஷ்டையி லிருந்துவிட்டார். குழந்தை தத்தித்தத்தி அம்மகானுடைய தோள்களின்மேலும் மடிமேலும் ஏறி நடந்து விளையாடிப் பின்னர் மெல்லமெல்லத் தவழ்ந்து சென்று ஆற்றிலே யிறங்கிவிட்டது; ஆற்றிலே வெள்ளம் அதிகமாகப் பெருக்கெடுத் திருந்ததினால் குழந்தையை அடித்துக்கொண்டு போய்விட்டது; குழந்தை

தண்ணீரில் அமிழ்ந்து இறந்துவிட்டது. தாயார் புடவை தோய்த்து ஸ்நாநம் செய்து, தான் குழந்தையை விட்டுவிட்டுப்போன இடத்திலே வந்து பார்த்தாள்; குழந்தையைக் காணவில்லை. சுற்றுமுற்றும் பார்த்தாள்; எங்கும் காணவில்லை. என்ன செய்வாள், பாபம்! உடனே வீட்டுக்கு ஓடினாள்; புருஷனிடம் புகன்றாள். புருஷனும் மனைவியுமாக மறுபடியும் ஆற்றங்கரைக்கு அழுதுகொண்டு ஓடிவந்தனர். வேலைக்காரர்களும் மற்றவர்களும் அவ்வூரில் நாலாபக்கங்களிலும் ஓடினார்கள் குழந்தையைத் தேடும்பொருட்டு. அக் குழந்தையின் பெற்றோர், அம் மகானிடம் வந்து, "ஐயோ, பாபி! குழந்தை எங்கேயடா?" என்று கதறிக் கதறி யழுதார்கள். இதற்குள்ளாகக் குழந்தையைத் தேடச் சென்றவர்களிற் சிலர், அவ்வாற்றோரமாகக் கரையிலே இரண்டு மைல் தூரத்தில் ஒதுக்கப்பட்டிருந்த அக் குழந்தையினுடைய பிணத்தைக் கண்டு, எடுத்துக்கொண்டு வந்தார்கள். பெற்றோர் அக் குழந்தைப் பிணத்தை அம்மகானின் முன்னிலையில் போட்டு, "அடா, பாவி! நீதான் ஆற்றிலே குழந்தையைத் தூக்கிப்போட்டுக் கொன்றாயடா! ஐயோ, நாங்கள் என்ன செய்வோம்? எத்தனையோ காலமாக அருந்தவம் கிடந்து பெற்ற பிள்ளையாச்சுதே யிது! ஒரு குழந்தையென்று ஒப்பற்றிருந்தோமே! செல்லக் குழந்தையென்று நாங்கள் சீர்பெற்றிருந்தோமே! ஆண் குழந்தையென்று நாங்கள் ஆநந்தமுற்றிருந்தோமே! ஐயோ, இப்பொழுது நாங்கள் என்ன செய்வோம்? எங்கள் கண்ணே! கண்மணியே! செல்லமே! இப்பாவி கையினால் மாண்டாயோ!



இவன் உனக்கு எமனுருவாக வந்தானோ? ஐயையோ, இப்பொழுதென் செய்வது?" என்று பலவாறு பிரலாபித்துக் கதறுகிறார்கள்; மண்ணிலே உருளுகிறார்கள்; புரளுகிறார்கள்; தலையிலே யடித்துக்கொள்கிறார்கள்; வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொள்கிறார்கள். இதற்குள்ளாக, ஊரெல்லாம் அங்குக் கூடிவிட்டது. அந்த மகானைச் சூழ்ந்துகொண்டார்கள். "கொல்லு" என்கிறார் ஒருவர்; "போக்கிரி, கண்ணை மூடிக்கொண்டான் பார்; வெட்டு" என்கிறார் இன்னொருவர்; "இவன் எந்த ஊரான்? இங்கே ஏன் வந்திருக்கிறான்? குழந்தைகளை ஒவ்வொருவராகக் கொல்வதற்கு வந்திருக்கிறானோ? இவனைப் பின் கட்டாகக் கட்டிப், புளியம் மிலார்கொண்டு நன்றாகப் புடைக்கவேண்டும்" என்கிறார் இன்னொருவர். இதுவரையிலே கண்மூடி அந்தர்முக நிஷ்டையிலேயிருந்த மகான் இந்த ஆரவாரக் கூச்சலினாலே மனங் கலைந்து, கண்ணை விழித்தார். தமது முன்னிலையில் ஒரு குழந்தையின் பிணம் போடப்பட்டிருக்கிறது; அக் குழந்தையின் பெற்றோர் உருண்டு புரண்டு கதறுவது பரிதாபகரமா யிருக்கிறது. மகான் சங்கதிகளை யறிந்துகொண்டார்; பெற்றோருடைய புத்திர சோகத்தைக் கண்டு மனம் பொறாராகி, அவர்களுக்கு மனச்சாந்தியை உண்டுபண்ணக் கருதி, சட்டென்று தாம் தம்முடைய சரீரத்தினின்றும் பிரிந்து அக் குழந்தையின் சரீரத்தினுள்ளே பரகாயப்பிரவேச யோக சக்தியினாலே நுழைந்துகொண்டார். சில நிமிஷங்களுக்கெல்லாம், குழந்தை தனது கை, கால்களையாட்ட ஆரம்பித்துவிட்டது; கண்ணை விழித்துக்கொண்

டது; குரலும் கொடுக்க ஆரம்பித்தது; ஆனால் அம் மகானுடைய சரீரம் கீழே விழுந்துவிட்டது. பெற்றோரும் மற்றவர்களும், "குழந்தை மரிக்கவில்லை, மூர்ச்சை போயிருந்திருக்கிறது; நாம் இட்ட அழுகைக் கூச்சலினாலும் அதட்டலினாலும் இப்பித்தன் திகில்பிடித்து இறந்துவிட்டான்; போகட்டும்; இவனை யிவ்விடத்திலேயே அடக்கம் செய்துவிடுவோம்" என்று கூறி யவனை யவ்விடத்திலேயே யடக்கம் செய்துவிட்டு, குழந்தையை யெடுத்துக்கொண்டு வீட்டுக்கு வந்தார்கள். ஆனால் குழந்தையினிடத்தில் முன்னிருந்த குணங்கள் ஒன்றும் காணப்படவில்லை. குழந்தை சரீரச் சாயையிலே ஒன்றாயிருக்கிற தொழிய, குணத்திலும் தன்மையிலும் மாறுபட்டிருக்கிறது. உட்காரவைத்த இடத்திலேயே குழந்தை யுட்கார்ந்துகொண்டிருக்கும்; படுக்கப் போட்டுவிட்டால் படுத்துக்கொண்டே யிருக்கும்; சாப்பிட இலையி லுட்கார்ந்தால், சாப்பிடுவதற்குத் தான் உட்கார்ந்திருப்பதாக உள்ள ஞாபகம் குழந்தைக்குச் சிறிதும் கிடையாது. இவ்விதமாக இக் குழந்தை கண்ணிருந்தும் குருடுபோலவும், காதிருந்தும் செவிடுபோலவும் இருந்துவந்தது. பெற்றோர் தனவந்தர்க ளாகையினாலே, எத்தனையோ வைத்தியர்களைக் கொண்டு சிகிச்சை செய்வித்துப் பார்த்தார்கள்; எத்தனையோ மந்திரவாதிகளைக் கொண்டு மாந்திரீகம் செய்து பார்த்தார்கள்; எத்தனை ஜோசியர்கள் அவர்களிடம் பணம் பிடுங்கித் தின்றார்கள்; என்ன செய்தும் குழந்தையின் குணம் மாறவில்லை. பித்துப் பிடித்ததுபோலப் போகாதப் பித்துப்பிடித்து இருந்தது அந்தக் குழந்தை.



அதை மாற்ற எவராலும் முடியவில்லை. கடைசியாக ஆதி சங்கரர் தேசம் சுற்றி திக்விஜயம் செய்துகொண்டு இந்த ஊருக்குவந்து சேர்ந்தார். பெற்றோர்கள் இக் குழந்தையை யெடுத்துக்கொண்டு சென்று அவர் முன்னிலையில் நிறுத்தி, "ஸ்வாமி! இதென்ன இக் குழந்தை யிப்படி யிருக்கிறதே; மந்திர வாதிகளுக்கும் வைத்தியர்களுக்கும் ஜோசியர்களுக்குமாக நாங்கள் செலவழித்துள்ள பணத்துக்கோர் கணக்கேயில்லை; என்ன செய்தும் குழந்தை யிப்படித்தான் யிருக்கிறது; குழந்தையைச் சொஸ்தமாக்கிக் கொடுக்கும்படி பிரார்த்திக்கிறோம்" என்றார்கள். அவர் உடனே அக் குழந்தையை உள்ளே யிட்டுச் சென்று, சில கேள்விகள் கேட்க, இதுவரையிலும் எவருடனும் பேசாதிருந்த அக் குழந்தை இப்பொழுது வாய்திறந்து அற்புதமாக மறுமொழி யுரைத்ததாம். உடனே சங்கரர் வெளியே வந்து, பெற்றோரை நோக்கி, "இது தீராப் பைத்தியம்; இப் பைத்தியத்துக்கு ஔஷதமே கிடையாது; இப் பைத்தியத்தை நீக்குவதற்கு எவராலும் முடியாது; இங்கே என்னுடன் எத்தனையோ பைத்தியங்கள் இருக்கின்றன; இதையும் விட்டுவிட்டுப் போங்கள்; உங்களுக்கு இப் பைத்தியக் குழந்தையினால் எவ்வித பிரயோசனமு மில்லை" என்றார்.

அதுபோலவே, இங்கும் மதுரநாதன் ஸ்ரீராமகிருஷ்ணரிடத்துத் தனக்குள்ள விசுவாசத்தினாலே அவரைக் கல்கத்தாவிலுள்ள வைத்தியர்களிடத்திலெல்லாம் காண்பித்து, வேண்டிய பணமும் செலவு செய்தான். அவர்களுடைய

முயற்சிகளெல்லாம் பயனில்லாது போய்விட்டன. டாக்கா நகரத்து வைத்தியர் ஒருவர்மாத்திரம், "இவர் யோக புருஷர்" என்றும், "இவரைப் பிடித்துள்ளது எல்லோரையும் கட்டாயமாகப் பிடிக்கவேண்டிய பைத்தியமே" என்றும், "இவர் பிரஹ்மாநுபூதி யடைந்தாலே இப்பைத்தியம் மாறும்" என்றும், "அதுவரையில் இப்படித்தான் இருப்பார்" என்றும் கூறினார். மதுரநாதனும் "இனிமேல் ராமகிருஷ்ணர் உலக வியாபாரங்கட்கு உதவார்" என்று நிச்சயித்தவனாகி, நோயாளியான அவருடைய சகோதரரையே கோவிலில் வந்து பூஜைசெய்யும்படி ஏற்பாடு செய்தான்.

ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு இன்னும் சௌகர்யமாகிவிட்டது. கோவில் என்ற ஒரு தொந்தரவில்லாமல் இரவு பகலாக எல்லா நேரத்திலும் தேவியைத் தியானித்துக்கொண்டிருக்கலாமே! பொழுதுவிடிந்துவிட்டால், ராமகிருஷ்ணர், "தேவி! இருளைத் துரத்திப் பகலவன் பிரகாசிக்க வந்துவிட்டதுபோல, எனது மனவிருளை யகற்றி, நீ எப்பொழுது என்னுடைய ஹிருதயத்திலே பிரகாசிக்கப்போகிறாயோ? ஐயோ! இன்னும் எத்தனை நாட்கள் செல்லும்? எனது பொழுதெல்லாம் வீணே கழியவும் வேண்டுமா?" என்று அழுவார். மாலை சூர்யாஸ்தமன சமயத்திலே சங்க சப்தம் காதிலே கேட்கும். "அந்தோ, ஒருநாள் போய்விட்டதே; இன்னும் நீ வரவில்லையே; உனது தர்சன பாக்கியம் எனக்கு என்று கிடைக்குமோ?" என்று அலறுவார். அவர் இவ்விதமாக எப்பொழுதும் பித்துப்பிடித்தவர்



போலவே ஈச்வர விஷயத்தைப்பற்றியே புலம்பிக்கொண்டிருப்பதைக் கண்ட சிலர், "இக்காலத்திலே, அதுவும் இக்கலிகாலத்திலே, மனிதனாவது, தேவியைத் தர்சிப்பதாவது; இதெல்லாம் வீண்பேச்சு" என்றாகள்; வேறு சிலர், "இவருக்குப் பைத்தியம் பலமாய்விட்டது" என்றார்கள்; இன்னும் சிலர், "ஐயோ, பாபம்! சில தினங்கட்கு முன்னே நன்றாயிருந்தாரே; இதற்குள்ளாக இவருக்கு மூளை குழம்பிவிட்டதுபோலும்!" என்றார்கள். சகோதரர்களும் தாயாரும் "இவர் தக்ஷிணேச்வரத்துக்கு வந்தால்தான் கெட்டுப்போகிறார்" என்று கருதி, கல்கத்தாவுக்கு இட்டுச் சென்றார்கள். ஆனால், ராமகிருஷ்ணர் அங்கே யிருப்பதில்லை; மறுபடியும் ஓடியோடி தக்ஷிணேச்வரம் வந்துவிடுவார். அவர்கள் எவ்வளவு பாடுபட்டும் இவரை தக்ஷிணேச்வரத்துக்கு வரவொட்டாமல் செய்ய முடியவில்லை. இவர் அடிக்கடி தக்ஷிணேச்வரத்துத் தோட்டங்களிலே கங்கைக் கரையோரமாக உட்கார்ந்து தியானம் செய்வார். கடைசியாக அவருடைய சகோதரர்களும் தாயாரும்கூட, "இனிமேல் அவரைத் தொந்தரவு செய்வதில் பயனில்லை" என்றும், "எல்லாம் ஈசன் செயலின்படியே நடக்கும்" என்றும் நினைத்து அவரை விட்டுவிட்டார்கள்.

ஒருநாள் ராமகிருஷ்ணர் கங்கைக் கரையிலே யிருந்துகொண்டு, "இன்னும் மாதா எனக்குத் தர்சனம் கொடுக்கவில்லையே; எனக்குப் பசி யெடுக்கிறது; மாதாவினுடைய அருட்பால் என்று கிடைக்குமோ?" என்று ஏங்கி ஏங்கி,

மனமருந்த முற்றுக்கொண்டிருந்தார்; தாயிழந்த சேய் போலக் கதறித் துடித்தார். கங்கா நதியைப் பார்த்துக் கொண்டே, அவர் "இவ்விடத்திலே ஒரு சிறிய குடிசை கட்டிக்கொண்டு தவம் செய்யலாமே; ஆனால் குடிசை கட்டுவதற்குள்ள சாமக்கிரியைகள் ஒன்றுமில்லையே" என்று வருந்தினார். இப்படி யிவர் நினைத்துக்கொண்டிருக்கும் பொழுதே, குடிசை கட்டுவதற்கு வேண்டிய சாமக்கிரியைகளை யொரு பேரலையானது அடித்துக்கொண்டு வந்து இவருடைய கால்களினடியிலே போட்டது. இவர் அவற்றை யெடுத்து அவ்விடத்திலேயே ஒரு சிறு குடிசை கட்டிக்கொண்டார். அங்கு அழகியதோர் பஞ்சவடி வனமுண்டு. அதிலே ஏகாந்தமாயிருந்து தியானம் செய்யத் தொடங்கினார். ஆ! ஆ! எத்தனை நாட்கள் பட்டினி கிடந்திருப்பார்; எத்தனை நாட்கள் மெய் மறந்திருப்பார்; அவருடைய முகத்திலே தேஜஸ் பிரகாசித்தது. அவருடைய சிரோ ரோமங்கள் நீண்டு வளர்ந்து சிக்குப்பிடித்து ஜடையாய்விட்டன. அவருடைய முகத்திலே ஒளி வீசிக்கொண்டிருந்தபொழுதிலும் வாட்டமடைந்துவிட்டது. அவருடைய கண்கள் அக்கினிபோன்று ஜ்வலித்தன. இத்தகையுக்ரமான தவம் செய்தபொழுதிலும், தேவி பிரத்தியட்சமாகவில்லை. "இனிமேல் தேவி பிரத்தியக்ஷமாகாவிட்டால் உயிருடனிருப்பதில்லை" என்று தீர்மானித்துக்கொண்டார். ஒரு நாள் நெடுநேரம் அவர் தேவியைக் குறித்து வருந்தி வருந்தி ஸ்தோத்ரம் செய்து, அழுது அழுது கண்கள் வீங்கிவிட்டன, அவருக்கு ஏக்கமுண்டாய்விட்



டது. இனிமேல் உயிரை மாய்த்துக்கொண்டு தேவியினிடத்திலே பழி போட்டுவிடுவதாகத் துணிந்துவிட்டார். உட்கார்ந்துவிட்டார் கண்களை மூடி; "எத்தனை நாட்களாயினும் சரியே, மண்ணோடு மண்ணாக இச்சரீரம் மக்கிப் போயினும் சரியே, தேவி பிரத்தியட்சமானாலன்றி எழுந்திருப்பதில்லை" என்று சபதம் செய்துகொண்டார். ஒரு நாளாயிற்று, இரண்டு நாட்களாயின, மூன்று நாட்களாயின, தேவி பிரத்தியக்ஷமாகவில்லை; இவரும் எழுந்திருக்கவில்லை; ஆனால், உட்கார்ந்திருந்தவர் படுத்துவிட்டார்; சரீரத்திலே பலமில்லாது போய்விட்டது. நல்லது, அப்பொழுதும் தேவி பிரத்தியக்ஷமாகவில்லை. ஆனால், ராமகிருஷ்ணரிடத்திலா தேவியினுடைய சாமர்த்தியம் காட்டுவது? நாக்கைப் பிடுங்கிக்கொள்வதாக நிச்சயித்து, நாக்கிலே கைபோட்டுவிட்டார்; பிடுங்கவும ஆரம்பித்துவிட்டார். சட்டென்று ஒரு மகா ஜோதி தோன்றிற்று; நாக்கினின்றும் கையை எடுத்துவிட்டு நன்றாகக் கண்களை விழித்துப் பார்த்தார். அந்த ஜோதியின் மத்தியிலே ஆ! ஆ! என்ன ஆனந்த உருவம்! அம்பாள் பிரசந்நமாய்விட்டாள். பார்த்தார் ராமகிருஷ்ணர். எழுந்தார், ஆடினார், பாடினார், ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார். அம்பாள் மறைந்துவிட்டாள். ஸ்ரீ ராமகிருஷ்ணர் மறுபடியும் பித்துப்பிடித்தவர்போலானார். "ஐயையோ, அம்பாளை நான் தர்சிக்கும்படியான பாக்கியம் பெற்றும் விட்டுவிட்டேன்; எனது இரண்டு கரங்களாலும் அம்பாளுடைய பாதாரவிந்தங்களைக் கட்டிப் பிடித்துக்கொண்டு 'எனக்கென்ன கதி' என்று கேட்காமற் போனேனே!

அந்தோ! நான் என் செய்வேன்?” என்று கதறினார்; பின்னர் உட்கார்ந்துகொண்டு கண்களை மூடித் தியானம் செய்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் மனம் வருந்திப் பிரார்த்தித்த பொழுதெல்லாம் அம்பாள் அவருக்குத் தர்சனம் கொடுத்துக்கொண்டேயிருந்தாள். அம்பாள் தம்மிடம் பிரத்தியக்ஷமாவது உண்மையோ அல்லது தம்முடைய மனப்பித்தே அப்படி உருக்கொண்டு வருகிறதோ என்பதையறியும் பொருட்டு, ராமகிருஷ்ணர் அடிக்கடி பரிசோதனைகள் செய்து பார்ப்பார். என்ன செய்யலாம்? அம்பாள் ராமகிருஷ்ணரிடத்திலே ஈடுபட்ட பின்னர், அவர் காலாலிட்ட வேலையைத் தலையால் செய்யவேண்டியதுதானே! “தேவி! நீ எனக்குப் பிரத்தியக்ஷமாவது உண்மைதானா? என்று எனக்குச் சந்தேகம் உண்டாகின்றது. ஆதலால், இன்ன விஷயம் நடைபெற்றால் நீ பிரத்தியக்ஷமாவது உண்மைதான் என்று நம்புவேன்” என்று ராமகிருஷ்ணர் தமக்குள்ளேயே நினைத்துக்கொள்வார். அப்படியே அவர் கருதிய விஷயம் நடந்தேறும்; உடனே அவருக்கு ஆநந்தம் பொங்கிவிடும். “தேவி நமக்கு பிரத்தியக்ஷமானது உண்மைதான், உண்மைதான்” என்று ஆநந்தக் கூத்தாடுவார். ஒரு நாள் ராமகிருஷ்ணர் தேவியை நோக்கி, “தாயே! இன்னும் எனக்குச் சந்தேகம் உளது; ராணிரஸமணியம்மாளின் புத்திரிகள் இருவரும் இதுவரையில் இந்த தக்ஷிணேச்வராலயத்துக்குள்ளே ஒரு நாளும் வந்ததில்லை. ஆகையால், அவர்கள் இருவரும் இந்த நிமிஷத்திலே இங்கு வந்து அதோ தெரிகின்ற வடவிருக்ஷத்தின் கீழே நின்று என்



னுடன் சம்பாஷித்தால், நீ எனக்குப் பிரத்தியக்ஷமாவது உண்மைதானென நம்புவேன்” என்று கூறினார். உடனே, ராணிரஸமணியம்மாளின் புத்திரிகள் இருவரும் அப்படியே தக்ஷிணேச்வராலயத்துக்குள்ளே வந்தார்கள். அதைக் கண்டவுடனே மனங்களித்து, இவர் தாம் குறிப்பிட்ட வடவிருக்ஷத்தை நோக்கிச் சென்றார், அவர்கள் தம்முடனே பேசுகிறார்களா? இல்லையா? என்று பார்க்கும்பொருட்டு. அவர்களும் அங்கே வந்து சேர்ந்தார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணர் தேவியைப் பிரத்தியக்ஷமாக்கிக்கொள்ளக் கருதி, எப்பொழுதும் அழுதுகொண்டிருந்தாரென்பது அனைவரும் அறிந்தவிஷயமாயிருந்ததினால், இப்பெண்மணிகள் அவருக்கு ஆறுதலளிக்கக் கருதி, “நீ பயப்படவேண்டாம்; காளி மாதா உனக்குப் பிரத்தியக்ஷமாய்விட்டாள்” என்றார்கள். ஆ! ஆ! ராமகிருஷ்ணர் அடைந்த சந்தோஷத்துக்கு அளவேயில்லை.

## 5-ம் அத்தியாயம்

## அப்பியாசம்

இனிமேல்தான் நமது ராமகிருஷ்ணருடைய யோக, ஞான அப்பியாசகாலம் தொடங்குகின்றது. இதுமுதல் பன்னிரண்டு வருஷகாலம் அவர் செய்த கடும் தவமானது சென்ற ஆயிரம் வருஷங்களுக்கிப்பால் எவராலும் செய்யப்பட்டதில்லையென்பது நிச்சயம். இவர் தக்ஷிணேச்வ

ராலயத்தில் அர்ச்சகர் வேலை பார்த்துக்கொண்டிருக்கையில் தானே இப்பித்துப் பிடித்தது. அப்பொழுதே யவர், "ஒரு தேவதையைப் பூஜிக்கப்போகும்பொழுது, முதலில் தன்னையே அந்தத் தேவதையாகப் பாவித்துத் தன் சிரசிலேயே ஒரு மலரை யெடுத்துப் போட்டுக்கொள்ளவேண்டுமென்று சாஸ்திரங்களிற் கூறியுள்ளதை நினைந்து, பூஜிக்கப் புகுமுன் தம்மை ஜகன்மாதாவாகப் பாவித்துக்கொண்டு தமது சிரசிலே யொரு புஷ்பத்தைச் சூட்டிக்கொள்வார்; உடனே தற்போதம் இழந்துவிடுவார். இப்படி யிவர் தமது சிரசிலே புஷ்பத்தைச் சூட்டிக்கொண்டு, தேவிக்குப் பூஜார்த்தமாகவே கொண்டுவரப்பட்ட பொருள்களைத் தாமே யநுபவிப்பது மதுரநாதன் கண்டு, முதலில் அவர் அப்படிச் செய்யாவாறு தடுக்க ஆரம்பித்தான். ஆனால், ஒருநாள் மதுரநாதன் வந்து கோவிலில் பார்க்கும்பொழுது இவர் சாக்ஷாத் பரமசிவஸ்வரூபமாக விளங்கியதைப் பார்த்துப் பிரமித்து, திகிலடைந்து, "இவர் அவதார புருஷரே" என்று கருதி, அவரிடத்திலே பயபக்தி பாராட்டத் தொடங்கினான். இவருக்கு அம்பாள் பிரத்தியக்ஷமாவது சாதாரணமாகியும் இவர் திருப்தியடையவில்லை. யோகசாதனம் செய்யவேண்டுமென்றும், ஞானலாபம் அடையவேண்டுமென்றும் இவருக்கு ஆசை யுண்டாயிற்று. ஞானாநுபூதி அம்பிகை பிரசந்நமாய்த்தான் யாது பயன்?

மகா பக்தராகிய நாமதேவருக்கு சாட்சாத் கிருஷ்ணன் அவர் நினைத்தபொழுதெல்லாம் பிரசந்நமாய்க்கொண்டிருந்தார். ஆனால், கிருஷ்ணன் கோவிலிலேயே இருக்கிறாரென்று நாமதேவர் நினைத்துக்கொண்டிருந்தார். ஒரு நாள் பக்த சிரேஷ்டர்களெல்லோரும் சேர்ந்து பாகவத கோஷ்டிகளுக்கு விருந்து ஒன்று நடத்தினார்கள். பக்தியிலே ஜாதி பேதம் இல்லை, மதபேதம் இல்லை, எவ்வித பேதமும் இல்லை. கபீர்தாசர் துலுக்கர், ரோஹிதாஸர் சக்கிலியர், கோராகும்பார் குயவர், சேனாநாவிதர் அம்பட்டர், துளசிதாஸர் பிராஹ்மணர் ஆகிய எல்லா ஜாதி பக்தர்களும் சேர்ந்து ஒரே பந்தியாக உட்கார்ந்து ஒருநாள் விருந்து உண்ண ஆரம்பித்தார்கள். அப்பொழுது ஒரு பக்தர், கோராகும்பார் என்னும் குயவ பக்தரை நோக்கி, "ஐயா! தாங்கள் ஜாதியில் குயவரானதினால் சுட்டபானை, சுடாத பானை என்று பானைகளைப் பரிசோதித்துப் பார்க்கத் தங்களுக்குத் தெரியுமே; இப்பந்தியிலேயுள்ள பக்தர்களை யெல்லாம் பரிசோதித்து, சுட்டபானை எது? சுடாதபானை எது? என்று சொல்லும், பார்ப்போம்" என்று சொல்ல, கோராகும்பார் அப்படியே சட்டி தட்டிப் பார்க்கும் தடியைக் கையிலெடுத்துக்கொண்டு வரிசையாக ஒருவர்பின் ஒருவராகத் தலைமேல் அடித்துக்கொண்டே வந்தார். எல்லோரும் பொறுத்துக்கொண்டு பேசாமல் இருந்தார்கள். ஆனால், நாமதேவர் மாத்திரம் அடிக்குப் பயந்து எழுந்து ஓடினார். கோராகும்பார் உடனே நாமதேவரைத் தவிர மற்றெல்லோரையும் சுட்டிக்காட்டி, "இவையெல்லாம் நன்றாகச் சுட்ட சட்டி" என்று கூறி, நாமதேவரை மாத்திரம் சுட்டிக்காட்டி "இது மாத்திரம் சுடாதசட்டி" என்றார். உடனே

அங்கேயிருந்த முக்தாபாய் என்னும் பக்தசிரேஷ்டை நாம தேவரை நோக்கிச் சிரித்தாள். நாமதேவருக்கு வெட்கமாய் விட்டது. ஸ்ரீ கிருஷ்ண க்ஷேத்திரத்துக்கு ஓடினார், கூப்பிட்டார் கிருஷ்ணனை; "நீ எனக்குப் பிரத்தியக்ஷமாய் என்ன பயன்? அந்தக் குயவன், கோராகும்பான் என்பவன் அப்பெருங் கூட்டத்தின் மத்தியிலே என்னைச் சுடாதசட்டியென்று சொல்லிவிட்டான்; அந்த முக்தாபாய் என்னும் ஒரு பெண்பிள்ளையும் என்னைப் பார்த்து நகைக்கலாயிற்றே" என்று குய்யோ முறையோ என்று அழுதார். கிருஷ்ணன், "அப்பா! நான் உனக்கு எத்தனை தரம்தான் தர்சனம் கொடுத்தபோதிலும், நீ பக்குவமடைந்து உய்ய வேண்டுமானால், நீ ஞானம் அடையவேண்டும்" என்றார்.

இந்த உண்மை ஸ்ரீராமகிருஷ்ணருக்குத் தானாகவே தெரிந்துவிட்டது. ஆதலால், சாக்ஷாத் பகவதீதேவி தமக்குப் பிரசன்னமாய்விட்டாளென்று அதனுடனே திருப்தியடைந்துவிடாமல் யோகசாதனம் செய்து ஞானநுபூதி பெறுதற்கு அவா மிக்குடையவரானார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய அப்பியாச காலமானது ஆச்சர்யமானது. பிரஹ்ம நிஷ்டையில் லயித்து பிரஹ்மாநுபூதி யடைதற்கு இவர்போன்று சாதனங்கள் செய்தவர்கள் எவருமேயில்லை. இவர் முமுக்ஷுத்துவம் அடைந்து, தமது அப்பியாச காலத்திலே பட்ட கஷ்டங்களுக்கு ஓரளவே யில்லை. நித்தியா நித்திய வஸ்து விசாரணை செய்ததின் பலனாக இவர் 'ஒன்றே அழிவற்றது' என்றும், 'அது நாமரூப



ரகிதமானது' என்றும், 'மனோவாக்குக்கு எட்டாதது' என்றும்' கண்டுகொண்டார். பின்னர்த் தமது சரீரத்தைப்பற்றி ஆராய ஆரம்பித்தார்:—

"இஃதென்ன இது? ஒரு பெரிய மாம்சக்குவியல்; ஒரு எலும்புக்கூடு; நரம்பு, எலும்பு, மாம்சம், ரத்தம், மஜ்ஜை, தோல் ஆகிய இவற்றால் கட்டப்பட்டுள்ள ஒரு ஓட்டைப் பாண்டம்; ஒரு மலமூட்டை; சோற்றாலடித்த சுவர்; துர்நாற்றமே நிறைந்துள்ளது; மல ஜலங்களால் நிரம்பப் பெற்றது; ஆ! ஆ! மனிதனுக்கு இச் சரீரத்தினிடத்து உள்ள பற்றுதல்தான் என்னே! 'சரீரத்தைச் சிறிதும் ஆய்ந்து பார்க்கின்றானில்லை; இச் சரீரத்தைக் கூறுகூறாகப் பிரித்துப் பார்த்தால் இச் சரீரத்திலுள்ள அவலக்ஷணங்களும் அசங்கியங்களும் அளவற்றனவாக உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தோன்றுகின்றன. சரீரத்திலே ஓரிடத்தில் கத்தியினால் குத்தி, நிரம்ப ரத்தம் ஓடும்படி செய்து, அந்த ரத்தத்தைச் சேர்த்து ஓரிடத்தில் குவித்துவைத்துப் பார்த்தால், இரண்டு நிமிஷங்கட்குள்ளே அங்கு துர்நாற்றம் கிளம்பிவிடும்; மனிதன் அதனருகில் இருக்க முடியாது; ஈ எறும்பு முதலியன மொய்க்க ஆரம்பித்துவிடும். அதே போல, கொஞ்சம் சதையைத் துண்டு ஆக நறுக்கி யெடுத்துத் தனியே வைத்துப் பார்த்தால், அதுவும் அப்படியே துர்நாற்றமெடுத்து, எவரையும் அருகே வரவொட்டாது. அதேபோலத்தான் மஜ்ஜை, எலும்பு எல்லாம். இப்படித் துர்நாற்றத்துக்கு ஆஸ்தானமாயிருக்கின்ற இந்தச் சரீரத்

துக்கு மனிதன் கந்தங்கள் அணிந்து எங்கும் கமகமவென்று பரிமளம் வீசும்படி செய்ய இச்சிப்பது, மலத்தினால் ஆக்கப்பெற்ற சுவருக்கு மணம் மிகுந்த சந்தனத்தைப் பூசி மறைப்பது போன்றதேயாம். ஆ! ஆ! மனிதனுக்கு இதனிடத்துள்ள ஆசைக்கு ஓரளவும் இருக்கிறதோ? என்ன "ஷோக்" ஆக க்ஷவரம் செய்துகொண்டு, மீசையை முறுக்கி விடுகிறான், பார்; புருவங்களை என்ன அழகாக ஒதுக்கிக் கொள்கிறான்! நெற்றியிலே அலங்காரமான திலகத்தைப் பார்! எத்தனை தரம் தன் முகத்தைத் தானே கண்ணாடியில் பார்த்துக்கொள்கிறான்! நவீன நாகரிக கோஷ்டியில் சேர்ந்த வாலிபர்களைப் பார்! சிரோ ரோமங்களைப் பிறர் பிரமிக்கக் கத்தரித்து வாரி விட்டிருக்கிறதைப் பார்! ஏ மூடர்களே! பேதையர்களே! உங்களுக்கு அறிவு என்பது மழுங்கி விட்டதா? அந்தகாரத்திலே மூழ்கிவிட்டீர்களா? ஏன் இப்படித் தத்தளிக்கிறீர்கள்? நவத்துவாரங்களாலும் எப்பொழுதும் மலஜலம் கசிந்துகொண்டே யிருக்கிறதே! கண்ணிலே பீளையாக வெளிவருவது என்னே? மலமல்லவா? காதிலே குறும்பையாக வெளிவருவது என்னே? மலமல்லவா? வாயிலே ஊத்தையாக வெளிவருவது என்னே? மலமல்லவா?

இன்னும் மூன்றரைக்கோடி ரோமத்துவாரங்களின் மூலமாகவும் வேர்வையாகக் கழிவதென்னே? மூத்திரமல்லவா! ஆ! ஆ! இங்ஙனம் சதா மலஜலம் கசியப்பெற்று வரும் இச்சரீரத்தை "நான்" என்று அபிமானித்து அகங்கரிப்பது அணுவளவேனும் அறிவுள்ளோர் செய்யும்



செயலா? ஒரு நிமிஷ ஆராய்ச்சிக்குள்ளே சரீரத்தினுடைய உண்மை புலப்பட்டுவிடுகிறதே! இவ்விதமாகச் சரீரத்தினுடைய உண்மையை யறிந்தவன் இச்சரீரத்தைச் சுமந்து கொண்டு திரிவதற்கு ஒரு நிமிஷமேனும் சம்மதிப்பானா? 'எந்த நிமிஷத்திலே, எந்த இடத்திலே இதை யெறிந்துவிடலாம்' என்று இரவுபகலாக இதே எண்ணமாக இருப்பானல்லவா? மலம் நிறைந்த ஒரு பள்ளத்திலே தெரியாது இறங்கி, கழுத்துவரையில் அமிழ்ந்துவிட்ட ஒருவன், தத்தித் தடுமாறி எப்படியேனும் உடனே கரையேறுவதுமன்றியில், 'ஸ்நாநம் செய்து சுத்தமாவதற்குச் சுத்த ஜலமுள்ள குளம் எங்கே யிருக்கின்றது?' என்று அலைவதையே முதற் கடமையாகக் கொள்வானே யல்லாமல், 'இருந்தால் இருக்கட்டும், வேறு வேலைகளைச் செய்துவிட்டு, சாவகாசமாக ஸ்நாநம் செய்துகொள்ளலாம்' என்று இருப்பானா? அதுபோன்றே சரீரத்தினுடைய உண்மையை அறிந்தவன் இனிமேல் சரீரம் தன்னை என்றென்றும் பற்றாமல் இருக்கும்படிச் சரீரத்தைத் தியஜித்து விடுதற்கு முயற்சி செய்வதையே தனது முதற் கடமையாகக் கொள்வானே யல்லாமல், வேறு உலக வியவகாரங்களைக் கவனிப்பானா? சரீரத்தின் உண்மையையும் நன்மையையு மல்லவா பொறுந்திருக்கின்றன உலக வியவகாரங்கள்? சரீரத்திலே நன்மையில்லை யென்று ஏற்பட்டுவிட்டது; ஆதலால், உலக வியவகாரங்களுக்கு இடமில்லை. சரீரத்தைப்பற்றிய உண்மையோவென்றால், சரீரம் ஜனன மரணங்கட்கு உட்பட்டது; ஜரா வியாதிகட்கு உட்பட்டது; இன்றல்லாவிட்டால், நாளை

யாயினும் அழிவது நிச்சயம்; நிமிஷம்தோறும் மாறிக்கொண்டே யிருக்கும் உடையது; இதனால் சரீரம் என்றும் உண்மையானதன்றென்றும் ஏற்பட்டது; ஆதலால், உலக வியவகாரங்களுக்கு இடமில்லை. இதையெல்லாம் எவன் ஓர்ந்து அறிந்துகொள்கிறான்? உலகினர்கள் குடித்து வெறிகொண்டு, கண்மருள, தலை சுற்ற, மதிமயங்கி ஆடுபவர் போல, உண்மைநிலை யுணராது, உலகப் பிரமையிலே உழன்று திண்டாடுகிறார்கள்.

இருக்கட்டும். சரீரம்தான் வெறுத்தற்கிடமாயிற்றே; அருவருக்கத்தக்க வஸ்துவாய்விட்டதே; அறிவாளியான எவனும் அதன்மீது பிரியம் வைக்க முடியாத அவ்வளவு அவலக்ஷணமானதாயிருக்க, மனிதர் தங்களுடைய சொந்த மல மூட்டையைத் தூக்கிச் சுமப்பதுமன்றியில், மனைவியென்று பெயர் படைத்த மலமூட்டை இன்னொன்றைக் கட்டி யணைந்துகொள்கிறார்களே! சிச்சீ! உலகினர்களே! உங்களுக்கு வெட்கமில்லையா? இந்த நாற்றச் சரீரத்தை இன்னொரு நாற்றச் சரீரத்துடன் சேர்த்து, இரண்டினுடையவும் கொதிப்பினாலே உண்டாகின்ற சிழிவிருந்து இன்னும் புதிய சிருஷ்டிகளைப் பிதுக்கிவிடப் புறப்படுகிறீர்களே! அறிவென்பது என்ன, அடியோடு இல்லாமற்போய் விட்டதா? தெரியாது மலத்தை மிதித்துக் கால்களெல்லாம் மலம் நிரம்பியிருக்கும் ஒருவன், தனக்கு மலம் நிறைந்த குட்டையென்று தெரிந்திருந்த ஒரு குட்டையிலே இறங்கிக் கால் கழுவுவானா? 'இன்னும் அதிகம் மலம் ஒட்டிக்



கொண்டுவிட்டால் என்ன செய்கிறது?' என்று பயந்து அதனருகேகூடப் போகமாட்டான். அதுபோல, சரீரம் மலமூட்டை யென்று தெளிந்த ஒருவன் ஸ்திரீயாகிற இன்னொரு மலமூட்டையைச் சேர்த்துக் கட்டிக்கொள்ள இச்சிப்பானா? மலப்புழுவும் மலப்புழுவும் சேர்ந்து எத்தனை மலப்புழுக் குட்டிகளை யுண்டாக்கிவிடுகின்றன! மனிதன் தனது குழந்தைகளென்று அம்மலப் புழுக்குட்டிகளையும் எடுத்து அணைத்துக் கட்டிக்கொண்டு முத்தமிட்டுக் கொஞ்சி விளையாடுகிறான். ஏ, மூடா! உதறிவிடு! உதறிவிடு!! உண்மையை யறிந்துகொள்! தோல்மூடி நாட்டத்தை நீக்கிவிடு. நீயார் என்பதைச் சற்று விசாரணை செய்து பார்! விதண்டாவாதம் பேசாதே! புத்தி சாமர்த்தியத்தினாலே குயுக்திகள் பேசி ஹ்ருதய நிவாசனாகிய ஸ்ரீ பரமேச்வரனை ஏமாற்றிவிட முயலாதே.

“ஒரு பிராஹ்மணன்; வேதாந்த சாஸ்திரங்களிலே மகா விற்பன்னன்; வேத வேதாந்தங்களிலே கரை கண்டவன்; மகா நிபுணன்; கிரகஸ்தாச்ரமத்திலே யிருந்தாலும் சற்றும் பற்றற்ற சமர்த்தன். இவருக்கு ஒரு புத்திரன் இருந்தான்; பிதாவுக்கு நேர்மாறான குணங்கள் உடையவன்; உலகத்திலே அழுந்திக் காமக் குரோதாதி குணங்களை யெல்லாம் நிரம்பக்கொண்டவன்; சிற்றின்பத்திலேயே காலத்தைச் செலவிடுபவன்; ஆனால், சாஸ்திரங்களெல்லாம் நன்றா யோர்ந்தவன்; சம்சர்க்கதோஷத்தினாலே மனம் மலினமடைந்து, மாயையிலே சிக்கிக்கொண்டவன். ஊரிலுள்ள

பலரும் வந்து அந்தப் பிராஹ்மணரிடத்திலே, "ஐயா! தங்களுடைய பிள்ளைக்குத் தாங்கள் சிறிது புத்திமதி சொல்லலாகாதா? வேசி வீடே குடியாய், பிராஹ்மணாசாரம் சகலவற்றையும் துறந்து, நீசன்போலத் திரிகின்றானே; அவனைப் பார்க்க எங்களுக்கே வெட்கமா யிருக்கின்றது; தங்களுக்குமாத்திரம் நன்றா யிருக்கிறதோ?" என்று அடிக்கடி கூறுவார்கள். அவரும் தமது புத்திரனைச் சந்திக்கும்படி நேரிட்டபொழுதெல்லாம்—இதனால் அவர் அவனைச் சந்திப்பது, சந்திக்கும்படி நேர்வது அரிதென்று தெரிய வாவில்லையா?—எவ்வளவோ புத்திமதிகள் சொல்லிப்பார்த்தார்; ஒன்றும் பயன்படவில்லை. 'புத்திரனுடைய மனத்தை எப்படித் திருப்புவது? ஸ்திரீபோகம் துச்சமென்று அவனுக்கு உணர்த்துவதெங்ஙனம்?' என்று அந்த பிராஹ்மணர் வருந்தி யாலோசனை செய்துகொண்டேவர, அவ்வாலிபனுக்கு அதிபிரியமான ஒரு தாசி அபாயகரமான ஸ்திதியிலிருக்கிறாளென்றும், அது தமது புத்திரனுக்குத் தெரியாதென்றும் கேள்விப்பட்டு, அவர் அந்தத் தாசியினுடைய வீட்டுக்குச் செல்ல, அவள் அப்பொழுதுதான் இறந்துவிட்டதாகத் தெரிந்துகொண்டார். தாய்க்கிழவியினிடத்திலே சென்று, தாம் நூறு ரூபா அக்கிழவிக்குக் கொடுப்பதாகவும், தம்மிடத்தில் அப்பிணத்தைக் கொடுத்துவிடும்படிக்கும் கேட்டுக்கொண்டார். பண ஆசைப் பேய் பிடித்த அக்கிழவி சம்மதித்து ரூபா நூறு வாங்கிக்கொண்டு, அப்பிணத்தை அவரிடத்திலே கொடுத்துவிட்டாள். அவர் அப்பிணத்தைக் கொண்டுபோய், தமது வீட்டுக் கொல்லைப்



புறத்திலே, வெகு தூரத்திலேயுள்ள ஒரு அறையில் வைத்துப் பூட்டிவிட்டு வந்துவிட்டார். இரண்டு மூன்று நாட்களாயின; இச்சங்கதியை இவர் எவரிடத்தும் உரைக்கவில்லை. புத்திரன் அந்தத் தாசி வீடு சென்றான். அவள் மரித்துவிட்டதாகவும், அவளை யெடுத்துக்கொண்டுபோய்ப் புதைத்துவிட்டதாகவும் தாய்க்கிழவி புகன்றாள். அவனுடைய மனம் உடைந்தது. 'ஐயோ! முகத்தைப் பார்ப்பதற்குக்கூட நான் கொடுத்துவைக்கவில்லையே!' என்று கதறி யழுதான்; உருண்டான்; புரண்டான்; புலம்பினான். அது முதல் அவனுக்கு அதுவே ஒரு பைத்தியம்போலாய்விட்டது. வீட்டிலே வந்தால் நேரே ஆகாரம் உண்பதில்லை; முகத்தை மூடி முக்காடிட்டுப் படுத்துக்கொண்டான்; முகம் வாடிவிட்டது; அடிக்கடி பெருமூச்சு விடுகிறான். சங்கதி பிதாவுக்குத் தான் தெரியும்; வீட்டிலே வேறெவருக்கும் தெரியாது. தாயார், புத்திரனுடைய முகம் வாடியிருப்பதையும், புத்திரன் ஏதோ துக்கத்தினால் பீடிக்கப்பட்டிருக்கிறானென்பதையும் கண்டு, தனது புருஷனிடத்திலே புகன்று, புத்திரனைக் கூப்பிட்டு அருகே வைத்துக்கொண்டு, "என் கண்ணே! என் முத்தே! என் செல்லமே! உனக்கு ஏன் இந்தத் துக்கம்? எவரேனும் வசைமொழி கூறினரா? உனக்கு என்ன குறை நேரிட்டது? இயம்புவாய்" என்று கேட்டலும், புத்திரன், "ஒன்றுமில்லை" என்றான். பிதா அவனை விடாது, "உண்மையை ஒளியாது சொல்வாய்! நீ எப்படியேனும் உயிருடனிருந்தால் போதும்; நீ செல்கின்ற தாசிகளுள் எவளேனும் உன்னைத் தன் வீட்டுக்குள்ளே

வரக்கூடாதென்று சொல்லிவிட்டனளா?'' என்று கேட்க, புத்திரன் முதலில் கூச்சப்பட்டானாயினும், ''ஆசை வெட்க மறியாது'' என்னும் பழமொழிக்கிணங்க, உண்மையைக் கூறினான். பிதா அவன் சொல்லியவற்றைக் கவனமாய்க் கேட்பவர்போலக் கேட்டுவிட்டு, ''இவ்வளவுதானா? அவள் போகிறாள்; நான் அதிரூபவதிகளான அநேகம் தாசிகளை உனக்கு ஏற்பாடு பண்ணுகிறேன்; நீ சற்றும் மயங்கவேண்டாம்'' என்று தேறுதல் கூறுபவர்போலக் கூறிவிட்டுப், பின்னர்ப் புத்திரனை யழைத்துக்கொண்டு கொல்லைப்புறம் சென்றார். அவ்வறையின் கதவைத் திறந்தார்; பிண நாற்றம் வீசிற்று; புத்திரனால் பொறுக்க முடியவில்லை; அவ்வறையிலே ஒரு பிணம் கிடந்தது. புத்திரன், ''இஃதென்ன இது? அப்பா! இவ்வவலக்ஷணமான இடத்துக்கு என்னை நீ ஏன் இட்டுக்கொண்டு வந்தாய்?'' என்று கேட்டான். பிதா, ''அரும்புதல்வனே! அவசரப்படாதே! நான் சொல்வதைச் சற்று கேட்பாய்! இப்பிணம் யாருடையதென்று தெரியுமா? உன்னுடைய அருங்கண்மணி, ஆசைநாயகி, அந்தகனுலகு புகுந்த வேசி, அவளுடையது; பார்ப்பாய்! கூர்ந்து பார்ப்பாய்! நான் கூறுவதைக் கேட்பாய்! அவளுடைய சரீரத்தின் ஒவ்வொரு அவயவத்தையும் ஆய்ந்து பார்! அவை எப்படி யழுகிக்கிடக்கின்றன! ஆ! ஆ! இதோ பார் (அவளுடைய மர்ம ஸ்தானத்தைச் சுட்டிக் காட்டிக் கொண்டே) நீ எந்த அவயவத்தினிடத்திலே ருசியையும் சுகத்தையும் அநுபவித்துக்கொண் டிருந்தாயோ, அந்த அவயவம், இப்பொழுது பார்த்தாயா?, ஈ யெறும்புகளால் மொய்க்கப்பெற்று, அழுகி, துர்நீர் ஒழுகி, எவராலும் பொறுக்கவொண்ணாத துர்நாற்றம் வீசுகின்றது, பார்! இதனிடத்தே வைத்த பிரியத்தினாலே நீ இப்பொழுது முகம் வாடி, சரீரம் தளர்ந்து, எப்பொழுதும் மூடு முக்காடிட்டுப் படுத்துக்கொண்டிருக்கிறாய்; இது நியாயமாயிருக்கிறதா?'' என்றார். புத்திரன் கடகடவென்று சிரித்துக் கொண்டே, பிதாவை நோக்கி, ''அப்பா! என்ன ஆச்சர்யம்! உனக்கு அறுபது வயதாகியும் அறிவு சற்றுமில்லையே; ஈ யெறும்புகள் இனிப்பான பண்டங்கள் உள்ள இடத்தில் தானே மொய்க்கும்; உயிரற்று அழுகிக்கிடக்கும் இப்பிணத்தின் இவ்வவயவத்திலே இப்பொழுதே இவ்வளவு இனிப்பு இருக்குமானால், உயிருடனிருக்கும்பொழுது—சுக சரீரமாயிருக்கும்பொழுது — எவ்வளவு இனிப்பு இருக்கவேண்டாம்?'' என்றான்.



இக்கதையில் கூறப்பட்டுள்ள அப்பிராஹ்மணப்பிள்ளை போன்று மூடவாதங்கள் செய்யாதே. மனிதனே! ஆகாரம், நித்திரை, பயம், மைதுனம் இந்நான்கும் மனிதனுக்கும் மிருகங்கட்கும் சமமாகவே யுள்ளன. ஆதலால்தான் ஸ்திரீ போகமானது சிற்றின்பமென்றும் மிருக சுகமென்றும் கூறப்படுகின்றது. நல்லது; அந்த ஸ்திரீ சுகம்தான் என்ன சுகம்? நித்திய சுகமா? ஓர் நிமிடநேரம்தானே சுகம். ஒரு தரம் ஸ்திரீயினிடத்திலே போகம் அநுபவித்தபின்னர், உடனே மறுபடியும் போகமநுபவிப்பதற்கு உனக்கு மனமிணங்குகின்றதா? இல்லையே. ஏன்? அந்தச் சுகம் உண்மை

யானதானால், அப்பொழுதும் மனம் அதனிடத்துச் செல்ல வேண்டுமே. இன்னும், மனமார, ஸ்திரீ சுகம் நீ அநுபவித்ததாக வைத்துக்கொள்வோம்; உன்னுடைய சரீரம் தளர்ந்து பலயீனமுற்றுவிடுவதை நீ அநுபவத்தில் பார்த்ததில்லையோ? உற்சாகத்தையும் பலத்தையும் மேன்மேலும் பெருக்குவதே சுகமாம். தளர்ச்சிக்கும் துக்கத்துக்கும் காரணமாயிருப்பது சுகமாகுமா? ஆகையால், ஸ்திரீ சுகம் சுகமேயென்று மயங்காதே.

இன்னும் ஸ்திரீ போகமானது ஒரு பெருங்குற்றமென்று கூடக் கூறப்படலாம். எவருடைய பார்வைக்கும் உட்படாமல், எவருக்கும் தெரியாமல் செய்யப்படும் காரியம் குற்றமேயாம். அது குற்றமல்லாவிட்டால், பகிரங்கமாகப் பத்துப்பேருக்கு நடுவிலே செய்யப்படலாமே. இரவு காலமானது கள்வர்களுக்கும், காமிகளுக்கும், கானகத்துக் கடிவாய்களுக்கும் என்று ஏற்பட்டுள்ளது. கள்வர்கள் செய்வது கொடுமையும் குற்றமுமேயாம். கானகத்துக் கடிவாய்களும், அதாவது, துஷ்ட மிருகங்களும் செய்வது கொடுமையேயாதலால், குற்றமேயாம்; ஆகையால், காமிகளும்—அதாவது ஸ்திரீபோகம் செய்ய விரும்புகிறவர்களும்—இரவையே இச்சிக்கின்றனராதலினால், அவர்கள் செய்யும் ஸ்திரீபோகமும் கொடுமையும் குற்றமுமேயாகும். பகற்காலத்திலே ஸ்திரீபோகம் செய்தல் கூடாதென்று ஸ்மிருதிகள் விதித்திருக்கின்றன. பட்டப்பகலில் திருடர்களும் எவருக்கும் தெரியாமலே திருடுகிறார்கள்போல, பட்டப்பகலிலே சிற்றின்பம் நுகரும் சில்லரைப்பையல்களும் எவருக்கும் தெரியாமலே நுகர்கிறார்கள். ஆதலால், ஸ்திரீ போகமானது ஒரு பெருங்குற்றமாகவே ஏற்படுகின்றது. இக்குற்றத்தை உலகுமுழுதும் ஒரே மனதுடன் செய்துவருகிறார்களாகையினாலே, இதைக் குற்றமெனக் கருதுபவர் இல்லை. ஆகவே, இக்குற்றம் சர்வ சாதாரணமாய்விட்டது. ஏ, மானிடர்களே! விழித்துக்கொள்ளுங்கள்! எத்தனை நாட்களுக்கு நீங்கள் இக்குற்றத்தைச் செய்துகொண்டுவருவீர்கள்?



சீச்சீ! இந்நாற்றச் சடலத்தைச், சோற்றுத்துருத்தியைப், பெரிதெனப் பாராட்டுதல் கூடாது. இச் சரீரத்தினிடத்திலே ஓட்டையில்லாத இடம் எங்கேனும் இருக்கிறதா? உச்சிமுதல் உள்ளங்கால்வரையில் ஓட்டைதானே; ரோமக்கால்களெல்லாம் துவாரங்கள்தானே. இந்த ஓட்டையாக்கிருதியினிடத்திலே ஏன் இவ்வளவு மயக்கம்? தள்ளினேன், தள்ளினேன். ஆண், பெண் என்ற வித்தியாசங்கூட நமக்கு உண்டாகாவாறு நாம் அப்பியாசம் செய்துகொள்ளல்வேண்டும்.

இங்ஙனமெல்லாம் பற்பலவாறாகச் சிந்தனை செய்தார். மனிதன் ஸ்திரீயை—ஒவ்வொரு ஸ்திரீயையும்—தனது மாதாவைப்போலக் கருத அப்பியசித்துக்கொண்டாலன்றி, ஸ்திரீ மாயையை ஜயிக்கமுடியாது. ஸ்திரீயானவள் உன்னை மயக்கி, உன்னை ஈச்வரபக்தி செய்யவொட்டாது செய்துவிடுகிறாள். ஆ! ஆ! ஸ்திரீயினுடைய சக்தியே சக்தி! அவ

ளுடைய வல்லமையே வல்லமை! நெடுங்காலம் கஷ்டப்பட்டுத் தவம்புரிந்த மகரிஷிகள் எத்தனைபேர் ஸ்திரீயினுடைய காதற் கண்பார்வையிலே ஈடுபட்டுத் தங்கள் தவங்களையிழந்திருக்கிறார்கள்? இராமராவண யுத்தம் ஸ்திரீயினாலேயே ஏற்பட்டது; மகா பாரதப்போர் ஸ்திரீயினாலேயே ஏற்பட்டது. காமஜயமே, மன்மத தகனமே, மனுஷ்ய ஜன்மப்பிரயோசனத்தையடைய விரும்பும் ஒவ்வொரு மனிதனும் அடையவேண்டிய செயலாகும். இங்ஙனமெல்லாம் ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஆய்ந்து ஆய்ந்து ஸ்திரீயின் மயக்கத்திலிருந்து தப்புவித்துக்கொள்வதற்கு அநேக வருஷகாலம் பாடுபட்டார். சில சமயங்களிலே இவர் இம்மாயையினின்றும் விடுபடுவதற்காக ஓவென்று கூச்சலிட்டு அழுவார்; அச்சமயத்திலே அங்கு அருகாமையிலிருந்த ஜனங்களெல்லோரும் ஓடிவருவார்கள்; இவர் அழுவதைக் கண்டு மனம் பொறாராகி, இவருடன்கூடச் சேர்ந்து அழுதவர்களும் சிலர் உண்டு.

உலகின் மூடத்தனத்துக்கும் துன்பத்துக்கும் காரணமா யிருப்பதென்ன? ஆசையாகிற அக்கினி ஓங்கி வளர்ந்து எரிவதற்கு விறகுபோலுள்ளது யாது? பந்தத்துக்குக் காரணங்கள் யாவை? உலகின் அந்தகாரத்துக்குக் காரணம் யாது? ஸ்ரீ ராமகிருஷ்ணர் இக்கேள்விகளுக்கெல்லாம் இரண்டே வார்த்தைகளில் பதிலுரைத்தார். "காமினி—காஞ்சனம்"—இதுவேதான் காரணம்; அதாவது: பெண்ணும், பொன்னும். மிருக உணர்ச்சிகள் தம் இஷ்டப்படி நடை



பெறுவதற்கு உள்ள இச்சை, மிருக உணர்ச்சிகளைத் திருப்தி செய்வதற்குள்ள உபாயங்கள், இவைதாம் உலக பந்தங்கள். மனிதன் இந்தப் பந்தங்களைத் தகர்த்தெறிய முடியுமா? மனிதன் ஐம்பொறிகளின் உணர்ச்சிகளுக்கும் அப்பாலுள்ள ஆத்ம வஸ்துவை யறிய முடியுமா? அறிய முடியுமென்றுதான் மகான்கள் கூறியிருக்கிறார்கள்; வேதங்களும் கோஷிக்கின்றன. ஆண், பெண் என்ற வேற்றுமையை அடியோடு அழித்துவிடுதற்பொருட்டு, ராமகிருஷ்ணர் அநுபவபூர்வகமாக ஓர் உபாயத்தை யநுசரிக்கலானார். ஸ்திரீ ஜாதியினுடைய அகங்கார அறிவையும் தன்மையையும் அடைந்துகொள்ளுதற்பொருட்டு, ஸ்ரீ ராமகிருஷ்ணர் தாமே ஸ்திரீ வேஷம் போட்டுக்கொண்டார்; ஸ்திரீகள் போலச் சேலையுடுத்துக்கொண்டார்; ஸ்திரீகளுடனே கலந்து ஸ்திரீகளுள் தாமும் ஒரு ஸ்திரீயாக வசிக்கலானார். இவரிடத்தில் ஆதிமுதல் அத்தியந்தபக்தி வைத்திருந்த மதுரநாதன் இவருக்குத் தனது குடும்பத்திலே சர்வசுதந்திரம் கொடுத்திருந்தான். இவர் ஸ்திரீபோல உடுத்து, ஸ்திரீபோல நடந்து, ஸ்திரீபோலப் பேசி, மதுரநாதனுடைய குடும்பத்து ஸ்திரீகளுடன் சேர்ந்து வசித்து, அவர்களுடன் கூடிக் குலாவி, அவர்களுள் தாமும் ஒருவர்போன்றேயிருந்தார். ஆனால், நாடகங்களில்கூடப் புருஷர்கள் ஸ்திரீ வேஷம் இட்டு, ஸ்திரீபோல நடிக்கிறார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணர் இந்நாடகதாரிகள்போல வேஷமிட்டு நடிக்கவில்லை. நாடகதாரிகளுக்கு, அவர்கள் ஸ்திரீவேஷம் தரித்திருந்தாலும் தாங்கள் ஆண்பிள்ளைகளே யென்ற ஞாபகம் உண்டு;

ஸ்ரீ ராமகிருஷ்ணரோ தாம் ஸ்திரீயே, ஸ்திரீயே என்று மனனம் செய்து, தாம் ஆண்பிள்ளை யென்ற நினைப்பையே மறந்துவிட்டார். ஆ! ஆ! என்ன ஆச்சர்யம்! சங்கற்பத்தின் முன்னே மனம் என்ன செய்யும்? அவர் ஆண்பிள்ளை யென்று மனமானது சொல்லிக்கொண்டுவந்தது; ஆனால், அவருடைய சங்கற்பமானது பெண்பிள்ளையாக வேண்டுமென்றிருந்தது. சங்கற்பத்தை ஜயிக்க மனத்தினால் முடியவில்லை. ஆண்—பெண் என்ற பேதமற்று, ஆகாயம்போன்று நிர்மலத்தன்மையையடையவேண்டுமென்று அவர்சங்கற்பித்துக்கொண்டார்; இவ்விஷயத்திலே ஜயமடைந்துவிட்டார். ஸ்திரீயைப் பெண் என்ற பேத பாவனையிலே அவரால் பார்க்க முடியவில்லை. அவர் எல்லா ஸ்திரீகளையும் மாதாவாகவே—தேவியாகவே—கருதினார். ஸ்திரீகளிடம் அவர் சம்பாஷிக்கும்படி நேரிட்டால், அவர்களை "மாதா" என்றே அழைப்பார். "சர்வவியாபகமாய், சர்வாந்தர்யாமியாய், சச்சிதானந்த சொரூபிணியாயுள்ள மகா சக்தியே, மாதாவே, ஜகன்மாதாவேஸ்திரீ வடிவம்கொண்டு உலகில் உலவுகிறாள்" என்று அவர் கருதினார். ஸ்ரீராமகிருஷ்ணர் சில சமயங்களில் வேசைகள் தங்கள் வாசல்களிலே உட்கார்ந்திருப்பதைப் பார்த்து இரு கைகளையும் கூப்பிக்கொண்டு, அவர்களை மாதாவாகவே பாவித்து வணங்குவார். 'காமத்தை ஜயித்தோன் கண்டத்தில் நஞ்சுவைத்தோன்' என்று கூறுவார்கள். இதோ ஒருவர், ராமகிருஷ்ணர் காமத்தை ஜயித்தவர்.

இவர் அப்பியாசகாலம் கழிந்து, மகாத்மாவெனப் பிரக்யாதியடைந்து, இவரைச் சுற்றிலும் சிஷ்யர்கள் சூழத்



தொடங்கிவிட்டார்கள். அப்பொழுது இவரைப்பார்க்கிலும் உலகானுபவத்திலும் வயதிலும் முதிர்ந்த பலர் இவருக்கு சிஷ்யர்கள் ஆனார்கள். அவர்களுள் சிலர், "குரு"வைக் கூடப் பரிசோதனை செய்யத் துணியும் தீரத்துவம் உடையவர்கள். இவர்களுள் ஒருவர் ஒருநாள் ஸ்ரீராமகிருஷ்ணரையிட்டுக்கொண்டு சென்று ஒரு வீட்டினுள்ளே நுழைந்தார். அப்பொழுது அந்த வீட்டில் ஸ்திரீகளாக எவரும் காணப்படவில்லை; அந்த சிஷ்யர் அவரை மேல் மெத்தைக்கு இட்டுச் சென்றார்; அங்கே ஒரு அறை வெகு அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது; அவ்வறையின் சுவர்களில் எங்கும் ரவிவர்மாவினால் வரையப்பட்ட அழகிய படங்கள் சில—ஆனால் ஸ்திரீகளின் படங்களே—மாட்டப்பட்டிருந்தன. அவற்றில் பெரும்பான்மையும் பாதி நிர்வாணமாயும், முக்கால் நிர்வாணமாயும், முழுநிர்வாணமாயும் இருந்தன; அங்கு ஒரு கட்டிலும், மெத்தையும், திண்டு தலையணைகளும் போடப்பட்டிருந்தன. ஸ்ரீராமகிருஷ்ணரை அந்த சிஷ்யர் அக்கட்டிலின்மீது உட்காரும்படி செய்துவிட்டு, "ஸ்வாமி! இதோ வருகிறேன்" என்று கீழே யிறங்கினார். உடனே சில நிமிஷங்களுக்குள்ளே, அதிரூபவதிகளான யுவதிகள் சிலர்—வேசிகள்—ஸ்ரீராமகிருஷ்ணர் இருந்த அறைக்குள்ளே நுழைந்தனர். ஸ்ரீராமகிருஷ்ணரைப் பரிசோதித்துப்பார்ப்பதற்காக அவருடைய "குருவுக்கு மிஞ்சின" சிஷ்யர்கள் செய்த வேலையிது. ஸ்ரீராமகிருஷ்ணர் இவர்களைப் பார்த்தார்; உடனே மேலே நாலு பக்கங்களிலும் பார்த்தார்; இந்த வேசிகள் வெட்கம் விட்டுத் தங்களுடைய மதனபாண

அவயவங்களை அவருக்குக் காண்பிக்க ஆரம்பித்தார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணர், இடியேறு கேட்ட சர்ப்பம்போலக் கலங்கி, "ஏ, மாதா! லோகமாதா!, அம்மா! பரதேவதை! என்னை எங்கே கொண்டுவந்து விட்டுவிட்டாய்? இதற்குத் தானா நான் இத்தனை நாட்கள் உன்னை நோக்கித் தியானம் செய்தது?" என்று கதறி, காணாதது கண்ட குழந்தை திகில் கூச்சலிட்டார். உடனே அவருடைய சரீரமானது விறைத்துவிட்டது; ஸ்தம்பம்போலாய்விட்டது. அவர் ஆத்மாநுபூதியிலே ஐக்கியமாகி, சமாதி நிஷ்டராய்விட்டார். ஆ! ஆ! காக்ஷி மாறிவிட்டது. அந்த வேசிகள் திடுக்கிட்டார்கள். "இத்தகைய மகா பரிசுத்த புருஷனும் உலகத்தில் உளனோ?" என்று ஆச்சர்யப்பட்டார்கள். அவ்வறை முழுதிலும் ஆகாயமானது பரிசுத்தத்தன்மை நிரம்பப்பெற்றது. அந்த ஸ்திரீகள் அவருடைய பாதாரவிந்தங்களிலே பன்முறையும் பணிந்து புணிந்து வீழ்ந்து எழுந்து கைகட்டி வாய்பொத்தி மிகுந்த பயபக்தியுடனே ஒருபக்கமாய் நின்றார்கள். கீழேயிருந்த "குருவுக்கு மிஞ்சின" சிஷ்யர்கள் இவர் போட்ட கூச்சலைக் கேட்டு ஓடிவந்தார்கள். ஸ்ரீராமகிருஷ்ணர் சமாதிநிஷ்டாதற்பராயிருக்கிறார். வேசிகளோ உடல் நடுங்க, ரோமம் சிலிர்க்க, இருகைகளையும் கூப்பிக்கொண்டு ஒருபக்கமாக நிற்கிறார்கள். இந்த சிஷ்யர்களுக்குத் திகிலுண்டாய்விட்டது. "ஐயோ, நமக்கு நம்பிக்கையில்லாமற் போய்விட்டதே; குருவினிடத்து நம்பிக்கைத் துரோகம் செய்தோமே; இப்பாபத்துக்கு நிவிர்த்தியாது?" என்று மனங் கலங்கியவர்களாய் அவருடைய



பாதாரவிந்தங்களிலே விழுந்து விழுந்து எழுந்து, கண்ணீர் ஆறாய் ஓடத், தாங்கள் செய்தது பெருந் தப்பிதமேயென்று உணர்ந்து, அதற்காக மனஸ்தாபப்பட்டு வருந்தினார்கள். அந்த வேசிகள் இந்த சிஷ்யர்களை நோக்கி, "ஒரு மகாத்மாவையா இங்குக் கொண்டுவந்தீர்கள்? அவர் சுகப்பிரஹ்மமே யாவர்; அவர் ஈச்வர புருஷர்; அவரை நாங்கள் குழந்தை போன்று கருத முடியும்" என்றார்கள். இதற்குள்ளாக ஸ்ரீராமகிருஷ்ணர் சமாதி கலைந்து, பிரபஞ்சப்பிரக்ஞையுண்டாகவே, அவர், தம் முன்னே கைகட்டிக் காத்திருக்கும் சிஷ்யர்களையும் ஸ்திரீகளையும் கடாட்சித்து, சிஷ்யர்களை நோக்கி, "குழந்தைகாள்! நீங்கள் செய்தது நியாயமே; எதையும் நம்பிக்கையின்மீது எடுத்துக்கொள்ளக் கூடாது; பரிசோதனை செய்து பார்த்தே அங்கீகரிக்கவேண்டும்; எனக்கு மிகவும் சந்தோஷம்" என்று கூறிவிட்டு, அந்த ஸ்திரீகளை நோக்கி, "அம்மாமார்களே! தாய்மார்களே! நீங்கள் ஜகன்மாதாவின் வடிவினர்கள்" என்று கூற, அவர்கள் அன்றுமுதல் தங்களுடைய நீசத்தொழிலை விட்டுவிட்டு, கௌரவமாகக் காலங் கழிக்க ஆரம்பித்தார்கள்.

---

## 6-ம் அத்தியாயம்
## பொன்னாசையும் போக்கினார்

பெண்ணாசையை எவ்வளவு வைராக்கியத்துடனே ஜயித்தாரோ, அதே மாதிரி வைராக்கியத்துடனே பொன்னாசையையும் ஜயிக்கலானார். இதற்காக, ஸ்ரீராமகிருஷ்ணர்

அநுபவபூர்வமான ஒரு வழியை அநுசரிக்கலானார். இவர் கங்கைக் கரையிலே உட்கார்ந்து, ஒரு கையிலே பொன்னையும்—மறு கையிலே மண்ணையும் வைத்துக்கொண்டு பின் வருமாறு சிந்திப்பாராயினார்:—

பொன் என்பதென்ன? மண்தானே. பொன் வெள்ளி முதலிய லோகங்களும்-வைரம், வைடூர்யம், புஷ்பராகம், மரகதம், பச்சை முதலிய ரத்தினங்களும்-எங்கிருந்து எடுக்கப்படுகின்றன? மண்ணிலிருந்துதானே? மண்ணினுள்ளே இவை யெப்படி நுழைந்துகொண்டன? எவரேனும் சென்று புகுத்திவைத்தார்களா? இல்லை, இல்லை. மண்தான் இம்மாதிரி வெவ்வேறு ரூபங்களை யடைகின்றது. தங்கநிறமான மண்ணைப் பொன் என்கிறோம். வெள்ளை நிறமான மண்ணை வெள்ளி; ஈயமென்று வெளுப்பு நிறத்தின் ஏற்றக்குறைச்சலுக்குத் தக்க பிரகாரம் கூறுகிறோம். சிவப்பு நிறமான கல்லை, சிவப்பு ரத்தினம் என்கிறோம்; வெள்ளை நிறமான கல்லை அதனுடைய வெள்ளை யொளியின் ஏற்றக்குறைச்சலுக்குத் தக்க பிரகாரம் வைரமென்றும் வைடூர்யமென்றும் கூறுகிறோம். ஆ! ஆ! என்ன ஆச்சர்யம்? இந்த மண்ணுக்கும் கல்லுக்கும் மதிப்புக்கொடுப்பது மனிதனே; இதிலே பிரமித்து மயங்குவதும் மனிதனே. பெண்ணாகட்டும், பொன் ஆகட்டும், மண் ஆகட்டும், அது எது ஆகட்டும், அது மனிதனை ஈச்வரனிடத்து இட்டுச் செல்லாவிட்டால் அதனால் யாது பயன்? "ஈட்டி எட்டினமட்டும் குத்தும், பணம் பாதாளம்மட்டும் குத்தும்" என்பது உலக



விஷயத்திலே யுண்மையானாலும், பணத்தின் உதவியாலே உலகில் பற்பல கார்யங்கள் செய்யலாமாயினும், அந்தப் பணமானது மனிதனை ஈச்வரனிடத்து இட்டுச் செல்லும் சக்தி வாய்ந்ததன்றே. இதனால் ஈச்வரனை அடைய முடியாதென்றால், இது வெறும் மண்தானே! மானிடர் ஏன் இதனிடத்து இவ்வளவு மயங்குகின்றனர்? பொன்னாசை பிடித்துப் புலம்பித் திரியும் பித்தர்களே! பொன்னும் மண்ணும் ஒன்றே யென்று அறிந்துகொள்ளுங்கள்! மண்ணின் மறு ரூபமே பொன் என்பது பொய்யோ? வாழ்நாட்களை யெல்லாம் வீண் நாட்களாகக் கழிக்கும் வம்பர்கள் பொன்னைக் குவித்துக் குவித்துப் பார்த்து மகிழ்கின்றனர். சோமநாத க்ஷேத்திரத்தைத் துவம்சம்பண்ணி, "விக்கிரக நிக்கிரகன்" என்று விருது கட்டிக்கொண்டு, கோவிற் சொத்தையும் கொள்ளை யடித்துக் குவியல் குவியலாகப் பொன்னைக் குவித்துவைத்த மகம்மது கஜினி என்பவனும் தனது மரணத் தறுவாயில் அக் குவியல்களைப் பார்த்து ஏங்கி மாண்டனனே! ஆ! ஆ! ஆச்சர்யம்! இப்பொழுது பொன் அன்றோ இப்பூவுலகில் தன்னரசு செலுத்துவது? பிதாவும் புத்திரனும் பிரிந்துவிடுவதும் பணத்தினாலேயே! மகனிடத்தில் மாதா அன்பு செலுத்துவதும் பணத்திற்காகவே! புருஷன், பணத்தைக்கொண்டு வேண்டியன வாங்கி யளிக்காவிடில், கொண்ட மனைவியும் அவன் தலையில் இரண்டு குட்டுக் குட்டுவாள். ஆ! பணமே! நினது சாமர்த்தியந்தான் என்னே? ஆனால், உனது வாஸ்தவ சொரூபம் உண்மையன்றே.

சிவஸ்தோத்திரத்தின் பொருட்டு சிருஷ்டிக்கப்பட்டுள்ள நாவால்: துச்சமாய், ஜனனமரண நியதிக்குட்பட்டவனாய், நாற்றச் சரீரத்தைச் சுமந்துகொண்டு, "நான்" என்ற அகங்காரத்தை வகித்த மூடனாய்த், தனக்குச் சரிசமானமாய்ச் சகல அவயவங்களும் வாய்க்கப் பெற்றுள்ள மனிதனை இந்திரன் என்றும் சந்திரன் என்றும், எச்சிற் கையினாலும் காக்கை யோட்டாத இழிந்த மனிதனை அன்னதானப்பிரபு என்றும், பற்பலவிதமாகப் புகழ்வது பொன்னின் பொருட்டேயன்றோ? தேசாபிமான மிகுதியினாலும் ஜீவகாருண்ய சித்தத்தினாலும் பற்பலவிதத் துன்பங்களையநுபவித்தவர்கள் என்று பலராலும் சொல்லப்படுவோரும் அவர்களுடைய தீர வீர திடசித்தத்தை யெல்லாம் கைவிட்டுத், துன்மார்க்கமும் – வெளிவேஷமும் – தற்புகழ்ச்சியும் சொரூபமாயுள்ள மூடர்களைப் பல்லிளித்துப் பாக்கள் பாடிப் புகழ்ந்து நிற்பது பணத்திற்காகவன்றோ? சாண் கும்பிக்கு ஊண் தேட வகையறியாது 'பணம் பணம்' என்று பல்லோரும் பரதவிக்கின்றனர். "பொன்னைப் பூவைப் பூவையரைப் பொருளென் றெண்ணு மொருபாவி" என்று தாயுமானவர் தன்னைத்தானே நிந்தித்துக்கொண்டார். பொன்னையும் மண்ணையும் பெண்ணையும் சிறப்பாகக் கொண்டாடுபவர்கள் பாவிகள் எனப்பட்டார்கள்.

மண், பெண், பொன் முதலியவற்றை மனத்திற் குகந்தபடி யநுபவித்த மன்னாதி மன்னர்கள் இப்பொழுது எங்கே? அவர்களுடைய வம்ச பரம்பரைதான் இப்பொ



ழுது எங்கே? அவர்கள் போன இடம் புல் முளைத்துவிட்டதே! அவர்கள் இருந்த இடங்களி லெல்லாம் எருக்கஞ்செடி பெருத்துவிட்டதே! மண்ணாசை பிடித்து மாற்றாரை வருத்தி மண்டலமெல்லாம் தன்னரசு புரிந்துவந்த வணங்காமுடி மன்னர்களாகிய துர்யோதனாதியர்கள் இப்பொழுது எங்கே? ஆ! ஆ! ஆச்சர்யம்! மனிதனுக்கு இருக்கும்பொழுதும் இறக்கும்பொழுதும் அவனுடைய சரீரத்தைக் கிடத்துவதற்கு வேண்டியது அதிகமாய்ப்போனால் ஆறு அடி பூமிதானே! ஆகாயமளாவக் கட்டப்பெற்ற மாடமாளிகை கூடகோபுரங்களில் வாழ்ந்தோர் இம் மண்ணுலகை விட்டு விண்ணுல கேகும்பொழுது அவற்றைக் கூடக் கொண்டுபோகக் கண்டிலமே! உலகம் முழுதும் ஓர் குடைக்கீழ் ஆள வெண்ணி இடைவிடா முயற்சியுடனும் ஊக்கத்துடனும் மேன்மேலும் தேசங்களை ஜயித்து வந்ததாகச் சரித்திரக்காரர்கள் கூறுகின்ற மகா அலெக்ஸாண்டர் என்பவனும் மண்ணோடு மண்ணாய் மாண்டு ஒழிந்தனனே! இராஜாதி ராஜர்களுடைய கதியே இவ்வாறாயிருக்க, சாதாரண ஜனங்களுடைய ஸ்திதியைப்பற்றிக் கேட்பானேன்?" என்று பலவிதமாகச் சிந்தித்துக்கொண்டே, தமது கைகளிலிருந்த மண்ணையும் பொன்னையும் ஒன்றாகக் கலந்து "மண்ணும் பொன்னும் ஒன்றே; மண்ணும் பொன்னும் ஒன்றே; மண்ணும் பொன்னும் ஒன்றே" என்று பலதடவைகள் திரிகரணங்களும் ஒத்துக் கூறிக்கொண்டே அவற்றை ஒன்றாகச் சேர்த்துப் பிசைந்து, பிசைந்து, "கையிலுள்ளது மண்ணே, மண்ணே, மண்ணே" என்று சங்கற்பித்துக்

கொண்டு அச் சங்கற்பத்திலே லயித்து மனம் ஈடுபட, பொன் அவருக்கு மண்ணாகவே ஆய்விடும். அப்பொழுது அவருடைய முகத்திலே ஒரு தேஜஸ் வீசும்; அவருடைய உதடுகளில் புன்னகை பொலியும்; ஏதோ ஜயமடைந்தவர் போல அவருடைய முகத்திலே யொரு ஆநந்தக் களை தோன்றும். அவர் பொன்னையும் மண்ணையும் சேர்த்துக் கங்கையாற்றிலே எறிந்துவிடுவார். பொன் அவருக்கு மண்ணாகவே ஆய்விட்டது. இனிமேல் அவருக்குப் பந்தங்களேது? "காமினி, காஞ்சனம்" இவை யிரண்டையும் ஜயித்து விட்டார்.

ஒரு சமயத்திலே இவரிடத்தில் அத்தியந்த பக்தியுடையவனும் பரம சிஷ்யனுமான மதுரநாதன், அவர் கண்மூடிக் கவலையற்று நிஷ்டாபரரா யிருந்தபொழுது, அவருடைய சரீரத்திலே விலையுயர்ந்த பொன் சரிகைச் சால்வை யொன்றைச் சாத்த, அவர் நிஷ்டையிலிருந்த நேரம் வரையில் அந்தச் சால்வை அவருடைய திருமேனியை அலங்கரித்துக்கொண்டிருந்தது. சிறிதுநேரம் கழித்து ராமகிருஷ்ணர் கண்ணை விழித்தார்; தமது சரீரத்தின்மீது சாத்தப்பட்டிருந்த சால்வையைக் கண்டார்; நிமிர்ந்து பார்த்தார்; பக்தன் மதுரநாதன் பயபக்தியுடனே கைகட்டிக் காத்துக்கொண்டிருக்கிறான். உடனே இச்சால்வை அவனால்தான் சாத்தப்பட்டதென்பதையும் அறிந்துகொண்டார். அவர் அச் சால்வையை யெடுத்து மண்ணில் எறிந்து காலால் மிதித்துத் துவைத்து, "இது துணிதானே; இதிலென்ன பெருமையிருக்கிறது? இதன் மூலமாக ஈச்வரனைப் பார்க்க முடியுமோ? முடியாவிட்டால், இது என்னுடைக்



கோவணத்துக்கும் மதிப்பிலே கீழ்ப்பட்டதே" என்று கூறி, அதைத் தூர எறிந்தார்.

வருஷந்தோறும் இருபத்தையாயிரம் ரூபாய் வருமானமுள்ள சொத்தையும் தக்ஷிணேச்வர ஆலயத்தையும் அவர் அவனுடைய குருதக்ஷிணை போன்று ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று மதுரநாதன் பன்முறையும் பணிந்து கெஞ்சிக் கேட்டுக்கொண்டும், ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒரே பிடிவாதமாக மறுத்துவிட்டார். ஆயினும், மதுரநாதன் சமயம் வாய்த்தபொழுதெல்லாம் "அவற்றை ஏற்றுக் கொள்ளவேண்டும்" என்று ராமகிருஷ்ணரைத் தொந்தரவு செய்துவந்தானாதலால், ஸ்ரீராமகிருஷ்ணர் ஒருசமயத்திலே கோபமுண்டானவர்போலக் காட்டிக்கொண்டு, "மதுரநாதா! இன்னுமொருமுறை நீ இப்படித் தொந்தரவு செய்வாயாயின், நான் இந்த இடத்தைவிட்டு வேறெங்கேனும் போய்விடுவேன்" என்றார். "தாயைப்போல் பிள்ளை, நூலைப் போல் சீரை" என்பார்கள். மதுரநாதன் பரிசிலாக அளித்த சில ஆயிரம் ரூபாயை ஸ்ரீராமகிருஷ்ணருடைய தாயார் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டாள். அவ் வம்மையாருக்குப் பிறந்தபிள்ளை—அதிலும் நித்தியா நித்தியவஸ்து விசாரணை செய்து காமினி காஞ்சனத்தை ஜயிக்க வேண்டுமென்று சங்கற்பித்துக்கொண்டுள்ள ஒரு பிள்ளை—இப்பொழுது மதுரநாதனிடத்தில் இத்தகைய மறுமொழி கூறியது ஆச்சர்யமா?

இன்னொரு சமயத்திலே வேறொரு தனவந்தர் இராமகிருஷ்ணரிடத்து அளவற்ற பக்தியி லீடுபட்டு, ஒருநாள்

78431

தாம் இராமகிருஷ்ணருக்குத் தமது காணிக்கையாக ரூபாய் இருபத்தையாயிரம் கொடுக்கப்போவதாகவும், ராமகிருஷ்ணருடைய உத்தரவுப்பிரகாரம் அப்பணம் செலவழிக்கப்படவேண்டு மென்பது தமது அபிப்பிராய மென்றும் கூற, ஸ்ரீராமகிருஷ்ணருக்குச் சரீரத்திலே நடுக்க முண்டாய்விட்டது; கண்களினின்றும் கண்ணீர் ஆறாக ஓடத் தொடங்கிவிட்டது; கோவென்று அழ ஆரம்பித்தார். "பணத்துக்குப் பெயர் ஆட்கொல்லி ஆயிற்றே; இது எதற்கு எனக்கு? வேண்டவே வேண்டாம்; உமக்கு ஒரு கும்பிடு, உம்முடைய பணத்துக்கு ஒரு கும்பிடு" என்று சொல்லிவிட்டு, "தேவி! பரதேவதை! மகாசக்தி! மாயாசொரூபி! இன்னும் உன்னுடைய பரிசோதனைகள் தீரவில்லையோ? இன்னுமா என்மீது சந்தேகம்? ஜகதம்பாள்! சச்சிதானந்த சொரூபிணி! போதும், போதும்" என்று கதறினார். அந்தத் தனவான் திடுக்கிட்டுவிட்டார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய அந்திய காலத்திலே, அவர் வியாதியினால் பீடிக்கப்பட்டு வருந்திக்கொண் டிருந்தபொழுது, அவரிடத்திலே சிஷ்யர்களா யிருந்த நரேந்திரர்—விவேகாநந்தர்—முதலிய வாலிபர்கள் அவருக்கு வேண்டிய சிசுருஷை செய்துகொண்டு வந்தார்கள்; கிரகஸ்த சிஷ்யர்கள் செலவுக்கு வேண்டிய பணம் கொடுத்துக்கொண்டு வந்தார்கள். இந்தக் கிரகஸ்த சிஷ்யர்களிலே ஒருவர் எல்லோரையும் விட அதிகப் பணம் கொடுத்தார். அவர் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய வாலிப சிஷ்யர்களைப்பார்க்கிலும் வய



தில் அதிகம் முதிர்ந்தவ ராதலினாலே, அந்த வாலிபர்களிடத்திலே செலவு கணக்குக் கேட்கவும் அதிகாரம் செலுத்தவும் ஆரம்பித்தார்; இதுமாத்திரமன்று; செலவு அதிகமென்று முறுமுறுக்கவும் ஆரம்பித்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு எப்படியோ இது தெரிந்துவிட்டது. அவர் "என்ன? நாம் இருப்பதற்கு இது அன்று இடம்; நாம் போகலாம், வாருங்கள்!" என்று சொல்லிவிட்டு, தமது பிரதமசிஷ்யனும்—பிரியசிஷ்யனுமாகிய நரேந்திரனை—விவேகாநந்தரை நோக்கி, "நீ என்னை எங்கு இட்டுக்கொண்டு போய் இருக்கும்படி சொல்கிறாயோ, அங்கு நான் இருக்கத் தயாரா யிருக்கிறேன்" என்று கூறிக்கொண்டே, தமது ஒரே உடைமையாகிய ஒரு கந்தையை எடுத்துக்கொண்டு புறப்பட்டுவிட்டார். பின்னர் கிரகஸ்த சிஷ்யர்களெல்லோரும் அவரை யங்கேயே யிருக்கும்படி செய்வதற்கு அவரைக் கெஞ்சவேண்டி வந்துவிட்டது. இவருக்குப் பணத்தினிடத்திலே எல்லோரும் அதிசயிக்கும்படியாக இவ்வளவு வெறுப்பு உண்டாய்விட்டது.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் காமினி — காஞ்சனத்தை ஜயித்துவிட்டா ரென்பதில் சந்தேகமேயில்லை. அவருடைய மனத்திலே பணம் என்ற நினைப்புக் கூடக் கிடையாது. அவர் எந்த அவஸ்தையி லிருந்தாலும் சரியே, ஜாக்கிராவஸ்தையி லிருந்தாலும் சரியே, சொப்பனாவஸ்தையி லிருந்தாலும் சரியே, சுஷுப்தி யவஸ்தையி லிருந்தாலும் சரியே, பொன்—வெள்ளி முதலான லோகங்களின் ஸ்பர்சம் அவ

ருடைய சரீரத்திலே பட்டுவிட்டால் போதும்; அவருடைய சரீரம் நடுங்கும்; அவருடைய அவயவங்கள் உள்ளுக் கிழுத்துக்கொள்ளும்; அவருக்குப் பயமுண்டாகும்; அவர் அழத் தொடங்குவார். இதற்குக் காரணமென்ன? அவர் அந்த லோகங்களினிடத்து வைத்த வெறுப்பானது தடித்துப் பருத்து அவருக்குத் தெரியாமற்கூட அவ்ரைப் பாதிக்கத் தொடங்கிற்று.

இவருடைய பிரதமசிஷ்யராகிய விவேகாநந்த ரிடத்திலே இவர் பன்முறையும், "காசுக்கடைக்காரர்கள் தங்கள் வெள்ளி நாணயங்களைச் சோதித்துப் பார்ப்பதுபோல, நீ என்னைச் சோதனை செய்துபார்! நீ என்னைப் பரிசோதனை செய்து பார்த்து அணுவளவும் ஐயமறத் தெளிந்துகொண்டாலொழிய, நான் கூறுவதை நீ ஏற்றுக்கொள்ளக் கூடாது; பிறர்போன்று வெறும் நம்பிக்கையின்மேல் விஷயங்களைக் கிரகிப்பதற்கு நீ பிறந்தவனல்லன்; நீ யொரு பெருங் கார்யத்துக்குப் பிறந்திருக்கிறாய்" எனக் கூறியிருந்தார். ஒருநாள் விவேகாநந்தருக்கு ராமகிருஷ்ணரைப் பரிசோதனை செய்துபார்க்க வேண்டுமென்ற எண்ணம் உண்டாயிற்று; அவர் தக்ஷிணேசவரத்துத் தோட்டத்தினுள்ளே வந்தார்; ராமகிருஷ்ணர் எப்பொழுதும் வீற்றிருக்கும் அறையைப்போய்ப் பார்த்தார்; அது காலியாயிருந்தது; அங்கு ஒருவருமில்லை; ஸ்ரீராமகிருஷ்ணர் கல்கத்தா நகருக்குள்ளே போயிருந்தார். அப்பொழுது நரேந்திரரிடத்திலே வெள்ளி ரூபா யொன்று இருந்தது. பணத்தினுடைய ஸ்பர்சம் பட்டமாத்திரத்திலே, ஸ்ரீராமகிருஷ்ணருடைய சரீரம்



நடுங்குகின்றதும், அவர் பயமடைகின்றதும் விவேகாநந்தருடைய ஞாபகத்துக்கு வந்தன. "நல்லது, இன்று நான் அவரைப் பரிசோதித்துப் பார்க்கிறேன்" என்று விவேகாநந்தர் தமக்குள் தாமாகவே சொல்லிக்கொண்டு, அந்த நாணயத்தை யெடுத்து, ராமகிருஷ்ணருடைய ஆசனத்தின் கீழே மறைத்து வைத்துவிட்டு, பஞ்சவடியின் கீழே தியானம் செய்யச் சென்றுவிட்டார். சிறிதுநேர மானவுடன் ஸ்ரீ ராமகிருஷ்ணர் திரும்பிவந்தார்; தமது அறைக்குள்ளே நுழைந்தார்; நுழையும்பொழுதே அவருடைய கால்கள் பின்னுக்கு இழுத்தன. ஸ்ரீராமகிருஷ்ணர் அவ்வுணர்ச்சியை லட்சியம் செய்யாது, கால்களைச் சரிப்படுத்திக்கொண்டு, தமது அறையினுள்ளே நுழைந்து, ஆசனத்திலே யுட்காரப்போனார். சமீபத்திலே போனவுடனே, அக்கினியைக் கண்டால் அருகே போகவொட்டாது, தாமாகக் கால்கள் எப்படிப் பின்னுக்கு வாங்குமோ, அதேமாதிரி, அவருடைய கால்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டன. அவருடைய சரிராத்தியந்தமும் ஒருவித நோவெடுத்தது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் அதிசயித்து, "என்ன இங்கே? என்னுடைய கால்கள் இப்படித் தடுமாறுவதற்குக் காரணமென்ன? இங்கே விஷ ஜந்துக்கள் ஏதேனும் உள்ளனவோ? அப்படியானாலும்தான் என்ன? கால்கள் நடுங்கிப் பின்னுக்கு இழுக்க வேண்டிய காரணமில்லையே" என்று தம்முடன் வந்தவர்களிடம் கூறினார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் கல்கத்தாவிலிருந்து திரும்பி வந்துவிட்டதைத் தெரிந்துகொண்டு, விவேகாநந்தரும் உள்ளே நுழைந்து நின்றார். விவேகாநந்தரி

னுள்ளே பலவித உணர்ச்சிகள் உதித்தன. குருவினுடைய நிலைமையையும் உண்மையையும் கண்டு, அவர் குழந்தைத் தன்மை வாய்ந்திருப்பதைப் பார்த்து, அவரிடத்திலே பரிதாபமும் அன்பும் மிகக் கொண்டார்; அவர் நோவுற்றதைக் கண்டு வருந்தினார்; தமது குருநாதனை சோதனையில் தேர்ந்த குருமூர்த்தியென்று ஆநந்தம் மிகுந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணருடன்கூட இருந்தவர்கள் ஒருவர், "ஏதேனும் விஷஜந்துக்கள் ஆசனத்தினடியிலே மறைந்து இருக்கின்றனவோ என்னவோ?" என்று நினைத்து வெகு வேகமாக ஆசனத்தை யெடுத்து உதறினார். அப்பொழுது ரூபாயினுடைய சப்தம் கேட்டது; உடனே ஆசனத்தை உதறியவர் "என்ன? ரூபாயா இங்கு எப்படி வந்தது?" என்று கூவிக்கொண்டே ஆசனத்தை மறுபடியும் சரியாகப் போட்டார். ஸ்ரீ ராமகிருஷ்ணர், "என்ன அது?" என்றார். விவேகானந்தர் அவ்வறையினின்றும் நீங்கி வெளிப்போந்தார். ஆனால், விவேகானந்தருடைய முகத்தைப் பார்த்தவுடனேயே, அவர் தாம் தம்மைப் பரிசோதிப்பதற்காக இப்படிச் செய்திருக்கிறார் என்பதை ஸ்ரீ ராமகிருஷ்ணர் அறிந்துகொண்டார்; இதனால் ராமகிருஷ்ணருக்கு விவேகானந்தரிடத்தில் அன்பு பெருகிற்றே யொழிய, அணுவளவும் குறையவில்லை.

* * * * * * * * *

இதேமாதிரியாக, இராமகிருஷ்ணருக்கு ஸ்திரீயினிடத்து உள்ள வெறுப்பு உண்மைதானா என்பதைப் பரிசோதித்துப் பார்ப்பதற்குச் சென்ற அபிப்பிராயத்தில் சொல்லிய சோதனையைவிட இன்னொரு சோதனையும் நடந்தது.



ஸ்ரீராமகிருஷ்ணருடையமனைவியார்—ஐந்து வயதிலே ஸ்ரீராமகிருஷ்ணருக்கு மணமாலை சூட்டிய சாரதாதேவி—ஸ்ரீராமகிருஷ்ணருடைய தபோ மகிமையைப்பற்றிக் கேள்விப்பட்டு 80 மைல் தூரம் பாதசாரியாக நடந்து ஸ்ரீராமகிருஷ்ணரிடம்வர, ஸ்ரீராமகிருஷ்ணர் அவ்வம்மையாரைத், "தாயே! என்று அழைத்து, அவ்வம்மையார் தமது மனைவியென்ற எண்ணம் எவ்வளவும் இல்லாதிருந்தார். ஆனால், அவருடைய சிஷ்யர்களுள் ஒருவருக்குக் கொஞ்சம் சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. இராக் காலங்களிலே சாரதா தேவியார் ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குப் பணிவிடைகள் செய்வது வழக்கம். சந்தேகித்த சிஷ்யர், "களவுண்டானால் அதைக் கண்டுபிடிக்க வேண்டும்" என்று, இராக்காலங்களிலே ஸ்ரீ ராமகிருஷ்ணரையும் சாரதா தேவியாரையும் கவனித்து வந்தார். ஒரு நாள் அர்த்தராத்திரி; சாரதா தேவியார் ஸ்ரீ ராமகிருஷ்ணருடனே அவருடைய அறையில் ஏதோ தொண்டு புரிந்துகொண்டே சம்பாஷித்துக்கொண்டிருந்தார். சந்தேகித்த சிஷ்யருக்கு இப்பொழுது சந்தேகம் இன்னும் அதிகமாயிற்று; "அர்த்த ராத்திரியாகியும் அவ்வம்மையாருக்கு இராமகிருஷ்ணரிடத்தில் தனித்து என்ன வேலை?" ஸ்ரீராமகிருஷ்ணருக்கும் சாரதா தேவியாருக்கும் தெரியாமல் அந்த சிஷ்யர் ஒளிந்திருந்துகொண்டு இவர்களைக் கவனித்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஆத்மாநந்த பரவசராயிருந்துகொண்டும், இவ்வம்மையாரைத் "தாயே! தாயே!! என்று அழைத்துக்கொண்டும், தமது ஸ்வாநுபவத்தை யெடுத்து உபதேசித்துக்கொண்டிருந்தார்.

சிஷ்யர் பார்த்தார்; தாம் சந்தேகித்ததைப்பற்றி வெட்கினார்; வீட்டுக்குப் போனார்; வெட்கத்தினால் ஸ்ரீ ராமகிருஷ்ணரைத் தர்சிப்பதற்குச் சின்னாட்கள் வராமலேயிருந்துவிட்டார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவருக்கு ஆள் அனுப்பி அவரை யிட்டுக்கொண்டு வரும்படி சொல்லி, அவர் வந்தவுடனே அவரை நோக்கிக், "குழந்தாய்! நீ சந்தேகித்தது நல்லதுதான்; நீ என்னை நன்றாகப் பரிசோதித்துப் பார்த்து நீயாகச் சகல சந்தேகங்களும் தெளிந்துகொண்டாலொழிய, என்னிடத்தில் உனக்கு நம்பிக்கை எப்படி யுண்டாகும்?" என்றார். அந்த சிஷ்யர் இந்த விஷயத்தை எவரிடத்தும் கூறினவனல்லர். அப்படியிருந்தும் ஸ்ரீராமகிருஷ்ணர் எப்படியோ சூக்ஷ்ம திருஷ்டியாலே தெரிந்துகொண்டது பற்றி ஆச்சர்யமடைந்து, அன்றுமுதல் ராமகிருஷ்ணரிடத்திலே அசலமான பக்தி வைக்கலானார். எவரெவரிடத்து எந்த எந்த நினைப்பு உண்டோ, அந்த நினைப்பைப்பற்றி அவர்கள் பிறரிடத்தும் சந்தேகப்படுவார்கள். பெண் பித்துப் பிடித்துப் பைசாசத் தன்மை வாய்ந்து பிதற்றித் திரியும் பேயர்களே! அறுபதினாயிரம் ஸ்திரீகளை மணந்து ராஜ்யபாரம் செய்த தசரதனுடைய சாம்பராவது இப்பொழுது கிடைக்குமா? நூற்றுக் கணக்கான பட்டமகிஷிகளைக் கட்டி வாழ்ந்த நவாபு பரம்பரைகளெங்கே? எலும்பு, நரம்பு, ரத்தம், மஜ்ஜை, மாம்சம், தோல் முதலியவற்றால் ஆக்கப்பெற்று எங்குப்பார்த்தாலும் ஓட்டைகள் உள்ளதாய், அறிவுள்ளோருடைய அருவருப்புக் கிடமானதாய், அவலக்ஷணமா யமைந்துள்ள சரீரத்தினிடத்தில் ஆசைவிழக்



காரணமென்ன? காமப்பித்துப் பிடித்துக் கலக்குற்றிருக்கும் மனிதன் பெண்கட்கு அடிமையாய் விடுகின்றான். முகத்தில் மீசை முளையாது, மென்மையான மனோவாக்குக் காயத்தைப் படைத்தவர்களாய், சிருஷ்டி நீதியில் மனிதனுடைய புத்திசாதுர்ய புஜபல பராக்கிரமத்தில் சார்ந்திருக்க வேண்டியவர்களா யுள்ள பெண்டிர்களின் பாதாரவிந்தங்களில் பௌருஷத்தன்மை வாய்ந்த மனிதன், ஆண்மை நிறைந்தவன், பணிந்து நிற்பது ஆச்சர்யமன்றோ? வீட்டை விட்டு வெளியில் புறப்பட்டவுடன் அட்டகாசம் செய்து அனைவரும் தன் அடிபணிந்து நிற்கவேண்டுமென்று ஆசைப்படுவோன், தனக்கு நிகரில்லையென்று புஜம்தட்டி ஆர்ப்பரிப்போன், ஜெயவீரசிங்கம் எனப் பட்டப்பெயர் பூண்டு பல்லோரையும் பயமுறுத்துவோன், ஒரு பெண்ணின் சரணாரவிந்தங்களில் சாஷ்டாங்க நமஸ்காரம்செய்து அடிமைக்கும் அடிமையாய்க் கைகட்டி வாய்பொத்திக் காத்திருப்பதை எல்லோரும் அறிவர். ஆகையால், பெண்ணும் தள்ளற்பாலது, பொன்னும் தள்ளற்பாலதே.

அவரிடத்திலே இன்னொரு ஆச்சர்யம். "நாளைக்கு என்னசெய்வது" என்ற எண்ணம் ஸ்ரீராமகிருஷ்ணரிடத்திலே ஏதேனும் சேர்ந்துவிட்டால், அவர் பைத்தியம் பிடித்ததுபோலாய்விடுவார்; அவருடைய நாடி நரம்புகள் எல்லாம் "நாளைக்கு" என்பதை மறந்துவிட்டன. ஒரு சமயத்திலே ராமகிருஷ்ணர் ஜாதுமுல்லிக் என்பவருடைய தோட்டத்துக்குப் போயிருந்தபொழுது, அவருக்குச் சரீரமெல்

லாம் நோகிறதென்று கேள்விப்பட்ட ஒருவர் கடுகினும் சிறு அளவாயுள்ள அபின் மாத்திரைகள் மூன்று கொடுத்தார். "சேர்ந்தாப்போல மூன்று நாட்களுக்குச் சாப்பிட வேண்டும்" என்றும் சொன்னார். ஸ்ரீராமகிருஷ்ணர் அவற்றைத் தமது வஸ்திரத்தின் ஒரு முந்தாணியிலே முடிந்து கொண்டு தக்ஷிணேச்வராலயம் நோக்கித் திரும்பினார். ஆனால், அவருடைய கால்கள் அவரை முட்களும் புதர்களும் அடர்ந்த காட்டுவழியில் இட்டுச்சென்றன. அவருக்கு நல்ல ஞாபகம் இருந்தது; நல்ல அறிவு இருந்தது; ஆயினும், கண்கள் நேர் வழியைப் பார்க்க மறுத்துவிட்டன. அவர் அப்படி யிப்படித் தத்தித் தடுமாறி, புதர்களால் சிறுண்டு திண்டாடினார். தமது பிரிய சிஷ்யர்களுக்குள் ஒருவரான ஹிருதயரை நோக்கி, "சங்கதி என்ன? தெரியவில்லையே; எனக்கு வழி தெரியவில்லையே; காரணம் என்ன?" என்றார். உடனே தமது வஸ்திரத்தின் ஒரு முனையில் முடிந்திருந்த அபின் மாத்திரைகளின் ஞாபகம் வந்தது. "ஆம், ஆம், இப்பொழுதுதான் எனக்கு ஞாபகம் வந்தது; ஜாதுமல்லிக் எனக்கு மூன்று நாட்களுக்குக் கொடுத்த அபின் மாத்திரைகள் இதோ யிருக்கின்றன" என்று சொல்லிவிட்டு, முடிச்சை யவிழ்த்து, அந்த மாத்திரைகளை யெடுத்துத் தூர எறிந்துவிட்டார்; உடனே அவருக்கு வழி தெரிந்தது. "நாளைக்காக" என்று அவர் அந்த மாத்திரைகளை வைத்துக்கொண்டிருந்தவரையில், அவருக்கு வழி தெரியவில்லை.



## 7-ம் அத்தியாயம்

## கடுந்தவம்

ஸ்ரீராமகிருஷ்ணர் பன்னிரண்டாண்டுகள் கடுந்தவம் புரிந்தாரென்று முன்னமேயே கூறியிருக்கிறோம். அவர் கொடிய தவம் புரிய ஆரம்பித்துச் சிலகாலத்துக்கு ஒரு விநாடி நேரம் கூட அவருக்கு உறக்கம் வந்ததில்லை. உறக்கம் வரவேண்டுமென்று ராமகிருஷ்ணர் எவ்வளவோ முயன்று பார்த்தார். வரவேயில்லை. கடைசியாக, தமது சரீரத்திலே உறக்கம் வராம லிருக்கும்படியாக ஏதேனும் பிடித்திருக்கின்றதோ? என்று ஐயமுற்றுத் தமது விரலால் கண்ணைப் பார்த்தும் உறக்கம் வராமையால் தேவியை நோக்கி, நெஞ்சம் துடிதுடிக்க, "தாயே! நீ எனக்குப் பிரத்தியக்ஷமாகித் தர்சனம் கொடுத்ததின் பலன் நான் உறக்கம் வாராது தவிப்பதுதானோ?" என்று முறையிடலும், அங்கு ஒரு ஒளி வீசிற்று; அதன் மத்தியிலே தேவி பிரத்தியக்ஷமாகி, "புத்திரா! சரீரசுகத்தைத் தியஜிக்காமல் உனக்கு பிரஹ்மாநுபூதி யுண்டாகுமோ?" என்று கூறினாள். ஸ்ரீராமகிருஷ்ணர், "ஆம், தாயே!" என்று கூறி, அன்றுமுதல் தமது சரீரத்தைப்பற்றிச் சிறிதும் கவனியாமல் தவம் செய்துவந்தார்.

இவர் கடுந்தவம் புரிந்து கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கையில் மேன்மேலும் வந்த கஷ்டங்கட்கு ஒரு அளவில்லை. அவர் எல்லோரிடத்தும், நண்பனிடத்தும் பகைவனிடத்

தும், நல்லோனிடத்தும் பொல்லானிடத்தும் சமரசமாக அன்பு பாராட்டிவந்தார். இவர் அப்பியாச ஆரம்ப காலத்திலே, ஒரு சமயத்திலே ஆநந்த பரவசராகி சமாதி நிஷ்டரானார். அப்பொழுது இவருடைய சரீரமானது நிலையற்று அருகேயிருந்த நெருப்புக் குவியலின்மீது விழுந்துவிட்டது. ஆயினும், இவருக்குப் பிரபஞ்சப் பிரக்ஞை யுண்டாகவில்லை. மாம்சம் எரிக்கின்ற நாற்றம் உணர்ந்து சில ஜனங்கள் அவ்விடத்துக்கு ஓடினார்கள். இவர்களுக்குள்ளே முதலாவதாக ஓடியவன் மதுரநாதனிடத்திலும் ராணிரஸமணியம்மாளிடத்திலும் ஒரு சமயத்திலே சிறிதுகாலம் செல்வாக்குப் பெற்றிருந்தவன்; ஸ்ரீ ராமகிருஷ்ணரிடத்திலே அவ் விருவருக்குமுள்ள மதிப்பையும் பக்தியையும் கண்டு பொறாமை கொண்டவன். இப்பொழுது ஸ்ரீராமகிருஷ்ணர் நெருப்பிலே விழுந்து கிடப்பதையும், அங்குத் தன்னைத் தவிர வேறு எவரும் இல்லாததையும் இவன் கண்டுகொண்டு, "ஆ! ஆ! சொல்ல நா கூசுகின்றது; இந்தப் பாபி அவரைக் காலினால் மிதித்து அநேகம் தடவை புரட்டிப் புரட்டித் துவைத்தான். ஸ்ரீராமகிருஷ்ணர் மெல்லமெல்லப் பகிர்முகப்பட்டார்; இந்தப் பாதகனுடைய கொடுஞ் செய்கையை உணர்ந்துகொண்டார். ராணிரஸமணியம்மாளும் மதுரநாதனும் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடத்திலே சிஷ்யர்கள்; ஸ்ரீராமகிருஷ்ணர் இச் சங்கதியை அவர்களிடம் உரைத்திருக்கலாம். ஆனால், அவர் எவரிடத்தும் இதைக் கூறவேயில்லை. அவ் விருவருக்கும் இச்சங்கதி தெரியவந்திருக்குமானால் அவர்கள் அந்தப் பாதகனைத் தக்க சிக்ஷை செய்



யாது விடார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சர்வ சமரச அன்புக்கு இது ஒரு நல்ல திருஷ்டாந்த மல்லவா?

ஸ்ரீராமகிருஷ்ணர் பிராஹ்மண ஜாதியிலே பிறந்தவர் என்பது நமது வாசகர்களுக்குத் தெரியும். ஆயினும், சமுதாயப்படியிலே மிகமிகத் தாழ்ந்தவர்களாகக் கருதப்படுகின்ற லக்ஷக்கணக்கான ஜனங்களிடத்தில் அவர் தமது தாராளமான அன்பைச் செலுத்தி, மிகமிக அத்தியந்த சகோதர பாவத்துடன் நேசித்துவந்தார்; சண்டாளர்கூடச் செய்வதற்குக் கூசி யோசனை செய்யும்படியான மிகமிக இழிவான கைங்கர்யங்களையும் அவர் தமது ஜகன் மாதாவின் சந்நிதானத்தில் செய்து, தான் தாசாதிதாசன் எனருசுப்படுத்திவந்தார். "நான் பிராஹ்மணன்" என்ற அகங்காரத்தை அடியோடு அழித்துவிடும்பொருட்டு—மிகமிகத் தாழ்ந்தவர்களும் தாமும் ஒன்றே யென்ற உணர்ச்சியை அடைந்துகொள்ளும்பொருட்டு—இவர் பறையர்களுடைய வீடுகளுக்கு விடியும் முன்னதாகவே சென்று தமது நீண்ட ஜடாமுடியினாலே வாசற்புறத்தை யெல்லாம் சுத்தம் செய்துவிட்டு வந்துவிடுவார்; சில சமயங்களிலே அகங்காரத்தை அழித்துக்கொள்ளும்பொருட்டு மிகமிக அசங்கியமான இடங்களை யெல்லாம் சுத்தம் செய்துவிட்டு வந்துவிடுவார். சிலர், இதைப் 'பைத்தியம்' என்று கூறலாம். பெற்றோருக்குத்தான் தெரியும் பிள்ளை யருமை; பெறாத மலடி யறிவளோ? ஜாதி வித்தியாசமெல்லாம் அவரிடமிருந்து ஓடிவிட்டன. பிரபஞ்சமே மோக்ஷலோகமாய்

விட்டது. அவரிடத்திலே உயர்வுமில்லை, தாழ்வுமில்லை; அசுத்தமென்பது கிடையவே கிடையாது. எல்லாம் பிரஹ்மமே; ஏகம் பிரஹ்மமே. பிரஹ்மாநுபூதி யடைந்தவனுக்கு ஜாதி ஏது? பிரமாண்டமான விருக்ஷங்களும் சாம்பராய்ப் போகும்படி எரிக்கின்ற கடாக்கினியாய்விட்டார் ஸ்ரீராம கிருஷ்ணர்.

சில சமயங்களிலே ஸ்ரீராமகிருஷ்ணர் தேவதைகளுக்கு அர்க்கிய மிடுவதற்காகக் கங்கையிலிறங்கி, தமது இரண்டு கைகளையும் சேர்த்து நிரம்பத் தண்ணீர் எடுப்பார்; சட்டென்று கைகள் பிரிந்துவிடும்; தண்ணீர் கீழேபோய்விடும்; அத்வைத உணர்ச்சியை அவ்விதமாகத் தமது சரீரத்திலே ஒன்றுபடுத்திக்கொண்டிருந்தார்; சில சமயங்களிலே சிவ க்ஷேத்திரம் செல்வார்; கையிலே புஷ்பத்தை எடுத்துக் கொண்டு சிவன்முன்னே நின்று பூஜிப்பதற்கு நினைப்பார்; புஷ்பம் கீழே விழுந்துவிடும். பார்த்தோர் பிரமிப்பார். மனிதன் மிகமிக உத்கிருஷ்டமான ஈச்வரநிலைமையை—பிரஹ்மாநுபூதியை—அடைந்து விட்டானானால், அவனுடைய கர்மமெல்லாம் ஞானத்திலே முடிவடைந்து விடுகின்றன வென்று கீதை போதிப்பது உண்மையினும் உண்மை யன்றோ? ஸ்ரீ ராமகிருஷ்ணர் கோவிலிலே அர்ச்சகரா யிருந்தபொழுதுகூட, சில சமயங்களில் பூஜா பாத்திரங்க ளெல்லாம் அவரைச் சுற்றியிருக்கும்; புஷ்பங்களெல்லாம் அவர் தலைமேலேயே போடப்பட்டிருக்கும்; அவர் தீர்க்க நிஷ்டையிலே அழுந்தி சமாதி தற்பரரா யிருப்பார்.



இந்தச் சமயத்திலே, பயங்கரமான ஒரு ஜ்வரம் ராம கிருஷ்ணரைப் பிடித்துக்கொண்டது; அவருடைய சரீரம் உச்சந்தலைமுதல் உள்ளங்கால்வரையில் எரிச்சலெடுக்கத் தொடங்கி விட்டது; தாபம் பொறுக்க முடியவில்லை. அவர் கங்காநதியிலே கழுத்தளவு ஜலத்திலே யிறங்கி நின்றுகொண்டு தியானம் செய்வார். அவருடைய சரீரநிலைமை அபாயகரமாய்விட்டது; அவர் தவம்புரிய ஆரம்பிப்பதற்கு முன், அவருடைய சரீரக்கட்டு மிகப் பலமுள்ளதா யிருந்தது; அவருடைய முகமும் அழகியதாய், ரம்யமானதாய் இருந்தது. இப்பொழுதோ இரு கன்னங்களிலும் குழி விழுந்துவிட்டது; அவருடைய முகம் பார்க்கப் பரிதாபகரமா யிருந்தது. ஆயினும், அவருடைய கண்களில் மாத்திரம் ஒளி வீசிக்கொண்டிருந்தது; தேஜஸ் ஜ்வலித்துக்கொண்டிருந்தது. இச் சமயத்திலே நமது ராமகிருஷ்ணருக்குத் துக்க நிவிருத்தி செய்வார்போன்று ஒரு பிராஹ்மண சந்யாசினி அங்குவந்து சேர்ந்தார். இவர் சிவப்பு உடை தரித்து, பார்ப்பதற்கு மிக அழகுடன் விளங்கினார். அவர், அழகைப்பற்றியும் அன்பைப்பற்றியும் உள்ள சகல எண்ணங்களையும் தியஜித்து விட்டவர்; கடுந்தவம் புரிந்து சித்தி பெற்றவர்; அவருடைய சரீரத்திலிருந்து கந்தம் வீசுவதுபோல, ஒரு வித பரிசுத்தத்தன்மை வீசிற்று. இவ் வம்மையார் வந்து ஸ்ரீராமகிருஷ்ணரைத் தர்சித்தார். இவ் வம்மையார் வேத சாஸ்திரங்க ளெல்லாம் நன்றாய் ஆராய்ந்து அறிந்தவர், யோகினி. இவர் ஸ்ரீ ராமகிருஷ்ணரைக் கண்டவுடனே அவருடைய நிலைமை யின்னதென்று தெரிந்துகொண்டு,

ராணிராஸமணி யம்மாளுடைய மருமகப் பிள்ளையாகிய மதுராநாதனுடைய உத்தரவின்மேல் ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குப் பிரத்தியட்சமாகி, "உனக்கு யோகோபதேசம் செய்வதற்கு ஒரு யோகினீ 'கூடிய சீக்கிரத்திலே வருவாள்" என்று கூறி மறைந்தாள்; ஆதலால், இப்பொழுது அகத்தினழகை முகத்தில் காட்டுகின்ற அதிசுந்தர வடிவத்தோடு அங்குவந்த அந்த யோகினியைக் கண்டு ஆநந்தக் கடலில் ஆழ்ந்தார். அந்த பிராஹ்மணி ஸ்ரீராமகிருஷ்ணரை நோக்கி, "நான் இவ்வுலகில் மூவருக்கு உபதேசிக்கும் பொருட்டு ஜனன மெடுத்தேன்; மூவருள் இருவரை முன்னமேயே கண்டுவிட்டேன்; மூன்றுமவனாகிய உன்னைத் தேடித்தேடியலைந்து கடைசியாக இங்குக் காணும்படியாக நேரிட்டது" என்று சொன்னவுடனே ராமகிருஷ்ணர் குதிக்கத் தொடங்கினார். ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பீடித்த ஜ்வரமானது அதிகரித்து அதனால் அவர் குதித்தாரோ, அல்லது இவ் வம்மையார் உபதேசிக்கப் பிறந்த மூவருள் தாம் ஒருவராயிருக்கும்படி நேரிட்டது தமது பாக்கியமேயென்று கருதிக் குதித்தாரோ?

ஸ்ரீராமகிருஷ்ணரைப் பைத்தியக்காரர் என்று சொல்லிக்கொண்டிருந்த ஜனங்களையெல்லாம் நோக்கி, "உலகில் பைத்தியக்காரர்கள் யார்? அநித்தியமான பொருள்களை நித்தியமென நம்பி அவற்றினிடத்தே ஆசை செலுத்தும் நீங்கள் பைத்தியக்காரர்களா? அல்லது, "வஸ்து ஏகமேயொழிய இரண்டு அன்று" என்று திடநிச்சயம் செய்து



கொண்டு, இராப்பகலாக அதன் பொருட்டுப் பாடுபடும் ராமகிருஷ்ணர் பைத்தியக்காரரா? இப்பொழுது இவரைப் பிடித்திருக்கின்ற ஜ்வரமும் தாபமும் ஸ்ரீ கிருஷ்ணசைதந்நியருக்கு உண்டென்றும், கோபிகா ஸ்திரீகளுக்கு உண்டாயிற்றென்றும், எனது அப்பனும் கண்ணனுடைய காதல் இராதைக்கு முண்டாயிற்றென்றும், அப்பண்டிதை கூறி, "யோகாப்பியாசம் செய்யும் அனைவருக்கும் இந்த மனோவிகாரங்களெல்லாம் தப்பாமல் உண்டாகும்" என்று யோக சாஸ்திரங்களிலிருந்து புல பிரமாணங்களையெடுத்துக் காட்டினார்.

நானூறு வருஷங்களுக்கு முன்னே வங்காளத்தை உஜ்ஜீவிக்க அவதரித்த ஸ்ரீ கிருஷ்ணசைதந்நியருக்கும் இம்மாதிரி பித்துப்பிடித்திருந்ததென்றும், ராமகிருஷ்ணருக்கு இப்பொழுது சரீரத்திலுண்டான தாபஜ்வரமானது பூர்வத்திலே ஸ்ரீ கிருஷ்ணாவதார காலத்திலே பிருந்தாவனத்துக் கோபிகா ஸ்திரீகளுக்கும்—பின்னர் ஸ்ரீ ராதைக்கும்—அப்பால் சைதந்நியருக்குங்கூட உண்டாயிருந்ததென்றும், அவ்வம்மணி—நமது ராமகிருஷ்ணருக்கு நன்மையைச் செய்வதற்குத் தோன்றிய அந்த பிராஹ்மண சந்யாசினி—கூறினார். அன்பே அக்கினி யென்பது ஒரு உண்மை. அத்தியந்த அன்பே—அளவுக்கு மிஞ்சிய அன்பே—அக்கினியாம். காதல் மிகுதியினால் பீடிக்கப்படுகின்ற ஒருவன் உடல் மெலிந்து, முகம் வாடிச் சரீரம் சோர்ந்துபோவதின் காரணம் என்ன? காதலாகிற அக்கினி அவனை எரிக்கத் தொட

ங்கிவிட்டது; அவனுடைய ரத்தத்தை யெல்லாம் உறிஞ்சத் தொடங்கிவிட்டது; அவனுடைய சரீரத்திலுள்ள பசையை யெல்லாம் வாட்டத் தொடங்கிவிட்டது; அவன் வாடி யிளைத்து வருந்த ஆரம்பித்துவிடுகிறான். காதலென்பது தான் என்ன? அன்பின் ஒருவிதமான உருவமே. ஆகையால், பக்தியென்பதும் அன்பின் இன்னொருவித உருவமே யன்றோ? அன்பு பழுத்து அதிகரித்துவிட்டால், அவ்வக்கினி பற்றிக் கொழுந்துவிட்டெரியத் தொடங்கிவிடுகிறது. எரிதல் என்பது ஒரு லக்ஷணமேயாம்; அந்த லக்ஷணத்துக்கு ஆதாரமாகப் பொருள் ஒன்று இருத்தல்வேண்டும். எரிகிறது என்றால், எது எரிகிறது? அக்கினி எரிகிறது என்று சொல்லலாமா? எப்பொழுதும் எரிகின்ற சுபாவத்தையுடையது அக்கினி ஒன்றுதானே; தண்ணீர் எரியுமா? மண் எரியுமா? ஆகையால், அக்கினி ஒன்றுக்கே எரிக்கும் சுபாவமுண்டு. ஆனால், அக்கினி என்பது என்ன? அது எரிப்பதற்கு ஆதாரமாக ஒன்று வேண்டுமன்றோ? அக்கினி விறகைப் பற்றிக்கொண்டால் விறகை எரித்துவிடுகிறது; விறகில்லாவிட்டால், அக்கினியினுடைய லக்ஷணத்தை நமக்கு எடுத்துக் காட்டுவது யாது? அதுபோலவே, அன்பாகிய அக்கினி அதனுடைய எந்தவிதமான வடிவத்திலேனும் ஒருவனைப் பற்றிக்கொண்டால், அவ்வன்பினுடைய ஏற்றத் தாழ்வுக்குத் தகுந்தபிரகாரம் அது அவனை எரிக்க ஆரம்பிக்கிறது. பக்தியாகிற பரமப் பிரேமையாம் அன்பு ஒருவனைப் பற்றிக்கொள்ள, அவன் தபிக்காதிருக்க முடியுமா?



இன்னும், மனத்திலே ஒரு விஷயத்தைப்பற்றித் தீர்க்கசிந்தனை ஏற்பட்டு அச்சிந்தனை சீக்கிரத்தில் பலிதமடையாது போய்விட்டால், அச்சிந்தனையி லாழ்ந்திருக்கும் மனிதனுக்கு ஒருவிதக் கொதிப்பு உண்டாகிறதென்பது எல்லோரும் அறிந்தவிஷயம். அவன் மனவருத்தத்திலே யமிழ்ந்துவிடுகிறான்; அவனுக்கு "இன்னும் நமது சங்கற்பம் பலிதமடையவில்லையே" என்று ஒரு தாபம் உண்டாகின்றது. மனத்திலே கொதிப்பு ஏற்பட்டுச் சூடு தாக்கிவிட்டால், அது சரீரம் முழுதையும் வியாபித்துவிடுகிறது. சூக்ஷ்ம ரூபமாயுள்ள மனமே ஸ்தூலரூபமாயுள்ள சரீரமாம். ஆதலால், சூட்சும ரூபத்திலேயுள்ள மனத்தை பாதிக்கின்ற எதுவும் ஸ்தூல ரூபத்திலேயுள்ள சரீரத்தையும் பாதிக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆகையால், மனத்திலே ஏற்படுகின்ற அன்பாகிற, பக்தியாகிற அளவற்ற அக்கினி சரீரம் முழுதையும் பிடித்து, வியாபித்து வருத்துகின்றது. ஆதலால், ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பிடித்த இந்தத் தாபம் விசேஷ பக்தர்களுக்குச் சாதாரணமாக உண்டாகத் தக்கதே. ஒரு பெரிய யானையானது ஒரு சிறிய குடிசைக்குள்ளே அடைத்து வைக்கப்பட்டால், அது அங்கு இருக்க முடியாது அதை யுடைத் தெறிந்துகொண்டு வெளியேவர முயற்சிப்பதுபோல, ஞானக்கினியானது ராமகிருஷ்ணருடைய சரீரத்துக்குள்ளே யிருக்கமுடியாது, அச்சரீரத்தை எரிக்கத் தொடங்கிவிட்டது.

துக்கமென்று ஒன்று இருந்தால் அதற்கு நிவிருத்தியும் உண்டு என்பது சிருஷ்டி நியதி. ஆதலால், இந்த ராம

கிருஷ்ணருடைய சரீரதாபமாகிற துக்கமானது சாதாரணமாக பக்தியினாலே பித்துப்பிடித்த பலருக்கும் உண்டாவது சகஜமேயென்று அதற்கு சாஸ்திரங்களிலே நிவிருத்தி கூறப்பட்டிருக்கிறது. இச் சந்நியாசினி யம்மையார் அந்த நிவிருத்தி யின்னதென்று கண்டுகொண்டு இராமகிருஷ்ணருக்கு உட்கொள்ளும்படி சில மூலிகைகளைக் கொடுத்தார். இவ்விதமான தாபத்தினாலே பிரபஞ்சப் பிரக்ஞையற்று, "வெயில் சகித்திடாப் புழுப்போல் வெம்பி," தாபம் பொறுக்க முடியாது கங்கையிலே மார்பளவு ஜலத்திலே அடிக்கடி போய் நின்றுகொண்டிருந்த ஸ்ரீ ராமகிருஷ்ணர் இந்த மூலிகைகளை யுட்கொண்டவுடனே, தாபம் அடங்கப் பெற்றவராகி, பிரக்ஞை பெற்று, கனவுகண்டு திடுக்கிட்டு விழித்தவர்போல நாலா பக்கங்களிலும் விழித்துப் பார்த்தார். அப்பொழுது அவரைப் பார்க்கப் பரிதாபகரமாயிருந்தது. அவர் ஏதோ பிரிவாற்றாமையினாலுண்டாகும் துக்கமநுபவிப்பவர்போலத் தோன்றினார்; தமது ஸ்வாநுபூதியினின்றும் தாம் பிரிக்கப்பட்டு அதனால் வருந்துபவர் போலத் தோன்றினார். சரீரம் எப்படிப் போனாலென்ன? என்றேனும் ஒரு நாள் அது அழிவுறுவதுதானே. ஆத்மாநந்தத்திலே லயித்திருக்கும்பொழுது சரீரத்தினுடைய ஸ்திதியைப்பற்றி ஏன் கவனிக்கவேண்டும்?

இன்னும் இவ்வம்மையார் ராமகிருஷ்ணரை நோக்கி, "குழந்தாய், பயப்படாதே! உத்கிருஷ்டோத்கிருஷ்ட பதவியடையும் சகலருக்கும் இந்தத் தாபமானது சகஜமாம்.



இந்தத் தாபமே தவம் முற்றியதற்கு அறிகுறி. சாக்ஷாத் சச்சிதாநந்த சொரூபிணி, ஜகன்மாதா, சர்வேச்வரி எப்பொழுதும் உனக்குத் துணையிருப்பாள்; நீ சற்றும் பின்னடையவேண்டாம், பயப்படவேண்டாம், ஏக்கமுறவேண்டாம்" என்று பலவாறு புகன்று, அவருடைய சரீர தாபத்தை மூன்று தினங்களுக்குள்ளே முழுதும் போக்கடித்து விட்டார்.

இன்னும், ஸ்ரீராமகிருஷ்ணருக்குத் தீராப்பசியொன்று ஏற்பட்டிருந்தது. என்ன புசித்தாலும், எவ்வளவு புசித்தாலும் அவருடைய பசி ஆறினதில்லை. இதற்கு என்ன செய்யலாம்? எப்பொழுது பார்த்தாலும் பசிக்கிறது? வயிற்றிலே பசி யெடுத்துவிட்டால் வேறு என்னவேலை முடியும்? ஈச்வரனிடத்துச் செல்லவேண்டிய மனமானது இந்த ஒரு சாண் கும்பியினிடத்துச் சென்றுவிடுகிறது. ஆ! ஆ! பசியென்று ஒன்று மாத்திரம் இல்லாமலிருந்துவிட்டால், உலகிலே பாதி ஜனங்களுக்கு மேலே ஒருவேளை ஓய்ந்து உட்கார்ந்து உபசாந்தியும் அடைந்திருப்பார்கள். இந்தச் சாண் கும்பிக்கு ஊண் தேடுவதே மனிதனுடைய இராப்பகல் வேலையாக முடிந்துவிடுகிறது. இதிலிருந்து சம்சாரம் வளர்கிறது. ஒரு பந்தத்திலிருந்து பலபந்தங்கள் ஏற்படுகின்றன. வயிற்றுக்கு வேளாவேளைக்குப் போட்டுத் தீரவேண்டி யிருக்கிறது. யோக்கியமாகவோ — அயோக்கியமாகவோ, நியாயமாகவோ — அநியாயமாகவோ, சாந்தமான வழியிலோ—கோரமான வழியிலோ மனிதன் ஆகாரம்

தேட வேண்டியது அவசியமாய்விடுகிறது. ஒரு வேளை ஆகார மில்லாவிட்டால், சரீரம் தளர்ந்துவிடுகிறது, இரண்டு மூன்று வேளைகட்குச் சேர்ந்து உண்டுவிடுவோமென்றாலோ, அதற்கு வயிறு இடம் கொடுப்பதில்லை; மனமும் இசைவதில்லை. ஆகையால், மனிதனுக்குப் பசி யெடுத்துவிட்டால், அவன் மற்றெல்லா வேலைகளையும் அசட்டை செய்துவிடுவான். ஆயினும், நமது ராமகிருஷ்ணர் அகோரமான பசி யெடுத்தும், தமது மனத்தைச் சலிக்கவிடாமல் ஒரே நிலையில் நிறுத்தியிருந்தார். இப்பொழுது இந்த சங்யாசினி அம்மையார் ராமகிருஷ்ணருடைய தீராப்பசியை அறிந்து, அவருக்கு வேண்டும்பொழுதெல்லாம் தகுந்த ஆகாரங்கள் கொடுக்கும்படி செய்துவந்தது மன்றியில், ஸ்ரீராமகிருஷ்ணரை நோக்கி, “குழந்தாய்! ஈச்வர சைதந்ய சொரூபத்திலே இரண்டறக் கலந்துகொள்ள முயற்சித்த சகலருக்கும்—விசேஷமாக சைதந்நியருக்கும்—இம்மாதிரியான ஒரு பசி நோய் உண்டாயிற்று; இம்மாதிரி உண்டாகுமென்று நமது யோக சாஸ்திரங்களே நமக்குக் கூறுகின்றன. ஆத்மாநந்தமாகிற அமிருதமே தகுந்த ஆகாரமாம். ஆயினும் தற்காலசாந்தி செய்துகொண்டு ஆத்மாநந்தத்தை யடைய முயற்சிசெய்; அதுவே மனுஷ்ய ஜன்மப் பிரயோசனமாம்,” என்று சொல்லிவிட்டு, அவருக்கு யோகரகஸ்யங்களை உபதேசித்து, ராஜயோக நிஷ்டையில் இருக்குமாறு செய்தனர்.

“புத்திரா! பயப்படாதே. இப்பொழுது நீ யோகாப்பியாசத்துக்குப் பக்குவனாய்விட்டாய், பாத்திரனாய்விட்டாய்,



அதிகாரி யாய்விட்டாய். உனக்கு யோகாப்பியாச முறைகளை யுணர்த்துகிறேன்; சற்று கவனித்துக் கேட்பாய்: வெளிப் பிரபஞ்சத்திலே உனது மனமானது சாதாரணமாகவே செல்கிறதில்லை. இது மிகவும் நன்றே. மனமே பிரபஞ்சமாக விரிந்து தடித்துப் பருத்து இருக்கின்றது. ஆகையால், மனத்தை விரியவொட்டாமல் செய்யவேண்டும். இதுவே முதலில் அப்பியாசிகள் செய்யவேண்டிய வேலையாம். மனத்தை யடக்கு. இந்த மனமே — உன்னிடத்தில் சங்கற்ப மாத்திரத்தில் கிளம்பிய இந்த மனமே — உன்னை ஆதாரமாக உடைய இந்த மனமே—உன்னுடைய துன்பங்கட்கெல்லாம் காரணமா யிருக்கின்றது. “மனமானது குரங்கு போன்றது” என்று ஆன்றோர் அழகாக வர்ணித்திருக்கின்றனர். குரங்கு இயற்கையாகவே குதிக்கும் சுபாவமுடையது; அது கொஞ்சம் கள்ளும் குடித்தது; அதை யொரு தேளும் கொட்டிவிட்டது; பின்னர் அதனுடைய குணத்தைப்பற்றி விரித்துரைக்கவும் வேண்டுமோ? அது போலவே, மனமானது இயற்கையாகவே சலனஸ்வபாவமுடையது; பிரபஞ்ச வாசனையாகிய கள்ளும் குடித்தது; மண், பெண், பொன்னாகிய மூவாசைத் தேளும் கொட்டிவிட்டது; அது குதிப்பதற்குக் கேட்கவும் வேண்டுமோ? ஆதலால், மனத்தைக் கட்டவேண்டும்; மனத்தை யடக்கவேண்டும்; மனத்தை யொடுக்கவேண்டும்; உனக்கு அடிமையா யிருக்கவேண்டிய மனமானது உன்னை இப்பொழுது அடிமை யாக்கிக்கொண் டிருக்கிறது. மனத்தைக் கட்டி நிறுத்தி, நித்திய வஸ்து னிடத்தில் நிலைபெறச்

செய்து ஐக்கியமுறலே யோகம் எனப்படும். இதற்கு இரு முறைகள் உண்டு. பிராணாயாம முறையினால், பிராணனைக் கட்டினால் மனம் அடங்கும்; மனத்தைக் கட்டினால் பிராணன் அடங்கும். மனமே பிராணரூபமா யிருக்கிறதென்பது ஒரு நியதி. ஆதலால், பிராணாயாம முறையை முதலில் கேட்பாய். இது சிரேஷ்டமான யோகமுறையே யாயினும் இதன் பலன் பெரும்பான்மையும் மனிதனைச் சித்திகளினிடத்தே மயங்கும்படி செய்து அங்கேயே அவனை நிறுத்தி, மேலேறவொட்டாது செய்துவிடுகின்றன. ஆகையால், இது திடச்சித்தம் வாய்ந்த தீர்க்க வைராக்கியசாலிகளாலேயே—அதிதீவிரதர வைராக்கிய சாலிகளாலேயே—பின்பற்றத் தக்கது. அப்பனே! கேட்பாய்: வலது நாசித் துவாரத்தினாலே பன்னிரண்டு அங்குலம் சுவாசத்தை உள்ளுக்கு இழுப்பாய்; பின்னர் இடது நாசித் துவாரத்தினாலே எட்டு அங்குல சுவாசத்தை வெளியே விடுவாய்; மிகுதி நான்கு அங்குலம் சுவாசத்தையும் உள்ளே அடக்கிக்கொள்வாய். வலது நாசித் துவாரத்தினாலே சுவாசத்தை உள்ளுக்கிழுத்தல் ரேசகம் எனப்படும்; இடது நாசித் துவாரத்தினாலே சுவாசத்தை வெளியே விடுதல் பூரகம் எனப்படும்; சுவாசத்தை உள்ளேயே அடக்கிக்கொள்ளுதல் கும்பகம் எனப்படும். இந்த ரேசக பூரக கும்பக முறையானது தினந்தோறும் இடைவிடாது அப்பியசிக்கப்பட்டேவர, மெல்ல மெல்ல பிராணன் கட்டுப்படுகின்றது; பிராணன் ஒடுங்குகின்றது. பிராணன் ஒடுங்குகின்றது என்றால், மனிதன் மரித்து விடுகின்றான் என்று



பொருள் இல்லை; பிராணனுடைய சலனம் அடங்கிவிடுகின்றது. பிராணன் அடங்குகிறபொழுது மனமும் அடங்கிவிடுகிறது. ஆனால், இந்தப் பிராண நிரோதன மார்க்கத்தை யப்பியாசம் செய்து வரும்பொழுது, பற்பல சித்திகள் உண்டாகும்; அணிமா, மகிமாமுதலிய அஷ்டமா சித்திகளும் ஏற்படும். அப்பொழுது மனிதன் மயங்கிவிடலாகாது. ஆனால், பிராணநிரோதனமாகிய இம்மார்க்கத்தை யநுசரிப்பவர்கள் எப்பொழுதும்—பெரும்பான்மையாய்—சித்தபுருஷர்களாகவே நின்றுவிடுவதுண்டு; சித்திகளிடத்தே மயங்கி, உலகிலே செப்படி வித்தைக்காரர்கள் தங்கள் செப்படி வித்தைகளைக் காட்டிக் காசு சேர்ப்பதுபோல, இந்தச் சித்த புருஷர்கள் தங்கள் சித்திகளை யுலகுக்குக் காட்டி, உலகினரைப் பிரமிக்கும்படி செய்து ஏமாற்றி, புகழையும் பெயரையும் பெறுகிறார்களென்பது சாதாரணமாக நடைபெறுகின்ற விஷயம். வாயுஸ்தம்பனம், ஜலஸ்தம்பனம் முதலியவற்றைக் கண்டு பிரமித்துவிடாதே. பிராணனானது கட்டுப்பட கட்டுப்பட, சரீரமானது மிகவும் லேசாகிவிடுகின்றது. பின்னர் மனத்தினுடைய திடசங்கற்பத்தினாலே இந்தக் கட்டுப்பட்டுவரும் பிராணனை நமக்கு அடிமைபோ லாக்கிக்கொண்டு, இந்தச் சரீரத்தை நமது இச்சைபோல் நடத்திக் கொள்ளலாம்.

“ஆதலால், குழந்தாய்! நீ ஒன்றும் யோசனை செய்யாதே. இம் முறைக்குப் பலவித ஆசனங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றின் முறைப்படி அப்பியசித்துவந்

தால் அஷ்டமா சித்திகளும் உண்டாகுமென்பது நிச்சயம். இதிலே சாதாரணமாக ஞானசாதனம் பெற்று நித்தியா நந்தமடைய விரும்பும் முமுட்சுக்கள் பெரிதும் அநுசரிக்கத்தக்கது பத்மாசனமேயாம்; பின்னர் வீராசனமும் எடுத்துக்கொள்ளலாம். இந்தப் பிராணநிரோதன முறையை யநுசரிக்கிறவர்களுடைய சரீரம் வஜ்ரகாயமாகிவிடும்; உள்ளே கும்பகம் செய்யப்படும் சுவாசமானது நாடி நரம்புகளிலெல்லாம் வியாபித்து, சரீரத்தில் எப்பாகத்திலும் அணுவளவும் அழுக்கு இராதபடி, அழுக்கு எல்லாவற்றையும் வெளியே தள்ளிவிடும்; சரீரம் சுத்தமடைந்து பொன்னிறம் பெற்றுப் பிரகாசிக்கும்; எவ்வியாதியும் அணுகாது; விருத்தாப்பியபர்வம் அருகேவாராது; எமனும் தூரவிருந்து கொண்டு எட்டியெட்டிப் பார்ப்பானேயொழிய சமீபத்தில் வரத் துணியமாட்டான். ஆதலால், நீ பிராணாயாம மார்க்கத்தை முதலில் அனுஷ்டிப்பாய்" என்று உபதேசித்து ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு அநுபவ பூர்வமாக அம்முறையை விளக்கிக் காட்டினார். சின்னாட்கள் ஸ்ரீ ராமகிருஷ்ணர் அப்படியே அம் முறையைப் பின்பற்றி, வெகு ஜாக்கிரதையாக அவ் வம்மையாருடைய பார்வையிலே அப்பியாசம் செய்ய, ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய பிராணன் அடங்கத் தொடங்கிவிட்டது. ஸ்ரீ ராமகிருஷ்ணர், "அணிமா, மகிமா முதலிய அஷ்டமா சித்திகளை யடைந்தனரோ?" என்றால், நிச்சயமாக அடைந்திருக்கலாம். "சித்திகள் தோன்றிவிட்டால், ஒருவேளை மனமானது மலினமடைந்துவிடுமோ?" என்று பயந்து அந்த சந்யாசினி அம்மையார் ஸ்ரீ ராம



கிருஷ்ணருடைய யோகாப்பியாச அபிவிருத்தியை மிகவும் ஜாக்கிரதையாகக் கவனித்துவந்தார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் பிராணநிரோதன மார்க்கத்திலே ஜயம்பெற ஆரம்பித்துவிட்டாரென்று அறிந்த அவ் வம்மையார் பின்னர் ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு ராஜயோக மார்க்கத்தை உபதேசித் தருளினார்.

"குழந்தாய்; நீ பிராணநிரோதன மார்க்கத்திலே கைகூடிவிட்டாய் என்று நான் அறிந்துவிட்டேன்; இப்பொழுது மனமடக்கும் விதத்தைக் கேட்பாய்: மனமானது இத்தன்மையது என்று முன்னமேயே கூறியிருக்கிறேன். மனமானது கட்டுக்கடங்காப் பட்டிமாடுபோன்றது; இதுவரையிலும் சமஸ்தப் பிரபஞ்சத்திலும் தடைப்பாரின்றித் திரிந்து வந்ததினாலே, இறுமாப்பு மிகக் கொண்டது. "மயிலே! மயிலே! இறகுகொடு" என்றால் இந்த மனமாகிற மயில் இறகு கொடுக்காது. இதைப் பலவந்தமாகக் கட்ட வேண்டும். இது உன்னைப் பயமுறுத்திப் பார்க்கும். 'நீ அஞ்சா நெஞ்சம் வாய்ந்தவன்' என்று அது கண்டுகொண்டால், உனக்கு அது பலவித ஆசைகளை யூட்டிப் பார்க்கும்; நீ அவற்றிலும் கலக்கமுறாதவன் என்று அது தெரிந்து கொண்டால், மனஸ்தாபமுற்று நிற்பதுபோல, சற்று நேரம் ஒதுங்கிக் கட்டுப்பட்டு கம் என்று சும்மாயிருந்து பார்க்கும். 'நீ நிச்சலன சித்தம் வாய்ந்தவன்' என்று அது நன்றாகத் தெரிந்துகொண்டுவிட்டால், பேசாமல், வேறு கதியே யில்லையென்று, தலைகுனிந்து உனது ஆக்ஞைக்

குக் கீழ்ப்படியும். ஆகையால், மனத்தைப் பிடித்துக் கட்டி நிறுத்து; பகிர்முகத்திலே செல்லவிடாதே; ராஜாதிராஜன்—சமஸ்த லோகங்கட்கும் சாக்ஷாத் இறைவனா யுள்ளவன்—அகில லோகங்களிலும் அந்தர்யாமியாயுள்ள ஆத்மநாதன்—உன்னுள்ளேயே யிருக்கிறான்; உனது மனத்தினுள்ளேயே யிருக்கிறான்; உனது ஹிருதய குகையிலே வாசம் பண்ணுகிறான். ஆகையால்; பகிர்முகமாக இப்பொழுது சென்று கொண்டிருக்கும் மனத்தைப் பிடித்துக் கட்டி நிறுத்தி உள் முகமாகச் செலுத்து. சரீரமாகிற கிரகத்தினுள்ளே யிருக்கும் எஜமானனைக் கண்டுகொள். அதற்கு அந்தக் கிரகத்தினுடைய வாசல்கள் மூலமாகவும், ஜன்னல்கள் மூலமாகவும் நீ வெளியே பார்த்துக்கொண்டிருந்தால், உள்ளேயுள்ள எஜமானனைக் கண்டு பிடிப்பது எப்படி? ஆகையால், வெளிமுக நாட்டத்தை நிறுத்திவிட்டு உள்முகமாகப் பார். கோட்டையினுள்ளே அரண்மனையில் அந்தப்புரத்தில் அரசன் ஆநந்தமாய், உல்லாசமாய், குதுகலத்துடனே அமர்ந்திருக்கிறான். அங்கே சென்று அவனைத் தரிசித்து ஆநந்தமுறுவதை விட்டுவிட்டு, ஏன் கோட்டைக்கு வெளியேயுள்ள தெருக்களிலே அரசனைத் தேடிச் சுற்றித் திரிகிறாய்?

"மனத்தை யுள்ளுக் கிழுத்துக்கொள். காட்டிலே மதர்த்துத் திரியும் யானைகளைப் பிடித்து வசப்படுத்துவது எப்படி தெரியுமா? பெரும் பள்ளங்கள் வெட்டி, அதன் மேலே செத்தைகளையும் குப்பைகளையும் இலைகளையும்



போட்டு அது பள்ளமென்று தெரியாதபடி செய்து யானையைத் துரத்த, யானையானது அது பள்ளமென்று தெரியாது, அதனுள்ளேவந்து விழுந்துவிடுகிறது. பின்னர், அதற்கு அதனுடைய மதம் குறையும்பொருட்டு, மூன்று நான்கு தினங்கட்கு ஆகாரம் ஒன்றும் கொடுக்கப்படுகிறதில்லை; முழுப்பட்டினியே போடப்படுகிறது; அது தன்னுடைய மதம் ஒடுங்கி இறுமாப்புக் குன்றி அயர்ந்து சோர்ந்து விழுந்துகிடக்க, அப்பொழுது கொஞ்சம் கொஞ்சமாக ஆகாரம் கொடுத்து, அதற்குச் சங்கிலி யிட்டுக் கட்டி வெளியே கொண்டுவந்து பழக்கப்படுகிறது. அதுபோலவே, குழந்தாய்! இந்த மனமாகிற காட்டுயானையும் வெகு சமர்த்துடனே வைராக்கியமாகிய குழிக்குள்ளே வீழ்த்தப்படவேண்டும்; பின்னர்ச் சில தினங்கட்கு—ஏன்? அநேக தினங்கட்கு—அதற்கு ஆகாரம் ஒன்றும் கொடுக்கக் கூடாது; விஷய நுகர்ச்சி எள்ளளவும் கூடாது. இவ்விதமாக அதைப் பட்டினிபோட்டு, அதன் இறுமாப்பையும் மதத்தையும் குறைத்து, நம்முடைய இஷ்டம்போல அதற்கு ஆகாரம் கொடுத்து அதை வசப்படுத்த வேண்டும்; அடிமைப் படுத்தவேண்டும். 'பந்தத்துக்கும் காரணம் மனமே, முக்திக்கும் காரணம் மனமே' என்று உபநிஷத்துக்கள் கோஷிக்கின்றன. ஆதலால், இப்பொழுது பந்தத்துக்குக் காரணமாயுள்ள மனத்தை நாம் வசப்படுத்தி முக்திக்கு ஏதுவாக்கிக்கொள்ளல் வேண்டும். மனத்தின் சக்தி அபாரமானது. அரசனை அடிமைப்படுத்தி, அவனுடைய சர்வாதிகாரத்தையு- வகிக்கும் மந்திரி, ராஜ்யத்திலே

எதையும் செய்தல் கூடுமாம்போல, இந்தப் பாழும் மனமானது உண்மையான மனிதனுக்கு வாசனாத்திரயமாகிற கள்ளைக் கொடுத்துக் குடிக்கச்செய்து அவனை மயக்கி, அவனுடைய சர்வாதிகாரத்தையும் தான் வகித்து அவனுடைய சந்நிதானத்திலே, அந்த சந்நிதான மகிமையினாலேயே, தான் இட்டதெல்லாம் சட்டமென்று ஏகச் சக்ராதிபத்தியம் செலுத்தி வருகின்றது. ஒரு விநாடி நேரத்துக்குள்ளே அது ஈரேழு பதினான்கு உலகங்களையும் சுற்றிவந்து விடுகிறது. கண்கட்டு வித்தைபோல இருந்தாற்போலிருந்து பல அற்புதங்களைச் செய்துவிடுகிறது. இந்த மனத்தை மாத்திரம் மனிதன் வசப்படுத்தி, தான் துக்க நிவிருத்தி யடைவதற்கு இதை யொரு கையாளாக உபயோகப்படுத்திக் கொள்வானானால், மனிதனுக்கு மனம் போன்ற துணைவன் வேறு கிடைக்கமாட்டா னென்பது நிச்சயம். ஆகையால், புத்திரா! நீ மனத்தைக் கட்டுவாய். பிராண நிரோதனமானது அப்பியசிப்பதற்கு ஸ்தூல ரூபத்திலே கஷ்டமானது. மன நிரோதனமாகிய இம்முறையோ ஸ்தூலமாகப் பார்த்தால், கஷ்டமாகத் தோன்றாது; ஆனால், சூட்சுமமாகப் பார்த்தால் அதிகடினமானது; இதை யப்பியசிப்பதற்குத் திடவைராக்கிய தீவிர சித்தம் வேண்டும்; சாதாரணமாக எல்லோராலும் முடியாது; ஆகையால் தான் இதை ராஜயோகம் என்றனர் ஆன்றோர்.

"அப்பனே! கேட்பாய்; உனது வலதுகண் சூர்ய மண்டலமாம்; இடது கண் சந்திர மண்டலமாம்; இரண்டு கண்களுக்கும் நடுவேயுள்ள புருவமத்தியிலே அக்கினி



மண்டல முள்ளதாம். இடையென்று ஒரு நாடியானது சூர்யமண்டலத்தினூடே யோடுகின்றது; பிங்களை யென்று ஒரு நாடி சந்திரமண்டலத்தினூடே யோடுகின்றது; சுழுமுனை யென்று ஒரு நாடி உந்திக் கமலத்திலே ஒடுங்கிக் கிடக்கின்றது. இடை—பிங்களையாகிய இவ்விரண்டு நாடிகளும் முறையே தம் தம் மண்டலங்களினூடே சென்று, புருவ மத்தியிலே நாசிகாக்கிரத்திலே, அதாவது மூக்கின் நுனியிலே ஒன்றையொன்று தாண்டிக் கடந்து மேல் நோக்கிச் சென்று சிறிது தூரத்திலே அங்கு மறுபடியும் ஒன்றையொன்று தாண்டிக் கடந்து செல்கின்றன. இங்ஙனம் கீழும் மேலும் ஒன்றையொன்று தாண்டிச் செல்வதினாலே அவ்விடத்தில் ஒரு திரிகோணம் உண்டாகிறது. இதுதான் அக்கினிமண்டலமாம்.

இராஜயோக ரகஸ்யத்தைக் கேட்பாய்: ஓங்காரத்தை, சமஸ்த அக்ஷரங்கட்கும் ஆதாரமாயுள்ள ஓங்காரத்தை, இந்தப் புருவ மத்தியிலே, மூக்கின் நுனியிலே, இந்தத் திரிகோணத்துக்குள்ளே, இந்த அக்கினி மண்டலத்திலே நிறுத்திவைத்து, கட்டி நிறுத்திய மனத்தை அதனிடத்தே செலுத்துவாய். தைலதாரைபோல மனமானது அதனிடத்தேயே சென்றுகொண் டிருக்கட்டும். இவ் வப்பியாசத்தை மாத்திரம் விட்டுவிடாதே. இது யோகங்களுக்குள்ளெல்லாம் சிரேஷ்டமான ராஜயோகமாம்.

"இங்ஙனம் சின்னாட்கள் நீ அப்பியசித்துவர, உன் முன்னே யொருஜோதி தோன்றும்; இதிலே மயங்கி

விடாதே; பின்னும் விடாமல் அப்பியசித்துவர, மணியடிக்கும் சப்தம்போலச் சில நாதங்கள் கேட்கும்; பின்னும் இவ் வப்பியாசத்தைப் பின்பற்றிவந்தால், அழகிய யுவதிகள் ஆயிரக் கணக்காக உன் முன்னே தோன்றுவார்கள்; ஜாக்கிரதை! மயங்கிவிடாதே; பிரமிக்காதே; தேவேந்திர பட்டமும் திரணமேயென்ற மகாவைராக்கிய முடையவனாயிரு. பின்னர் மறுபடியும் ஒரு பெரும்ஜோதி தோன்றும்; இன்னும் கொஞ்ச நாட்கள் சென்றால், ஒரு பெரும் பாழ் தோன்றும், சூந்யம் தோன்றும்; இன்னதென்று அதை விவரிக்க முடியாது; மனம் ஏக்கமுறும்; பின்வாங்கும்; ஆயினும், புத்திரா! பயப்படாதே; இப் பாழ்தான் கடைசி இடையூறு; இதைத் தாண்டிவிட்டால், பயமே யில்லை. இதைத் தாண்டுவதற்கு மனிதன் தனது முழுபலத்தையும்—இதுநாள்காறும் அநுஷ்டித்துவந்த அப்பியாச பலத்தையும்—எல்லாவற்றையும ஒருமுகப்படுத்தி உபயோகிக்கவேண்டும். இதைக் கடந்துவிட்டால், ஆநந்தம், ஆநந்தமே; அகண்ட சச்சிதாநந்த சாக்ஷாத்கார சொரூபமே; மனிதனிடமிருந்து துக்கமென்பது போய்விட்டது; பயமென்பது போய்விட்டது; கவலையென்பது போய்விட்டது; ஆத்மாநந்தனால், மனிதன் அரசர்களுக்குள் அரசனாய், அகிலப் பிரபஞ்சங்கட்கும் அநாதி கர்த்தாவாய் ஆநந்த பதவியிலே அமர்ந்துவிடுகிறான்" என்று எல்லாம் அச் சந்நியாசினி ஸ்ரீராமகிருஷ்ணருக்கு ராஜயோக ரகஸ்யங்களை யெடுத்து வெகு விஸ்தாரமாகப் போதித்துவிட்டு, அவரிடம் விடைபெற்றுச் சென்றனர். நமது ஸ்ரீராமகிருஷ்ணர்—பிடிவாதப் பிராஹ்



மணாசாரம் மிகுந்த ஸ்ரீராமகிருஷ்ணர்—இப்பொழுது மகா யோகியாய்விட்டார்.

---

## 8-ம் அத்தியாயம்
## தோதாபுரி தர்சனம்

ஸ்ரீ ராமகிருஷ்ணர் இவ்வாறு பிராணநிரோதனம், மனநிரோதனம் இரண்டும் வெகு சீக்கிரத்திலே கைகூடப் பெற்றதைக் கண்ட அநேக யோகிகள் ஆச்சர்யப்பட்டனர். ஒருநாளிரவில் ஸ்ரீராமகிருஷ்ணர் யோக நிஷ்டையில் உட்காரச் செல்ல, திடீரென்று அவருக்கு ஒரு இருமல் உண்டாயிற்று; ஒரே இருமல் இருமினதுதான்; அவருடைய வாயிலிருந்து ரத்தம் கொட்ட ஆரம்பித்துவிட்டது. ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு ஆச்சர்யமும் பயமும் விசனமும் உண்டாயின. என்னதான் அவர் பக்தி தாபத்தினாலே எரிக்கப்பட் டிருந்தபொழுதிலும், யோகாப்பியாசங்களெல்லாம் கைகூடப் பெற்றிருந்த பொழுதிலும், அவருக்கு இன்னும் ஞானோபதேசம் ஏற்படவில்லை யல்லவா? ஆதலால், அவருடைய மனம் இப்பொழுது விசனத்தையும் பயத்தையும் அடைந்தது ஆச்சர்யமன்று. ஆனால், இவருக்கு இவ் விஷயத்திலே பயம் ஏற்பட்டதற்குப் பிரத்தியேகமான ஒரு காரணமுமுண்டு. அப்பொழுது தக்ஷிணேச்வராலயத்திலே இவருடைய தமக்கை புத்திரனாகிய ஹலதாரி யென்னும் ஒருவர் பூஜை செய்துவந்தார். சில நாட்களுக்கு

முன்னே அவருக்கும் ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கும் ஏதோ வாக்கு வாதங்கள் ஏற்பட, அப்பொழுது ஸ்ரீ ராமகிருஷ்ணர் நிர்த்தாக்ஷிண்யமாக அந்த ஹலதாரி யென்பவரிடத்திலுள்ள குற்றங்களை யெல்லாம் எடுத்துக் காட்டி, மிகவும் கோரமாகக் கண்டித்தார். அப்பொழுது, ஹலதாரி யென்பவர் கோபம் மிகுந்து "உன் வாயிலிருந்து ரத்தம்கொட்ட" என்று சபித்தார். அந்த ஹலதாரி யென்பவர் பரிசுத்த புருஷரென்றும், வாக்குசித்திமுதலிய சக்திகள் வாய்ந்தவரென்றும் பெயர். ஆதலால், அவருடைய வாக்குத்தான் பலித்துவிட்டதோ? இதற்கு என்ன செய்வது? என்று ஏங்கிக்கொண்டிருந்த ஸ்ரீ ராமகிருஷ்ண ரிடத்துக்கு ஒரு யோகீசுவரர் வந்து சேர்ந்தார். அவர் ஸ்ரீராமகிருஷ்ண ரிடமிருந்து சங்கதியை அறிந்துகொண்டு, "குழந்தாய்! சற்றும் பயப்படாதே! நீ இடைவிடாமல் செய்துவரும் யோக நிஷ்டையானது அக்கினியாகி, உனது மூளையைக் கொதிக்கும்படி செய்துவிட்டது. அதனாலே, ரத்தமானது வாயிலிருந்து கொட்டுகின்றது; சிலருக்கு மூக்கின் வழியாகக் கொட்டும்; இதைப்பற்றி நீ பயமுறவேண்டாம்" என்று கூறி, சில மூலிகைகளைச் சாறு பிழிந்து ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு உள்ளுக்குக் கொடுக்க, உடனே ரத்தம் வருவது நின்றுவிட்டது. இன்னும், சமாதி சமயத்திலே சரீரத்திலுள்ள இரத்தமெல்லாம் சிரசை நோக்கிச் செல்லுமென்றும், திடுக்கென்று சமாதி கலைக்கப்பட்டாலாவது, அல்லது திடுக்கென் றேற்படும் வேறு எக்காரணத்தினாலாவது, ரத்தம் திடீரென்று கீழ் நோக்கித் திருப்பப்பட்டுவிட்டால்,



சாவதானப் போக்கு இல்லாதபடியினாலே பஞ்சேந்திரியங்களில் ஏதேனும் ஒரு இந்திரியத்தின் வழியாகவும் அல்லது எல்லா இந்திரியங்களின் வழியாகவும் ரத்தம் கொட்டும். இதனால்தான் நிஷ்டையானது திடுக்கென்று கலைந்துவிடக் கூடாதபடி, யோகிகள் ஆரண்யங்களுக்கும் குகைகளுக்கும் அப்பியாசம் செய்யச் செல்கிறார்கள் என்றும் அந்த யோகீச்வரர் கூறிவிட்டு, ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் விடைபெற்றுச் சென்றார்.

இப்பொழுது ஸ்ரீ ராமகிருஷ்ணர் யோக நிஷ்டை விஷயத்திலே அணுவளவும் ஐயமற்றவராய், அநுபூதி யடைந்துவிட்டா ரென்பதில் சந்தேகமில்லை. ஆனால், பரமார்த்த ஞானாநுபூதி யடையவில்லை; அகமும் புறமும் ஒன்றேயென்ற அறிவையும் அநுபவத்தையும் அடையவில்லை. ஆதலால், இப்பொழுது ஸ்ரீராமகிருஷ்ணர் அகண்ட அநுபவத்தையும் அறிவையும் விரும்பி அல்லும் பகலும் வருந்தலானார். இவ் விஷயத்திலே இவருடைய ஆசையானது அதிகரிக்க அதிகரிக்க, இவர் ஞானோபதேசம் பெறுதற்கு ஒரு குருவை யடையவேண்டிய சந்தர்ப்பம் நேரிட்டது. தீவிரதர வைராக்கியமுள்ள சிஷ்யன் குருவைத் தேடுகிறான்; சர்வசங்க பரித்தியாகியும் ஜீவகாருண்ய சொரூபியுமாகிய குரு, சிஷ்யனைத் தேடுகிறார்; இது சிருஷ்டி நியதி. இந்த நியதியின் பிரகாரம் நமது ஸ்ரீ ராமகிருஷ்ணர் இப்பொழுது தக்ஷிணேச்வ ராலயத்துத் தோட்டத்திலே கங்கைக்கரையில் ஒரு பரிசுத்த பஞ்சவடியின் கீழே

யுட்கார்ந்துகொண்டு, தமக்கு ஞானோபதேசம் செய்வதற்கு உள்ள குருவை எங்கே கண்டுபிடிப்பதென்று இராப்பகலாய் இதே ஏக்கமா யிருந்தார்.

அப்பொழுது அங்கே ஒரு மகாத்மா வந்தார்; அவருடைய பெயர் தோதாபுரி; அவர் பிரபஞ்சத்தை ஒரு சொப்பனமென அநுபவத்தில் கண்டு துணிந்தவர்; அவதூதர்; திகம்பரர்; அவருக்கு மழை, காற்று, குளிர், வெயில் முதலிய எல்லாம் ஒரே தன்மையனவா யிருந்தன. எப்பொழுது எது கிடைத்ததோ அதுவே அவருக்கு ஆகாரம்; ஆகாயக் கூரையின் கீழேயே அவர் சயனிப்பது; புல் அணையே அவருடைய படுக்கையாம்; வலது கையே தலையணையாம். இவர் எவ்விடத்திலும் மூன்று தினங்களுக்குமேல் தங்குவதில்லை; ஏனென்றால், அந்த இடத்துக்கும் தமக்கும் ஒருவித பற்றுதல் உண்டாய்விடுமென்று. ஒருபிடி யன்னங்கூட அவர் எவரையும் வாய்திறந்து கேட்பதில்லை; "இருக்குமிடம் தேடி என் பசிக்கேயன்னம் உருக்கமுடன் கொண்டுவந்தா லுண்பேன்" என்று திடமாகக்கொண்டு அநுபவத்தில் அப்படியே சாதித்துவருபவர். இவர் எந்தக் கட்டிடத்திலும், எவர் வீட்டிலும் தங்குவதில்லை. சாவடிகளிலே அல்லது விருக்ஷத்தினடிகளிலே இவர் ஏகாந்த நிஷ்டையிருந்து காலங் கழித்துக்கொண்டு பாரத பூமிமுழுதும் சுற்றித் திரிந்துவந்தார். அத்வைத ஞானத்திலோ, அகண்ட சொரூபமே அவதாரம் எடுத்துவந்ததோ என்று இவரைச் சொல்லலாம். சென்ற



நாற்பது வருஷங்களாக இவர் சர்வசங்க பரித்தியாகியாகி, அத்வைதாநுபூதி யடைவதிலேயே காலத்தைக் கழித்தார். இவர் இங்ஙனம் அவதூதராய்ப் பூப்பிரதக்ஷிணம் செய்து வருகையிலே, ஒருநாள் நிஷ்டையினின்றும் கண்கள் கலைந்து பகிர்முகப்படுகின்ற சமயத்தில், எவரோ ஒரு பெரியவர் வந்து, "ஏ, தோதாபுரி! தோதாபுரி!! நீ வங்காளத்துக்குச் செல்! அங்கே ஒருவர், அதிதீவிரதரர், உன்னால் ஞானோபதேசம் செய்யப்படுதற்குக் காத்துக்கொண் டிருக்கிறார்; நீ அந்த வேலையைச் செய்யவேண்டும்" என்று ஆக்ஞை யிட்டதுபோலத் தோன்றிற்று. அப்படியே தோதாபுரி தம்முடைய சாதாரண சஞ்சாரத்தை நிறுத்திவிட்டு, வங்காளத்துக்கு வந்து சேர்ந்தார். வங்காளத்திலே ஒவ்வொரு ஊராகச் சுற்றிக்கொண்டு, கடைசியாகக் கல்கத்தா நகரமடைந்து, தக்ஷிணேச்வராலயத் தோட்டத்திலே பஞ்சவடியின் கீழே நிஷ்டையி லுட்கார்ந்திருக்கும் ஸ்ரீராமகிருஷ்ணரைக் கண்டு, தாம் உபதேசிக்க் வேண்டிய சிஷ்யர் இவர் தான் என்று அறிந்துகொண்டு, அவரை நோக்கி, "அப்பா, புத்திரா! நான் உனக்கு வேதாந்த ரகஸ்யங்களை யுபதேசிக்கிறேன்" என்று அங்கிருந்த மற்றெல்லோரையும் சிறிது தூரத்திலே போகச் சொல்லிவிட்டு, அவருக்கு வேதாந்தத்தை யெடுத்து விரித்துரைத்தார்.

வேதாந்த உபதேசத்துக்கு நீ அதிகாரிதான்; இது, "நுழையாது, நுழையு மாகில் பூதஜன் மங்கள்கோடி புநிதமாம் புருடனேமே" இந்தப் பிரபஞ்சம் எப்படி யுண்டா

யிற்று? இதற்கு ஆதி எது? ஜீவராசிகளுடைய ஜனன மரணத்துக்குக் காரணமென்ன? இவர்களுடைய பந்தங்கட்குக் காரணமென்ன? குழந்தாய்! ஜீவன் அவித்தியா சம்பந்தனாய்த் தன்னுடைய உண்மை லக்ஷணமாகிய ஆத்மசொருபத்தை மறந்துவிட்டு, பிரமையினாலே — மயக்கத்தினாலே — மாயையினாலே — ஜனனமரண சக்கரத்தில் பட்டுச் சுழன்று உழலுகின்றான். இவ் வவித்தைக்குக் காரணம் யாது? இவ் வவித்தை எப்படி ஏற்பட்டது?" என்றால், இவ்வவித்தை அநாதி யெனப்படுகின்றது. அத்வைதம் பொய் சொல்கிறதில்லை; பிறரை ஏமாற்றுகிறதில்லை. உபசார வழக்காக அவித்தையை அநாதியென்று கூறினபொழுதிலும், அவித்தையின் ஆதி தனக்குத் தெரியாதென்று அத்வைதமானது மிகுந்த நேர்மையுடன் தைரியமாக உண்மையை உரைத்துவிடுகின்றது. ஆதி யில்லையென்று கூறவில்லை; ஆதி யெப்பொழுதோ தனக்குத் தெரியாதென்றே கூறுகின்றது. ஆதி யில்லாத வஸ்துவுக்கு அந்தமு மிராது என்பது சிருஷ்டி நீதியாம்; ஆதலால், இந்த அவித்தை ஆதி யில்லாததானால், உண்மையில் அநாதியானதானால், இதற்கு அந்தமும் ஏற்படாது. ஆகவே, ஜீவராசிகளுக்குத் துக்க நிவிர்த்தி யுண்டாவதற்கு மார்க்கமு மில்லாமற் போய்விடும். ஆனால், அவித்தைக்கு நாச முண்டாகின்றது, அந்த முண்டாகின்றது, முடிவுண்டாகின்றது என்பது சுருதி யுக்தி யநுபவப் பிரமாணங்களால் ருசுவாகிறது. அந்தமுள்ள ஒன்றுக்கு ஆதி யிருந்திருக்கத்தான் வேண்டும்; ஆனால், அது எப்பொழுதென்று நமக்குத் தெரியாது. தவிர 'அவித்தைக்கு ஆதி



யுண்டா? இல்லையா?' என்று நாம் கவனிக்கவேண்டிய அவசியமுமில்லை. ஏனெனில், தனது வீடுபற்றி யெரியக்கண்ட ஒரு மனிதன், "எப்படி நெருப்புப் பற்றிற்று? ஏன் நெருப்புப் பிடித்தது? எவன் தீ வைத்திருப்பான்? நெருப்புப் பிடித்து இப்பொழுது எத்தனை நிமிஷமாயிருக்கும்?" என்ற கேள்விகளைக் கேட்டுக்கொண்டு, இக் கேள்விகளை யாராய்ந்து பார்ப்பதிலே காலங் கழிப்பானா? அல்லது சட்டென்று சென்று வேண்டிய தண்ணீர் கொண்டுவந்து நெருப்பை யணைப்பானா? மேற்கூறியவாறு கேள்விகள் கேட்டுக்கொண்டும் ஆராய்ந்துகொண்டு மிருந்தானானால், அவனுடைய ஆராய்ச்சி முடிவதற்குள்ளாக, அவனுடைய வீடு முழுதும் தீப்பிடித்து எரிந்து முடிந்துவிடும். மிகவும் ஆழ்ந்த கிணற்றுக்குள் திடீரென்று விழுந்த ஒருவன் மூச்சுத் திணறித் தடுமாறித் தத்தளித்துக்கொண்டிருக்கையிலே, தான் "ஏன் விழுந்தேன்" என்றும், "எது இடறி விழுந்தேன்" என்றும், "விழுந்தபொழுது என்ன ஞாபகத்துடனிருந்தேன்" என்றும், மற்றும் யோசனைசெய்து பார்த்துக்கொண் டிருப்பானா? அல்லது, கையில் கிடைக்கும் எதையேனும் பற்றிப் பிடித்துக் கரை யேறுவதற்கு வழி பார்ப்பானா? அதுபோல, அவித்தியா காரணத்தினாலே அநேகவித துன்பங்களை யநுபவித்துத் திண்டாடுகின்ற மனிதன் இத் துன்பங்களினின்றும் எவ்வளவு சீக்கிரத்தில் நிவிருத்திபெற முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் நிவிருத்திபெற முயல்வது நன்மையா? அல்லது, 'இத் துன்பங்கள் எப்படி வந்தன?' என்று அநாவசியமான விசாரணையிலே

மனத்தைச் செலுத்தி மென்மேலும் துன்பங்களை யநுபவிப்பது நன்மையா? புத்திசாலியானவன், உண்மையில் துன்பங்களை யுணர்கின்ற முமுக்ஷுவானவன், துக்க நிவிருத்தியைத் தேடுவானேயொழிய, அநாவசியமான விசாரணைகளிலே நுழைந்து, மூளையைக் குழப்பிக்கொள்ளமாட்டான்.

"இன்னும், பிரபஞ்சத்திலே யாது சுகமுள்ளது? உலகினர்களுக்கு இவ்வுண்மை அவர்களுடைய தினசரி வாழ்க்கையிலேயே தெள்ளிதில் விளங்கிக்கொண்டிருந்தும், புலப்படாமற் போய்விடுகின்றது. ஒரு மனிதனை ஒரு பெரிய மதயானையானது ஆங்காரத்துடனே துரத்திவந்தது; அவன் ஓடினான், ஓடினான், ஊரெல்லாம் சுற்றி ஓடினான்; ஆயினும் அது விடவேயில்லை; துரத்திக்கொண்டே போயிற்று. அவன் காட்டுக்குள் ஓடினான்; யானை அவனை யங்கும் துரத்திக்கொண்டு ஓடிற்று. கடைசியாக அவன் யானையினின்றும் தப்புவித்துக்கொள்வதற்கு வேறுவழி யில்லாமல் ஒரு பாழுங் கிணற்றுக்குள்ளே குதித்தான். அங்கே அக் கிணற்றினுள்ளே ஒரு கிருஷ்ண சர்ப்பம் அநேக நாட்களாகப் பசித்து, மிகவும் கடூரமான கோபத்தோடே யிருந்தது. இவன் மேலேயிருந்து குதித்துக் கீழ்நோக்கி வருவதைக் கண்டவுடனே அது உஸ் என்று சீறிற்று. இவன் சட்டென்று இடைச் சுவற்றிலே ஒரு சிறு செடியொன்று நிற்பதைக் கண்டு, அதைப் பற்றிக்கொண்டு, அச் சுவற்றினிடத்தேயே தனது பாதங்களை யூன்றி நின்றுகொண்டான். மேலே போனாலோ மதயானை காத்துக்கொண்டிருக்



கின்றது; அது எட்டி எட்டிப் பார்க்கின்றது; கீழே போகலாமென்றாலோ கிருஷ்ண சர்ப்பம் சீறுகின்றது; நிற்கின்ற இடத்திலோ, கால்களுக்குச் சரியான பிடிமானம் இல்லாததினாலே, கால்கள் அச் சுவற்றினின்றும் வழுவுகின்றன; அவன் பற்றிப் பிடித்திருக்கும் செடியோ மிகவும் இளஞ் செடி யாகையால் இவனுடைய பலம் பொறுக்க முடியாமல் எந்த நிமிஷத்தில் முறிந்துவிடுமோ? இவன் இவ்வளவு ஆபத்தான நிலைமையி லிருக்கிறான். இச் சமயத்தில் இக் கிணற்றோரத்தி லிருந்த ஒரு விருக்ஷத்தின் உச்சியில் கட்டப்பட்டிருந்த தேன்கூண்டு எப்படியோ உடைந்து, தேன் இவன் நிற்கும் இடத்துக்கு நேரே சொட்டுகின்றது. அபாயகரமான ஆபத்து நிலைமையில் இருக்கின்ற இவன் தனது நாக்கை நீட்டி நீட்டிச் சொட்டுகின்ற அந்தத் தேன் துளிகளை ருசித்துச் சந்தோஷித்தானாம்; அதுபோ லிருக்கின்றது உலகினர்களுடைய ஸ்திதி. காலையில் துக்கம், மாலையில் துக்கம், பகலில் துக்கம், இரவில் துக்கம், எப்பொழுதும் எந்த நிமிஷத்திலும் துக்கம்; இங்கும் துக்கம்; அங்கும் துக்கம்; எல்லா இடங்களிலும் எங்கும் துக்கம். இப்படி துக்கத்தினால் குழப்பட்டுத் துன்பத்திலே யுழலும் உலகினர் தங்களுடைய உண்மையான ஸ்திதியை ஓராது, பிரபஞ்ச சுகத்தை யனுபவிக்க முயல்வது ஆச்சர்யமன்றோ?

"அப்பனே! குழந்தாய்! மாயை, மாயையென்று எல்லோரும் வெகு எளிதாகச் சொல்லிவிடுகிறார்களே; அது என்ன தெரியுமா? ஒன்றோடொன்று நேர் எதிரிடையான

சக்திகள் இரண்டு ஒன்றோடொன்று ஊடுருவி ஒரே போக்கிலே, ஒரே யோட்டத்திலே ஒன்றுக்கொன்று நேர் எதிரிடையாக ஓடுகின்றன; உண்மையும் இன்மையும், நன்மையும் தீமையும், இவைபோன்ற நேர் எதிரிடையான சக்திகள் ஒரே யோட்டத்திலே ஒன்று யிருப்பதுபோலவே தோற்றத்தில் காண்பித்து, ஆனால், நேர் எதிரிடையாக ஓடும் தன்மையே மாயை யெனப்படுவதாம். ஜீவராசிகள் ஜனனமரணத்துக் குட்படுகின்றனர் என்று சர்வசாதாரணமாக எல்லோருக்கும் தெரியும்; ஆனால், ஜனனமுமில்லை—மரணமு மில்லையென்றே பெரும்பான்மையோரும் கருதி, இப் பிரபஞ்சத்தை யுண்மையென நம்புகின்றனர். தினந்தோறும் லக்ஷக்கணக்கான ஜீவராசிகள் மரித்துக்கொண்டிருப்பதைக் கண்டும், ஜனங்கள் தாங்கள் என்றும் உள்ளவர்கள் என்று பிரமித்துக்கொண்டவர்கள் போலவே, தேகாபிமானம் மிகவும் அதிகமாக உடையவர்களா யிருக்கிறார்கள்; இதுதான் மாயை யெனப்படுவது. நன்றாக அறிவிருந்தும் அவ்வறிவை யிழக்கும்படி செய்வதே மாயையாம். "யாமா, ஸமாயா" என்றனர் சிலர்; "எது இல்லையோ அது மாயை" என்றனர். "இல்லாததே, எப்பொழுதும் இல்லாததே, இன்மையே, உண்மைபோன்று தோன்றும் இன்மையாம் பிரமையே மாயை."

இந்தத் தோதாபுரி இதற்குமுன் எவ்விடத்திலும் மூன்று நாட்களுக்குமேல் தங்கினவரல்லர். இப்பொழுது ஸ்ரீ ராமகிருஷ்ணருடனே இங்குச் சுமார் பதினொருமாத



காலம் தங்கினார். ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு இவர் நிர்விகற்ப சமாதி யடைதற்குள்ள மார்க்கத்தை உபதேசிக்க, ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவற்றைக் கிரகித்துக்கொண்டு, மூன்றே நாட்களில் நிர்விகற்ப சமாதியை யடைந்துவிட்டார். தோதாபுரியார் பார்த்து ஆச்சர்யமடைந்து, "அப்பா! நீ எமராக்ஷஸன்போன் றிருக்கின்றாய். "கலங்காத நெஞ்சுடைய ஞானதீரன்" என்னும் பெயர் உனக்கே தகும். நான் நிர்விகற்பசமாதி யடைதற்கு நாற்பது வருஷங்கள் பாடுபட்டேன்; என்னுடைய நாற்பது வருஷத்திய, இடைவிடாத, இராப்பகல் வேலையை நீ மூன்றே நாட்களில் செய்து, நான் அரும்பாடுபட்டு அடைந்ததை நீ லகுவிலே அடைந்துவிட்டாய்; இனிமேல் நீ எனக்கு சிஷ்யனல்லன்; எனக்குச் சமமானவன்; இன்னும் சொன்னால், நீ எனக்குக் குருவும் ஆய்விடுவாய்போலத் தோன்றுகிறது" என்றார். தோதாபுரியாருடைய இக் கடைசிவாக்கியம் வீண்போகவில்லை. ஸ்ரீ ரசமகிருஷ்ணர் தோதாபுரியாருக்கே ஒரு சமயத்தில் ஒரு பேருண்மையை விளக்கிக்காட்டிக் குருவானார்.

தோதாபுரியார் சுத்தாத்வைதி யானபோதிலும், இரவும் பகலும் ஒரு அக்கினி குண்டத்தைத் தமது பக்கத்தில் வைத்துக்கொண்டு அதை மிகப் பரிசுத்தமானதாகக் கருதி வந்தார். ஒரு நாள் கஞ்சாக் குடியன் ஒருவன் அந்தக் குண்டத்திலிருந்து நெருப்பெடுத்துக் கஞ்சா பற்றவைப்பதைப் பார்த்துத் தோதாபுரியார் கடுங்கோப முடையவராகி, அவனை மிகவும் கடினமாகக் கடிந்துகொண்டார். அப்போ

முது ஸ்ரீ ராமகிருஷ்ணர் அங்கே சமீபத்தில் நின்றுகொண்டிருந்தார். அவர் தமக்கு ஒன்றும் தெரியாததுபோலப் பாவித்துக்கொண்டு, தோதாபுரியாரை நோக்கி, "ஸ்வாமி! அத்வைத சொரூபியாகிய தங்களுக்கு இப்படி யடங்காக் கோபம் வருதற்குக் காரணமென்ன?" என்று கேட்டதும், தோதாபுரியார் சங்கதி யின்னதென்று சொன்னார். உடனே ஸ்ரீ ராமகிருஷ்ணர், "ஸ்வாமி! தாங்கள் அத்வைதத்திலே பழுத்தவரா யிருந்தும், ஏனோ தங்களுக்கு இந்தப் பேத பாவனை? சர்வம் பிரஹ்மம் என்ற கொள்கை இப்பொழுது எங்கு போய்விட்டது? இந்த அக்நியும், இதைக் கஞ்சா குடிப்பதற்குப் பற்றவைத்த அக்குடியனும் நாம ரூபத்தை நீக்கிப் பார்த்தால் அகண்ட சச்சிதாநந்த சொரூபமேயாகிய பிரஹ்மமேயன்றோ? ஞானியினுடைய ஏகதிருஷ்டியிலே பேத பாவனை எப்படி யுண்டாகிறது?" என்று கூற, தோதாபுரியார் திடுக்கிட்டு, "இப்பொழுதுதான் உண்மை விளங்கிற்று; இவ் விஷயத்திலே இத்தனை நாட்களும் நான் வீண்வாசா ஞானியாகவேதான் இருந்தேன்; இனிமேல் எனக்குத் தெரிந்துவிட்டது; உன்னிடமிருந்து உபதேசம் வரவேண்டுமென்று ஈச்வர சங்கற்பம் இருந்ததுபோலும்; அக்கினி குண்டம்தான் எதற்கு?" என்று கூறி, அன்றுமுதல் தம்மருகில் அக்கினிகுண்டம் வைத்துக்கொள்ளும் வழக்கத்தை விட்டுவிட்டார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் அந்த தக்ஷிணேச்வ ராலயத்தத் தோட்டத்திலே ஒரு பஞ்சவடியின் கீழேயிருந்து நிஷ்டை



சாதித்தாரென்று முன்னமேயே கூறியிருக்கிறோம். அந்தப் பஞ்சவடியின் கீழே நிஷ்டையி லிருப்பதற்குப் பாக்கியம் பெற்றவர்கள் ஸ்ரீ ராமகிருஷ்ணரைத் தவிர, இன்னும் இரண்டு பெயர்களேயாம்; அவர்களாவன: தோதாபுரியாரும், ஸ்வாமி விவேகாநந்தருமேயாம். தோதாபுரியார் அந்த விருக்ஷத்தினடியில் நிஷ்டையில் உட்கார, அவருடைய மனம் கலைவுற்றது; அவருக்கு அங்கு இருக்க முடியவில்லை; அவருடைய மனத்திலே பொருவிதமான திகிலும் கலக்கமும் உண்டாயின. அவர் தமது வாழ்நாளில் இம்மாதிரி மனக்கலக்கத்தை யொருபொழுதும் தாம் அடைந்ததில்லையென்றும், இதற்குக் காரணம் யாதா யிருக்கலா மென்றும் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடத்திலே கேட்க, அவர் "அங்கே அந்த விருக்ஷத்திலே ஒரு பிரஹ்மராக்ஷஸு இருக்கின்றது; ஆனால், அது என்னை யொன்றும் செய்யவில்லை; தங்களுடைய மனம் கலைந்து பதறினதற்குக் காரணம் அதுவேதான்; ஆயினும் அஞ்சற்க; அவ் விருக்ஷத்தி னடியிலேயே தங்களை நான் நிஷ்டையில் நிறுத்தி வைக்கிறேன்" என்று கூறி, தோதாபுரியாரை இட்டுக்கொண்டு அங்குச்சென்று, அவ் விருக்ஷத்தினடியில் பத்மாசனத்தி லுட்கார்ந்து கண்மூடி நிஷ்டை யிருக்கும்படி சொல்லிவிட்டு, தாம் அருகே யிருந்துகொண்டு, ஏதோ மந்திரங்களை ஜபித்தார். அந்த பிரஹ்மராக்ஷஸு அதுமுதல் தோதாபுரியாரைத் தொந்தரவு செய்யவில்லை.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் இந்த விருக்ஷத்தினடியிலே எந்த இடத்திலே யுட்கார்ந்து சாதனங்கள் புரிந்தாரோ, அந்த

இடத்திலே அவருக்குப் பிரஹ்மநிஷ்டை சித்தித்தவுடனே, அந்த விருக்ஷத்திலிருந்து ஒரு பெரிய கிளையானது முறிந்து விழுந்து, அவர் நிஷ்டை சாதித்த இடத்தை மூடிக்கொண்டது.

ஆனால், ஸ்ரீராமகிருஷ்ணர் மூன்று நாட்களுக்குள்ளே நிர்விகற்பசமாதி நிலைமையை அடைந்துவிட்டாரென்று கூறியுள்ளோம். தோதாபுரியாருக்கு இவ் விஷயத்திலே கொஞ்சம் சந்தேகம் பிறந்தது; "என்ன இது? இந்த நிலைமையடைவதற்கு எனக்கு நாற்பது வருஷங்கள் வேண்டிவந்தனவே; இவர் எவ்வளவு மனோவன்மையுடையவராயிருந்தாலும் இவருக்கு நான்கு வருஷங்களாவது வேண்டிவாராதா? மூன்று நாட்களுக்குள்ளே இவர் நிர்விகற்பசமாதி நிலைமையடைந்தது உண்மைதானா? அல்லது வெறுமே பாவனை பண்ணிக்கொள்கிறாரா?"

இவ்விதமாகத் தோதாபுரியாருக்கு ஒரு சந்தேகம் ஜனிக்கவே, அவர் ஸ்ரீராமகிருஷ்ணரைப் பரிசோதித்துப் பார்க்கவேண்டி, ஒருநாள் ஸ்ரீ ராமகிருஷ்ணர் நிர்விகற்ப சமாதியிலே வீற்றிருக்கையில், ஒரு தடியெடுத்து அவரையடித்துப் பார்த்தார். ஆனால், ஸ்ரீ ராமகிருஷ்ணரா வெறும் வேஷம் போடுபவர்?

தோதாபுரியார் மகா அத்வைதியே; அவருக்குச் சகுண உபாசனையிலே நம்பிக்கை கிடையாது; நமது ஸ்ரீ ராமகிருஷ்ணரோ சகுண உபாசனையை ஆதாரமாகக் கொண்டவர்; ஆனால், அத்வைதத்திலேதான் சென்று லயித்



தவர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் நிர்விகற்பசமாதியடைந்த பின்னரும், பிரபஞ்சப் பிரக்ஞையுள்ள பொழுதெல்லாம் அடிக்கடி காளியை ஸ்தோத்திரம் பண்ணுவதையும், மாதாவென அழைப்பதையும் தோதாபுரியார் கண்டு, ஒருநாள் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடத்திலே, "அத்வைதப்பொருளை அகண்டாகாரமாக அநுபவத்தில் கண்டும், இன்னும் தங்களால் பக்தி யோகபாவனையை விட்டுவிட முடியவில்லையே" என்றார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர்: "சுத்த சைதந்யத்திலே நான், நீயென்ற பேதம் கிடையாது; நிர்விகற்ப சமாதியிலே பேதம் இல்லை; ஆனால், மனமானது புலன்களின் வழியாகப் பகிர்முகப்பட்டுப், பிரபஞ்சப் பிரக்ஞையுண்டாய்விட்டால், உடனே நான், நீயென்ற வியவகாரம் வந்துவிடுகிறதல்லவா? ஆதலால், அந்த நிர்க்குணப் பொருளாகிய பிரஹ்மமே சகுணப்பொருளாகிய ஈச்வரனாக நான் பாவித்து உபாசிக்கிறேன்; அதிலே அந்த ஈச்வரனை மாதுர்சொரூபமாகக் கருதி உபாசிக்கிறேன்; ஏன்? மனுஷ்ய வர்க்கத்தினாலே கற்பிக்கப்பட்டு உபாசிக்கப்படுகின்ற சகுண மூர்த்தங்களிலெல்லாம் நான் பிரஹ்ம வஸ்துவையே பார்க்கிறேன்; காளியென்றால் என்னவென்று நினைத்துக்கொண்டீர்கள்? எல்லா வஸ்துக்களையும் விழுங்கி ஏப்பமிடுகின்ற காலசொரூபமே காளியாகும்; சர்வசம்ஹார மூர்த்தமே காளியாகும்; அவளுடைய கழுத்திலே மண்டையோடுகளாலாய மாலைகள் தொங்குகின்றன; அவளுடைய

கையிலே ரத்தம் பொழிகின்ற சிரசு ஒன்றைத் தாங்கிக் கொண்டிருக்கின்றாள், பார்த்தீர்களா? சர்வ சம்ஹார நிர்த்தனமே அவளுடைய நிர்த்தனம், ஸ்மசானமே அவளுடைய க்ஷேத்திரம்; நான் காளியை மாதாவாகவும் உபாசிக்கிறேன், பிரஹ்ம வஸ்துவாகவும் தியானிக்கிறேன்; நான் அவளை அவளுடைய பயங்கரமான வடிவங்களிலே தர்சிக்கிறேன்; அவளை நான் பிரஹ்மானந்தமாகவும் அநுபவிக்கிறேன்; சகுண சொரூபியான காளிதேவி எனது நிஷ்டாநுபூதியிலே நிர்க்குண வஸ்துவினிடத்திலே ஒன்றிவிடுகிறாள்.

சம்ஹார தேவியான காளியே அமிருதத் தன்மையளிப்பவள்; லோகமாதாவாகிய அவள், ஆசாபிசாசத்தினால் பிடிக்கப்பட்ட மனிதனுக்கு மரணத்தை யளிக்கிறாள்; இன்று ஜகப்பிரக்யாதியும் சிறப்பும் வாய்ந்த மனிதனை நாளை அநாமதேயப் பேர்வழியாக்கி விடுகிறாள்; இன்று எவருமறியாமல் எங்கோ ஒரு மூலையில் லக்ஷக்கணக்கான ஜனங்களுக்குள் ஒருவரா யிருப்பவரை நாளை பிரபஞ்சம் முழுதும் புகழும்படியான பெயரெடுக்கும்படி செய்து விடுகிறாள். அவள், சம்சார சந்நியாசியாகிய மகாதேவனுக்கேற்ற மனைவியாகி, இவ்வண்டபிண்ட சராசரங்களையெல்லாம் ஈன்றுகொண்டிருந்தும், நித்தியகுமரியா யிருக்கிறாள். அவளுடைய பயங்கரமான வடிவங்களைப் பார்த்த பின்னர், மனமானது நாமரூபாதீதமான ஈச்வரனுடைய அக்ஷயப் பிரக்ஞையை நாடுகிறது. "காளி—சிவம், சிவம்—காளி". லக்ஷியத்தினிடத்தே சென்று பார்க்கையில் இவை



யிரண்டும் ஒன்றேயா யிருக்கின்றன. இக் காரணத்தை முன்னிட்டே, இவ்விருவரும் புருஷனும் மனைவியுமெனப் பொது ஜனங்களால் கற்பித்துக்கொள்ளப்படுகிறார்கள்; ஆனால், தத்துவவிசார புருஷனுக்கு இவ் விருவரும் மனிதனால் அடையப்படவேண்டிய கடைசி லக்ஷியத்தைக் குறிப்பிடுகின்றனர். சரீரம் உளது, பந்தம் உளது என்ற எண்ணங்களினின்றும் விடுபட்ட பரிசுத்தப் பிரக்ஞையே சிவமாம்; மகாகாளியானவள் எவராலும் அறியவொண்ணாத தனது பயங்கரங்களினாலே கனவுகளெல்லாவற்றினுடையும் எல்லைப்பாடுகளையும் மாறுதற்றன்மையையும் நிரூபித்து விடுகிறாள். அவள், உமா - கௌரி — ஹைமாவதி யெனப் பெயர்பெற்றிருக்கிறாள். அவளுடைய வடிவங்களினால் அறிபடுகின்ற பயங்கரமான பிரளயத்தினாலே, ஐம்புலன் மயக்கத்தை யறவே யொழித்துவிட்டு, ஆழ்ந்து அமிழ்ந்து செல்லத் துணிகின்றவனுக்கு அவள் அன்பே யுருவா யமர்கிறாள்; சத்திய சமுத்திரமாகத் தோன்றுகிறாள். பக்தன் அவளில் சச்சிதானந்த சொரூபத்தைப் பார்க்கிறான்; பக்தன் அவளில் நித்தியமான, அமிருதமான சிவத்தைத் தர்சிக்கிறான். அவள் அகண்டமான அழகையும் ஆனந்தத்தையும் நாலா பக்கங்களிலும் வீசுகிறாள். அவளும் சிவமும் ஒன்றேயாம். பிரபஞ்சம் முழுதுமே அவளுடைய கர்ப்பத்திலிருந்து வெளிவந்திருக்கிறது. எல்லோரும் காலத்துக்கும் மரணத்துக்கும் மாறுதலுக்கும் உட்பட்டவர்களேயாம். இக் கனவுகளுக்கெல்லாம் காரணமாயிருப்பவள் அவளே யென்று அறிந்துகொள்பவனே ஆனந்த புருஷனாம். இந்த

ஞானம் உதயமாய்விட்டால், அவன், மாதாவாகிய மகாகாளி நிர்த்தனம் செய்வதுபோல, தானும் நிர்த்தனம் செய்து கும்மாளம்போடத் தொடங்கிவிடுகிறான்; காலத்தின் எல்லையைக் கடந்து, நித்தியத்துவத்திலே பிரவேசிக்கிறான், மரணத்தன்மையைக் கடந்து அமிருதத்துவம்அடைகிறான்.

ஜனனமரணத் தாரகத்தட்டைக் கையிலே வைத்திருப்பவள் மகாகாளியே; அவளுடைய ஆக்ஞையின்பேரிலேயே, பிரபஞ்சசிருஷ்டி யாரம்பிக்கிறது; அவளுடைய ஆக்ஞையின்பேரிலேயே அது அழிவையும் அடைகின்றது; இத்தகையதென்று உரைக்கப்பட முடியாது, எல்லாவற்றையும் கடந்து நிற்கும் உபசாந்தியும் அவளேயாம்; எல்லா வஸ்துக்களிலும் நான் மாதாவையே பார்க்கிறேன்; சமஸ்த ஜீவராசிகளுக்குள்ளும் சர்வாந்தர்யாமியா யிருப்பதும் அவளேயாம்; விகாரமும் காலமும் மரணமும் அறிவுமே அவளுடைய லக்ஷணங்களா யிருப்பினும், இவப் பிரஹ்மமாகிய நித்திய சத்தியம் அவளேயாம்; கங்கைகூட மாதாவினுடைய ஒரு வடிவமேயாம்; பிரஹ்மவாரியேயாம்; [ஒரு சமயத்திலே ஸ்ரீராமகிருஷ்ணர் மிருகக்காக்ஷிச் சாலையைப் பார்க்கச் சென்று, அங்கே ஒரு கூண்டினுள்ளே ஒரு சிங்கமானது கம்பீரமாக உலாவுவதைக் கண்டவுடனே, ஜகன்மாதாவினுடைய வாகனம் சிங்கம் என்ற ஞாபகம் அவருக்கு உண்டாயிற்று; உடனே அவர் நின்றது நின்றபடியே மெய்மறந்து சமாதியஸ்தராய்விட்டார்]—இதுவெல்லாம் மாதாவினுடைய அம்சங்களேயாம்; இவை பிர



பஞ்சம் முழுதும் வியாபித்துக், கடைசியில் நித்திய மகா சமுத்திரத்திலே சென்று லயமடைகின்றன; எல்லாவற்றுக்கும் அதீதமாகவும் சமஸ்தரூபமாகவும் அவள் பரம சத்தியத்தின் சக்தி சொரூபமாக இருக்கிறாள்; அக்கினியும் அதன் சூடும் போலவும், பாலும் அதன் வெண்மையும் போலவும், பிரஹ்மமும் சக்தியும் ஒன்றே; ஏக சத்தியமே நிச்சலனமா யிருக்கிறபொழுது பிரஹ்மமெனப்படுகிறது; சலிக்கின்றபொழுது சக்தியெனப்படுகிறது; அவள் வாக்குக்கும் நினைப்புக்கும் அதீதமாயிருக்கிறாள்; அவளே வேத வேதாந்தங்களிலே கூறப்பட்ட பிரஹ்மமேயாவள்; ஆதலால், நான் சகுணத்திலே மாதாவை ஆராதித்தபொழுதிலும், அந்த மாதாவே நிர்க்குணப் பிரஹ்மமென அறிகின்றேன்."

இவ்விதமாக ஸ்ரீ ராமகிருஷ்ணர் தோதாபுரியாரிடத்தில் விடைகூறவே, தோதாபுரியாருக்கு இப்பொழுது தான் சகுணோபாசனையின் மகிமை விளங்கிற்று. உடனே சகுணோபாசனை மார்க்கத்திலே தோதாபுரியார் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் உபதேசம் பெற்றுக்கொண்டார். ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு வேதாந்தோபதேசம் செய்வதற்கு வந்த தோதாபுரியார் சகுணோபாசனை மார்க்கத்திலே ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு சிஷ்யரானார். தோதாபுரியாரிடமிருந்து வேதாந்த ரகஸ்யங்களை யெல்லாம் ஸ்ரீ ராமகிருஷ்ணர் தெளிவுறத் தெரிந்துகொண்டார். தோதாபுரியாருக்கு இப்பொழுது வயது சுமார் அறுபது இருக்கலாம்.

இவர் இதற்குமுன் நாற்பது வருஷகாலமாக ஞானமார்க்கத்திலே நடந்துவந்திருக்கிறார். இந் நெடுங்காலத்தில் எச்சமயத்திலும் எக்காரணத்தை முன்னிட்டும் இவர் ஓரிடத்திலும் மூன்று நாட்களுக்குமேல் தங்கினவரல்லர். இப்பொழுது இவருக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணரிடத்திலே ஏற்பட்ட வாற்சல்ய மிகுதியினாலே அவருடன் சுமார் பதினொரு மாதகாலம் வரையில் வசித்தார். இக் காலத்துக்குள்ளாக, இவர் ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு உபதேசிக்க வேண்டியதை உபதேசித்துவிட்டு, தம்மிடத்தில் குறைவாயிருந்ததையும் அவரிடமிருந்து பெற்றுக்கொண்டு, ஸ்ரீ ராமகிருஷ்ணரிடத்தில் விடைபெற்றுச் சென்றார். ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குத் தோதாபுரியார் தத்துவஞானத்தை விளக்கிக்கொடுத்தாரென்பதும் உண்மையே; ஸ்ரீராமகிருஷ்ணரிடமிருந்து அவர் தத்துவஞானத்தை விளக்கமாகத் தெரிந்துகொண்டு சென்றார் என்பதும் உண்மையே.

---

## 9-ம் அத்தியாயம்

## ஒன்றேயுள்ளது

[ஏகம் சத்]

ஸ்ரீ ராமகிருஷ்ணர் தோதாபுரியாரிடமிருந்து அறிந்த வேதாந்த ரகஸ்யங்களையெல்லாம் அநுபவத்தில் கொண்டுவர முயன்றார். "ஏகம் சத்; விப்ரா பெகுதா வதந்தி" "ஒன்றே யுள்ளது; பெரியோர் (அதைப்) பலவித



மாகக் கூறுகின்றனர்." இந்தச் சுருதி வாக்கியம் உண்மைதானாவென்று பரீக்ஷிக்கப் புறப்பட்டார். உலகிலே மதங்களெல்லாம் மனிதனை—அஞ்ஞான அந்தகாரத்திலே அகப்பட்டு உழன்று திண்டாடுகின்ற மனிதனை—சமஸ்த உபசாந்தப் பதவியில் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்குள்ள மார்க்கத்தையே போதிக்கின்றன. ஒன்றே ஆநந்த நிலையாம். ஆகையால், இம்மதங்கள் உண்மையில் ஆநந்தத்தை யளிக்கத் தக்கனவானால், மனிதனை அவ்வொரு பொருளிடத்தேயே கொண்டு செல்லவேண்டும். மதங்கள், ஆநந்தப் பொருளினிடத்து இட்டுச்செல்லும் மார்க்கங்கள் என்பதில் சற்றும் சந்தேகமில்லை; ஏனெனில், அம் மதஸ்தாபகர்களெல்லோரும் ஆநந்த புருஷர்களாயிருந்ததுமன்றியில், தங்களுடைய ஆநந்தாநுபவத்தையும் அதையடைவதற்குள்ள மார்க்கத்தையுமே போதித்திருக்கிறார்கள். ஆனால், அப்பெரியோர்கள் போதித்துள்ளார்கள்; ஆதலால், நாம் அதைக் கண்மூடித்தனமாகப் பின்பற்ற வேண்டுமென்பது தப்பு. அவை அவர்களுக்கு உண்மையையும் ஒளியையும் ஆநந்தத்தையும் அளித்தன வென்பது உண்மையானால், அவை நமக்கும் அப்படியே உண்மையையும் ஒளியையும் ஆநந்தத்தையும் அளிக்கவேண்டும். ஆகையால், நாம் அவர்கள் சென்ற மார்க்கங்களைப் பின்பற்றி, அவற்றினின்றும் அணுவளவும் வழுவாது சென்று அவற்றை ஆய்ந்து பரீட்சித்துப் பார்க்கவேண்டும். அவை நமக்கும் அபேக்ஷித பலனை அளிக்காவிட்டால், அவற்றை நாம் நிராகரித்துவிடலாம்.

ஆகையால், ஸ்ரீராமகிருஷ்ணர் நமது இந்தியா தேசத்திலேயுள்ள பற்பல மதங்களையும் ஆய்ந்து பரிசோதித்து, அநுபவ பூர்வமாக உண்மையைக் கண்டுபிடிக்க முயன்றார். முதலாவது: வைஷ்ணவ மதத்தைப் பின்பற்றி நடக்க ஆரம்பித்தார்; பக்தி யோகத்தாலேயே ஈச்வரன் அடையப்படத்தக்கவ ரென்றும், முக்திக்கு பக்தி மார்க்கமே மார்க்கம், வேறுமார்க்க மில்லையென்றும் கொண்டார். இந்த பக்தி மார்க்கத்திலேயே பலவித அநுஷ்டானங்கள் உண்டு.

## 1-வது. ஸேவ்ய ஸேவக பாவம்

அதாவது, சாக்ஷாத் ஈச்வரன் ஆண்டா னென்றும், தான் அடிமை யென்றும் கருதிக்கொள்ளும் தன்மை. "பரமேச்வரா! ஜகந்நாதா! தேவதேவா! திரிபுவனப் பிரபு! நீயே சர்வவல்லமை வாய்ந்தவன்! மகத்துக்கு மகத்தானவன்; அணுவுக்கு அணுவானவன்; உன்னுடைய ஆக்ஞையினாலே இப்பிரபஞ்ச சக்கரம் சதா சுழன்றுகொண்டிருக்கிறது; மகாப்பிரபோ! உன்னுடைய சிருஷ்டியின் அற்புதங்கள்தான் என்னே! அழகிய பல வர்ணங்கள் அனைத்தையும் ஒரு புஷ்பத்தினிடத்திலே அல்லது ஒரு பக்ஷியினிடத்திலே புகுத்தி ஆச்சர்யகரமான செய்கையைச் செய்துவருகிறாய்! எண்ணில்லாத அண்டகோளங்களையெல்லாம் ஆங்காங்கு அமைத்து, அவற்றை யொன்றுக்கொன்று சம்பந்த மில்லாமற் செய்து, அவற்றை யாங்காங்கு அந்தரத்தில் நிறுத்தி வைத்திருக்கும் உன் வல்லமையை எவரே கூறவல்லார்? அழகிலே யாநந்தமுள்ளது;



அவ்வழகெல்லாம் உன்னிடத்திலே யுள்ளது; ஆதலால், ஆநந்தத்துக்கும் நீயேதான் ஆதிகாரணாய்; நானோ ஒரு புழுப்போன்றவன்; உன்னுடைய ஏவலை எதிர்பார்த்து நிற்கும் நாய்க்குட்டி போன்றவன்; என்னைக் காத்து ரக்ஷிக்க மாட்டாயா? உன்னிடத்திலேயுள்ள ஆநந்தாமிருதத்திலே ஒரு சிறு பாகமேனும் எனக்கு அளித்து, நான் அநுபவிக்கும் துக்கமும் துன்பமுமாம் அஞ்ஞானத்தைப் போக்காயா? நான் உனக்கு அடிமையல்லவோ? நீ எனது ஆண்டானல்லையோ? உன்னைவிட்டால் எனக்கு வேறு புகலிடம் ஏது? என்னப்பனே! என்னைக் கைவிடாதே; எந்தன் பிரபுவே! கோடாநு கோடி ஜீவராசிகட்கு வேண்டியதையெல்லாம் கொடுத்து ரக்ஷிக்கும் கோலாகலனே! என்னைக் கைவிடாதே; என்னை உய்விப்பாய்; என்னை உய்விப்பாய்."

## 2-வது, மித்ரபாவம்

அதாவது, அந்யோந்யம் அந்தரங்க அன்பு மிகுந்த நண்பர்களி னுடையதுபோன்ற தன்மை. உண்மை நட்பு வாய்ந்த நண்பர்கள் அந்யோந்ய அன்பு மிகுதியினாலே ஒருவரை விட்டு மற்றவர் பிரியார். இருவரும் எப்பொழுதும் ஒன்றா யிருந்தாலே அவர்களுக்கு ஆனந்தம் ஏற்படுகிறது. ஒருவருடைய மனத்திலிருந்து மற்றவர் எதையும் மறைத்துவைத்துக்கொள்கிறதில்லை. இரு நண்பர்களும் எக்காலத்திலும் எவ்விடத்திலும் ஒன்றே. "ஏ, ஈச்வரா! நீ எனக்குப் பண்டையத் தோழனல்லவா? என்னை நீ கைவிடலாமா? அதுவும், இச்சமயத்தில் கைவிடலாமா? நாம் கட்டி

யுருண்டு ஒன்றுசேர்ந்து விளையாடின விளையாட்டை யெல்லாம் மறந்துவிட்டாயா? உன்னிடமிருந்து நான் இதுவரையில் ஏதேனும் ஒளித்ததுண்டோ? எனக்குத் துக்கங்கள் நேர்ந்த காலையிலெல்லாம்; நான் அவற்றை உன்னிடம் தானே சொல்லிச்சொல்லி யாற்றிக்கொள்கிறேன்; உன்மைத் தோழன் நீ ஒருவனிருக்க எனக்கென்ன பயம்? என் ஹிருதயத்தைத் திறந்து உனக்கு விட்டுவிட்டேன்; நீ ஏன் வரத் தாமதிக்கிறாய்?''

### 3-வது, பிதுர் புத்திர பாவம்

அதாவது, பிதாவுக்கும் புத்திரனுக்கும், அல்லது மாதாவுக்கும் புத்திரனுக்கும் உள்ளதுபோன்ற தன்மை. இதுதான் மகான் இயேசுகிறிஸ்து பின்பற்றிய மார்க்கம்; இதுதான் ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கும் பிரத்தியேகமாகப் பின்பற்றி வந்த மார்க்கம்.

''பிதாவே! நீயே இவ்வுலகங்களெல்லாவற்றுக்கும் பிதா; எனக்கும் பிதா; நானோ ஏதுமறியாக் குழந்தை; என் குற்றங்களை யெல்லாம் மன்னித்து என்னை ஈடேற்ற வேண்டியதும், எனக்கு வேண்டியன அளிக்க வேண்டியதும் உனது கடமையன்றோ? உன்னுடைய சொத்துக்கள், ஸ்வதந்திரங்கள் எல்லாவற்றுக்கும் நான் பாத்தியப்பட்டவனல்லவா? அவை யெல்லாம் எனக்குச் சேரவேண்டியதுதானே; நீயும் நானும் ஒன்றேயன்றோ? ''நானும் என் பிதாவும் ஒன்றே'' என்று இயேசுகிறிஸ்து கூறியது பொய்யையன்றே.



''இவ்வீரேழு பதினான்கு உலகங்களையும் ஈன்றெடுத்த தாயே! நாங்கள் வெறிகொண்டு காமக்கூத்தாடி, ஊர் சிரிக்க—நாடு சிரிக்க—உலகம் சிரிக்க உழலுவது உனக்குப் பார்க்க நன்றாயிருக்கிறதோ? பிரபஞ்சப் பாலுண்டு பேய் போலாடிப் பித்துப்பிடித்துத் திரியுமெனக்கு அமிருதமாம் உனது ஸ்தந்யப்பால் கொடுத்து ஆதரிக்கமாட்டையோ? ஐயகோ, நான் என்செய்வேன்? பெற்ற தாய் துறந்தால், பிள்ளையை ஆதரிப்பவர் யார்? நான் ஓடி யாடி உல்லாசமாயிருக்க இச்சிக்கின்றேன். என் அம்மையே! என் இறைவியே! எனது இச்சை நிறைவேறுமாறு கிருபைபுரிவாய்.''

### 4-வது, குரு சிஷ்ய பாவம்

அதாவது, குருவுக்கும் சிஷ்யனுக்கு முள்ள அன்பு போன்ற தன்மை. குரு தமது சிஷ்யனைத் தமது சொந்த புத்திரன்போல, தமது சொந்த ''செல்லக்'' குழந்தை போலக் கருதுகிறார்; மெல்லமெல்ல உபதேசம் செய்து அவனைத் தம்முடன் ஒற்றுமைப்படுத்திக்கொள்கிறார். சிஷ்யனும் தனது உயிர் குருவினிடத்திலேயே உள்ளது போல, குருவைத் தன்னுடைய உயிருக்கும் உயிராக மதித்து, ஈச்வரனாகவே கருதிப் போற்றி செய்கிறான். இத்தகைய குரு சிஷ்யர்களுக்குள்ளே யுள்ள ஒற்றுமைத் தன்மை ஆச்சர்யமானது. ஈச்வரனிடத்தும் இத்தகைய பக்தி செலுத்துவதே குருசிஷ்யபாவம் எனப்படும்.

### 5-வது, நாயகீ நாயக பாவம்

அதாவது, ஓர் உத்தம பதிவிரதா சிரோன்மணியானவள் எப்படி மனம், வாக்குக், காயம் ஆகிய திரிகரணங்களா

னும் சதா சர்வதாகாலமும் தன்னுடைய புருஷனுக்குப் பணிவிடை செய்வதையும், அவனை நினைந்து தியானம் செய்வதையுமே கருத்தாகக் கொண்டிருப்பாளோ, அப்படியே பக்தனும் மனம்—வாக்கு—காயம் ஆகிய திரிகரணங்களாலும் சதா சர்வதா காலமும் தன்னுடைய இஷ்ட தேவதையைப் பூஜித்தலையும் தியானம் செய்தலையுமே கருத்தாகக் கொண்டிருப்பான். சாக்ஷாத் பரமேச்வரனே புருஷோத்தமன் எனப்படுவான். அவனே புருஷன்; மற்ற ஜீவராசிகள் அனைவரும் ஸ்திரீகளே யாவர்; அவனைக் கட்டியணைந்து கலந்து இரண்டற லயித்துக்கொண்டாலொழிய ஆநந்தமடைதல் அரிது. நாயகீ நாயக பாவத்திலே தியானிப்பது மிகவும் உத்தமமான பக்தியென்று வைஷ்ணவ சித்தாந்தத்திலே கூறப்பட்டுள்ளது. இத்தன்மைய பக்தி நெறியைப் பின்பற்றியே, பிருந்தாவனத்துக் கோபிகாஸ்திரீகள் உலகப் பற்றுக்களெல்லாவற்றையும் ஒழித்து, ஒருவனேயாயிருந்தும் பல இடங்களிலும் தோன்றிய ஸ்ரீ கிருஷ்ணனை ஒரு மனதா யாராதித்து முக்தியடைந்தனர். ஸ்ரீ ராதாதேவியும் அவ்வாறே சாக்ஷாத் பகவானைத் தனது புருஷனைக் கருதி நாயகீ நாயக பாவபக்தியைப் புரிந்து சாலோக, சாமீப, சாரூப மேலான சாயுஜ்ய பதவியை யடைந்தான். ராதையினுடைய பக்தியை வர்ணித்துக் கூறும் நூல்களில் அடங்கியுள்ள உண்மையைப் பாமரர்கள் அறிந்துகொள்வது அரிது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் ராதையினுடைய பக்தியைப்போல பக்தி செலுத்தக் கருதி, பெண் வேஷம் போட்



டுக்கொண்டு, சாக்ஷாத் பகவானைத் தமக்கு நாயகனாக வரித்து, அவரையே தியானித்து ஆநந்தித்தார்.

“நாதா! நீதானே எனக்குக் கதி; வேறு எவர் உளர்? நீ ஏன் என்னை நிமிர்ந்து பார்க்கமாட்டேனென்கிறாய்?” நீ ஏன் என்னுடன் உரையாடுகின்றதில்லை? நீ ஏன் என்னுடன் சரசம் செய்கின்றதில்லை? ஏன் இவ்வளவு வெறுப்பு என்னிடத்தில்? ஐயோ, உந்தன் பொன்வாயைத் திறந்து ஒரு பேச்சுப் பேசலாகாதா? உன்னைத்தவிர ஒருவரையும் நான் ஒரு நிமிஷத்திலும் கனவிலும் கருதியவளல்லள். என்னிடத்தில் என்ன குற்றங்கண்டு நீ இப்படிப் பராமுகமாயிருக்கின்றாய்? எனது திரிகரங்களுமறிய நான் எக்குற்றமும் செய்ததில்லை. நான் அறியாமல் ஏதேனும் குற்றங்கள் புரிந்திருந்தால், அவற்றை க்ஷமிக்கவேண்டியது உந்தன் கடமையல்லவா?

“எனக்கு மணவாளன் நீயேயென்று நான் எனது ஹிருதயத்திலே சங்கற்பித்துக்கொண்டு மனமாகிற தூதனை உன்னிடம் அனுப்பிவைக்க, நீயும் விவாகம் செய்துகொள்ள இசைவதாகச் சொல்லியனுப்பினையே. இப்பொழுது எத்தனையோ நாட்களாய்விட்டனவே! நீ பராமுகமாயிருக்கின்றாயே. மனமாகிற தூதனை நான் மறுபடியும் மறுபடியும் உன்னிடம் அனுப்ப, சில சமயங்களிலே நீ ஒளிந்துகொள்கிறாயாம்; அவனுடைய கண்ணுக்கு அகப்படுவதில்லையாம்; சிலசமயங்களிலே—அவனுக்குத்தென்பட்டுவிட்டபொழுது—அவனுக்கு ஆசை வார்த்தைகள் பல காட்டி அனுப்பிவிடு

கிருபாய்; அவ்வாசை வார்த்தைகளுக்கும் அவன் இணங்காத சில சமயங்களிலே அவனுடன்கூட வருவதுபோலச் சிறிது தூரம் வந்து அவன் அயர்கிற சமயம் பார்த்து நீ மறைந்துவிடுகிறாயாம். இஃதெல்லாம் உனக்கே நன்றாயிருக்கிறதோ? உண்மையையும் உரைத்து விடுகிறேன். இப்படிப் பராமுகமாயிருக்கும் நீ, எவரும் அறியாமல் இரவிலே வந்து, என்னை வலுவிலே பிடித்திழுத்து, என்னுடைய கற்பைக் கெடுத்து எனக்கு இன்பமும் கொடுத்து, உன்னைத் தவிர, நான் வேறெவரையும் ஏறிட்டுப் பாராமலிருக்கும்படி செய்துவிட்டுப் போனது நியாயமோ? நாதா! ஜகந்நாதா! உடனே வருவாய்! தர்சனம் தருவாய்!

"ஆ! ஆ! இரவாய்விட்டதே; இதோ வருகிறேன் என்று போன எனது நாதன் இன்னும் வரக்காணேனே; என்னைச் சுற்றி எங்கும் இருள் சூழ்ந்து இருக்கிறதே. இவ்விருளில் நான் என்ன செய்வேன்? எனக்குப் பயமாயிருக்கிறதே. எவ்வளவு நேரமாய்விட்டதே. எனது நாதனுடைய வருகையை எட்டி எட்டிப் பார்த்து எனது இரண்டு கண்களும் பூத்துப்போய்விட்டனவே.

"எனது பிராணேசன் அஞ்சாநெஞ்சம் படைத்த அசகாயசூரன்; ஆயினும், இரக்கமே உருவாகக் கொண்ட ஈரநெஞ்சினன்; அவனே இவ்வுலகங்களுக்கெல்லாம் அதிபதி; அவனுடைய ஆக்ஞையே காலசக்கரம்; இவ் வீரேழு பதினான்கு உலகங்களும் அவனுடைய சக்ராதிபத்தியமே. அவனே ராஜாதிராஜன், தேவதேவன், ஜகத்பதி."



இம்மாதிரியாக இவர் வைஷ்ணவ சித்தாந்தத்தை யநுஷ்டானத்தில் அப்பியசித்துக்கொண் டிருந்தபொழுது, இவர் வைஷ்ணவர்களைப்போல திரிபுண்டர நாமங்கள் தரித்துக்கொண்டார். வைஷ்ணவ ஆசார விதிகளையெல்லாம் அநுசரித்தார். ஸ்ரீ ராமாநுஜாச்சார்யாருடைய போதனைகளை அக்காலத்து வைஷ்ணவ ஆசார்யர்களிடம் சிரவணம் செய்து தீர்க்கவிசாரணை செய்துபார்த்தார். சின்னாட்கள் வீர வைஷ்ணவத்தைப் பின்பற்றிச், சிவன் என்ற பெயரே காதில் விழவொட்டாது, விஷ்ணுவும் விஷ்ணுவின் அவதாரங்களுமே உலகத்தை உய்விப்பவர்கள் என்ற கருத்தைத் தீர்க்கமாகக் கொண்டிருந்தார். இவ்விதமாக வைஷ்ணவ மதத்தை அதன் நானா வழிகளிலும் பின்பற்றி எள்ளளவும் பிசகாது அநுஷ்டித்துப் பார்க்கவே, அவருடைய யோக நிஷ்டையும் அத்வைத அநுபவமும் எம்முடிவுக்கு இட்டுச் சென்றனவோ அம்முடிவுக்கே வைஷ்ணவ மதமும் இட்டுச் செல்கிறது என்பதை யநுபவத்தில் கண்டு கொண்டார்.

பின்னர் ஸ்ரீராமகிருஷ்ணர் பௌத்தமதத்தை யநுசரிக்கலானார்; தமது இஷ்ட தேவதைகளை யெல்லாம் அடியோடு மறந்தார்; தாம் அருமையாகத் தமது இளம்வயதிலிருந்து போற்றிவந்த காளி தேவியைக் கூடக் கனவிலும் நினைப்பதில்லை; ஜீவகாருண்யமே பெரிதென்றார். அதற்குப் பின் ஸ்ரீ ராமகிருஷ்ணர் சமணமதத்தை யநுசரித்து, சமணர்கள்போன்று நடையுடை பாவனைகளை யெல்லாம் வகித்

துக்கொண்டு, சாயுங்காலத்துக்கு முன்னமேயே சாப்பிட்டு விடுவார்; அவர் உடம்பிலேயுள்ள அழுக்கு அரைமைல் தூரம் நாற்றம் வீசும். சமணர்கள் சரீரத்தைக் கழுவவே மாட்டார்கள். ஏனெனில், சரீரத்திலே பற்றியிருக்கும் பேன்முதலிய ஜந்துக்கள் மரித்துவிட்டால் என்செய்வது? அவ்வளவு ஜீவகாருண்யப் புலிகள் அவர்கள். தமது ஜடையை அவிழ்த்துக் கால்கள்வரையில் தொங்கவிட்டுக் கொண்டார்; எங்கேனும் நடப்பதென்றால், பெரிய மயிற் பீலிகளைப் சம்பாதித்து வைத்துக்கொண்டு, அவற்றால் தெருக்களைப் பெருக்கிக்கொண்டே நடந்துசெல்வார். அதாவது, வேறு எதனாலாவது பெருக்கினால், தெருக்களிலே ஊர்கின்ற எறும்புமுதலிய ஜந்துக்கள் மரித்துவிட்டா லென்செய்வது? மயிற்பீலிகள்கொண்டு பெருக்கினால் எவ்வளவு சிறிய பிராணியேயாயினும் ஹிம்சை யுண்டாகா தென்பது சமணர்களுடைய துணிபு. ஸ்ரீ ராமகிருஷ்ணர் அருகக்கடவுளை ஆயிரம்தடவை அடியற்ற மரம்போல் வீழ்ந்து வீழ்ந்து வத்தினார். ஆ! என்ன மூடர்கள் சமணர்கள்! கீழே ஊர்கின்ற எறும்புக்கும் இம்சை யிழைக்காத அவ்வளவு ஜீவகாருண்ய சொரூபிகள்! மனிதனுடைய சுவாசத்தின் மூலமாக எத்தனை லக்ஷம் ஜீவராசிகள் கொல்லப்பட்டு வருகின்றன? சஞ்சரித்துக்கொண்டேயிருக்கின்றன. மனிதனைச் சுற்றிலும் ஆகாயத்திலே மிக மிக நுட்பமான, சாதாரணப் பார்வையினால் காணமுடியாத, எத்தனை லக்ஷக்கணக்கான ஜீவராசிகள் பறந்துகொண்டேயிருக்கின்றன! மனிதன் தனக்குத் தெரியாமலே, தனக்கு



இச்சை யில்லாமலே, இவற்றில் எத்தனை லக்ஷத்தைக் கொன்றுகொண்டே யிருக்கிறான்! உலகிலே ஜீவனில்லாத பொருள் என்று ஒன்று இருக்கிறதா? ஆகையினால், சமணர்களுடைய ஜீவகாருண்ணியக் கொள்கை மெச்சப்படத் தக்கதேயாயினும், அவர்களுடைய புத்தி சக்தி அவ்வளவு வியக்கத்தக்கதன்று.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் சைவ சித்தாந்தக் கொள்கையை யநுசரிக்க ஆரம்பித்தார்; பதிபசுபாச நியாயங்களை ஆய்ந்து அறிந்துகொண்டார்; உச்சந்தலைமுதல் உள்ளங்கால் வரையில் பஸ்மோத்தூளனம் செய்துகொண்டார்; ருத்திராக்ஷ மாலைகளை அங்கங்களில் தரித்துக்கொண்டார். சின்னாட்கள் வீரசைவத்தை யநுசரிக்க ஆரம்பித்து, விஷ்ணுவினுடைய நாமங்களைக் கனவிலும் எண்ணாதிருந்தார்; இது மாத்திரமன்று, விஷ்ணுவினுடைய நாமங்கள் பாபத்தை விளைவிக்கத் தக்கனவென்றுகூடத் தம்மனம் சங்கற்பித்துக்கொள்ளுமாறு செய்துகொண்டார். கடைசியாக இவ்வெல்லா மதங்களும் இட்டுச் செல்கின்ற முடிபுநிலை யொன்றே யென்பதை யநுபவ பூர்வமாகக் கண்டுகொண்டார்.

இனிமேல் ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஹிந்து மதத்துக்குப் புறம்பே யுள்ளதெனக் கூறப்படுகின்ற மகம்மதியமதம், கிறிஸ்தவமதம் முதலியவற்றிலும் நுழைந்து அம் மதங்களின் உண்மைகளையும் அநுபவ பூர்வமாகப் பரிசோதித்துப் பார்த்து, அவையும் அவ்வொரே லக்ஷியத்தினிடம்தான் இட்டுச் செல்கின்றனவா? என்று பார்க்க விரும்பினார்.

## 10-ம் அத்தியாயம்

## பிறமதங்கள்

ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய விஷயத்தில் ஒரு விசேஷம் என்னவென்றால், எந்தமதக் கொள்கையை இவர் அறிந்துகொள்ள இச்சைப்பட்டாரோ அந்த மதத்திலே தேர்ந்து கரைகண்ட ஒருவர் இவரிடம் வந்து இவருக்கு அந்த மத தர்மங்களை யெல்லாம் போதித்துச் செல்வது வழக்கமா யிருந்தது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் இப்பொழுது மகம்மதிய மதத்தை ஆராய விரும்பினார்; மகம்மதிய மதத்திலே ஒரு ஆசார்யராகிய மௌல்வி யொருவர் அவரிடம் வந்து அவருக்கு மகம்மதிய மதத்தைச் சாங்கோபாங்கமாக எடுத்து விளக்கினார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் மகம்மதியர் போன்று தலையை மொட்டை யடித்துக்கொண்டார்; தாடி வைத்துக்கொண்டு, அதைக் கத்தரித்து விட்டுக்கொண்டார்; சுன்னத்தும் செய்துகொண்டார்; எல்லோரும் ஏகமே யென்பதை யுணர்ந்துகொண்டார்; அவர்களுடைய பிரார்த்தனையின் பொருளைத் தெரிந்துகொண்டார்; பஞ்சாவின் உண்மையை அறிந்துகொண்டார். சாதாரணமாக உலகத்தவருக்குத் தெரிந்ததைப் பார்க்கிலும், சாதாரணமாக மகம்மதியத் தலைவர்களுக்குத் தெரிந்துள்ளதைப் பார்க்கிலும் அதிகமாகவேதான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் மகம்மதிய மதத்தைத் தெரிந்துகொண்டார். மகம்மதியமதமும் தாம் இது வரையில் அநுபவத்தில் பார்த்துள்ள லக்ஷியத்துக்கேதான் இட்டுச் செல்கின்றது என்பதைத் தெரிந்துகொண்டார்.



பின்னர்க் கிறிஸ்தவமதத்தை ஆராய ஆரம்பித்தார். கிறிஸ்தவமதத்தை மகாபக்தியுடனே பின்பற்றி யொழுகிய ரோமன் கத்தோலிக் கிறிஸ்தவ உபதேசி யொருவர் ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குக் கிறிஸ்தவ வேத புத்தகமாகிய பழய ஏற்பாடு புதிய ஏற்பாடு ஆகிய இரண்டினுடையவும் உண்மைகளை யெடுத்து விளக்கிக் காட்டினார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் கிறிஸ்தவமத தத்துவங்களை யெல்லாம் நன்று யறிந்துகொண்டார். பழய ஏற்பாட்டிலே கடவுள், "என் பெயர் நானாயிருக்கிற நானே" என்றார். உண்மையே. "இவ் வண்டபிண்ட சராசரங்களெல்லாம் நானாகவே யிருக்கிறேன்." "என்னைத்தவிர மற்றிங்கேதுமில்லை என்னானை— பொன்னைத்தவிர விலாப் பூடணம்போல்" நான் ஒருவனே உள்ளவன்; ஆகையால், சமஸ்தமும் நானாயிருக்கிற நான் ஒருவனே யுள்ளவன்; நானே ஆத்மா; மற்றவையெல்லாம் அநாத்மா. ஹிந்துமதத்திலே கூறப்பட்ட பிரஹ்மத்தினுடைய லக்ஷணத்துக்கும் இங்குப் பழய ஏற்பாட்டிலே கூறப்பட்ட கடவுளுடைய லட்சணத்துக்கும் ஒரு வித்தியாசமும் கிடையாது.

"புதிய ஏற்பாட்டிலே, இயேசு கிறிஸ்துவினுடைய நான்கு சிஷ்யர்கள் தனித்தனியே இயேசுவினுடைய சரித்திரத்தையும் அவருடைய உபதேசங்களையும் தெள்ளிதில் எழுதிவைத்திருக்கிறார்கள். இவர்களிலே ஜான் என்பவன்தான் இயேசுகிறிஸ்துவுக்குப் பிரத்தியேக பிரியமுள்ள சிஷ்யனாகத் தோன்றுகிறான். தவிர, இவன் ஒருவனே

இயேசுகிறிஸ்துவினுடைய தத்துவஞான பரிபாகத்தை அறிந்துகொள்ளும்படியான வல்லமை வாய்ந்திருந்ததாகத் தெரியவருகிறது. பாரிஸி என்ற ஜாதியார் இயேசுவினுடைய சிஷ்யர்களை நோக்கி, "உங்களுடைய குரு சாதாரண பொது ஜனங்களுடன் ஒரே பந்தியில் உட்கார்ந்து உண்கிறாரே" என்று கேட்க, இது இயேசுவினுடைய காதிலே கேட்டுவிட்டது. உடனே அவர் அந்தப் பாரிஸி ஜனங்களை நோக்கி, "ஆரோக்கிய திடகாத்திரம் வாய்ந்த சரீரமுள்ளவர்களுக்கு வைத்தியன் வேண்டியதில்லை; வியாதியஸ்தர்களுக்கே வைத்தியன் அவசியமாம். நான் புண்ணியம் செய்பவர்களுடன் பழக வரவில்லை; பாபிகளை அழைக்கவே வந்திருக்கிறேன்" என்றார். ஆ! ஆ! என்ன அற்புதமான மறுமொழி. இப்பொழுதிய தலைவர்கள் இயேசுகிறிஸ்துவினுடைய இப்பெருண்மையை மறந்துவிட்டார்கள். புத்தரும் சாதாரணப் பொது ஜனங்களிடம்தான் தமக்கு வேலையுள்ளது என்று சொல்லி, உயர்ஜாதியினுடையவும் (பிராஹ்மண ஜாதியினுடையவும்) பண்டிதர்களினுடையவும் பாஷையாகிய சமஸ்கிருதத்தை உபயோகிக்காமல், அக்காலத்தில் பொது ஜனங்களுக்குள்ளே சாதாரணமாக வழங்கிவந்த பாஷையாகிய பாலி என்னும் பாஷையிலேயே போதித்து வந்தார். இக்காலத்திலே, அதுவும் இந்தியா தேசத்திலே பொது ஜனங்களைக் கவனிப்பவர் எவர்? மேல்நாட்டு நாகரிகமாகிய கள்ளுண்டு தலைகால் தெரியாது சுற்றிப் பொதுஜன உபகாரிகளென டம்பத்துக்காகப் பெயர் வைத்துக்கொண்டு, ஆங்கில பாஷையையே ஸ்வய பாஷைபோலக்கொண்டு,



சகல நடவடிக்கைகளையும் நடத்துபவர்கள் உண்மையில் ஜனங்களிடம் அன்பு செலுத்துபவர்கள் ஆவார்களா?

"ஆ! ஆ! இயேசுகிறிஸ்து உலகுக்கு உபதேசித்த இன்னொரு உண்மை இன்னதென்று உங்களுக்குத் தெரியுமா? வாயினுள்ளே போகின்ற எதுவும் வயிற்றினுள்ளே சென்று அது மலமாகக் கழிந்துவிடுகிறதென்பது உங்களுக்குத் தெரியாதா? ஆனால், வாயிலிருந்து வெளியே போகின்றவைகள் ஹிருதயத்திலிருந்து வருகின்றன; அவைதான் மனிதனை அசுத்தனாக்கி விடுகின்றன. ஏனெனில், ஹிருதயத்திலிருந்தே தீய நினைப்புகள், கொலைகள், விபசாரங்கள், திருட்டுகள், பொய்ச்சாக்ஷிகள், ஈச்வரநிந்தனைகள் எல்லாம் புறப்படுகின்றன. இவைதான் மனிதனை அசுத்தப்படுத்துகின்றன. கை கழுவாது உண்டால், அதனால் மனிதன் அசுத்தனாய் விடுகிறதில்லை. வெளிவேஷத்தைப்—ஆஷாடபூதி வேஷத்தையே—பெரிதெனப் பாராட்டும் அறிவிலிகாள்! உலகின் உத்தமபுருஷர்களுள் ஒருவராகிய இவருடைய உபதேசத்தைக் கேட்டீர்களா! பிறர் மெச்ச வெளிவேஷங்கள் போடுவதினால் பயனில்லை; ஹிருதயத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்ளுங்கள்; நீங்கள் ஹிருதயத்தை எவ்வித அழுக்குமில்லாமல் சுத்தமாக வைத்துக்கொண்டால் ஹிருதயநிவாசனாகிய ஈச்வரனை நீங்கள் பிரார்த்தித்து அழைக்கவேண்டிய அவசியமில்லை; அவன் தானே வந்து தன்னுடைய யதாஸ்தானத்தில் உட்கார்ந்துகொள்வான்.

"இயேசுகிறிஸ்து போதித்த இவ்வுண்மை எவ்வளவு உண்மையென்பதைப் பாருங்கள். ஒரு தனவந்தன் ஈச்வரனுடைய ராஜ்யத்துக்குள்ளே நுழைவதைப் பார்க்கிலும் ஒரு ஒட்டகம் ஒரு ஊசித்துவாரத்தினுள்ளே நுழைதல் சுலபமாம். உடைமையென்னும் பிசாசினால் பிடிக்கப்பட்டவன், 'நான்', 'எனது' என்று அகங்கார—மமகாரங்களை வகித்தவன், ஈச்வரனை யடையவே முடியாது. பொன்னாசை பிடித்துப் பூமியிலே புரளும் புல்லியன் சாக்ஷாத் எம்பெருமானைத் தர்சித்தலென்றால் சுலபமா? சர்வசங்க பரித்தியாகம் செய்த சாதுவே சாயுஜ்யபதவி யடைதற்குத் தகுந்தவன் என்றுரைத்தார் இயேசு. நமது ஹிந்துமதமும் அதைத்தானே போதிக்கின்றது.

"இன்னும் பாருங்கள். 'உங்களுக்குப் பரிபூர்ண விசுவாசம் இருந்து, அந்த விசுவாசத்திலே அணுவளவும் சந்தேகமில்லாவிட்டால், நீங்கள் இந்த மலையைப் பார்த்து, நீ அப்புறம் போ, சமுத்திரத்தில் சென்று விழுந்துவிடு, என்று சொல்வீர்களானால், அப்படியே நடைபெறும்' ஆ! ஆ! என்னே நம்பிக்கையினுடைய பெருமை! மேல்நாட்டு சாஸ்திரஞானம் மிகுந்த இக்காலத்திலே நம்பிக்கையென்பதே யில்லாது போய்விட்டது. எல்லாம் யுக்தியை ஆதாரமாகக் கொண்டே நடைபெறுகின்றன. யுக்திக்குப் பொருந்தினால்தான், புத்தியின் பாகுபாடுகட்கு ஒத்திருந்தால்தான், அந்த விஷயம் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. வெறும் நம்பிக்கையினாலேமாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படுகிறதில்லை.



இக்காலத்திலே மூளைதான் அரசுபுரிகிறது; ஹிருதயத்தின் ஆக்ஷிக்கு இடமேயில்லை. மூளை புத்திக்கு ஆஸ்தானமாம்; ஹிருதயம் நம்பிக்கைக்கு ஆஸ்தானமாம். மூளை மிகப் பெருமை வாய்ந்ததே யாயினும், ஈரமற்றது, இரக்கமற்றது, சந்தோஷ மநுபவிக்கும் பாக்கியமற்றது, வரண்டது. ஹிருதயமே ஈச்வரனுடைய வாசஸ்தானம்; இதுவே ஈரமுள்ளது, இரக்கமுள்ளது, இன்ப மநுபவிக்கும் தன்மையது. மூளை, ஹிருதயம் இரண்டும் அவசியம் வேண்டியனவே; ஆனால், இவ்விரண்டில் எதையேனும் ஒன்றை விட்டுவிட வேண்டுமென்றால், மூளையையாவது விட்டுவிடலாம், ஹிருதயத்தை விட்டுவிடக்கூடாது. ஒரு மேல்நாட்டு சாஸ்திரக்ஞனும் அவனுடைய மனைவியும் தெருவழியாகப் போய்க்கொண்டிருக்கையில், தீராநோய் பிடித்த ஒருவன் கண்ணீர் தாரைதாரையாகக் கொட்ட, வழியில் நின்றுகொண்டு இவர்களைப் பிச்சை கேட்டான். சாஸ்திரக்ஞனுடைய மனைவி பார்த்து, "ஐயோ, பாவம், அவன் கண்ணீர் சொரிகிறான்; அவனுக்கு ஏதேனும் கொடுத்துவிட்டுப் போவோம்" என்றாள். சாஸ்திரக்ஞன், "சீ, போ, பைத்தியமே; கண்ணீரை நான் பகுத்து ஆய்ந்து பார்த்திருக்கிறேன்; அதிலென்ன? சிறிது தண்ணீரும், சிறிது உப்பும், வேறு இரண்டு மூன்று பொருள்களும் கலந்திருக்கின்றன; இதைக் குறித்து நாம் ஏன் இரக்கப்படவேண்டும்?" என்றான். இந்த சாஸ்திரக்ஞன்: மூளையில் பெருத்தவனெனப் பெயர்பெற்றும் மடையனிலும் கேடுகெட்ட மடையனாக அவன் தன்னைத்தானே காட்டிக்கொண்ட விதத்தைப் பார்க்

தீர்களா? ஏ, சாஸ்திரக்ஞனே! கண்ணீரினுடைய பெருமையை அறியாத கயவனே! கண்ணீர் என்பது ஹிருதயத்தினுடைய உருக்கமென்று தெரிந்துகொள். கண்ணீரைக் கண்டு கலங்கி இரங்காதவர்களை மனுஷ்யராசியிலும் சேர்க்கலாமா?

பாரிஸி என்ற ஜாதியார் ஒருமாதிரி ஆஷாடபூதி வேஷம்போட்டு, வைதீகத்தன்மை காட்டி, ஏழை ஜனங்களின்மேல் ஏறி மிதிப்பவர்கள்; நமது இந்தியா தேசத்திலே வயிற்றுப் பிழைப்புக்காக வைதீகவேஷம் போட்டுத்திரியும் பிராஹ்மணர் போன்றவர்கள். இவர்கள் இயேசு கிறிஸ்துவை வெறுத்து வந்தார்கள்; அவரை எப்படியாவது ராஜ நிந்தனை செய்யும்படி செய்து, தண்டனை கிடைக்குமாறு செய்யவேண்டுமென்று கருதி அவரிடம் சென்று "பிரபு! நீங்கள் போதிப்பதெல்லாம் உண்மையே என்றும், நீங்கள் உண்மையில் ஈச்வர மார்க்கத்தைப் போதிக்கிறீர்கள் என்றும், எங்களுக்குத் தெரியும்; நீங்கள் எந்த மனிதனையும் சட்டை செய்கிறதில்லையென்பதும் எங்களுக்கு தெரியும்; ஆகையால் தாங்கள் நினைப்பதென்ன? எங்களுக்குச் சொல்லுக. ஸீஸருக்குக் கப்பம் அளிப்பது நியாயம்தானா அல்லவா?" என்று கேட்டார்கள். இயேசு அவர்களை நோக்கி, "ஏ, வேஷதாரிகளே! ஏன் என்னைத் தூண்டிவிடுகிறீர்கள்? கப்பம் கட்டும் பணத்தைக் கொண்டு வந்து காண்பியுங்கள்" என்றார். அவர்கள் ஒரு பென்னி நாணயத்தைக் கொண்டுவந்தார்கள். அந்த நாணயத்திலே



வரையப்பட்டிருந்த உருவத்தையும் எழுத்துக்களையும் பார்த்து, இயேசு, "இவை யாருடையன?" என்று கேட்டார். அவர்கள் "ஸீஸருடையன" என்றார்கள். இயேசு, "அப்படியாயின், ஸீஸருடைய பொருள்களை ஸீஸருக்குக் கொடுங்கள்; ஈச்வரனுடைய பொருள்களை ஈச்வரனுக்குக் கொடுங்கள்" என்றார். இயேசுவை எப்படியாவது அகப்பட வைக்கலாமென்று பார்த்த பாரிஸி ஜனங்கள் ஏமாந்து போய்விட்டார்கள்.

"நீ ஈச்வரனை உனது முழு ஹிருதயத்துடனும் முழு ஆத்மாவுடனும் முழு மனத்துடனும் நேசிப்பாய். இதுதான் முதலாவது கட்டளை. இரண்டாவதும் அதுபோன்றதேயாம். நீ உன்னை எப்படி நேசித்துக்கொள்கிறாயோ அப்படியே உன்னுடைய அயலானை நேசிப்பாய். நியதியெல்லாம், தீர்க்கதர்சிகளெல்லோரும் இவ்விரண்டு கட்டளைகளைப் பற்றிக்கொண்டே தொங்குகிறார்கள். நித்திய வஸ்து ஈச்வரன் ஒருவரே; அவரிடத்தே உனது அன்பையெல்லாம் வை; உனது ஆசைகளையெல்லாம் வை. அநித்தியப் பொருள்களிடத்து உனது அன்பை வைத்தால், அவை மடியும்பொழுது உன் அன்புக்கும் சேதம் உண்டாகிறது. அன்பே ஆநந்தத்துக்குக் காரணமாம்; ஆகையால், ஆநந்தத்துக்கும் பங்கம் உண்டாகிறது; ஆகையால், அநித்தியமாய், அநாத்மாவாயுள்ள வஸ்துக்களை நேசிக்காதே. நித்தியமாய், அழிவற்றதாய், ஆத்மாவாயுள்ள ஈச்வரனிடக்கே உனது அன்பைச் செலுத்து. ஈச்வரன் அழிவற்ற

வர்; ஆகையால், உனது அன்புக்கும் ஒருபொழுதும் அழிவுண்டாகாது; உனது ஆநந்தமும் நிலையுள்ளதாய்விடும்.

இரண்டாவது, நீயே அயலானா யிருக்கிறாய். ஆகையால், நீ உன்னை எப்படி நேசித்துக்கொள்கிறாயோ, அப்படி உனது அயலானையும் நீ நேசிக்கவேண்டும். இக் கட்டளைமாத்திரம் உலகத்து ஜனங்களாலே அநுபவத்துக்குக் கொண்டுவரப் பட்டுவிட்டால், அப்புறம் எத்தகைய பயமுமில்லை; உலகிலே சண்டை சச்சரவுகள் கலகங்கள் முதலியவை யுண்டாகா. ஆநந்தம் பொங்கித் ததும்பி வழிந்து வெள்ளப் பெருக்கெடுத்துப் பிரபஞ்சம் முழுதும் வியாபித்துவிடும்.

"பன்னிரண்டு வருஷங்களாக இரத்தப் பெருக்கெடுத்துப் பெரும்பாட்டு வியாதியினாலே அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்த ஒரு ஸ்திரீ, இயேசு தெருவிலே பெருங் கூட்டம் சூழப் போவதைக் கண்டு அவருடைய ஆடையின் ஒரு முனையை ஸ்பர்சித்தாலே தன்னுடைய வியாதி சௌக்கியமாகும் என்று திடநம்பிக்கை கொண்டவளாய், அக் கூட்டத்தினுள்ளே நுழைந்து எல்லோரையும் இடித்துத் தள்ளிக்கொண்டு சென்று கடைசியாக இயேசுவின் சமீபம் போய், அவருடைய ஆடையின் ஒரு முனையை ஸ்பர்சித்தாள்; உடனே அவளுடைய ரத்தப்பெருக்கு நின்றுவிட்டது; அந்த நிமிஷத்திலே வியாதி சௌக்கியமாய்விட்டது. இது இயேசுவுக்குத் தெரியாது; ஆனால், இந்த ஸ்திரீ அவரது ஆடையைத் தொட்டவுடனே அவர் தமது தபோ



சக்தியில் ஒரு பாகம் வெளியே போயிற்று என்று அறிந்து கொண்டார். இம்மாதிரியே இயேசுவானவர் பாபிகளை ரக்ஷிப்பதிலேயே தமது தபோசக்திகளை யெல்லாம் செலவழித்து அவர்களுடைய பாப மூட்டைகளை யெல்லாம் தாம் வாங்கிக் கட்டிக்கொண்டு, இப்பாப மூட்டைகளின் நிவாரணார்த்தம் தாம் சிலுவையி லறையப்பெற்றார்.

"ஆதியிலே வார்த்தை யிருந்தது; வார்த்தை ஈச்வரனுடன் இருந்தது; வார்த்தை ஈச்வரனாகவே யிருந்தது. நமது ஹிந்துமத வேதாந்த சாஸ்திரத்திலே சப்தப்பிரஹ்மம் என்று சொல்லப்படுவது யாது? ஆதியில் அதுவே யிருந்தது; அது ஈச்வரனுடனேயே யிருந்தது; அது ஈச்வரனாகவே யிருந்தது; அந்த வார்த்தை ஓங்கார சப்தமாம். இவ் வுலகங்களெல்லாம் இவ் வோங்கார சப்தத்தி லிருந்தே யுண்டாயிருக்கின்றன. ஓங்கார சப்தமே உலகில் முதன் முதலில் கும்மிக் குமுறிக் கோஷமிட்டுக்கொண் டிருந்தது. இந்த ஓங்காரமே சப்தப்பிரஹ்ம மெனப்படுகிறது.

"அந்தகாரத்திலே ஒளி பிரகாசித்துக்கொண்டுதான் இருக்கிறது; ஆனால், அந்தகாரம் அறிந்துகொள்கிறதில்லை." அதாவது, அஞ்ஞானிகளிடத்தும் ஈச்வரன் இருக்கத்தான் செய்கிறார்; ஆனால், அஞ்ஞானிகள் அறிந்துகொள்கிறதில்லை.

அந்த வார்த்தையே, ஓங்காரமே, வேதமாம்; வேதமே இயேசுவாக உருவெடுத்து வந்ததென்று கிறிஸ்தவ வேத புஸ்தகத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. இருக்கலாம்;

இல்லையேல் ஒரு சாதாரணத் தச்சனுடைய பிள்ளைக்கு, எழுதப்படிக்கத் தெரியாத ஒருவனுக்கு, இவ்வளவு ஞானம் எங்கிருந்து கிடைத்திருக்கும்?

தேவாலயத்திலே வியாபாரம் செய்கிறவர்களை இயேசு கண்டு, "இவற்றை யெல்லாம் தூர எடுத்துக்கொண்டு போங்கள்; எனது பிதாவின் ஆலயத்தை ஒரு வியாபார வீடாக்காதீர்கள்" என்று சொல்லி, அவர்களை அங்கிருந்து துரத்தினார். இதிலே என்ன ஆழ்ந்த உண்மை யடங்கி யிருக்கிறது, தெரியுமா? ஈச்வரனை இக்காலத்திலே ஒரு பெரிய வியாபாரியாகத்தானே ஆக்கிவிடுகிறார்கள். "ஈச்வரா! எனது பிள்ளை வியாதி சௌக்கியமாகி எழுந்திருக்கும்படி நீ செய்தால், நான் பஞ்சாமிருத அபிஷேகம் பண்ணிவைக்கிறேன்." "ஆ! கடவுளே! எனக்குப் பரீட்சை முதலாவது வகுப்பில் தேறும்படி செய்; நான் உனக்குச் சோமவாரந்தோறும் அபிஷேக அர்ச்சனையாதிகள் தவறாது செய்து வைக்கிறேன்," "ஏ, பிரபு! ஜகந்நாதா! என்னைப் பிடித்து வாட்டுகின்ற இந்நோயை யகற்று; நான் வீட்டுக்கு வீடு சென்று பிச்சை யெடுத்தாவது என்னைப் போன்று பொன்னினால் ஒரு பதுமை செய்து போடுகிறேன்." என்ன மடமை! ஏ, அறிவிலி ஜனங்காள்! தேவதேவன், ஜகத்பதி, திரிலோகங்களுக்கும் நாதன், உங்களுடைய பஞ்சாமிருதத்துக்கும் அபிஷேக அர்ச்சனையாதிகட்கும் உங்களது போன்ற பதுமைக்கும் ஏங்கி வீங்கிக் காத்துக்கொண்டா யிருக்கிறார்? ஈச்வரனிடத்துப் பிரதி



பலனைக் கருதியா அன்பு செலுத்துவது? அற்ப புத்தியும் சொற்பப் பிரக்ஞையுமுள்ள உங்களில் ஒருவரா ஈச்வரன்? ஈச்வரனுடைய மகிமையை நீங்கள் அறியவில்லை. அழகு மிகுந்த யுவதி யொருத்தியைக் கண்டு கண்ணையும் கருத்தையும் அவள் பின்னேவிட்டு மயங்கும் காதலன் ஒருவனைப்போல, நீயும் ஈச்வரனிடத்தில் பிரேமையினாலே, பக்தியின்பொருட்டு பக்தி செய்யவேண்டும்; இல்லையேல் உன்னுடைய பக்தி பயனிலதாம்.

இயேசு அவதரித்த பிரதேசத்திலே அக்காலத்திலே அறிவு பரவினதில்லை; பெரும்பான்மையோரும் உலகை யுண்மையென நம்பிக் காலம் கழிப்பவர்களாகவே யிருந்தார்கள். அத்தகைய ஜனங்கள் ஒரு மகாத்மாவை நம்பவேண்டுமென்றால் அவரிடத்துச் சித்திகளும் அற்புதங்களும் நடைபெறவேண்டும். இல்லையேல் அவர்கள் அவரை நம்பமாட்டார்கள். ஞான பூமியெனப்படும் நமது இந்தியா தேசத்திலேயே, அறிவு பரவி விருத்தி யடைந்துள்ளதாகக் கூறப்படும் இக்காலத்திலேயே, ஜனங்கள் நம்புவதற்குமுன் சித்திகளைக் கண்டு தெளிந்துகொள்ள விரும்புகிறார்களென்றால், மற்றத் தேசங்களிலே, அதுவும் அக்காலத்திலே, கேட்கவும்வேண்டுமோ? ஆகையால்தான் இயேசுகிறிஸ்து, சித்திகள் காண்பிக்கவேண்டி யிருந்தது.

"புத்திரனைக் கௌரவப்படுத்தாதவன் புத்திரனை யனுப்பிய பிதாவையும் கௌரவப்படுத்துகிறதில்லை; மனிதனை மதிக்காதவன் ஈச்வரனையும் மதிக்கமாட்டான்; அதா

லது, 'மனிதனுள்ளே அகண்ட சக்தி அளவற்று அடங்கிக் கிடக்கிறது' என்று நம்பாத மனிதன் ஈச்வரனிடத்திலும் நம்பிக்கை வைக்கமாட்டான்."

இயேசுகிறிஸ்து ஒரு கோவிலுள்ளே போய் உட்கார்ந்துகொண்டிருந்தபொழுது, ஜனங்கள் வந்து அவரைச் சூழ்ந்துகொண்டார்கள். அவர் முன்னே பாரிஸி ஜாதியார் ஒரு வியபசார ஸ்திரீயைக் கொண்டுவந்துவிட்டு, 'பிரபு! இந்த ஸ்திரீ துர்நடத்தை செய்யும்பொழுது கைப்பிடியாகப் பிடிக்கப்பட்டாள். இவள் மீது ஊரார் கற்களெறிந்து இவளைக் கொல்லவேண்டும் என்று மோஸே கூறியிருக்கிறார்; நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டார்கள். இயேசு குனிந்து தரையைப் பார்த்துக்கொண்டே, "உங்களில் பாபம் செய்யாதவர் எவரோ அவர் அவள்மீது முதலில் ஒரு கல் எறியட்டும்" என்றார். அவரைக் கேட்ட ஜனங்களுக்குள் ஒருவருக்காவது தாம் பாபம் செய்யாதவர் என்ற எண்ணம் உண்டாகவேயில்லை. ஆதலால், ஒருவர் பின் ஒருவராக எல்லோரும் போய்விட்டார்கள். கொஞ்சநேரம் கழித்து இயேசு நிமிர்ந்து பார்க்க அங்கு எவருமேயில்லை. அந்த வியபசார ஸ்திரீமாத்திரம் அங்கு இருந்தாள். அவர் அந்த ஸ்திரீயைப் பார்த்து, "ஸ்திரீயே! நீபோ; இனிமேல் பாபம் செய்யாதே" என்று சொல்லி யனுப்பிவிட்டார்.

இம்மாதிரியான உண்மைகளையும், இயேசுவுக்கு சிஷ்யர்களிடமிருந்த வாற்சல்யத்தையும், கடைசியாக அவருடைய சிஷ்யர்களுள் ஒருவன், குருத்துரோகி, அவரைப்



பாபிகளிடம் காட்டிக்கொடுத்ததையும், அவர் அமைதியாகச் சிலுவையி லறைபட்டதையும், மற்றும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் கிரகித்து, கிறிஸ்தவமதமும் ஒரே லக்ஷியத்தினிடத்தில்தான் இட்டுச் செல்கின்றதென்று கண்டுகொண்டார். கொஞ்ச நாட்களுக்குள் ஸ்ரீ ராமகிருஷ்ணர் ரோமன்கத்தோலிக் கிறிஸ்தவர்களைப்போலக் கழுத்திலே தோளிலே குருசுமாதிரி செய்து கட்டித் தொங்கவிட்டுக்கொண்டார். பிறகு அதைக் கழற்றி யெறிந்துவிட்டு புரோடெஸ்டாண்ட் கிறிஸ்தவர்களைப்போல ஒழுகினார்; முழந்தாளிட்டு ஜபம் செய்தார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் சகல மதங்களினுடையவும் அநுஷ்டானங்களைப் பின்பற்றி எல்லா மதங்களும் ஏக லக்ஷியமாகிய ஈச்வரனிடத்தேயே இட்டுச் செல்கின்றன என்னும் உண்மையை அநுபவ பூர்வமாகக் கண்டுகொண்டார். "ஆகாசத்திலிருந்து கீழ் விழுகின்ற மழைத்துளிகள் எங்கு விழுந்தாலும் எல்லாத் துளிகளும் ஈற்றில் சமுத்திரத்தையே அடைகின்றன; அதுபோல, எந்தத் தேவதையை நமஸ்கரித்தாலும் அந்த நமஸ்காரமெல்லாம் கேசவனுக்கே (ஈஸ்வரனுக்கே) போய்ச் சேர்கின்றது," "ஒன்றே யுள்ளது; பெரியோர் பலவிதமாகக் கூறுகின்றனர்," இம்மாதிரி வேதவாக்கியங்களெல்லாம் உண்மையிலும் உண்மையேயென்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது அநுபவத்தின் மூலமாக ருசுப்படுத்திக்கொண்டார்.

## 11-ம் அத்தியாயம்

## ஸ்ரீ சாரதா தேவியார்

ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு இந்தப் பைத்தியத்தைத் தெளிவித்துவிடலாமென்ற மூட நம்பிக்கையுடனே அவருடைய தாயாரும் சகோதரர்களும் ஐந்து வயதுப் பெண் ஒன்றை விவாகம் செய்வித்தார்கள் என்று முன்னமேயே சொல்லியிருக்கிறோம். ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கோ பைத்தியம் முற்றி, இனிமேல் ஒருபொழுதும் நிவிருத்தியாகாது என்ற நிலையை யடைந்துவிட்டது. பலவருஷங்களாயின. அப்பெண்ணும் புஷ்பவதியாகி, புருஷனைப்பற்றி விசாரணைசெய்ய ஆரம்பித்தாள். இப்பொழுது அப்பெண்ணுக்கு வயது பதினெட்டு ஆய்விட்டது. அவளிடம் சிலர், "உன்னுடைய புருஷனுக்குப் பலமாகப் பைத்தியம் பிடித்திருக்கிறது" என்றும், வேறு சிலர், "உன்னுடைய புருஷன் யோகநிஷ்டை செய்து மகாஞானியாய் விளங்குகிறார்" என்றும் சொல்ல, பலர் பலவிதமாகச் சொல்வதைக் கேட்ட அப்பெண்மணி, தான் நேரில் புருஷனைக் கண்டு தெரிந்துகொள்ள விரும்பித் தன்னுடைய கிராமத்திலிருந்து கால்நடையாகப் புறப்பட்டுச் சுமார் எண்பது மைல்தூரம் வரையில் நடந்து, தன் பர்த்தா ஸ்ரீ ராமகிருஷ்ணர் இருந்த இடம் வந்து சேர்ந்தாள். அவள் தூரத்தில் தம்மை நோக்கி வருவதைப் பார்த்த ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவளை நோக்கிச் சென்று, 'அன்னையே!' என்று அழைத்து, "அம்மே! உலகி



லுள்ள ஸ்திரீகளெல்லாரும் தேவியின் அம்சங்களாம்; ஆதலால், எனக்கு மாதாக்களாம்; ஆகையால், நீயும் எனக்கு மாதாவேயாகிறாய்; உன்னை மனைவியாகக் கொண்ட ஸ்ரீராமகிருஷ்ணன் மரித்து அநேக வருஷங்கள் ஆய்விட்டன; உன்னை மாதாவாகக் கொள்ளும் ஸ்ரீ ராமகிருஷ்ணனே இங்கு இப்பொழுது இருக்கிறான்" என்று கூறவும், மகாபுத்திசாலியாகிய அப்பெண்மணியும் தன்னுடைய புருஷனுடைய மகிமைகளை யுணர்ந்து தான் அவருக்குத் தடையொன்றும் சொல்லக் கருதவில்லையென்றும், அவருக்குத் தொண்டு புரிந்துகொண்டு அவருக்கு சிஷ்யையா யிருக்கத் தான் விரும்புவதாகவும் கூறி, அதற்கு அநுமதி வேண்ட, ஸ்ரீ ராமகிருஷ்ணர் வெகுநேரம் வரையில் யோசனைசெய்து கடைசியில் சம்மதித்தருளினார்.

அதுமுதல் சாரதா தேவியார், அருகிலிருந்து காளிக்ஷேத்திரத்திலே வாசம் பண்ணிக்கொண்டு, ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு மிகுந்த பக்தி விநயத்தோடு திரிகரண சுத்தியாகத் தொண்டு புரிந்துவந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கும் அவ்வம்மையாரிடத்தில் பக்தியும் வாற்சல்லியமும் அதிகம். அவ்வம்மையாரைப்பற்றி ஏதேனும் பேச்சு வந்துவிட்டால் ஸ்ரீ ராமகிருஷ்ணர், "நான் எம்மாத்திரம்? அவள் தாய்த் தன்மையின் அவதாரமாம்; மாதாவே அவள்" என்று சொல்லி மிகுந்த விநயத்திலே தம்மை மறந்துவிடுவார். அவர் அவ்வம்மையாரை யொருபொழுதும் இம்மியளவும் வெறுத்ததில்லை; அவ்வம்மையாரும் அவரை

விட்டகன்றதில்லை. அவ்வம்மையார் மற்ற ஸ்திரீ சிஷ்யைகளுடனே தனித்த ஒரு இடத்தில் வசித்துவந்தனர்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் தினந்தோறும் தமது மனைவிச் சிஷ்யைக்கு வேதாந்த போதனை செய்துவந்தார். தமது ஞானபுத்திரர்களுக்கெல்லாம் அவரை மாதாவாகவும் ஆக்கினார். ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சிஷ்யர்கள் அனைவரும் அவ்வம்மையாரைத் தங்கள் தங்கள் சொந்தத் தாயைப் போலவே கருதிவந்தார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது சிஷ்யர்களிற் பலரையும் அவ்வம்மையாரிடம் போய் உபதேசம் பெற்றுக்கொள்ளும்படி யனுப்பிவைப்பார். ஸ்ரீ ராமகிருஷ்ணரைப்போலவே, அவருடைய சிஷ்யர்களும் எல்லா ஸ்திரீகளையும் ஜகன்மாதாவின் வடிவங்களாகவே கருதஆரம்பித்தார்கள். ஸ்ரீராமகிருஷ்ணர் எப்படிச் சாரதா தேவியை ஜகன்மாதாவின் சொரூபமெனப் பாவித்து வந்தாரோ, அப்படியே ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சிஷ்யர்களும் அவ்வம்மையாரை ஜகன்மாதாவின் சொரூபமே யெனக் கருதினார்கள்.

அவ்வம்மையாருடைய சந்நிதானத்திலே எவரேனும் அற்பகுற்றமேனும் செய்துவிட்டால், அவர் அங்கிருந்து உடனே அகற்றப்பட்டுவிடுவார். "அவ்வம்மையாரிடத்திலுள்ள ஸ்திரீக்கு இம்சை நேர்ந்துவிட்டது" என்னும், "அது எப்பொழுதும் அபாயகரமாம்" என்றும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறுவார். ஒரு சமயத்திலே ஸ்ரீ ராமகிருஷ்ணரே ஏதோ அறியாமல் அவ்வம்மையாருக்கு வருத்த



முண்டாகுமாறு கூறிவிட, அவ்வம்மையார் அழுதுகொண்டே அவ்விடம் விட்டு அகன்றார். ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு இது பொறுக்க முடியவில்லை. அவர் உடனே தமது சிறுவயது சிஷ்யர்களுள் ஒருவரை அவ்வம்மையாரிடம் அனுப்பி, அவ்வம்மையார் அழுதால் தம்முடைய பக்தி தியானம் எல்லாம் பறந்துவிடுமென்று சொல்லிவிட்டார்.

ஸ்ரீராமகிருஷ்ணருடைய சிஷ்யர்களும் அவ்வம்மையாரைத் தங்களுடைய சொந்த மாதாவைப்போன்றே பாவித்துவந்தார்கள்; அவ்வம்மையாரையும் குருவாகவே கருதினார்கள்; தங்களுடைய குரு ஸ்ரீ ராமகிருஷ்ணரே அவ்வம்மையாரை அவ்வளவு சிரேஷ்டமாக வைத்துக்கொண்டிருக்க, தாங்கள் அவரை எப்படிக் கருதவேண்டும் என்பதை நன்கு அறிந்துகொண்டார்கள். இன்னும் சொல்லப்போனால் சிஷ்யர்களுள் பெரும்பான்மையோரும் அவ்வம்மையாரை ஜகதம்பாள் வடிவமாகவே கருதி ஆராதனையும் செய்துவந்தார்கள். அவ்வம்மையாரும் அந்த சிஷ்யர்களுடைய சுகதுக்கங்களிற் கலந்து, அவர்களுக்குத் துன்பம் நேர்ந்துவிட்டால் துக்கித்தும் - இன்பம் உண்டான காலத்துச் சுகித்தும், அவர்களைத் தமது சொந்த பிள்ளைகளைப் போலவே பாராட்டிவந்தார். அந்த சிஷ்யர்கள் வயதிற் பெரியோராயினும் அவ்வம்மையாருக்கும் மற்ற உண்மைப் பெரியோருக்கும் குழந்தைகளாகவே யிருந்தனர். இந்த சிஷ்யர்கள் தாங்கள் ஏதேனும் ஒரு காரியம் செய்ய விரும்பினால் இவ்வம்மையாரிடம் வந்து சாஷ்டாங்கமாகப் பணி

ந்து எழுந்து கைகட்டி வாய் பொத்தி மிகுந்த பக்தி விநயத்துடனே அவ்வம்மையாரிடத்தில் அக்காரியத்தைச் சொல்லி, ஆலோசனை கேட்பார்கள். அவ்வம்மையார் அநுமதி கொடுத்து, அக்காரியம் பலித்திடுமாறு தமது ஆசிர்வாதத்தைச் செலுத்தினாலே அவர்கள் அக்காரியத்தைச் செய்யத் தொடங்குவார்கள்; இல்லையேல், அக்காரியத்தைப் பற்றிப் பின்னர் கனவிலும் கருதமாட்டார்கள். அந்த சிஷ்யர்களுடைய அப்பியாச அநுஷ்டானங்களுக்கெல்லாம் இவ்வம்மையார் வெகு ஆதாவாயும் அநுகூலமாயும் இருந்து, அவர்கள் சீக்கிரம் பக்குவமடைதற்குள்ள வழிகளை ஆங்காங்கு அவ்வப்பொழுது எடுத்துக் காட்டிவந்தனர்.

ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சிஷ்யர்களுக்குள்ளே எல்லோருக்குமே இவ்வம்மையாரிடத்தில் அளவற்ற மதிப்பும் மரியாதையு மிருந்தபோதிலும், பிற்காலத்திலே ஸ்வாமி விவேகாநந்தரெனப் பெயர் பெற்ற நரேந்திரருக்குப் பிரத்தியேகமான தேவதா விசுவாசம். சாக்ஷாத் ஜகதீஸ்வரியைப் பிரத்தியக்ஷத்தில் கண்டால் எப்படியோ அப்படியே நரேந்திரரும் இவ்வம்மையாரிடத்தில் ஒழுகிவந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் மகா சமாதியடைந்து பல வருஷங்களுக்குப் பின்னே, ஸ்வாமி விவேகாநந்தர் அமெரிக்காவுக்குச் செல்லும்படி நேர்ந்தபொழுது, அவர் இவ்வம்மையாருடைய அநுமதியும்ஆசிர்வாதமும்பெறுமல் அங்குச் செல்லத் துணியவில்லை. பம்பாய் மாநகரிலிருந்துகொண்டு, ஸ்வாமி விவேகாநந்தர் ஸ்ரீ சாரதாதேவியாருக்குத் தாம் அமெரிக்காவுக்குச் சென்று ஸநாதன தர்மமதத்தைப் போதிக்கவேண்டுமென்று தம்முடைய பல நண்பர்களும் தம்மை வற்புறுத்துவதாகவும், அவ்வம்மையார் அநுமதியும் ஆசிர்வாதமும் அளித்து அனுப்பினால் தாம் செல்லத் தயாராயிருப்பதாகவும் ஒரு கடிதம் எழுதித் தெரிவிக்க, அவ்வம்மையார் விவேகாந்தர் செல்லும் காரியம் ஜயமடையுமாறு தாம் மனப்பூர்வமாக ஆசிர்வதிப்பதாயும், விவேகாநந்தருடன்கூடவே ஸ்ரீராமகிருஷ்ணர் எப்பொழுதும் இருந்துகொண்டேயிருக்கிறரென்றும், ஆதலால் விவேகாநந்தர் சற்றும் தயங்கவேண்டியதில்லையென்றும் மறுமொழியனுப்பினர். இம்மறுமொழி கிடைத்த பின்னரே, விவேகாநந்தர், அமெரிக்கா ஐரோப்பா முதலிய கண்டங்களுக்குச் சென்று, அங்கே ஸநாதன தர்ம மதத்தைப் பிரசாரகம் செய்து, அநேகரைத் தமது சொந்த சிஷ்யர்களாக்கிக் கொண்டது மன்றியில், ஆயிரக்கணக்கானவர்களை ஹிந்து மதச் சார்பினர்களாக்கி, திக்குவிஜய கோலாகலராய்த் தமது ஜன்ம தேசத்துக்குத் திரும்பி வந்தபொழுது, இவ் வைபவத்தையெல்லாம் கேட்ட சாரதா தேவியாருக்கு உண்டான ஆநந்தத்துக்கு ஓர் அளவேயில்லை. 'ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய பெருமை பிரகாசித்தது, பிரகாசித்தது, இவ்வுலகெங்கும் பிரகாசித்தது' என்று சாரதா தேவியார் பேராநந்த மடைந்தார். ஸ்வாமி விவேகாநந்தருடனே அந்நிய நாடுகளிலிருந்து வந்த அவருடைய ஸ்திரீ சிஷ்யர்களும், ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய ஸ்திரீ சிஷ்யர்களும், இவ்வம்மையாரைச் சூழ்ந்து வசிக்கத் தொடங்கினர்கள். இவ்வம்மை

யார் இப்பொழுதும் காசிமீரதேசத்திலே அழகியதொரு ஆச்ரமத்தில் ஆநந்த பூரிதராய் அந்தரங்க பக்தியுள்ள அநேக ஸ்திரீமணிகள் சூழ வசித்துவருகின்றார்.

இவ் வத்தியாயத்தை முடிப்பதற்கு முன்னே நாம் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய ஸ்திரீ சிஷ்யர்களில் வேறு சிலரைப்பற்றிப் பேசிவிடுவோம். ஸ்திரீகளும் புருஷர்களுக்குச் சமானமாகவே அறிவுக்கும் அன்புக்கும் பாத்திரமானவர்கள் என்பது, அதாவது மூளையும் ஹிருதயமும் உடையவர்களென்பது, எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டியதொரு விஷயமாம். ஸ்திரீகளுக்கும் புருஷர்களுக்கும் அவயவங்களிலும் பிரவிருத்திகளிலும் சில பேதங்கள் உண்டாமாயினும், அறிவும் அன்புமாகிற விஷயத்தில் பேத முண்டென்று எத்தகைய அறிவீனனும் சொல்லத் துணியான். நமது தேசத்திலே ஜனசமூக க்ஷேமத்தைக் கோரி சமுதாய ஏற்பாடு அமைக்கப் பட்டுள்ளன. ஸ்திரீகளுக்கும் புருஷர்களுக்கு முள்ள சில சில்லரை வித்தியாசங்களைப் பொறுத்து, அவரவர்கட்குச் சில பிரத்தியேகமான கடமைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவையே யல்லாமல், "அறிவு விஷயத்திலும் அன்பு விஷயத்திலும் ஸ்திரீகள் அபிவிருத்தி யடையவொட்டாதபடி, ஹிந்து ஸ்மிருதிகளிலே கட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன" என்று கூறுவது மடமையினாலேயே யொழிய வேறில்லை. "ஹிந்துக்கள் தங்கள் ஸ்திரீகளைக் காராக்கிரகங்களிலே கைதிகளை யடைத்துவைத் திருப்பது போல அடைத்துவைத் திருக்கிறார்கள்; அவர்களுக்குக் கல்வி கொடுப்பதில்லை; அவர்கள் வெளியுலகத்தைப் பார்க்கும்படி செய்வதில்லை; அவர்கள் அறிவீனத்திலே அழுந்தியிருக்கிறார்கள்; அவர்களுக்கு ஸ்வதந்திரம் கிடையாது; அவர்கள் கண்ட புருஷர்களுடனெல்லாம் கைலாகு கொடுப்பதில்லை; நினைத்த புருஷர்களுடனெல்லாம் தனித்து உறவாட முடிகிறதில்லை," என்று இக் காலத்திலே எவரும் விரும்பாதிருக்கத் தான்றோன்றித் தம்பிரான்களாய்த் தோன்றியிருக்கும் சில ஆசாரச் சீர்திருத்தக்காரர்கள் கூறி, மேனாட்டு அநாசாரங்கள் பலவற்றை, இதுவரை எதற்கும் உடையாத, நமது ஹிந்து ஜன சமூகத்தினுள்ளே புகுத்தத் துணிகிறார்கள். ஆ! ஆ!! இவர்களுடைய அறிவீனம்தான் என்னே!



இவர்களுடைய கூற்றின் பொருள் நமக்குப் புலப்படவில்லையாயினும், இவர்களுடைய கூற்றைப் பின்பற்றி நடந்தால், ஹிந்து ஜன சமூகமானது கூற்றனைப் பின்பற்றி அவனுலகு நோக்கி நடந்துபோலாம். ஹிந்து ஸ்திரீகளுக்கு அறிவில்லையாம்! அறிவில்லாமல்தான் அவர்கள் தங்கள் கிரகங்களைச் சுத்தமாக வைத்துக்கொண்டு, கிரக கிருத்தியங்களை நன்றாகச் செய்து—குழந்தை குட்டிகள், வேலைக்காரர்கள் முதலானவர்களைச் சரிவரப் பராமரித்து வருகிறார்களா? அறிவில்லாமல்தான், அவர்கள் தங்கள் புருஷர்களுக்கும் பிறருக்கும் காலாகாலமறிந்து அறுசுவையுண்டி முதலியன அமிருதம்போலாக்கி அவர்களெல்லோரையும் ஆதரித்து வருகிறார்களா? அறிவில்லாமல்தான், அவர்கள் தங்கள்

புருஷர்களுக்குச் சமயோசிதமாக யோசனை சொல்லி வருகிறார்களா? அறிவில்லாமல்தான் அவர்கள், இவ்வளவு நியாயமும் சமர்த்தும் பேசுகின்ற இந்த ஆசாரச் சீர்திருத்தக் குழந்தைகளைப் பெற்று வளர்த்துப் பெயரிட்டுப் பெரிதாக்கி, உலகிலே பிரகாசிக்கும்படி விட்டுவிட்டார்களா?

நமது ஸ்திரீகளுக்குக் கல்வி யில்லையாம்! ஆண் பெண் அடங்கலும், சிறியோர் பெரியோர் அனைவரும், ஏழைகள் தனவந்தர் எல்லோரும், கல்வி பெற்றாலே அறிவு விருத்தியாகு மென்பது ஒரு மூடக்கொள்கை. சில அக்ஷரங்களை எழுதப் படிக்கக் கற்றுக்கொண்டுவிட்டால் அறிவு விருத்தியாய்விட்டதாகிவிடுமா? நமது கலாசாலைகளிலே பெரும் பட்டங்கள் பல பெற்றும், பூமிக்குப் பாரமாய், மகா அறிவிலிகளாய் எத்தனைபேர் இருக்கின்றனர். தவிர, அறிவு என்பது என்ன? வெளியிலே யிருந்து ஒருவனுள்ளே திணிக்கப்படுவதொன்றா? ஒவ்வொருவனுள்ளிலும் அறிவு அகண்டமாய் அடங்கிக் கிடக்கின்றது. கல்வியினாலோ அல்லது கேள்வியினாலோ ஒருவன் ஒரு விஷயத்தை அறிந்து கொண்டானால், அவ்வறிவு அவனுள்ளேயேதான் இருந்தது; அவ் விஷயத்தைப்பற்றிய கல்வி அல்லது கேள்வி அவனுக்கு அவ்வறிவை ஞாபகமூட்டி, அடங்கிக்கிடந்த அவ்வறிவை எழுப்பிவிடுகிறது. ஆகையால், கல்வியானது அறிவை யெழுப்புவதில் அவசியமான ஒரு கருவியேயாயினும், இது ஒன்றே அவ்வறிவை எழுப்பவல்லது என்று சொல்வது மூடக்கொள்கை யென்பதில் சந்தேகமில்லை.



கல்வி யடைதற்கு அநுகாரணங்கள் பல வேண்டியிருக்கின்றன; புத்தகம் வேண்டும்; பலகை வேண்டும்; எழுதுகோல் வேண்டும்; இதற்கெல்லாம் பணம் வேண்டும்; இன்னும் கல்வி கற்றுக்கொள்ளுதற்கு நேரம் ஏராளமாக வேண்டும்; தவிர, கல்விபெறும் காலத்திலே பட்டினிகிடவாது உண்ண ஆகாரம் வேண்டும். ஆதலால், எல்லோருக்கும் கல்வியைக் கட்டாயப்படுத்துவது தர்மமாகுமா, என்பதை நாம் முதலில் கவனிக்கவேண்டும். நேர முள்ளவர்கள், பண முள்ளவர்கள், வயிறு பசிக்காது உண்ண ஆகார முள்ளவர்கள் ஆகிய இவர்களுக்குக் கல்வியைக் கட்டாயப்படுத்தலாம்; ஆக்ஷேபனையில்லை.

ஆகையால்தான், நேரமும் சௌகர்யங்களு முள்ள முதல் மூவர்ணத்தார்களுக்கும் கல்வியை இன்றியமையாததாக்கி, நான்காவது வர்ணத்தாருக்கு நமது முன்னோர்கள் அதை வற்புறுத்தவில்லை. கட்டாயப்படுத்துவது என்பது எக்காலத்திலும் எந்தக் காரணத்தை முன்னிட்டும் அறிஞர் எவரும் ஒப்புக்கொள்ள முடியாத ஒரு விஷயமாம். கட்டாயம் என்பதே ஸ்வதந்திரம் குறைவுபட்டது என்பதை விளக்குகின்றது. "நமது முன்னோர்களுடைய காலத்திலே எவருக்கும் ஸ்வதந்திரம் கிடையாது; உலகமானது அடிமைத்தனத்திலே அமிழ்ந்து கிடந்தது" என்று சொல்கின்ற இக்காலத்து நாகரிகப் பேயர்கள், "கட்டாயம், கட்டாயம்" என்று எல்லாவற்றையும் எல்லாரையும் கட்டாயப்படுத்தி அடிமைத்தனத்தில் வீழ்த்திவிட்டு, "ஸ்வதந்தி

ரம், 'ஸ்வதந்திரம்'' என்று கூச்சலிடுவது என்ன ஆச்சர்யம்! ''முதல் மூவர்ணத்தார்களும் கல்வி யடைவதில் ஆக்ஷேபணை யில்லை'' என்று நமது முன்னோர்கள் கூறினார்களே யொழிய, ''கல்வி யடைந்துதான் தீரவேண்டும்'' என்று கூறவில்லை. கல்வியில்லாத பிராஹ்மணன் அல்லது க்ஷத்திரியன் அல்லது வைசியன்: கல்வியுள்ள பிராஹ்மணன் அல்லது க்ஷத்திரியன் அல்லது வைசியன் இவர்களிட மிருந்து வித்தியாசப்படுகின்றானாதலினாலே, சாதாரணமாக இம் மூவர்ணத்தார்களிடமிருந்தும் வித்தியாசப்படுகின்ற நான்காவது வர்ணத்தானுக்குச் சமமாய்விடுகிறான்.

ஆனால், ''ஸ்திரீகளும் சூத்திரர்களும் கல்விகற்றல் கூடாதென்று ஸ்மிருதிகளில் விதிக்கப்பட்டிருக்கின்றனவே'' என்றால், ஸ்திரீகளுக்கு இயற்கையி லிருக்கவேண்டிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நாற்குணங்களும் அவர்களைப் பரபுருஷர்களுடன்—தங்கள் சொந்த புருஷர்களைத் தவிர இதர புருஷர்களுடன்—அதிகமாக உறவாடுவதற்கு விடுவதில்லை யாதலால், பர்வமடைந்த பின்னர் பள்ளிக் கல்வியடைய முடிகிறதில்லை; இரண்டாவது, ஸ்திரீகளுடைய தர்மம் கிரகத்தினுள்ளே செய்யப்பட வேண்டியிருத்தலால் காலைமுதல் மாலைவரையில் வீட்டைச் சுத்தி செய்து க்ஷேமமாய் வைத்திருக்கவும், புருஷனுக்கு வேண்டியன ஆக்கிக் காலந் தவறாது அளிக்கவும், குழந்தைகளைப் பிரியமுடன் பராமரிக்கவும், வேலைக்காரர்களிடத்தில் அன்பு செலுத்தி வேலை வாங்கவும், குடித்தனத்தைச் சிக்கனமாக



வும் சுகமாகவும் நடத்தவும், நேரம் சரியா யிருப்பதால், இவர்கள் பள்ளிக்குப் போவதெங்கே? கல்வி கற்றுக்கொள்வதெங்கே? இவர்கள் இந்தத் தர்மங்களை யெல்லாம் விட்டுவிட்டு ஆண் பிள்ளைகளுக்குச் சமமாகப் பள்ளிக்குச் சென்று கல்வி கற்றுக்கொண்டிருந்தால், குடும்பம் சீர்குலைந்துவிடுமே; குடும்பம் குலைய, நாடு குலையுமே; நாடு குலைய, நல்லதெல்லாம் குலைந்துவிடுமே. ஆதலால், ஸ்திரீகளுக்கு நேரமில்லாக் குறையாலும், அவர்களுடைய தர்மம் கிரகத்தினுள்ளே யாதலாலும், அவர்கள் கல்வி கற்றுக்கொள்ளலாகாது என்று ஆன்றோர் கூறியிருக்கலாம். ஆனால், அவர்களுக்கு அறிவு அபிவிருத்தி யடையக் கூடாது என்று முன்னோர் ஒரு பொழுதும் கருதி யிரார்கள். சூத்திரர்கள் கைத்தொழிலாளிகளாதலினாலே, அவர்களுக்குக் காலைமுதல் மாலைவரையில் வேலை ''இடுப்பொடிய'' இருக்கின்றது, ஆகையால், இவர்கள் கல்வி கற்றுக் கொள்வது எப்படி? ஆனால், இவர்கள் தங்கள் வேலையை விட்டுவிட்டு, எப்படியாவது கல்வி கற்றுக்கொள்ளலாமென்றாலோ, ஜனசமுதாயமாகிய விருக்ஷத்துக்கு ஆணிவேர்போன்றிருக்கின்ற தங்கள் தொழில்களை விட்டுவிடுவதினாலே, இவர்கள் ஜனசமுதாயத்தை அழிப்பவராவார்கள். ஆதலால்தான் ஆன்றோர், சூத்திரர்களும் கல்வி கற்றுக்கொள்ள லாகாதென்று கூறியிருக்கலாம்; ஆனால், சூத்திரர்களுக்கும் அறிவு அபிவிருத்தி யடையக்கூடாதென்று முன்னோர்கள் ஒரு பொழுதும் கருதியிரார்கள்.

"ஸ்திரீகளும் சூத்திரர்களும் கல்வி பெறக்கூடாது" என்று நமது முன்னோர்கள் கூறியுள்ளது உண்மையென்றே நாம் வைத்துக்கொண்டாலும், அவர்கள் கேள்வியினால் அறிவு பெறக்கூடாதென்று நமது முன்னோர்கள் எங்கேனும் மொழிந்துள்ளனரா? கல்வி, கேள்வியாகிய இரண்டு வாசல்கள் அறிவாகிய மண்டபத்துக்கு இட்டுச் செல்கின்றன. கல்வியாகிற வாசல்; பணமுள்ளவர்களுக்குத்தான் நேரமுள்ளவர்களுக்குத்தான், திறந்து விடப்படுகிறது. கேள்வியாகிற வாசல், பண்டித பாமர சாதாரண சர்வஜனங்களுக்கும் திறந்து விடப்பட்டிருக்கிறது. ஆகையால், கேள்வியின் மூலமாக அறிவை யடைந்தாலும், இவ்வறிவாளர்களும் கல்வியாளர்களுக்குச் சமமானவர்களேயாவர். கல்வியினால் கஷ்டப்பட்டு ஒரு வருஷத்தில் அடைந்துகொள்ளும் அறிவை, கேள்வியினால் மூன்று மாதத்தில் அடைந்து கொள்ளலாம். ஆகையால்தான் சூத்திரர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் அறிவடைதற்குக் கேள்வியாகிற மார்க்கத்தைக் காண்பித்தனர் மேலோர்.

ஆகவே, ஈஸ்வர பக்தி விஷயத்திலும் புருஷர்களைப் போலவும் ஸ்திரீகளும் ஹிருதயக் கசிவுள்ளவர்கள்—இன்னும் சொன்னால் புருஷர்களைப்பார்க்கிலும் அதிகமாக ஹிருதயக் கசிவுள்ளவர்கள்—என்று சொல்லலாம். ஸ்ரீராமகிருஷ்ணருடைய மகிமையைக் கேள்விப்பட்டு அவரிடம் வந்தவர்கள் புருஷர்கள் மாத்திரம் அன்று; பல ஸ்திரீகளும் வந்தார்கள். இவர்களெல்லோரும் ஸ்ரீ ராமகிருஷ்ணரைத்



தங்கள் குழந்தையாகப் பாவித்துக்கொண்டார்கள்; பாலகிருஷ்ணனாகப் பாவித்து பக்தி செலுத்தினார்கள்.

இவர்களுக்குள்ளே நாம் பிரத்தியேகமாக எடுத்து உரைக்கவேண்டிய அம்மையார் ஒருவர் உண்டு; இவர் பெயர் கோபாலம்மா என்பதாம். இவர் கங்காநதி தீரத்திலே ஒரு சிறு பர்ணகசாலை யிபற்றிக்கொண்டு அநேக வருஷங்களாக ஈஸ்வரத் தியானத்திலே காலங் கழித்துவந்தார். இவர் யோகநிஷ்டை புரிந்தவரல்லர்; இவர் பிரஹ்மநிஷ்டையிலுற்றவரல்லர்; இவர் சாதாரணமாக ருத்திராக்ஷ மணிகளையும் துளசிமணிகளையும் உருட்டி ஜபம்செய்து சாந்தி யடைந்தவர். இவருக்கு இஷ்ட தேவதை, இவர் எப்பொழுதும் பெருமையாகக் கொண்டாடிவந்த தெய்வம், பாலகிருஷ்ணனும். இவ்வம்மையார் கண்மூடித் தியானத்திலிருக்கையில், பல சமயங்களிலும் பாலகிருஷ்ணன் பிரத்தியக்ஷமாகக் கண்டு, அந்தத் தர்சனானந்தத்திலே அமிழ்ந்திருப்பார். இவர் தக்ஷிணேஸ்வரத்திலே யிருந்த மகாத்மா ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பற்றிக் கேள்வியுற்றார்; அவரை நேரிற் கண்டு தரிசிக்க வேண்டுமென்ற அவா அவருள்ளே நாளுக்குநாள் பெருகிற்று. ஒருநாள் அவர் புறப்பட்டு ஸ்ரீ ராமகிருஷ்ணர் இருந்த இடம் நோக்கிவந்தார். தூரத்திலே ஸ்ரீ ராமகிருஷ்ணரைக் கண்டபொழுது, அவ்வம்மையார் அங்கு ஒரு சாதாரண மனிதனைப் பார்க்கவில்லை; தம்முடைய இஷ்ட தெய்வமாகிய பாலகிருஷ்ணனையே பார்த்தார். உடனே ஓடோடிவந்து, ஸ்ரீ ராமகிருஷ்ணர் முன்னே

நின்றுகொண்டு, "என்னப்பா! கோபாலா!" என்று அழைக்க, ஸ்ரீ ராமகிருஷ்ணரும் அவரை, "அம்மா" என்றார். ஆகையால், இவ்வம்மையாருக்குக் "கோபாலம்மா" அதாவது "கோபாலனுடைய தாயார்" என்று பெயராயிற்று. இவ்வம்மையார் நெடுங்காலம் ஸ்ரீ ராமகிருஷ்ணருடனே வசித்து, சாரதா தேவியாருக்கு ஓர் உயிர்த்தோழியானார்.

இன்னும் ஒரு ஸ்திரீமணி ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் வந்தார்; இவர் பார்வையிலே ராஜகெம்பீரம் வாய்ந்தவராயிருந்தனர். இவருடைய பெயர் என்னவென்றாவது, இவர் எங்குள்ளவர்—எக்குடும்பத்தைச் சேர்ந்தவர் என்றாவது, எவருக்கும் தெரியாது; இவற்றைப்பற்றி விசாரிக்க எவரும் துணியவும் இல்லை. இவ்வம்மையார் தக்ஷிணேஸ்வரம் வந்து, ஸ்ரீ ராமகிருஷ்ணர், பொதுவாக எல்லா ஸ்திரீகளிடத்திலும் ஜகன்மாதாவைக் காணும் தன்மை வாய்ந்தவராயிருந்தாலும், தமது ஸ்திரீ சிஷ்யர்களிடத்திலே ஜகன்மாதாவை அதிக ஒளியுடன் காணும் தன்மை வாய்ந்திருந்தார். இப்பொழுது இவ்வம்மையார் தம்முன்னே வந்து நிற்கக்கண்ட ஸ்ரீ ராமகிருஷ்ணர் இதுவரையில் எவரிடத்திலும் கண்டிராத அவ்வளவு ஒளியுடனும் தேஜஸுடனும் ஜெகன்மாதா தம்முன்னே வந்து நிற்பதுபோலக் கண்டார். ஸ்ரீ ராமகிருஷ்ணரே பிரமித்து, அவ்வம்மணியைத் தொட்டார்; அவ்வளவுதான்; அவ்வம்மணி பிரபஞ்சப் பிரக்ஞையை அடியோடு இழந்துவிட்டார்; தீர்க்கசமாதி நிஷ்டராய் விட்டார்; இந்த ஸ்திதியிலே வெகுநேரம் இருந்தார்; பிறகு



நிஷ்டை கலைந்து கண்களை விழித்து அவர் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய பாதாரவிந்தங்களில் வீழ்ந்து, "தாயே! பரமேச்வரி! ஜகதம்பா! சர்வஜகன்மோஹினி! சச்சிதாநந்தசொரூபிணி!" என்று ஜகன்மாதாவினுடைய பல திருநாமங்களையும் உரைத்துக்கொண்டே நமஸ்கரித்து எழுந்தாள். அப்பொழுது அவ்வம்மையாருக்கு ஜகன்மாதாவைத் தவிர வேறொன்றுமே புலப்படவில்லைபோலும்! பின்னர் அவ்வம்மணி அங்கிருந்து அகன்று எங்கோ போய்விட்டார்; பிறகு ஒருபொழுதும் அவர் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் திரும்பி வந்ததில்லை.

---

## 12-ம் அத்தியாயம்

## ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய அநுபவம்

ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒரு மகாத்மா; அதிலும் ஒரே பக்ஷம் அநுஷ்டித்து அநுபவம் பெற்ற மகாத்மாவல்லர்; சகல மதங்களையும் பின்பற்றிச், சகல மார்க்கங்களிலும் நடந்து, சமஸ்த விஷயங்களையும் பரிசோதனை செய்து பார்த்து, "எல்லா மார்க்கங்களும் ஈற்றில் ஈஸ்வரனிடத்து இட்டுச் செல்பவையே" என்று அநுபவ பூர்வமாகக் கண்டறிந்த மகாத்மா. ஆதலால், இவருடைய ஸ்வாநுபவங்கள் இவராலேயே விரித்துரைக்கப்படற்கு முடியாதென்றால், அவ்வநுபவத்தில் ஆயிரத்தில் ஒரு பங்கேனும் அடைய முயற்சிக்காத நம்மால் இவருடைய ஸ்வாநுபவத்தை

யெடுத்துக் கூற எங்ஙனம் முடியும்? ஸ்ரீ ராமகிருஷ்ணர் கண்மூடி நிஷ்டையிலிருந்துவிட்டால், சில சமயங்களிலே இராப்பகலறியார்; சில சமயங்களிலே அவருடைய முகத்திலே ருத்திரகளை வீசும், அதாவது அவர் ரௌத்திராகாரமாய் விளங்குவார். சில சமயங்களிலே அவருடைய முகத்திலே உபசாந்தி வீசும்; ஆநந்தமானது அவருடைய ஐம்புலன்களின் வழியாகவும் பொங்கித் ததும்பிப் பூரணமாய் வழியும். ஸ்ரீ ராமகிருஷ்ணர் மகா வைராக்கியத்துடன் சாதனங்கள் செய்யத் தொடங்கினவுடனேயே, ஜனங்கள் கூட்டமாக அவரைச் சூழத் தொடங்கிவிட்டார்கள். எப்பொழுது பார்த்தாலும் ஜனங்கள் வந்துகொண்டேயிருப்பார்கள்; போய்க்கொண்டேயிருப்பார்கள்; இருந்துகொண்டேயிருப்பார்கள். அவரிடத்திலே பக்திசெலுத்தித் தொண்டு புரிவதற்காகச் சாதாரண சாது ஜனங்கள் பலர் வந்தார்கள்; அவரிடத்திலே சிசுருஷை செய்து உபதேசம் பெற்று உய்யலாமென்ற கருத்துடனே முமுட்சுக்கள் பலர் வந்தார்கள்; அவரைத் தர்சனம்செய்து போவதற்காகச் சாதாரண ஜனங்கள் நூற்றுக் கணக்காக வந்தார்கள்; அவருடனே வாது செய்து தங்களுடைய பண்டிதத்திறமையைக் காண்பிக்கும்பொருட்டு வித்யாகர்வமுள்ள பல பண்டிதர்கள் வந்தார்கள்; விளையாட்டாக இவரைப் பார்க்கும்பொருட்டு வீணர்களும் பலர் வந்தார்கள். வெவ்வேறு மதங்களின் ஆசார்யர்கள் பலர் வந்து இவரைத் தர்சித்து, இவர் அவரவர்களுடைய மதத்தைப்பற்றி அத்தியற்புதமாக அவர்களுக்கும் தெரியாத அநேக ரகஸ்யங்களை எடுத்துக் காட்டவே அவர்கு



ஆச்சர்யமுற்று ஸ்ரீ ராமகிருஷ்ணரைத் தங்கள் தங்கள் மதத்தைச் சேர்ந்தவரென்று சொல்லிக்கொண்டு சென்றார்கள். மெல்ல மெல்ல ஸ்ரீ ராமகிருஷ்ணராகிய தாமரை அலர்ந்து மணம்வீச ஆரம்பிக்கவே, இப்புஷ்பத்தினின்றும் அமிருதம்போன்ற தேனை நுகர்ந்து செல்லும்பொருட்டு அநேக தேனீக்கள் வந்தன. கௌரி பண்டிதர், பத்மலோசனர், வைஷ்ணவ சரணர், சசாதர தர்க்க சூடாமணி முதலிய பண்டிதர்களும் வித்துவான்களும் வந்தார்கள்; பிரஹ்ம சமாஜத்துப் பிரதான நாயகர்களாகிய கேசவச் சந்திரசேனர், பிரதாமுஜும்தார் முதலியோர் வந்தனர்; விஜயகிருஷ்ணகோஸ்வாமி, தயாநந்த ஸரஸ்வதி முதலிய மகான்கள் வந்தனர்; புருஷோத்தமராகிய நாகமஹாஷயர் வந்தார்; கிறிஸ்தவர்கள் வந்தார்கள்; மகம்மதியர்கள் வந்தார்கள்; புத்தர்கள் வந்தார்கள்; சமணர்கள் வந்தார்கள்; சீக்கியர்கள் வந்தார்கள்; ஹிந்துக்கள் வந்தவண்ணமாயிருந்தார்கள்; மகா கவிகளும் சிந்தனா புருஷர்களும் வந்தார்கள்; மதபோதகர்களும் ஆசார்யர்களும் வந்தார்கள்; கல்லூரிப் பண்டிதர்கள் வந்தார்கள்; பொதுஜனத் தலைவர்கள் வந்தார்கள்; புருஷர் வந்தனர்; ஸ்திரீகள் வந்தார்கள்; தனவந்தர்கள் வந்தார்கள்; ஏழைகள் வந்தார்கள்; சிஷ்யர்கள் வந்து சேர்ந்தார்கள்; கடைசியாக உலகு முழுதையும் அசைத்து ஆட்டிய நரேந்திரர் வந்தார்; அவருடனே அவருக்கு அந்த ஞான கைங்கர்யத்திலே சர்வசங்க பரித்தியாகம் செய்து முற்றும் துறந்து உதவிசெய்ய முற்பட்ட மற்ற சிஷ்யர்களும் வந்தார்கள்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் திடீரென்று சமாதி கலைந்து கண் விழிப்பார்; நெடுங்காலம் சேர்ந்தாற்போல சமாதியிலிருந்திருந்தால் அவருடைய கண்கள் கோவைப்பழம்போலச் சிவந்து ஒளிவீசும்; நெருப்புப் பறக்கும். இவர் ஐந்து நிமிஷமோ அல்லது பத்து நிமிஷமோ பகிர்முகப்பட்டு இருந்துவிட்டு, ஒரு வேளை மறுபடியும் சமாதியில் கூடினாலும் கூடிவிடுவார்; சில சமயங்களிலே பேச ஆரம்பித்துவிட்டால் இராப்பகலறியாது பேசிக்கொண்டேயிருப்பார்; சமாதியிலிருந்து கண்விழித்து அங்குத் தம்மைச் சூழ்ந்திருப்பவர்களுக்கு வேதாந்த உபதேசம் செய்வார்; பெரிய விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டேயிருப்பார்; அவருடைய மனமானது திடீரென்று அந்தர்முகப்பட்டுவிடும். கண்ணை மூடிவிடுவார்; அவ்வளவுதான். அவர் பேசாமல் கண்மூடி மௌனியாகி பிரஹ்ம நிஷ்டையிலிருந்தபொழுதிலும், அவரைச் சுற்றிலும் நூற்றுக்கணக்காக ஜனங்கள் உட்கார்ந்துகொண்டிருப்பார்கள். அவர்தான் பேசவில்லையே; இவர்களுக்கு அங்கு என்ன வேலை? அவருடைய ஆநந்தாநுபவமானது ஆயிரம் நாவெடுத்து அனைவர்மீதும் வீசுகிறது. பேச்சில்லை, மூச்சில்லை; ஆயினும் பிரஹ்மாநந்தத்துக்குக் குறைவில்லை. அங்கு வந்த ஜனங்கள் அந்த மகாத்மாவினுடைய சந்நிதான மாத்திரத்திலே தங்களுடைய சொந்தக் கவலைகளையும் துக்கங்களையும் மறந்து ஆநந்த மநுபவித்துக்கொண்டிருந்தார்கள்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் சமாதி கலைவதற்குள்ளாக அவருடைய பக்தஜனங்கள் அவருக்கு ஆகாரம் பிசைந்து அவர்



முன்னே உருண்டையாக உருட்டி வைத்திருப்பார்கள்; ஏனெனில், இவர் சில சமயங்களில் சமாதிகலைந்த சில நிமிஷங்களுக்குள்ளாகவே மறுபடியும் சமாதி கூடிவிடுவார்; சில சமயங்களிலே இவர் இராப்பகலறியாது பிரஹ்மாநந்தம் அநுபவித்துக்கொண்டு நிஷ்டையிலேயே இருந்துவிடுவார் ஆகலால், இவர் முன்னே வைக்கப்பட்ட ஆகாரம் எறும்புகளினால் மொய்க்கப்பட்டுவிடும்; பக்தர்கள் அதை எடுத்துவிட்டு வேறு ஆகாரம் கொண்டுவந்து வைப்பார்கள்; சில சமயங்களில் இவ்விதமாக ஆகாரம் அநேகந்தடவை மாற்றப்பட்டுவிடும். ஸ்ரீ ராமகிருஷ்ணர் கண்ணை விழிப்பார்; எதிரே ஆகாரமிருந்தால் அதிலே இரண்டொரு கவளம் எடுத்து உண்டுவிட்டுக், கையைத் தலையிலே துடைத்துக்கொண்டு, மறுபடியும் கண்ணை மூடிவிடுவார்.

சில வேளைகளில் பக்தசிரேஷ்டர்கள் பஜனைகோஷ்டிகளுடனே ஸ்ரீ ராமகிருஷ்ணரைத் தர்சிக்க வருவார்கள்; ஸ்ரீ ராமகிருஷ்ணர் பாடுவார், தாளம் போடுவார், ஆடுவார். ஆ! ஆ! அப்பொழுது பார்க்கவேண்டும் ஸ்ரீராமகிருஷ்ணரை. அவ்வப்பொழுது பாடப்படும் பாடல்களுக்குத் தக்கபடி அவருடைய முகம் மாறுபடும். ‘‘ஈசனைக் காணவில்லையே, எப்பொழுது வருவாரோ?’’ என்று பொருள்படும்படியான பாடல்களைக் கேட்டவுடனே அவருக்குத் துக்கம் பொங்கிவிடும்; முகம் வாடிவிடும்; தேம்பித் தேம்பி யழுதுகொண்டேயா[illegible]ர். ‘‘கண்டேன் கண்டேன், கண்ணன் கருணை முகத்தைக் கண்டேன் கண்டேன்’’ என்பது போன்ற

பாடல்களைக் கேட்டவுடனே அவருடைய முகத்திலே ஆனந்தம் வீசும்; அண்டாண்டங்களெல்லாம் அதிரும்படி கர்ச்சனை செய்வார்; குழந்தைகள்போலக் குதித்துக் குதித்து விளையாடுவார்; மான்குட்டிபோலத் துள்ளித் துள்ளி விளையாடுவார்; முகமே நகையாடும். இன்னும் பஜனை நிர்த்தனங்களிலே ஸ்ரீ ராமகிருஷ்ணர் கும்மியடித்துக் குனிந்து குனிந்து பாடுவார்; ஸ்திரீகள் பாடுகிற மாதிரியெல்லாம் பாடிப் பரவசராய் விடுவார்; ஆனந்தம் பொங்கி இவர் அனுபவித்துக்கொண்டிருக்கிறவரையில் எல்லாம் சரியாயிருக்கும்; சில சமயங்களிலே இவர் அவ்வானந்தத்திலே கரைந்து லயித்து விடுவார்; அச்சந்தர்ப்பங்களிலே, இவர் பாடியாடிக் கொண்டே யிருப்பார்; திடீரென்று நின்றுவிடுவார்; கீழே சாய்ந்துவிடுவார்; அப்படியே சமாதியில் லயித்துவிடுவார்; பார்ப்போர் பிரமிப்பார்கள்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் யோகப்பிரக்ஞையின் அவதாரமே யென்று சொல்லலாம். அகண்ட சச்சிதானந்த பிரஹ்மானுபூதி யடைதற்கு நமது சாஸ்திரங்களிலே அநேக உபாயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஸ்ரீ ராமகிருஷ்ணரோ அவ்வெல்லா உபாயங்களையும் மிகவும் பிரயாசைப்பட்டு அநுசரித்து அநுபூதி யடைந்துவிட்டார். இலக்ஷியத்தை யடைவதற்குத் தாம் கஷ்டப்பட்டது தமக்குத் தெரியுமாதலால், தமது சிஷ்யர்களுடைய அப்பியாச அநுஷ்டான விஷயங்களிலும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் மிகவும் பொறுமை வகித்து வந்தார். தமது சிஷ்யர்கள் தம்முடனே வாதுபுரிந்து தாம் கூறுவதைச் சித்திரவதை செய்து நன்றாக ஆய்ந்துபார்த்துப் பின்னர் ஒப்புக்கொண்டால் ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு இன்னும் சந்தோஷம் அதிகம். ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஈஸ்வர சொரூபங்கள் நிறைந்த உலகத்திலே வசித்துவந்தார்; ஞான உண்மைகளை உடனுக்குடனே தெளிவாகத் தெரிந்து கொள்ளும்படியான நிலைமையில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது மனத்தைப் பழக்கி வைத்துக்கொண்டிருந்தார். அவர் துவைதியாயுமிருந்தார்; விசிஷ்டாத்வைதியாயுமிருந்தார்; அத்வைதியாயுமிருந்தார்; மூர்த்தங்கள் பலவும் பிரஹ்ம வஸ்துவினுடைய சகுண வியக்தங்களே யென்று அவர் கண்டிருந்தார் அந்த மூர்த்தங்கள் உயர் நிலையாகிய சத்திய வஸ்துவில் கரைந்து லயித்து விடுவதையும் அங்கு பிரஹ்ம தரிசனத்தைத் தவிர வேறொன்றுமில்லாது போவதையும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் அநுபவபூர்வமாகக் கண்டிருந்தார்; அவர் தமது வியஷ்டித் தன்மையை யிழந்து, சமஷ்டியில் கரைந்து விராட்சொரூபமா யிருந்தார்; அவர் ஜாக்கிர, ஸ்வப்பன, சுஷுப்தியாகிய மூன்று அவஸ்தைகளிலும் பிரஹ்ம ஞானநுபூதி மேலிட்டவராகவே யிருந்தார்.



ஆ! ஆ!! அவர் எப்பொழுதும் அடைந்திருந்த ஆனந்தக் கும்மாளம்தான் என்னே? ஆ! ஆ!! அவர் எப்பொழுதும் ஏறி யுலாவிய உயர் நிலைகள்தான் என்னே? அவருக்குச் சமாதி நிலைமை சாதாரணமாய்விட்டது; இயற்கையிலே யுள்ளதுபோலாய்விட்டது. அவர் தம்மை ஈஸ்வர

னுடைய புத்திரனைக் கருதிக்கொண்டார்; ஜகன்மாதாவினுடைய 'செல்ல'க் குழந்தையாகக் கருதிக்கொண்டார்; பிரஹ்ம வஸ்துவினுடைய சாயாமாத்திரமாகக் கருதிக் கொண்டார். நம்மாலே கற்பிக்கப்பட்டுப் பூஜிக்கப்படுகின்ற ஈஸ்வரனுடைய சகல சகுண வடிவங்களிலும் அவர் பிரஹ்ம வஸ்துவையே பார்த்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஸ்வாநுபவமடைதற்குப் பட்ட அவஸ்தைகள் பல, எல்லோருடைய ஹிருதயத்திலும் பரிதாபத்தைக் கிளப்பத்தக்கன. இவர் மிகவும் கடுமையான தவங்கள் பல செய்தார். ஸ்வாநுபவம் அடைவதற்காக அவர் பட்ட அவஸ்தையிலே அவர் மண்ணைக்கூடக் கடித்திருக்கிறார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் லக்ஷியங்களாலாகிய ஒரு உலகத்திலே ஒரு சத்தியவாதியாவர்; அதாவது, அநுபவத்தில் கொண்டுவரப்பட-முடியாத லக்ஷியங்கள் அவருக்கு உலகில் இல்லவேயில்லை. சத்தியம் ஒன்றையே அவர் அறிந்திருந்தார்; சாத்தியம் என்ற ஒன்றையே அவர் அறிந்திருந்தார்; அசத்தியமும் அசாத்தியமும் அவருடைய உலகில் இல்லவேயில்லை.

ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சரீரம் நல்ல பலமான கட்டும் அமைப்பு முடையது; ஆனால், அவர் செய்துவந்த கடுந்தவமானது அவருடைய சரீரத்தை எலும்பும் தோலுமாக்கிவிட்டது; இப்படி இவர் உடைந்து மெலிந்து உலர்ந்திருந்தும் அவருடைய முகத்திலே ஒரு நிறைவு இருந்தது; குழந்தையினது போன்ற நிஷ்களங்கத் தன்மை



யிருந்தது; விநயம் நிரம்ப இருந்தது; அவருடைய மொழிகளிலே முத்துக் கொழிக்கும்; அவருடைய அதரங்கள் பிரிந்து தோன்றும் புந்நகை ஆநந்தத்தை வீசின. ஸ்ரீ ராமகிருஷ்ணர் காஷாய வஸ்திரம் தரித்திருந்தார். அவர் ஜாதியாசாரங்களை வழுவவிடாமல் முதலிலிருந்தபொழுதிலும், பிற்காலத்திலே அவை அவருக்கே தெரியாமல் தாமாகவே அவரிடத்திலிருந்து வழுவிப் போய்விட்டன. இவர் அதிவருணாச்சிரமியாய்விட்டார். இவர், காஷாயம்தான் உடுத்த வேண்டுமென்ற கட்டாயக் கொள்கை யொன்றையும் கொண்டிருக்கவில்லை. ஊண், உடை இவ்விரண்டும் சாதாரண ஜனங்களினுடையவையேயாயிருந்தன. இவர் தாம் பிறருக்குக் குருவென்று சொல்லிக்கொண்டதில்லை; குருஸ்தானத்தை வெறுத்தார்; ஜனங்கள் அவருக்கு விசேஷ மரியாதைகள் செய்ய விரும்பினால், அவர் உடனே தமது அதிருப்தியை மிகமிக அதிகமாகக் காண்பித்துவிடுவார்; தம்மிடத்திலே ரகஸ்யங்கள் கிடையாவென்றும், எல்லோருக்கும் பொதுவாய் எங்கும் இருக்கும் பிரஹ்மவஸ்துவே தம்முடையதென்றும், அவ்விஷயத்திலே ரகஸ்யம் ஒன்றும் இருக்க முடியாதென்றும், வற்புறுத்திக் கூறிவந்தார். பலர் தம்மைப் பிரக்கியாதியுடன் கூறினால், அது அவருக்குக் கேட்கப் பிடிக்காது; தம்மிடம் விநோதார்த்தமாக வருகிறவர்களை அவர் வெறுத்தார்; நேருக்கு நேர் தமது வெறுப்பை வெளிப்படுத்திவிடுவார். உலகினர்களைச், சிற்றின்பப் பிரியர்களைக் கண்டுபிடித்து நீக்குவதிலே அவர் கண்ணும் கருத்துமாயிருந்துவந்தார். அவரிடத்திலே விசேஷமாக,

அசாதாரணமாக ஒன்றுமில்லை. அவருடைய மதம் என்ன? ஹிந்து மதம்தான்; ஆனால், அவர் ஹிந்து மதத்திலே எப்பிரிவையும் சேர்ந்தவரல்லர்.

அவர் சைவருமல்லர், சாக்தேயருமல்லர், வைஷ்ணவருமல்லர், வேதாந்தியுமல்லர், துவைதியுமல்லர், அத்வைதியுமல்லர். அவர் சிவபூஜை செய்துவந்தார்; காளி பூஜை செய்துவந்தார்; இராமனைப் பூஜித்துவந்தார்; கிருஷ்ணனைப் பூஜித்துவந்தார். அவர் எல்லாக் கொள்கைகளையும், எல்லா ஆசாரங்களையும், எல்லா அவதார புருஷர்களையும், எல்லாவித அநுஷ்டானங்களையும் ஏற்றுக்கொண்டார். ஒவ்வொன்றும் அவருக்கு ஒரு பொழுதும் பொய்யாகாத உண்மையாகவே யிருந்துவந்தது. அவர் சகுணோபாசகரா யிருந்தபொழுதிலும் அகண்ட சச்சிதாநந்த வஸ்துவாகிய பரிபூர்ணத்துவத்தினிடத்தே மனத்தை ஒருமுகப்படுத்தி லயித்து இராப்பகலற்று இருந்தார். ஆநந்தாநுபூதியே அவருடைய மதம்; அதீத திருஷ்டியே அவருடைய உபாசனை; இரவும் பகலும் அவருடைய சரீரமும் தன்மையும் ஆநந்தத்தைக் கமகமவென வீசிக்கொண்டே யிருந்தன. அவர் சம்பாஷிக்க ஆரம்பித்துவிட்டால் நெடுநேரம் சம்பாஷித்துக்கொண்டே யிருந்துவிடுவார்; அவரைச் சூழ்ந்து உட்கார்ந்து கேட்பவர்கள் களைப்படைந்துவிடுவார்கள். அவர் பலயீனரே யாயினும் எப்பொழுதும் இப்பொழுதுதான் பேசத் தொடங்கினவர்போல் அவ்வளவு உற்சாகத்துடன் இருப்பார்.



ஸ்ரீ ராமகிருஷ்ணர் எல்லா மூர்த்தங்களையும் நிர்விகாரப் பொருளாயுள்ள அந்தப் பரவஸ்துவின் லக்ஷணமாகிய நித்தியாநந்த நிலைக்கு இட்டுச் செல்வதற்கு அனுகூலமான வெவ்வேறு சக்திகள் எனக் கருதிவந்தார்.

சிவன் தியானத்துக்கும் யோகத்துக்கும் அறிபொருள். மகாதேவர் கவலை யெல்லாவற்றையும் மறந்து நிற்கிறார்; சமாதியிலே லயித்துச் சின்மயமா யிருக்கிறார்; பரப்பிரஹ்மப் பரிபூர்ணத்துவத்தைத் தியானித்துக்கொண்டே யிருக்கிறார்; துன்பத்தை யுணர்கிறதில்லை; ஏகாந்தவாசத்தைப்பற்றிக் கவலைப்படுகிறதில்லை; திவ்ய நிஷ்டையிலே ஆநந்தம் பெற்றுத் தேஜோமயமாய் விளங்குகிறார்; அடக்கமாய், அமைதியாய், மௌனமாய்த், தெளிவுபெற் றிருக்கிறார்; தமது வாசஸ்தானமாகிய வெள்ளியங்கிரிபோல அசைக்கப்படாதவரா யிருக்கிறார்; இந்த மகாதேவரே நிஷ்டாபரர்களெல்லாம் பின்பற்றும் மூர்த்தம். தீமையாகிய விஷ சர்ப்பங்கள் அவருடைய சரீரத்தைச் சுற்றிப் பிணைத்தனபோலச் சுருண்டுகொண் டிருக்கின்றன; ஆனால், அவற்றால் அவரைத் துன்புறுத்த முடியவில்லை. மரணமான பயங்கரமும் அபாயமுமான பல வடிவங்க ளெடுத்து அவரைச் சூழ்கிறது; ஆனால் அவரைப் பயமுறுத்த முடிகிறதில்லை. சிவன் உலகக் கவலைகள், பாரங்கள் எல்லாவற்றையும் தாமே வகித்துக்கொள்வ தன்றியில், பிறருக்கு அமிருதம் அளிக்கும்பொருட்டுத் தாம் கொடிய விஷத்தைக் கூசாமல் உட்கொண்டுவிட்டார். சிவன், பிறருடைய நன்மை

ளைக் கருதி ஐசுவர்யம், போகம் எல்லாவற்றையும் தியஜித்துவிடுகிறார்; பார்வதி யொருத்தியே அவருடைய கடுந்தவங்களிலும் ஏகாந்தத்திலும் அவருக்குத் தோழியாய் நிற்கிறாள்; சாம்பரும் புலித்தோலும் தவிர அவருக்கு வேறு ஆபரணங்கள் கிடையா. ஸ்ரீ ராமகிருஷ்ணர் இவற்றையெல்லாம் சிந்தித்துக்கொண்டே யிருந்துவிட்டு, அப்படியே சமாதியில் லயித்துவிடுவார்.

ஆ! ஆ!! எனது கிருஷ்ணன்! பிருந்தாவனத்திலே மாடு மேய்த்துக்கொண்டே புள்ளாங்குழல் ஊதி மாடுகளை மாத்திரம் அன்று, மாதர்களையும் மயக்கிய அந்த மாயாவதார கிருஷ்ணன்! ஆ! ஆ!! அவனே அன்புரு. அவனுடைய முகத்தைப் பாருங்கள். அது புருஷனுடைய முகமா? ஸ்திரீயினுடைய முகமா? அதிலே ஆங்காரப் புலனுணர்ச்சி ஏதேனும் உள்ளதா? அதிலே ஆண்பாலுக்குள்ள முரட்டுத்தனத்தைத் தெரிவிக்கும்படியான ரோமம் ஒன்றேனும் உள்ளதா? கிருஷ்ணனுக்குள்ளது ஒரு இளம்பெண்ணின் முகமே; அம்முகத்திலே சிறுபையனுடைய “ஷோக்” கும், சிறுபெண்ணினுடைய “சுந்தரமும்” சேர்ந்து பொலிகின்றது, பாருங்கள். ஆ! ஆ!! அந்தத் திருட்டுக் கிருஷ்ணன் பலவிதமாக மயக்கிச் செலுத்திய அன்பினாலே அநேக புருஷர்களும் ஸ்திரீகளும் பற்றுதல்களையெல்லாம் விட்டுவிட்டு, பாலகிருஷ்ணனடி பணிந்து, சரணடைந்து, பக்தி மார்க்கம் புகுந்து முக்தி யடைந்தார்கள். அன்பு மாத்திரம் உண்மையாய் உள்ளத்திலிருந்து பொங்கித் ததும்பி வழிவது உண்மையா



னால், அவ்வன்பு எவ்வித உருவையும் எளிதில் எடுத்துக் கொள்ளமுடியுமென்பது கிருஷ்ணனுடைய உபதேசத்தின் சாராம்சம்; அவ்வன்பு, பெற்றோர்களுடைய பிரியத்தையெல்லாம் சொந்த மாக்கிக்கொண்ட குழந்தையாக வரலாம்; ஒருபொழுதும் நீங்காது எல்லாவற்றிலும் ஒன்றேயாயிருக்கும் உயிர்த்தோழனாய் வரலாம்; புருஷர்களையும் ஸ்திரீகளையும் ஹிருதயபூர்வமாக பக்தி செலுத்தும்படி போதிக்கவல்ல குருவாய் வரலாம். ஆ! ஆ!! கிருஷ்ணனுடைய குணத்தினுடைய ஆழத்தையும் அழகையும் கண்டறிந்தவர் யாவர் உளர்? கிருஷ்ணனே பக்தி சொரூபம்.” இவ்விதமாக வெல்லாம் சிந்திந்துக்கொண்டே ஸ்ரீராமகிருஷ்ணர் இருப்பார்; சிந்தனை ஏற ஏற அவருடைய சரீரமானது விறைத்துவிடும்; அவருடைய கண்களினின்றும் கண்ணீர் தாரைதாரையா யோடும்.

அவர் ஒன்றும் ஒருபொழுதும் எழுதியதில்லை; எவருடனும் தர்க்கம் செய்ததுமில்லை; உண்மையொன்றையே எல்லாவற்றிலும் பார்ப்பவர் எவருடனே எதைப்பற்றித் தர்க்கிப்பது? அவர் குருஸ்தானம் வகித்து உபதேசிக்க முயற்சித்தது மில்லை. அவருடைய சம்பாஷணையானது அவருடைய ஆத்மாநந்தப்பிரவாகமே உடைந்து எங்கும் பெருக்கெடுத்தோடுவதுபோ லிருக்கும்; அவருக்குச் சமாதியினை சலிப்பு வந்துவிட்டால், அருமையான பதங்களை ஆநந்தமாக. அற்புதமாகச் சிறிதுநேரம் பாடிக்கொண்டிருப்பார், அவருக்கு எழுதப்படிக்க நன்றாய்த் தெரியாது என்றாலும்,

புராணங்களிலும் இதிகாசங்களிலும் மறைந்து கிடக்கும் பல அரும்பொருள்களை யெடுத்துப் பச்சைக் குழந்தைக்கும் தெரியுமாறு, எல்லோரும் ஆச்சரியப்படும்படி விளக்கிக் காட்டுவார். இந்த அவதாரங்களும் மூர்த்தங்களுமெல்லாம் நித்திய, நிர்விகார, நிஷ்களங்க ஜோதி சமுத்திரமாகிய அகண்ட சச்சிதாநந்த சொரூபத்தினுடைய சக்திகளும் லீலைகளுமேயாம் என்பது அவருடைய அபிப்பிராயம். ஹிந்துமதம் உண்மையானது; வெறும் கோட்பாடுகள் நிறைந்ததன்று; ஹிந்து மதத்திலே கூறப்பட்ட ஒவ்வொரு கொள்கையும் அநுபவ பூர்வமான பரிசோதனைக்கு உட்படுத்தப்படத்தக்கதே. அவர், சரீரத்தையும் மனத்தையும் வாட்டி வதக்கித் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொண் டிருந்தார். அவருடைய சரீரமானது உண்மை நிறைந்ததா யிருந்தது; ஆநந்தம் நிறைந்ததா யிருந்தது; அற்புதமான பரிசுத்தம் நிறைந்ததாயிருந்தது. உலகம் பொய் யென்பதற்கும், வெறும் பாழ் என்பதற்கும் அவர் ஒரு பெரிய அத்தாக்ஷியாய் நின்றார். அவருக்கு ஈஸ்வரனைத் தவிர வேறு நினைப்பில்லை; ஈஸ்வரனைத் தவிர வேறு அலுவலில்லை; ஈஸ்வரனைத் தவிர வேறு பந்து இல்லை; ஈஸ்வரனைத் தவிர வேறு நண்பனும் இல்லை.

தீய சிந்தையுள்ளவர்களை ஸ்ரீ ராமகிருஷ்ணர் கண்டவுடனேயே தெரிந்துகொள்வார்; அவர்கள் வெறுந் தண்ணீர் கொடுத்தால்கூட அவர் ஏற்றுக்கொள்ளமாட்டார். அவர்களால் விரிக்கப்பட்ட பாயில்கூட உட்காரமாட்டார்; அவருடைய ஆத்மீக உணர்ச்சி அத்தியற்புதமானது. ஒரு



சமயத்தில் பூமி ஈஸ்வரனுடைய சரீரமென்றும், ஆகையால், இந்தப் பூமியிலுள்ள புஷ்பங்களெல்லாம் முன்னமேயே ஈஸ்வரனுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுவிட்டனவென்றும், ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குத் தோன்றிற்று. அப்படியிருக்க, அந்தப் புஷ்பங்களைப் பறித்து அவற்றால் எந்தத் தெய்வத்தை அர்சிப்பது? சில சமயங்களிலே அவர்—சமணமத நினைப்பு வந்து விடுமோ? என்னவோ?—புல்லின்மீது நடந்தால் எங்கே அதற்குத் துன்பம் உண்டாய்விடுமோ? என்று பயந்து, புல்லின்மீதுகூட நடக்கமாட்டார். இன்னொரு சமயத்திலே, ஒருவன் மற்றொருவனை யடிக்க, இவர் அடிபட்டவன் தாம் தான் என்று கருதிக்கொண்டு பார்க்க, அடிபட்ட இடத்திலே அப்படியே வீங்கின தழும்பு இருக்கும். வேறொரு சமயத்திலே ஸ்ரீ ராமகிருஷ்ணர் லக்ஷக்கணக்கான ஏழைகளை நினைத்துக்கொண்டு விடுவார்; வேறெல்லா விஷயங்களையும் மறந்துவிடுவார்; அவருடைய வேதாந்தமெல்லாம் பறந்துவிடும்; தேவியும் அச்சமயத்தில் அவருக்குத் திரணம் மாத்திரம். லக்ஷக்கணக்கான ஏழைகளை அவருடைய ஹிருதயத்தில் பெரிதாகப் பதிந்துகொண்டு, அவரைப் புண்படுத்திக்கொண்டிருப்பர். “ஐயோ, இந்த ஏழைகளின் கதி என்ன? அளவுக்கு மிஞ்சிய ஐசுவரியம் சேர்ப்பவர்களுடைய தனம் எப்படி அவர்களுக்குக் கிடைத்தது? இவ்வேழைகளை வஞ்சித்துத்தானே. உலகிலே ஈசுவர சிருஷ்டியாகிய பஞ்சபூதங்களும் சகல மனிதருக்கும் பொதுப்பொருள்களாயும் உடைமைகளாயுமிருக்க, ஜீவசிருஷ்டியாகிய காமக்குரோதாதி ஆசையினால் தூண்டப்பட்டு

ஒரு சிலர். வாயில்லாதவர்கள், சமர்த்தில்லாதவர்களுடைய ஸ்வதந்திரங்களைப் பிடுங்கிக்கொண்டு அவர்களை நிர்க்கதியாக்கிவிடலாகாது. அறிவு மழுங்கியிருக்கிறது; உன்னைப்போல் குயுக்தி செய்கிறதற்குப் போதுமான வல்லமையில்லை; ஆகையால், நீ அவ்வறிவு மழுங்கியிருக்கிறவனை ஏமாற்றி அவனுடைய சொத்து ஸ்வதந்திரங்களைப் பிடுங்கிக் கொண்டு விடலாமா? அப்படிப் பிடுங்கிக்கொண்டால், அது நியாயமாகுமா? தர்மமாகுமா? இந்த ஏழை ஜனங்களைக் கண்டு இரங்குபவர் எவர்? இவர்களுடைய துக்கத்தைப் போக்கடிப்பவர் எவர்?'' என்று இரவுபகலாக அழுது அழுது ஏங்குவார். சில சமயங்களிலே தாமே பூமி முழுதும் வியாபித்திருப்பதாக நினைத்துக்கொண்டிருக்க, எவரேனும் பூமியிலே நடந்தால், அவருடைய ஒவ்வொரு அடியும் தமது மார்பின்மீது வைக்கப்பட்டதுபோலப் பாவித்துக் கொள்வார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் யோகாப்பியாசத்தில் பல வருஷங்கள் படாத பாடுபட்டு சித்தியடைந்தாரென்பது இப்பொழுது எல்லோருமறிந்தவிஷயம். இந்த யோகாப்பியாசத்தின் பலனாக அநேக சித்திகளை ஸ்ரீராமகிருஷ்ணர் அடைந்திருந்தார். ஆனால், இந்தச்சித்திகளை ஜனங்களுக்கு ஒருவேடிக்கையாகக் காட்டி அதனால் ஏதேனும் வரும்படி பெற்று வயிறு பிழைக்க எண்ணினாரா? ''முமுட்சு முக்தி எய்தாது இடையே அவனைக் கெடுத்துவிடுவன இச்சித்திகளே'' என்று அவர் எத்தனையோ முறை புகன்றுவந்தார். தவிர, சித்திகள் என்பன என்ன? ஒரு பெருமாதிரிச் செப்படி வித்தைதானே. சாதாரணச் செப்படி வித்தைக்காரன் மாங்கொட்டையிலிருந்து மாஞ்செடி முளைக்கச் செய்கிறான்; நீ ஆகாய கமனம் செய்கிறாய், அல்லது ஜலஸ்தம்பனம் செய்கிறாய். ஜனங்கள் இரண்டையும் பார்த்து ஆச்சரியப்படுகிறார்கள்; ஆனால் அவர்கள், வீட்டுக்குச் சென்றவுடனே அவர்களுடைய கவலைகளும் தொல்லைகளும் அவரைப் பாதிக்கத் தொடங்கிவிடுகின்றன. உன்னைப் பார்த்துவிட்டு அல்லது நீ சொல்வதைக் கேட்டுவிட்டு அவர்கள் சென்றால், பின்னர் அவர்கள் நித்தியானந்தப் பிரியர்களாகவேண்டுமே யொழிய, மறுபடியும் உலக துக்கங்களில் உழன்றுகொண்டிருக்க லாகாது. அதற்கு வேண்டிய முயற்சி என்னவோ அதை நீ செய்ய வேண்டும்.



சித்திகள் சாரமற்றன; உண்மையை நாடுபவனால் ஒதுக்கப்படத்தக்கன; பேரின்பானுபூதிக்குப் பெருத்த இடையூறுகளாயுள்ளன. இடையிலே சில சித்திகள் கிடைத்தமாத்திரத்திலே மனிதனுடைய மனமானது மலினமடைந்தாலும் அடைந்துவிடும்; லக்ஷியத்தினின்றும் விலகிக் கீர்த்தியை நாடும்படி செய்து, மனிதனை அதோமுகமாக இழுத்துவிடும்.

ஒரு சிஷ்யன் பன்னிரண்டு வருஷங்கள் கடுந்தவம் புரிந்தான். ஒருநாள் அவன் இக்கரையிலிருந்த குருவினிடம் வரக்கருதி, குறுக்கே யிருந்த ஒரு சிற்றாற்றை நடந்து கடக்கலாமென்று கருதி, அவ்வாற்றிலே யிறங்கினான்.

அவனுடைய கால்கள் இன்று தண்ணீரில் அமிழ்ந்தவில்லை; பூமியில் நடப்பதுபோலத் தண்ணீரின்மேல் நடக்க, சாதாரணமாக அவனால் முடிந்தது. அவனுக்கு உண்டான சந்தோஷத்துக்கு ஒரு அளவேயில்லை. ஓடினான் குருவினிடம்; "என் அப்பனே! குருமூர்த்தி! நான் செய்துவந்த தவம் பலித்துவிட்டது; தங்களுடைய உபதேசம் பலித்துவிட்டது" என்று கோஷமிட்டுக் குழறிக் கும்மாளம் போட்டுக் கூத்தாடினான். குரு, "சங்கதியென்ன?" என்று விவரமாகக் கேட்க, சிஷ்யன், தான் தண்ணீரின்மேல் நடக்க முடிந்த சித்தியை யெடுத்துரைத்தான். குரு, "சீ, மூடா! இதற்கா இவ்வளவு சந்தோஷம்? படகுக்காரனிடத்தில் கால் அணா கொடுத்தால் உன்னை இக்கரையிலே கொண்டுவந்து விட்டுவிடுவான்; நீ இப் பன்னிரண்டு வருஷங்களாகக் கடுந்தவம் புரிந்து, கால் அணா மதிப்புப் பெறும்படியான ஒரு அற்ப சித்தியைத்தானா எய்தினாய்?" என்றார்.

அதுபோல, "சித்திகள் பயனற்றன" என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம்மிடம் வந்தவர்களுக் கெல்லாம் உபதேசித்துவந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒருவரைப் பார்த்துவிட்டால், அவருடைய மனத்தை ஆய்ந்து பார்த்து அவருடைய மனக் கருத்தை யறிந்துவிடுவார்; சில சமயங்களிலே ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது மனத்தை வருங்காலத்தினுள்ளே செலுத்தி, கால கர்ப்பத்திலே பக்குவமடைந்துகொண்டிருக்கும் விஷயங்களைத் தெரிந்துகொள்வார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது மனத்தைக் களங்கமற்ற கண்ணடிபோலப் பரிசுத்தப்படுத்தி ஒருமுகமாக்கி வைத்திருந்ததினாலே, அந்த மனமானது இவருக்கு அடிமைபோல நின்று அதி ரகஸ்யங்களை யெல்லாம் கொண்டுவந்து அளித்துக்கொண்டிருந்தது. ஆனால், ஸ்ரீ ராமகிருஷ்ணர் இச் சித்திகளுள் எதையும் வெளியே காண்பித்துக் கொள்ளவில்லை.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் அதிசொற்பப் படிப்புள்ளவரே யென்று முன்னமேயே கூறியிருக்கிறோம்; ஆகையால், பெரும் புத்தகங்கள் படிக்கும் ஆற்றலற்றவரா யிருந்தார். ஆயினும், அவர் எந்தக் கிரந்தத்தையும் ஒருவர் ஒரு முறை படிக்கத் தாம் கேட்டுவிட்டால், அப்படியே மனத்தில் பதிப்பித்துக்கொள்ளும்படியான ஞாபகசக்தி மிகுந்தவர். ஒருநாள் ஸ்ரீ ராமகிருஷ்ணர் ராமாயணம் கேட்க விரும்பித் தமது சிஷ்யர்களுள் ஒருவரைப் படிக்கச்சொல்ல, அப்படியே அவர் படித்தார்; ஸ்ரீ ராமகிருஷ்ணர் கேட்டுக்கொண்டிருந்தார்; இன்னொரு சிஷ்யன் அவரை நோக்கி, "ஸ்வாமி! தேவதேவ! தங்களுக்கு சம்ஸ்கிருதபாஷைப் பயிற்சி சிறிதேனும் இல்லையே; இப்பெரிய ராமாயணம் தங்களுக்கு எப்படிப் பொருள்படும்?" என்று கேட்டான். ஸ்ரீ ராமகிருஷ்ணர் அதற்குமுன் ஒரு முறை தாம் அந்தக் கிரந்தத்தைப் படித்துக் கேட்டிருப்பதாயும், அதை இன்னொரு முறை கேட்கும்பொருட்டுத் தாம் படிக்கச் சொன்னதாகவும் கூறினார்; இது மாத்திரமன்று; ஸ்ரீவால்மீகி ராமாயணத்தின் சாராம்சத்தைத் தெளிவாக எடுத்துக் கூறிவிட்டார்.

## 13-வது, அத்தியாயம்

# ஸ்ரீ ராமகிருஷ்ணர் யாத்திரை

தக்ஷிணேஸ்வர ஆலயத்துக்குச் சொந்தக்காரியான ராணிரஸமணி யம்மாளுடைய மருமகப்பிள்ளை—மதுரநாதன் என்பான்—ஸ்ரீ ராமகிருஷ்ணரிடத்திலே அளவற்ற பக்திவிஸ்வாச முடையவன் என்று முன்னமேயே சூசிப்பித்திருக்கிறோம். அவன் இப்பொழுது தனது மனைவியையும், அதாவது ராணிரஸமணி யம்மாளுடைய பெண்—இவர் தமக்குண்டான தேவிதர்சனத்தை உண்மைப்படுத்தத் தம்முன்னே வந்து சம்பாஷிக்கச்செய்த இரண்டு பெண்களுள் ஒருத்தி—இட்டுக்கொண்டு, புண்ணிய யாத்திரை செய்யத் தீர்மானித்தான். இவன் மிகுந்த தனவந்தனென்பதும் நமது வாசகர்களுக்குத் தெரியும். ஆகையால், இவனுடைய தீர்த்தயாத்திரை ஏழைகள் செய்யும் எளிய யாத்திரைபோன்றிருக்கவில்லை. அநேகம் சிப்பந்திகளுடனும் வேலையாட்களுடனும் இவன் புறப்பட்டான். புறப்படுவதற்கு முன்னால் இவன் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் ஆசீர்வாதமும் விடையும் பெற்றுவரச் சென்றான்; ஆனால், ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் போனவுடன், இவன் அவர் பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்து, "ஸ்வாமி! நான் எனது பத்தினியை இட்டுக்கொண்டு நீண்டதொரு தீர்த்த யாத்திரை செய்யக் கருதியுள்ளேன்; ஆனால், தங்களை நான் ஒரு நாளேனும் இதுவரை தர்சிக்காமலிருந்ததில்லை;



ஆதலால், தீர்த்தயாத்திரை காலத்திலே தேவரீருடைய திருமுகத்தை நான் எங்ஙனம் தர்சிப்பது? ஆகையால், ஸ்வாமிகளும் எனது வேண்டுகோளுக் கிணங்கி என்னுடனேகூட தீர்த்த யாத்திரைக்குப் புறப்பட்டால், நான் ஜன்மசாபல்ய மடைவேன்; எனது இவ் வேண்டுகோளை ஸ்வாமிகள் மறுக்கலாகாது" என்று கூறினான். ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கும் நெடுநாட்களாக ஹிந்துஸ்தானத்திலுள்ள சில புண்ணிய க்ஷேத்திரங்களையாவது தரிசிக்கவேண்டுமென்று ஒரு அவா இருந்துகொண்டிருந்தது; எந்த அவாவும் எக்காலத்திலேனும் பலனடைந்து தீரவேண்டுமல்லவா? ஆகையால், ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம்முடைய இவ்வவா பலனடையக் காலம் வந்துவிட்டதென்று நினைத்து, மதுரநாதனை நோக்கிக், "குழந்தாய்! உனது அன்பு என்னை எங்கெல்லாம் இட்டுக்கொண்டு செல்கிறதோ அங்கெல்லாம் நான் வரத் தயாரா யிருக்கிறேன்" என்றார்.

மதுரநாதன் ஸ்ரீ ராமகிருஷ்ணரை ஒரு மடாதிபதியை இட்டுக்கொண்டு செல்வதுபோலக் கூட்டிக்கொண்டு போவதற்குப் பிரமாதமான ஏற்பாடுகளெல்லாம் செய்ய, ஸ்ரீ ராமகிருஷ்ணர் இது தெரிந்துகொண்டு மதுரநாதனிடத்திலே, "அப்பா! என்ன? விளையாடுகிறாயா? அந்த விளையாட்டெல்லாம் உலகினர்களாகிய உங்களுக்கே யிருக்கட்டும்; நான் சாதாரணமாக ஏழையினும் ஏழைபோல வருவதானால் வருகிறேன்; ஆடம்பரத்துடனே வரவேண்டுமென்றால் எவரேனும் ஒரு மடாதிபதியை இட்டுக்

கொண்டு செல்'' என்றார். மதுரநாதன் இவ்வார்த்தைகளைக் கேட்டு, வெட்கமும் விசனமு மடைந்தவனாகி, "அப்படியே" என்று மறுமொழி யளித்து, அவரை ஒரு சாதாரண சாதுவைப்போலவே இட்டுக்கொண்டு சென்றான். இவர்கள் வட இந்தியாவிலுள்ள அநேக க்ஷேத்திரங்களுக்குச் சென்றார்கள்; நாம் முக்கியமான இரண்டொன்றை மாத்திரம் குறிப்பிடுவோம்.

இவர்கள் பிருந்தாவனம் சென்றார்கள். ஆ! ஆ!! பிருந்தாவனம்! கோபிகைகள் கண்ணனிடத்திலே லயித்துக், காதல் (பக்தி) பரவசராகி முக்தி யெய்திய க்ஷேத்திரம்! ஸ்ரீ ராதாதேவி கண்ணனிடத்திலே கரைந்து கலந்து கரையில்லா இன்பத்தைக் கண்டனுபவித்த க்ஷேத்திரம்! பிருந்தாவனத்தைக் கண்டவுடனே ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஆநந்தக் கூத்தாடினார்; அளவிலா மகிழ்ச்சி யெய்தினார். எனது அப்பன் கிருஷ்ணன் கோபிகாமணிகளின்முன் குதித்துக் குதித்து விளையாடிய ஸ்தலம் இதுதானோ? கோபிகாரமணிகளின் ஆசை நாயகனாகிய கோவிந்தன் கோமளிக் கூத்தாடிய ஸ்தலம் இதுதானோ? வெண்ணெய் பால் திருடி விளையாடி வேடிக்கைக் கூத்தாடிய எனது வேணுகோபாலகிருஷ்ணன் மாடு மேய்த்த இடம் இதுதானோ? இவ்விடத்திலே நின்றுகொண்டுதானோ ஸ்ரீ கிருஷ்ணன் தமது புள்ளாங்குழலினால் வேதத்தொனிசெய்து அண்டபிண்ட சராசரங்களை யெல்லாம் அப்படியே லயித்திருக்கும்படி செய்தான்? இங்குதானோ எனது ஆசைநாதன் அநந்த



கிருஷ்ணன், குளத்திலே குளிக்கச் சென்ற கோபிகாமணிகளுடைய வஸ்திரங்களை யெல்லாம் அபகரித்துக்கொண்டு ஒரு விருக்ஷத்தின்மீதேறி நின்றுகொண்டு, அவர்களுக்குப் பற்றற்றிருக்கும் நிலைமையைப் போதித்தான்? இந்த மண்தானோ எனது ஹிருதய நேசன் இனிய ஸ்ரீநிவாசன் மிதித்து நடந்த மண்?

ஸ்ரீராமகிருஷ்ணர் இவ்வாறு பிருந்தாவனத்தைக் கண்டவுடனே பக்தி பரவசராகி, அப்பிரதேசத்து மண்ணையெல்லாம் யெடுத்துத் தமது தலையிலே போட்டுக்கொண்டார்; கோபிகாஸ்திரீகளின் வஸ்திரங்களை யெடுத்துக்கொண்டு கண்ணன் ஏறியுட்கார்ந்த மரமென இப்பொழுது அங்குக் காண்பிக்கப்படுகின்ற விருக்ஷத்தில்மீது ஏறி உட்கார்ந்துகொண்டு தாம் கண்ணனேயெனப் பாவித்துக்கொண்டார்; கண்களை மூடினார்; வியஷ்டித்தன்மையை யிழந்துவிட்டார்; பிரபஞ்ச முழுதும் அவருக்குக் கிருஷ்ணமயமாய்விட்டது; அன்பென்பது ஒன்றே உலகில் உலாவக்கண்டார்; அதிலே அவர் கரைந்து லயித்தார். இங்கு இவர் இப்படியிருக்க, மதுரநாதன் எங்கோ வெளியே போயிருந்தவன் தாங்கள் இறங்கியிருந்த இடத்திலே இவரைக் காணாததினாலே, கலக்கம் மிகவுற்று வருந்தி ஊரெங்கும் தேட ஆரம்பித்தான். இவர் விருக்ஷத்தின்மீது ஏறி யுட்கார்ந்துகொண்டு சமாதியில் லயித்திருப்பது எவருக்குத் தெரியும்? விருக்ஷம் இருந்த அதே இடத்தின் வழியாக நான்கு ஐந்துதரம் அவன் இவரைத் தேடிக்கொண்டு சென்றான்; ஆயினும், அவர்

தென்படவில்லை. பின்னர் ஒருமுறை அவ்வழியாக வர அவன் யதேச்சையாகநிமிர்ந்து பார்த்தான்; அந்த விருக்ஷத்தின்மீது ஸ்ரீராமகிருஷ்ணர் உட்கார்ந்திருப்பதாகத் தோன்றிற்று; இன்னும் நன்றாகத் தூரத்திலிருந்தே உற்றுப்பார்க்க, ஸ்ரீகிருஷ்ணன் கோபிகாஸ்திரீகளின் ஆடைகளையெல்லாம் எடுத்துக்கொண்டு போய் மூட்டையாகக் கட்டிவைத்துக்கொண்டு அங்கே யுட்கார்ந்திருந்ததுபோலத் தோன்றிற்று. மறுபடியும் இரண்டு மூன்று முறை பார்த்தான்; ஸ்ரீராமகிருஷ்ணர்போலவும் தோன்றுகிறது; கோபாலகிருஷ்ணன் போலவும் தோன்றுகிறது. "இருக்கட்டும்; சமீபத்திலே போய்ப் பார்த்துத் தெளிந்துகொள்ளலாம்" என்று மதுரநாதன் அந்த விருக்ஷத்தினருகே வந்தான். தன்னுடைய குருமூர்த்தி ஸ்ரீராமகிருஷ்ணர்தான் உட்கார்ந்துகொண்டிருக்கிறார். அவருடைய நிஷ்டையைக் கலைக்கக்கூடாதென்று மதுரநாதன் அங்கே அந்த விருக்ஷத்தினடியில் சிறிது நேரம் காத்திருந்தான். ஸ்ரீராமகிருஷ்ணர் கண்விழித்தார்; மெல்ல விருக்ஷத்தினின்றும் கீழேயிறங்கினார். மதுரநாதன் விருக்ஷத்தினடியில் சாய்ந்தவண்ணமாக அப்படியே அயர்ந்துவிட்டான். அவன், என்ன செய்வான், பாபம்! அவன் தனவந்தனாயிருந்தும், அநேக வேலைக்காரர்களிருந்தும், ஸ்ரீராமகிருஷ்ணருடைய பிரிவாற்றாமையினாலே இவரையன்று அவன் தேடித்தேடி அவனுடைய கால்கள் அலுத்துவிட்டன. ஆகையால், அவன் அயர்ந்துவிட்டான். ஸ்ரீராமகிருஷ்ணர் அடிக்கடி பிரபஞ்சப்பிரக்ஞையிழப்பவராயினும் சிஷ்யவாற்சல்யம் மிகுந்தவர்; தம்மைத் தேடித்தான் மதுரநாதன் அங்கு வந்திருக்கவேண்டுமென்றுதெரிந்துகொண்டு;



அவனை யெழுப்பாமல், அவன் விழிக்கும்வரையில் அவனருகே தாமும் உட்கார்ந்திருந்தார். மதுரநாதன் கண்விழித்து, அருகிலிருந்த இவரைப் பாராமல் அந்த விருக்ஷத்தினுயரப் பார்த்து, ஸ்ரீராமகிருஷ்ணரைக் காணாது, "ஆ! எந்தன் குருமூர்த்தி........" என்று சொல்லிப் பெருமூச்சு விடுவதற்குள்ளாக, ஸ்ரீராமகிருஷ்ணர் அவனையணுகியவனுடைய கையைப் பிடித்து, "குழந்தாய்! நான் உன்னை விட்டுப் பிரிவேனா? இதோ யிருக்கிறேன்" என்றார்.

பிருந்தாவனத்திலே கங்கா மாதாவென்று ஒரு சந்நியாசினி மகாத்மா இருந்தார்; இவர் ஸ்திரீ ஜாதியாயினும், அதிபால்யத்திலேயே அதாவது குழந்தைப் பருவத்திலேயே உலக சேஷ்டைகளில் மனம் பற்றாது சர்வசங்க பரித்தியாகம் செய்து, சாக்ஷாத் ஜகந்நாதனுடைய திருவடி நீழலில் சேர்ந்துகொள்ளும்பொருட்டுப் பிருந்தாவனத்திலே ஒரு சிறு குடிசையொன்று கட்டிக்கொண்டு அதிலே வசித்து வந்தார். இவ்வம்மையார் மகா பராக்கிரமசாலி; மகா வைராக்கியசாலி; ஸ்திரீ ஜாதியிற்பிறந்தும் ஆண்மைக்குணம் அதிகமாகக் கொண்டவர்; இல்லாவிட்டால் யோகினியாக முடியுமா? இவர் பௌவன பர்வத்திலே அதிசுந்தரவடிவுடையவராயிருந்தனராம்; இவருடைய கற்பைக் கெடுப்பதற்காக எத்தனையோ துஷ்டர்கள் எத்தனையோ விதங்களில் பாடுபட்டுப் பார்த்தார்கள்; ஆயினும், இவ்வம்மையாருடைய ஆண்மைக்குணமானது முன்னேறி நின்று அவர்களுடைய முயற்சி பலிக்கவொட்டாமற் செய்துவிட்டது.

இவ்வம்மையார் பிறவியிலேயே ஜிதேந்திரியை. இவ்வம்மையார் இவ்வளவு ஆண்மை வாய்ந்தவராயினும், இவருடைய முகத்திலே சாந்தமும் தெளிவுமே குடிகொண்டிருந்தன. இவ்வம்மையாருடைய பார்வை ஜீவராசிகளைப் பார்த்து அநுதபிக்கின்ற ஜீவகாருண்யப் பார்வையாம்; இவருடைய நடையோ தன் நிழலைத் தான் பார்த்து நடக்கும் மதயானையின் நடை; இவருடைய மொழிகள் அமிருத சமானமாயிருக்கும்; ஆனால், இவருக்குக் கோபம் வந்துவிட்டதுபோலத் தோன்றும்பொழுது பார்த்தால், இவருடைய கண்களிலே நெருப்புப்பொறி பறக்கும்; இவர் விழிக்கின்ற விழியிலேயே கரடி, புலி, சிங்கம், கடிவாய் முதலிய காட்டு மிருகங்கள் பயந்து ஓடுமென்றால், ஏற்கனவே பயத்தினால் பீடிக்கப்பட்ட மனிதர்களைப்பற்றிக் கேட்பானேன்? அப்பொழுது இவருடைய மொழியிலே ஒருவித அதிகாரக் குரல் கேட்கும். இவருடைய குரல் கேட்டமாத்திரத்தில் அப்படியே நடுநடுங்கிப் போகவேண்டும். இவ்வளவு ஆண்மையும் அட்டகாசமும் வாய்ந்த இவ்வம்மையாரிடத்தில் உண்மையில் கோபமென்பது கிடையவே கிடையாது; இவ்வம்மையாருடைய ஆத்மலக்ஷணம் சாந்தமேயாம். ஸ்ரீராமகிருஷ்ணர் சென்ற இப்பொழுது கங்கா மாதா மகாயோகினியெனப் பிரக்கியாதி பெற்றுப் பிருந்தாவனத்திலே விளங்கி வந்தார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவரிடம் சென்று, சாஷ்டாங்கமாகப் பணிந்து வீழ்ந்து எழுந்து, ''என் அன்னையே! ஜகதீஸ்வரி! நான் இங்கு வருகிறேனென்று தெரிந்து எனக்கு



முன்னமேயே என்னைத் தடுத்தாட்கொள்ளுமாறு இங்கு எழுந்தருளிவந்தாயோ? என் அம்மே! எனக்கு என்ன சொல்கிறாய்?'' என்று இருகை கூப்பி அவ்வம்மையாரின் எதிரே நிற்றலும், அவ்வம்மையார் திடுக்கிட்டு எழுந்திருந்து, ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய பாதங்களில் பணிந்து எழுந்து, ''எனது செல்லக் குழந்தை பாலகிருஷ்ணன்தான் இங்கு வந்து நிற்கிறானோ? ஆம், ஆம்; நான் இதுகாறும் செய்து வந்த தவம் இன்றுதான் பலித்தது'' என்று சொல்லிக்கொண்டே ஸ்ரீ ராமகிருஷ்ணரை உற்றுற்றுப் பார்த்தார். ஸ்ரீராமகிருஷ்ணர், ''அம்மே! நான் கிருஷ்ணனாயிருக்கும்படியான பாக்கியம் பெறவில்லை; நானும் கிருஷ்ணனைத் தேடித்தான் திரிகிறேன்'' என்றார். கங்கா மாதா, ''அப்படியா? உன்னிடத்திலே ஸ்ரீ கிருஷ்ணனுடைய சாயை விளங்குகிறதே; நீ விஷ்ணுவாம்சம் என்பதில் சந்தேகமில்லை; நீ உலகை உய்விக்க அவதரித்திருக்கிறாயென்பதில் சந்தேகமேயில்லை,'' என்று சொன்ன பின்னர், இருவருமாகப் பல பல மாதிரி ஈசுவர விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

பின்னர் நாம் மதுரநாதன், ஸ்ரீ ராமகிருஷ்ணர் முதலியோரைக் கூட்டிக்கொண்டு காசிநகரம் செல்லுவோம். இந்தியா தேசம் முழுதும் காசிமாநகரத்தில் வந்து கூடுகின்றது. எம்மதஸ்தராயினும் காசியாத்திரை செய்யாதவர் கிடையாது, 'ஆயுட்காலத்திலே ஒருதரமேனும் காசியாத்திரை செய்து தீரவேண்டும்' என்று ஒவ்வொரு ஹிந்துவும்

கருதுகிறான். எப்பொழுதும் இரவும் பகலும் அன்னக் கொடி நாட்டி, வந்தவர்களை யெல்லாம் ஆதரிக்கின்ற அன்னபூர்ணியும், தம்முடைய பாதார விந்தங்களிலே வந்து வீழ்ந்து மரிக்கின்றவர்களுக்கெல்லாம் மோக்ஷம் கொடுக்கும் விஸ்வநாதரும் உண்மையேயென ஹிந்துக்கள் நம்புகிறவரையில், காசிமாநகரம் இப்பொழுது போலவே சிறப்புப் பெற்றதாயிருக்கு மென்பதில் சந்தேகமில்லை. விருத்தாப்பிய பூர்வம் வந்துவிட்டால், காசியில் சென்று மரிக்க வேண்டும்; அப்பொழுது அங்கு மரிக்கின்ற ஒவ்வொருவருடைய காதிலும் விசுவநாதர் தாரக மந்திரோபதேசம் செய்கிறாராம்; அதனால் அங்கு மரிக்கின்றவர்கள் அனைவருக்கும் முக்தி நிச்சயமாம். நமது பாரதவர்ஷத்து மகாத்மாக்களில் எவரும் இந்தப் புண்ணிய ஸ்தலத்துக்கு யாத்திரை செய்யாதவர்கள் கிடையா. நமது தேசத்து மிக மிகப் பெரிய சிந்தனைபுருஷர்கள், வீரர்கள், மகாத்மாக்கள் எல்லோரும் அவர்களுடைய ஆயுட்காலத்தில் எப்பொழுதேனும் ஒருமுறை இந்த ஸ்தலத்தைத் தரிசித்துவிட்டுப் போயிருக்கிறார்கள் .சுமார் 4000 வருஷங்களுக்கு முன்னே காசிமாநகரம் எப்படி யிருந்ததோ, அப்படியே இன்றும் அது பிராஹ்மண வித்தைக்கு ஆஸ்தானமாயும், வைதீக ஆசாரங்கட்கு இருப்பிடமாயும், ஹிந்துமத கங்கைக்கு உற்பத்தி ஸ்தானமாயும் இருக்கிறது. இந்திய மகரிஷிகள், இந்திய மகாத்மாக்கள் இவர்கள் பாடுபட்ட முயற்சிகளும் பிரயாசைகளுமெல்லாம் அவ்விடத்திலே பதியப்பெற்றிருக்கின்றன. இந்தியாதேசத்துப் பலவித வெவ்வேறு நடை



யுடை பாவனைகளையும் அங்குப் பார்க்கலாம்; ஏனெனில், இத்தேசத்து வெவ்வேறு பாகங்களிலிருந்து நாநாவித ஜனங்களும் அங்கு வந்து சூழ்ந்துகொள்ளுகிறார்கள். காசிமாநகரமானது ஹிந்துமதத்தினுடைய ஹிருதயமெனப்படலாம். இவ்விடத்திலே விருத்தாப்பியர்கள் சந்தோஷமாக மரிக்கிறார்கள். இவ்விடத்திலே தீராநோயாளர் பலர் ஜன்ம நிவிர்த்தி வேண்டி வந்து குவிகின்றனர்.

ஆ! ஆ!! காசிமா நகரின் அழகே அழகு! எண்ணற்ற மாடமாளிகைகள், கூடகோபுரங்கள், கோவில்கள் எல்லாம் கங்கா நதிதீரத்திலே மிகப் பலமாகக் கட்டப்பட்டிருக்கின்றன; சில இடங்களிலே சில கட்டடங்கள் கங்கையினுள்ளே கூட தலை நீட்டிக்கொண்டிருப்பதைக் காணலாம்; ஆனால், இப்படித் தலை நீட்டிய கட்டடங்கள் பல இடிந்து சிதலாகிப் போய்விட்டன. கங்கா தீரத்திலே அழகிய ஸ்நாந கட்டங்களைப் பாருங்கள். எப்பொழுது பார்த்தாலும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஸ்நாநம் செய்துகொண்டும், ஜபம் செய்துகொண்டும் அங்கே யிருந்துகொண்டே யிருப்பார்கள்; ஆ! ஆ!! அப்புறத்திலே ஸ்மசான கட்டங்களைப் பாருங்கள். இந்த ஸ்மசான மத்தியிலே, பிணங்கள் பயங்கரமாக எரிந்து வேகின்ற இந்தப் பூமியிலே, யோகி பிரபஞ்சப் பிரக்ஞையற்று நிஷ்டாரூடராய் உட்கார்ந்திருப்பதைப் பாருங்கள்.

இத்தகைய மகிமை வாய்ந்த காசிமாநகரத்திலே ஸ்ரீராமகிருஷ்ணர் த்ரைலிங்கஸ்வாமிகளைத் தர்சிக்க. அவ

ருடனே பலஅரிய பெரிய விஷயங்களைப்பற்றிச் சம்பாஷித்தார். த்ரைலிங்கஸ்வாமிகள் திகம்பரராய் அவதூதராய் இருந்தவர்; பிரஹ்மநிஷ்டாபரர். அவருக்குக் காசிமாநகரத்திலே இருந்த மதிப்பு வேறு எந்த மகாத்மாக்களுக்கும் அங்குக்கிடையாது. அவர், ஸ்ரீராமகிருஷ்ணருடைய அமிருத சமானமான வார்த்தைகளைக் கேட்டுக் கேட்டு, மனம் பொங்கி, ஆச்சர்யமடைந்து "குழந்தாய்! ஸ்ரீராமனும் கிருஷ்ணனும் சேர்ந்து உருவெடுத்து வந்ததுபோல வந்திருக்கும் ராமகிருஷ்ணா! உனது ஞானம் அளவிடற்கரிது; உனது முகத்திலே ஞானவொளி வீசுகின்றது; உனது கண்களிலே ஞானம் பிரகாசிக்கின்றது; நீ சாதாரணமாக முமுக்ஷுத்துவம் அடைந்து வெகு பாடுபட்டு மோக்ஷநிலைபெற்ற முக்தபுருஷனன்று; நீ அவதாரபுருஷனே" என்று ஸ்ரீராமகிருஷ்ணரை மிகவும் கொண்டாடினார். இங்ஙனமே ஸ்ரீராமகிருஷ்ணருடைய யாத்திராமார்க்கத்திலே அவரைக் கண்டு சந்திக்கும்படி நேரிட்ட மகான்கள் அனைவரும் ஸ்ரீராமகிருஷ்ணரைப் புருஷோத்தமர் என்றும், ஆசார்ய புருஷர் என்றும், அவதார புருஷர் என்றும் சொல்லி மெச்சினார்கள்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் பிருந்தாவனம் போயிருந்தபொழுது, அங்குள்ள மகிமைகளைக் கண்டு சொக்கி, அங்கேயே ஸ்திரமாகத் தங்கிவிட நினைத்தார்; ஆனால், அதற்கு மதுரநாதன் இசையவில்லை. இன்னும், இவர் இந்திய சக்ராதிபத்தியத்தின் இராஜதானி நகரிலேயிருந்துகொண்டு இந்தியா



வின் பெருமைகளை வெளியிடவேண்டுமென்று ஈஸ்வர சங்கற்பமிருக்க, இவர் பிருந்தாவனத்திலேயிருந்துவிட முடியுமா?

க்ஷேத்திரங்கள், தீர்த்தங்கள் எல்லாம் தர்சனம் செய்துவிட்டு, இவர்கள் கல்கத்தா நோக்கித் திரும்பி வருகிற வழியிலே, 'வைத்தியநாத க்ஷேத்திரத்துக்கருகில் ஒரு குக்கிராமத்தில் இளைப்பாறிச் சமையல் செய்து ஏதேனும் சாப்பிட்டுவிட்டுச் செல்லலாம்' என்று அங்குத் தங்கினார்கள், ஸ்ரீராமகிருஷ்ணர் தமது வழக்கம்போல ஊர் சுற்றிப்பார்க்கச் சென்றார். அவ்வூர் வறுமையினாலே, அதாவது பஞ்சத்தினாலே பிடிக்கப்பட்டு, அவ்வூரார் கூம்பிய தோளும்—சுருங்கிய மார்பும் உடையவர்களாய், எலும்பும் தோலும் தவிர இரத்தமும் சதையுமில்லாதவர்களாய் ஆங்காங்கு மூர்ச்சையாகிச் சிலர் வீழ்ந்து கிடந்ததையும், சிலர் பெருமூச்சு விட்டுத் தியங்கியதையும், சிலர் ஈனஸ்வரத்துடனே ஏங்கியழுததையும், ஸ்ரீராமகிருஷ்ணர் பார்க்கவே, அவருடைய மனமானது துடித்தது. அவ்வூரில் ஆண்பாலரிலும் பெண்பாலரிலும் பலர் தங்கள் மானத்தை மறைக்க வஸ்திரமில்லாது மயங்கிமயங்கி மறைந்திருந்து மெதுவாக மரித்து விடுவதையும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் கேள்விப்பட்டபொழுது, அவருடைய ஹிருதயம் உடைந்தது. "ஐயோ, இப்படியும் ஒரு வறுமையை ஈஸ்வரன் உண்டுபண்ணினானே? இந்த ஜனங்களைப் பார்க்கப் பரிதாபமாயிருக்கிறதே; என்ன செய்வேன்? என் மனம் உருகுகிறதே; எந்தன் ஹிருதயம் துடிக்

இன்றதே; என் உடலெல்லாம் நடுங்குகின்றதே'' என்று ஸ்ரீராமகிருஷ்ணர் தமக்குத்தாமே சொல்லிக்கொண்டு, மதுரநாதன் இறங்கியிருக்குமிடத்துக்குத் திரும்பிவந்து சேர்ந்தார்; ஆனால், அவருடைய மனமானது அவருடனே திரும்பி வரவில்லை; அந்த ஊர் ஜனங்களிடத்திலேயே தங்கி அவர்களுடைய ஒவ்வொரு துன்பத்தையும் ஆய்ந்து ஆய்ந்து பார்த்து அநுதபித்துக்கொண்டிருந்தது.

ஸ்ரீராமகிருஷ்ணர் அவ்வீட்டுத் திண்ணையிலே ஒரு பக்கமாக உட்கார்ந்து கண்களை மூடி, அவ்வூர் ஜனங்களுடைய எழ்மைக்காக வருந்தி ஈஸ்வரனை நோக்கிப் பிரார்த்தனைசெய்து, தியானத்திலிருந்தார். பகல் பன்னிரண்டு மணியாய்விட்டது; சாப்பாட்டு நேரமாய்விட்டது. மதுரநாதன் ஸ்ரீராமகிருஷ்ணரை போஜனத்துக்கு அழைக்க வந்தான். ஸ்ரீராமகிருஷ்ணர் கண்களை மூடித் தியானத்திலிருக்கிறார். அவருடைய நிஷ்டையைக் கலைப்பதற்கு மதுரநாதனுக்கு மனமில்லை. ஆகையால், அவன் சற்றுநேரம் காத்திருந்தான். மணி ஒன்றாயிற்று, இரண்டாயிற்று. ஸ்ரீராமகிருஷ்ணர் கண்களை விழிக்கவில்லை. மணிமூன்றாயிற்று; மதுரநாதனும் சாப்பிடவில்லை; குரு போஜனம் செய்யாமலிருக்க, சிஷ்யன் எப்படி யுண்பது? மெல்ல ஸ்ரீராமகிருஷ்ணர் விழித்தார்; பிரபஞ்சப் பிரக்ஞை வந்தது. ''ஆ! ஐயோ, ஈஸ்வரா! இதுவும் உனது திருக்கூத்தோ?'' என்றார். ''ஸ்ரீராமகிருஷ்ணர் சமாதியிலிருந்து கண்விழிக்கிறபொழுதே, இப்படிக் கூறுகிறாரே; என்ன சங்கதி என்று கேட்கலாம்'' என



மதுரநாதன், ''குவலயமெலாம் புகழத்தக்க பெருமைவாய்ந்த குருமூர்த்தி! இருந்தாற்போலிருந்து, அகமுகப்பட்டிருந்த மனமானது பகிர்முகப்பட ஆரம்பிக்கும்பொழுதே, தாங்கள் ஈஸ்வரனுடைய திருக்கூத்திருந்தவாற்றைப்பற்றி வருந்த ஆரம்பிப்பானேன்?'' என்று கேட்டான். அவர், ''ஒன்றுமில்லை'' என்றார். பின்னர், ''அதற்கதிகமாக அவரிடத்தில் கேட்கக்கூடாது'' என்று நினைத்து, மதுரநாதன் அவ்விஷயத்தை யப்படியே விட்டுவிட்டு, அவரைப் போஜனத்துக் கழைத்தான். அவரும் உள்ளே சென்று உண்ண உட்கார்ந்தார். ஆனால், அவருக்கு ஊண் செல்லவில்லை. மனமானது துடித்து வருந்திக்கொண்டிருக்க, அது எதற்காகத் துடித்து வருந்துகிறதோ அக்கார்யம் சித்தியாகாதிருக்கும் வரையில் ஊண்தான் செல்லுமா? உறக்கந்தான் வருமா?

ஸ்ரீராமகிருஷ்ணருடைய மனம் வருந்திக்கொண்டிருந்ததென்பதை மதுரநாதன் உணர்ந்தான். அன்று மாலை அவ்வூரிலின்றும் அவர்கள் புறப்படுவதாக எற்பாடு செய்யப்பட்டிருந்தது. மாலைநேரமாயிற்று; சூர்யனும் அஸ்தமித்தான். புறப்படுவதற்குச் சாமான்கள் வண்டிகளில் எற்றப்பட்டுவிட்டன; எல்லாம் தயாராய் விட்டது; இவர்கள் வண்டிகளில் எறவேண்டியதுதான் பாக்கி. ஸ்ரீராமகிருஷ்ணரைக் காணவில்லை. என்ன செய்வது? இப்படியும் பைத்தியக்காரர்களைக் கூட இட்டுக்கொண்டு வரலாமா? மதுரநாதனும் அவனுடைய வேலைக்காரர்களும் ஸ்ரீராம

கிருஷ்ணரைத் தேட ஆரம்பித்தார்கள். இரவு சூழ்ந்துவிட்டது. எங்குப் பார்த்தாலும் மையிருட்டா யிருக்கிறது. அதுவும், அவ்வூர் ஒரு பட்டிக்காடு. மதுரநாதனும் அவனுடைய வேலைக்காரன் ஒருவனுமாகச் சேர்ந்து ஸ்ரீ ராமகிருஷ்ணரைத் தேடிச் சுற்றிக்கொண்டு வருகையில், அக்கிராம தேவதையாகிய காளி மகாதேவியின் கோயிற்புறத்திலிருந்து, "ஐயோ, இவர்களை ரக்ஷிக்கிறாயா? அல்லது என்னைப் பக்ஷிக்கிறாயா?" என்று ஒரு சத்தம் கேட்டது. அது ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய குரல்போல மதுரநாதனுக்குத் தோன்றிற்று; மதுரநாதனும் அக் கோவிலுக்கு வேகமாக ஓடிச்சென்று பார்க்க, அங்கே துவஜஸ்தம்பத்தில் சாய்ந்து உட்கார்ந்துகொண்டு ஸ்ரீ ராமகிருஷ்ணர் கதறுகிறார். அவருக்கு அவ்வூர் ஏழைகளைத் தவிர வேறு ஞாபகமேயில்லை. அவருடைய கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாய்ப் பொழிகிறது; கீழும் மேலுமாகப் பெருமூச்சு விடுகிறார்.

கண்டான் மதுரநாதன்; அவருடைய கால்களில் அடியற்ற பனைமரம்போல் விழுந்தான்; அவற்றைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான்; "ஐயோ, என் அப்பனே! அடியேன் இங்கிருக்கத் தங்களுடைய கண்களிலிருந்து கண்ணீர் வரக் காரணமென்ன? நானும் எனது பணியாட்களும் தங்களுடைய ஆக்ஞையை—அது எத்தகையதாயினும் சரியே—சிரமேற்கொண்டு ஒழுகத் தயாராயிருக்கத் தங்களுக்கு இவ்விதத் துக்கம் உண்டாகக் காரணமென்ன?



ஐயா, என் சற்குருநாதா! எனது குருமூர்த்தி! தங்களுடைய மனத்தி லுள்ளதை என்னிடத்தில் சொல்லலாகாதா? தங்களுக்குப் புலிப்பால் வேண்டுமென்றாலும் கொண்டுவந்து கொடுப்பேனே; அந்தோ! என் மனம் பதறுகிறதே; எந்தன் ஹிருதயம் அடிக்கின்றதே; நான் என்ன செய்வேன்? நான் என்ன செய்வேன்?" என்று அலறியரற்றி யழுதான். ஸ்ரீ ராமகிருஷ்ணர் மெல்லக் கண்களை விழித்துப் பார்த்தார்; கீழே விழுந்து கிடக்கும் மதுரநாதனை எழுந்திருக்கும்படி யாக்ஞாபித்து, அவனை யாசிர்வதித்து, "குழந்தாய்! இவ்வூர் ஜனங்கள் படும் கஷ்டத்தை நீ யறிந்தாயோ? இவர்கள் இவ்விதமாக எல்லையற்ற துன்பக் கடலில் மூழ்கித் தத்தளிக்க, நான் இதைப் பார்த்துவிட்டு, எனது சொந்தக் கண்களால் நேரே கண்டுவிட்டு, இவர்களுடைய துன்பம் நிவிர்த்தியாகாது நான் இவ்வூரை விட்டு நீங்குவேனோ? எனது மாதா, இவ்வீரேழு பதினான்கு உலகங்களுக்கும் மாதா, இவ்வூர் ஜனங்களாகிய இக் குழந்தைகளுக்கு மாத்திரம் ஊணும் உடையும் கொடாது இருந்துவிடுவளோ? நான் பார்க்கிறேன். மாதாவினிடத்தில் கூறி இக்கிராமவாசிகளுடைய கஷ்டங்களைப் போக்கடித்துவிட்டு, நான் வருகிறேன். நீ போ; நான் பின்னால் வருகிறேன்" என்றார்.

ஆனால், மதுரநாதனா இவரை விட்டுவிட்டுப் போய்விடுபவன்? மதுரநாதன் ஒன்றும் சொல்லாது சற்று நேரம் சும்மா யிருந்துவிட்டு, "ஸ்வாமி! மாதா எனக்கு ஆக்ஞை

யிட்டிருக்கிறாள்; இவ் வூராருடைய துன்பத்தை நீக்க
வேண்டுமென்று; ஆதலால், இவர்களுடைய பசிப்பிசாசு
இவ் வூரைவிட்டு ஓடிவிடும்படியாய் இவர்களுக்கு நான்
ஆகாரம் அளிக்கின்றேன்; இவர்களுக்கு ஆடைகளும்
வாங்கி யளிக்கிறேன்'' என்று சொல்லி, அநேக ஆயிரம்
ரூபாய்கள் செலவழித்து, நூற்றுக் கணக்கான அரிசி
மூட்டைகள் வரவழைத்து, அவ்வூரிலே பிராஹ்மணர்
முதல் பறையர் ஈறாயுள்ள சகல ஜாதியாருக்கும் அவர்கள்
''போதும், போதும்'' என்னும்படி அன்னமளித்தான்;
இப்படி யநேக நாட்கள் அளித்தான். அவர்களுக்கு வேண்
டிய ஆடைகளும் வாங்கி அவரவர்களுக்குத் தகுந்த பிரகா
ரம் கிழித்துக் கொடுத்தான்; சின்னாட்களுக்குள்ளே அக்
கிராமவாசிகளுக்கு ஒரு புதிய உயிர் உண்டாயிற்று;
அவர்களுடைய முகங்களிலே ஒரு களை வீசிற்று; ஒரு
ஒளி ஜ்வலித்தது. இப்பொழுது ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு
மனம் திருப்தி யடைந்தது. அவர் மதுரநாதனை நோக்கி,
அப்பா! ''என் மனம் குளிரச்செய்தாய்; ஸ்ரீ நாராயணன்
க்ஷேத்திரங்களி லிருக்கிறா னென்பதும் பொய்; விக்கிரகங்
களி லிருக்கிறா னென்பதும் பொய்; பக்தர்களுடைய ஹிரு
தயங்களிலே யிருக்கிறா னென்பதும் பொய்; வறுமையினாலே
பீடிக்கப்பட்டு, வியாதியிலே ஆழ்ந்து, துக்கத்திலே மூழ்
கித் திண்டாடுபவர்கள் எவரோ, அவர்களிடத்திலேயே,
அவர்கள் சொரூபமாகவே நாராயணர் விளங்குகிறார்;
இந்த நாராயணர்களுக்குச் சந்தோஷம் உண்டாகும்படி
நாம் நடந்துகொண்டால், அதுவே பக்தியாகும்; உங்கள்



மத்தியில் உலகில் உலாவும் இந்த நாராயணர்களை மறந்து,
வீணே கற்களையும் சிலைகளையும் பூஜிப்பதில் யாது பயன்?
நல்லது, இனிமேல் நாம் கல்கத்தா போகலாம்'' என்று
கூறவே, ஸ்ரீ ராமகிருஷ்ணரும் மதுரநாதனும் மற்றவர்க
ளும் கல்கத்தா நோக்கிப் பிரயாணப்பட்டார்கள்.

---

## 14-வது அத்தியாயம்
## ஸ்ரீ விவேகாநந்தர் ஜனனம்

ஸ்ரீ ராமகிருஷ்ணர் கல்கத்தாவி னருகேயுள்ள தக்ஷி
ணேஸ்வரத்திலே கடுந்தவம் புரிந்து மகானுபாவராய்,
பண்டைய இந்திய வாழ்க்கை வாழ்ந்துவந்தார். தக்ஷிணேஸ்
வரம் கிராமம்; நாகரிக பட்டணமன்று; புராதன இந்திய
கிராமங்களாலேயே ஆக்கப்பட்டிருந்தது. ஆகையால், தக்ஷி
ணேஸ்வரம் பழய இந்தியா; டம்பமின்மை, சாதாரணத்
தன்மை, இன்றியமையாத வஸ்துக்களையும் விஷயங்களை
யுமே எடுத்துக்கொள்ளுதல், அகங்காரமின்மை, பிரபஞ்
சப் பொய்மையை யுணர்ந்து, அதனால் இவ்வுலக விஷயங்
களை வெறுத்து, பரலோக விஷயங்களிலே கவனம் செலுத்
தல் இவையெல்லாம் புராதன இந்தியாவின் தன்மை; உண்ப
தற்காக உழைத்தலன்று, உழைப்பதற்காக (தர்மஸேவை
செய்வதற்காக) உண்ணல், இதுவே பழய இந்தியாவின்
தன்மை; தான் கெட்டும் பிறர் நலம் காத்தல், இதுவே
பழய இந்தியாவின் தன்மை; உயிர் நீங்கினும் உண்மை

நீங்காதிருத்தல் இதுவே பழய இந்தியாவின் தன்மை; தேவேந்திர பட்டமும் திவ்யமான பிரஹ்மஞானத்தின் முன்னே திரணமென நினைத்தல், இதுவே பழய இந்தியாவின் தன்மை; இகலோக விஷயமெல்லாம் எச்சில் எச்சிலே யென்று இகழ்ந்து, இன்பானுபூதிக்கு இருப்பிடமாயுள்ள இரண்டற்ற ஒன்றையே நாடல், இதுவே பழய இந்தியாவின் தன்மை. ஸ்ரீ ராமகிருஷ்ணர் இப்பழய இந்தியாவிலே வசித்துவந்தார்.

ஆனால், இப்பழய இந்தியாவி னருகே புதிய இந்தியாவொன்று கிளம்பியிருக்கிறது. மேனாட்டு நாகரிகமெல்லாம் திரண்டு உருண்டு கல்கத்தா நகரமாக வந்து குவிந்திருக்கிறது. மண், பெண், பொன் என்ற மாயாப் பிசாசங்கள் மூன்றும் மனிதனைப் பலமாகப் பிடித்துக்கொண்டன; இதுதான் புதிய இந்தியா. புத்திக்குப் பிரமாணமாகாத தெல்லாம் பொய், பொய், பொய், முக்காலும் பொய்; இதுதான் புதிய இந்தியா. தேகமே ஆத்மா, போகமே மோட்சம்; இதுதான் புதிய இந்தியா. உலகம் உண்மை, ஒருநாளும் அழிவற்றது; இதுவே புதிய இந்தியா. முறுக்கு மீசை, கிறுக்கு பூட்ஸ், ஐரோப்பியத் தொப்பி, அழகான பிரம்பு, துவிசக்கரவண்டி (Bicycle), ஸ்வசலனவண்டி (Motor-Car), இரும்புப்பாதை வண்டி, கம்பித் தந்தி, கம்பியில்லாத் தந்தி, தபால், இவையெல்லாம் புதிய இந்தியா. ஸ்டாம்பு டிபார்ட்மெண்ட், எளியவர்களுக்குக் கள்ளுக்கடை, சாராயக்கடை, பணக்காரர்களுக்கு அந்நிய நாடுகளிலிருந்து வரும் போர்ட் சாராயம், ப்ராண்டி முதலியன; இதுதான் புதிய இந்தியா. வீட்டுக்கு வீடு காலையிலே காப்பித்தண்ணீர்; எவ்வளவு ஏழையானாலும் காப்பித் தண்ணீர்; இது இல்லாவிட்டால் தலை நோவு; இதுதான் புதிய இந்தியா. மதமில்லை; ஆசார அநுஷ்டானங்கள் இல்லை; ஆர்ய வொழுக்கமில்லை; எல்லாம் போய் விட்டன; இதுதான் புதிய இந்தியா. பணத்துக்காகப் பல்லையிளித்துப் படாத பாடெல்லாம் படத் துணிவது; இதுதான் புதிய இந்தியா. விதவைகளுக்கு விவாகம் இல்லாததினாலேயே, நமது தேசம் சீர் கெட்டுவிட்டது என்ற அபிப்பிராயம்; இது தான் புதிய இந்தியா. பால்ய விவாகம் கூடாது; எருமைக் கிடாக்கள்போல வளர்ந்தபின், ஒருவரை யொருவர் தெரிந் தெடுத்து, நேசித்து, சோதித்து, ஆய்ந்து பார்த்துத் தெளிந்துகொண்டு அவரவர்களுடைய இஷ்டப்பிரகாரம் விவாகம் செய்துகொள்ளவேண்டும் என்ற அபிப்பிராயம்; இதுவே புதிய இந்தியா. ஸ்திரீகளுக்கு இந்த நாட்டிலே ஸ்வதந்திரமில்லை; அவர்கள் கண்ட கண்ட புருஷர்களுக்கெல்லாம் கைலாகு கொடுத்து, கண் வெட்டு வெட்டி, காமச்சிரிப்புச் சிரித்து, காதல் விளையாட்டு விளையாடவேண்டும் என்ற அபிப்பிராயம்; இதுவே புதிய இந்தியா. டாம்பீகம், அகங்காரம், கர்வம், மதம் இதுவே புதிய இந்தியா.



ஆ! ஆ!! பழய இந்தியாவுக்கும் புதிய இந்தியாவுக்கும் உள்ள வித்தியாசத்தைப் பார்த்தீர்களா? பழய இந்தியா மகாத்மா மாதிரி பரிசுத்தநிலை யடைந்து அடங்கி யமர்ந்து

இருக்கிறது; புதிய இந்தியா ராக்ஷசவேஷம் பூண்டு தலைவிரி கோலமா யாடுகிறது. பழய இந்தியா நிவிருத்திமார்க்கத்தைப் போதிக்கிறது; புதிய இந்தியா பிரவிருத்திமார்க்கத்தைப் போதிக்கிறது. பழய இந்தியா மோக்ஷோபதேசம் செய்கின்றது; புதிய இந்தியா பந்தப்படுத்துகின்றது. பழய இந்தியா அந்தர்முகம் நோக்கியது; புதிய இந்தியா பகிர்முகம் நோக்கியது. பழய இந்தியா ஆர்யர்களுடையது; புதிய இந்தியா அந்நியருடையது.

இவ்விதமாகத் தேசம் இருபிளவுபட் டிருத்தல், அதுவும் இந்த ஆர்ய க்ஷேத்திரமாகிய இந்தியா தேசம், அன்னக்கொடி நாட்டி, தமது வலக்கரத்தை நீட்டி, உலகிலுள்ளோ ரனைவரையும் எப்பொழுதும் அழைத்து அவர்களுக்கு உயிரும் உணவும் எப்பொழுதும் ஊட்டிக்கொண்டே வரும் இந்த இந்தியாதேசம் இருபிளவுபட்டுப், பழய இந்தியா, புதிய இந்தியா என்று இரண்டுபட்டு இருப்பது தேவதைகள்தாம் ஏற்கத்தக்க செயலா? இரண்டு என்று இருந்தால் ஒன்றிலிருந்து இன்னொன்றுக்குப் பயம், ஒன்றினால் இன்னொன்றுக்குத் துக்கம், ஒன்றினால் இன்னொன்றுக்கு ஆபத்து, இப்படியெல்லாம் நேரிடும். உள்ளது ஒன்றேயாமாயின் பயம், துக்கம், ஆபத்து இவை யெல்லாம் எங்கிருந்து உண்டாகும்? ஆகையால்தான் ஒற்றுமைத்தன்மை அவ்வளவு விசேஷமானதாகப் பாராட்டப்படுகிறது. உலகில் சிறந்தது ஒற்றுமையே; எல்லோரும் விரும்புவது ஒற்றுமையே, ஆகையால், பழய இந்தியா, புதிய இந்தியா



வென்று இரண்டு உள்ளவரையில் ஒன்றினால் இன்னொன்றுக்குக் கேடு சம்பவிக்கலாம்; துக்கம் நேரிடலாம்; ஆபத்து உண்டாகலாம்; இதனால் தேசத்தினுடைய பொது க்ஷேமத்துக்குப் பங்கம் நேரிடும். ஆகையால், ஒன்றில் மற்றது லயமாகி, இரண்டும் ஒன்றாகவேண்டியது அத்தியாவசியம். உலகு முழுதும் இக்காலத்திலே புதிய இந்தியாபோலவே நடந்துவருவதால், உலகு முழுதையும் சீர்திருத்தவேண்டுமானால், புதிய இந்தியாவை அழித்துவிடக்கூடாது; இந்தியாவானது உலகிலே என்றென்றும் நிலைபெற்றதாய் நின்று, எப்பொழுதும்போல உலகுக்கு ஒளியும் உயிரும் கொடுக்கவேண்டுமானால், ஆணிவேர் போன்ற பழய இந்தியா அழிந்துவிடக்கூடாது. ஆகையால், பழய இந்தியாவாகிய உயிரையும் ஒளியையும் புதிய இந்தியாவாகிய சரீரத்துக்குள்ளே புகுத்தவேண்டும். அப்பொழுதுதான் உலகம் ஓங்கும்போலிருந்தது. இன்னும் ஸ்ரீராமகிருஷ்ணருடைய ஞானமானது அபாரமானதாயினும் அந்த ஞானத்தை மொண்டு மொண்டு ஏராளமாக எடுத்து வைத்துக்கொண்டு, இடத்துக்கும் காலத்துக்கும் தக்க பிரகாரம் இவ்வுலகினர் அனைவருக்கும் கொடுப்பதற்கு அவரால் முடியவில்லை. தற்கால மேனாட்டு நாகரிக சாஸ்திரக்ஞர்களை யுக்தியினாலும் குயுக்தியினாலும் வாயடங்க வெருட்டி நமது ஆர்ய ஞானத்தை ஸ்திரப்படுத்துவதற்கு வேறு ஒரு அவதார புருஷன் அவசியமாயிருந்தது. யுத்தகளத்திலே சென்று அல்லோல கல்லோலப்படுத்தி அனைவரையும் ஓடோட அடிக்கும் அசகாய சூரனைப்போல, தற்காலப் பிர

பஞ்சத்தினுள்ளே சென்று புத்தியினாலே, யுக்தி-குயுக்தியினாலே அனைவரையும் அடக்கச் செய்வதற்கு ஒருவர் உற்பவிக்கவேண்டியது அவசியமாயிற்று.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் தாம் ஞானாநுபவங்களை யடைந்தும், தேவியை நோக்கி, "அம்மா! தாயே! பரதேவதை! என்னுடைய அநுபூதிகளை யெல்லாம் நிரூபித்துக் காண்பிக்கும்படி என்னை வாதுக்கிழுக்க வல்ல ஒருவனைக் கொடுக்கமாட்டாயா?" என்று காளிக்ஷேத்திரத்தினுடைய கல்படிகளிலே யுட்கார்ந்துகொண்டு கண்ணீர் ஆறாய் விட்டுக் கதறியிருக்கிறார். ஆகையால், அவருடைய வேண்டுகோளும் நிறைவேறுதற்கு ஒருவர் வரவேண்டியது அவசியமாயிற்று. இன்னும், ராமகிருஷ்ணர் சில சமயங்களிலே கோபுரங்களின் மேலே, மண்டபங்களின் மேலே ஏறி நின்றுகொண்டு, "தாயே! சச்சிதானந்த சொரூபிணி! ஜகன் மோஹனி! சாரதா தேவி! எனது பக்தர்கள் எங்கே? எனது சிஷ்யர்கள் எங்கே?" என்று கூச்சலிட்டுக் கூவியிருக்கிறார். ஆகையால், அவருடைய கேள்விக்குப் பதிலாக ஒரு கூட்டம் உண்மைச் சிஷ்யர்களும் அவர்களுக்குள்ளே சிறந்தவராக ஒருவரும் வரவேண்டியது அவசியமாயிற்று.

கி. பி. 1863-வது வருஷம், ஜனவரி மீ, 12-ம் தேதி, மகரசங்கராந்தி தினம், கல்கத்தாமாநகரிலே, இவ்விந்திய சக்ராதிபத்தியத்துக்கு ராஜதானி ஸ்தானமாகிய கல்கத்தாவிலே, விஸ்வநாத தத்தருக்கும் புவனேஸ்வரி மாதாவுக்குமாகச் சொர்ண விக்கிரகம்போன்ற ஒரு குழந்தை பிறந்தது.



இது நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தது. இதற்குப் பெயர் முதலிலே வீரேஸ்வரன் என்று வைத்தார்கள்; பின்னர் நரேந்திரன் என்று அழைத்தார்கள். இக்குழந்தை சாட்சாத் சிவனருளால் அவதரித்தது என புவனேஸ்வரி மாதா நம்பியிருந்தாள். குழந்தைக்கு மூன்று வயதான பொழுதே துணிச்சல் அதிகம்; பிடிவாதம் மிகுதி; பிடிவாதத்தினாலே அழ ஆரம்பித்துவிடும்; புவனேஸ்வரி மாதா குழந்தையைத் திட்டிப் பார்ப்பாள், பயமுறுத்திப் பார்ப்பாள், அடித்துப் பார்ப்பாள். குழந்தை சற்றும் பயப்படுமா? இன்னும் அதிகமாக அழும். கடைசியாக மாதா குழந்தையை அடக்குவதற்கு ஒருவழி கண்டுபிடித்துக் கொண்டாள். வீட்டு முற்றத்திலேயிருந்த தண்ணீர்க் குழாயினடியில் குழந்தையைக் கொண்டுபோ யுட்காரவைத்து, குழாயைத் திறந்துவிட்டு "சிவ சிவ" என்று சொல்லி, சுற்றிலுமுள்ளவர்களை நோக்கி, "என்ன அநியாயம் இது? எனக்கு ஒரு அரும் புதல்வன் அநுக்கிரகிக்குமாறு நான் சிவனை வேண்டினேன்; அந்தச் சிவன் தன்னுடைய பூத கணங்களிலே ஒன்றைப் பிடித்து அனுப்பி வைத்துவிட்டான்" என்று கூறுவாள்; குழந்தையை நோக்கி, "நீ இப்படித் துஷ்டத்தனம் செய்தால், சிவன் உன்னைக் கைலாசத்துக்கு வரவிடமாட்டார்" என்பாள்; குழந்தையினுடைய அழுகை ஓய்ந்துவிடும்; குழந்தையின் முகத்திலே புன்னகை தவழும்! சில நிமிஷங்களுக்குள்ளே குழந்தை விளையாட்டிலே புகுந்து எப்பொழுதும்போல உற்சாக பூரிதனாய்விடுவான்.

"நாராயண ஹரி, நாராயண ஹரி" என்று சப்தம் கேட்டுவிட்டால் போதும்; நரேந்திரன் அங்கு ஓடிவிடுவான்; தன்னுடைய கையிலுள்ளது யாதாயினும் சரியே, வீட்டிலே தன் கண்முன்னே யுள்ளது எதுவாயினும் சரியே, தான் உடுத்தியிருப்பது அன்றுதான் தகப்பனார் தனக்கு வாங்கிக் கொடுத்த பட்டுக்கரை வேஷ்டியா யிருப்பினும் சரியே; அந்த சாதுவுக்குக் கொடுத்துவிடுவான். வீட்டிலுள்ளவர்கள் இவனுடைய அளவற்ற உதாரத்தன்மையைக் கண்டு பயந்து, சாதுக்கள் எவரேனும் தங்கள் வீட்டை நோக்கி வரக்கண்டால், இவனைக் கொண்டுபோய் ஒரு அறையிலே வைத்துப் பூட்டிவிடுவார்கள்; நரேந்திரனுடைய உதார குணத்தையும் அடைத்துவிடுமா? நரேந்திரன் ஜன்னலின் வழியாக அவ்வறையிலே தனக்குக் கிடைத்ததை யெடுத்து வெளியிலேயுள்ள சாதுவுக்கு எறிந்து கொடுத்துவிடுவான்.

அவனுடைய பால்யசேஷ்டைகள் தான் என்னே? அவனுக்கு இரண்டு மூத்த சகோதரிகள் உண்டு. அவர்களைப் போய்க் கிள்ளுவான், குட்டுவான்; அவர்களை மல்லுக்கு இழுப்பான்; அவர்கள் இவனுடைய தொந்தரவு பொறுக்க முடியாது, இவனைத் துரத்தித் துரத்திப் பிடிக்க வருவார்கள். இவன் ஓடியோடிக் கடைசியாகச் சாக்கடையிலே யிறங்கி நின்றுகொண்டு, "எங்கே? என்னைப் பிடியுங்கள், பார்ப்போம்; என்னைப் பிடியுங்கள் பார்ப்போம்" என்று கூவுவான். இன்னும் இவன் தனக்கு விளையாட்டுத்



தோழர்களாக ஒரு குரங்கு, ஒரு ஆடு, ஒரு மயில், ஒரு கூட்டம் புறுக்கள், இரண்டு மூன்று வெள்ளெலிகள் இவற்றை யுடைத்தாயிருந்தான்.

குழந்தையாயிருந்தபொழுதே நரேந்திரனுக்கு சுஷுப்தி யவஸ்தையில் அமிழ்வதற்குமுன் ஜோதி தர்சனமுண்டாவது வழக்கமாயிருந்தது. ஆனால், இந்த ஜோதி தர்சனம் வேறெவருக்கும் உண்டாவதில்லை; தனக்கே பிரத்தியேகமாக உண்டாகின்றது என்பது நரேந்திரனுக்குப் பத்தாவது வயது வரையில் தெரியாது.

ஒருநாள் நரேந்திரன் தனது விளையாட்டுத் தோழர்களையெல்லாம் சேர்த்து ஒரு நூதன விளையாட்டு விளையாட ஆரம்பித்தான். எல்லாரும் பைராகிகள்போல வேஷம் போட்டுக்கொண்டு மூலைக்கொருவராக நிஷ்டையிலுட்கார்ந்தார்கள். ஆனால், இவர்களுடைய மனம் நிலைப்படுமா? கண்களை மூடிக்கொண்டார்கள். நரேந்திரனும் கண்களை மூடிக்கொண்டான். இரண்டொரு நிமிஷங்களுக்குள்ளே, நரேந்திரனைத் தவிர மற்றவர்களெல்லோரும் மெல்லக் கண்களைத் திறந்து பார்த்தார்கள். ஒரு கிருஷ்ண சர்ப்பமானது தனது படத்தை யெடுத்து விரித்தாடிக்கொண்டு அவ்வறையிலே தென்பட்டது. உடனே எல்லோரும் எழுந்து நரேந்திரனை உரக்க உரக்கக் கூவி யழைத்துக்கொண்டே ஓடினார்கள். நரேந்திரன் பிரபஞ்சப் பிரக்ஞை யற்றிருந்தான்; அவனுடைய மனமானது அந்தர்முகமாக ஆழ்ந்து போய்விட்டது. மற்றப் பிள்ளைகள் வெளியே ஓடி, பெரி

யோர்களிடம் சொல்ல, பெரியோர்களும் நரேந்திரனுடைய பெற்றோரும் ஓடிவந்து பார்க்க, கிருஷ்ண சர்ப்பத்தைக் காணவில்லை; அது அதற்குள்ளாக எங்கோ மறைந்துவிட்டது; நரேந்திரன் சித்திரப்பதுமைபோல வீற்றிருந்தான். நரேந்திரனை யெழுப்பி, "கிருஷ்ணசர்ப்பம் வந்தது, தெரியுமா?" என்று கேட்டார்கள். நரேந்திரன், "அதெல்லாம் எனக்குத் தெரியாது; நான் ஆநந்தக் கடலில் நீந்தி விளையாடி அமிருதபானம் பண்ணிக்கொண்டிருந்தேன்" என்றான்.

நரேந்திரனை அவனுடைய ஆறாவது வயதிலே அவனுடைய பெற்றோர்கள் பள்ளிக்கூடத்திலே போட்டார்கள்; ஒரு சில நாட்களுக்குள்ளே உலகிலுள்ள ஆர்ப்பாஷையையெல்லாம் கற்றுக்கொண்டு விட்டான் நரேந்திரன். "இனிமேல் இவனைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பக்கூடாது; வீட்டிலேயே இவனுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்" என்று கருதி, வீட்டு வாத்தியார் ஒருவரை ஏற்படுத்தினார்கள். நரேந்திரன் உபாத்தியாயர் பாடம் சொல்லிக்கொண்டிருக்கையில் தனது கண்கள் இரண்டையும் மூடிக்கொண்டு அசைவற்றிருப்பான்; என்ன இது? பாடம் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது, கண்களை மூடிக்கொண்டு உறங்குகிற பையன் எத்தகைய மூடனாயிருக்கவேண்டும்! ஒருநாள் உபாத்தியாயருக்கு நிரம்பக் கோபம் வந்துவிட்டது; அவனைப் பிடித்து ஆட்டி யெழுப்பித் திட்டினார். நரேந்திரனுக்கு உபா



த்தியாயரினும் அதிக கோபம் வந்துவிட்டது. உபாத்தியாயர் தன்னை யிப்படிச் செய்ததற்குக் காரணமென்ன? என்று கேட்டான். உபாத்தியாயர், "நீ யிப்படித் தினந்தோறும் உறங்கலாமா?" என்றார். நரேந்திரன், "நானா உறங்கினேன்?" என்று கூறிவிட்டு, அப்பொழுது உபாத்தியாயர் சொல்லிக்கொடுத்த பாடத்தை யொருவார்த்தை விடாமல் ஒப்புவித்தான். அவனுடைய ஏகாக்கிரதையையும் ஞாபக சக்தியையும்பற்றி உபாத்தியாயர் ஆச்சர்யமடைந்து, நரேந்திரனிடத்தில் பன்முறையும் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்.

ஜாதி விஷயம் நரேந்திரன் குழந்தையா யிருந்தபொழுதே அவனுக்கு ஒரு ரகஸ்யமா யிருந்தது. அவனுடைய பிதா கல்கத்தாவிலே பெயர்பெற்ற ஒருவக்கீலாகையினாலே பல ஜாதிக் கக்ஷிக்காரர்களும் அங்கு அவரிடத்தில் வருவது வழக்கம். நம் தமிழ் நாட்டிலே, வந்தவர்களுக்குத் தாம்பூலம் வழங்குவது உபசார வழக்கமாம்போல, வங்கநாட்டிலே வந்தவர்களுக்கு ஹூக்கா வழங்குவது வழக்கம். ஆனால் பலஜாதியினரும் வருவார்களாகையினாலே, விஸ்வநாத தத்தருடைய வீட்டிலே அந்தந்த ஜாதிக்கு வெவ்வேறாக ஐந்தாறு ஹூக்காக்கள் வைக்கப்பட்டிருக்கும். இந்த ஹூக்காக்கள் வைக்கப்பட்டிருந்த அறையிலே எவருமில்லாத சமயம் பார்த்து ஒருநாள் நரேந்திரன் நுழைந்துவிட்டான். ஒவ்வொரு ஹூக்காவிலும் வாய் வைத்துப் புகையை உறிஞ்சிப் பார்த்தான்; இதற்குள்ளாக இவனுடைய பிதா

இவனுக்குத் தெரியாமல் அவ் வறைக்குள்ளே வந்தார்; ஹூக்கா குடிக்கின்ற புத்திரனை நோக்கிப், "பையா! இங்கே என்ன செய்துகொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார். பையன் பயப்படப்பட்டவனா? "அப்பா! ஜாதியை மீறினால் என்ன நேரிடுமென்று பரிசோதித்துப் பார்த்தேன்; ஒன்றும் நேரிடவில்லை; இதோ இந்தத் துலுக்கனுடைய ஹூக்காவைக் கூட நான் குடித்துப் பார்த்தேன்; எனக்கு ஒன்றும் நேரிடவில்லை; உலகமும் பொடிந்து துகளாய்விடவில்லை" என்றான். பிதாவுக்கு உள்ளுக்குள்ளே சந்தோஷம்; சிரித்துக்கொண்டே போய்விட்டார்.

நரேந்திரன் விளையாட்டுக்களிலும் அப்படித்தான்; ஓட்டம் தாவுதல், குத்துச்சண்டை, கோலியாட்டம் இவற்றிலெல்லாம் நரேந்திரனுக்கு நிகர் இல்லவே யில்லை. சிறு பையன்களுக்குள்ளே சண்டைகள் உண்டாய்விட்டால், எல்லோரும் நரேந்திரனிடம்தான் மத்தியஸ்தத்துக்கு வருவார்கள். பள்ளியில் படிக்கும்பொழுது நரேந்திரன் குத்துச் சண்டையில் ஒரு சமயம் முதலாவது பரிசில் பெற்றான். ஏழாவது வயதிலே நரேந்திரன் ஆங்கில அக்ஷரங்கள் சொல்லிக்கொடுக்கப்பட்டான்; அவன் ஒரே பிடிவாதமாக முதலில், "அது அந்நிய பாஷை" என்றும், தனக்குப் படிக்கப் பிரிய மில்லை என்றும் சொல்லி முரண்டு செய்தான். "ஆங்கிலம் படிப்பது அவசியம்" என்று அவனுக்கு நிரூபித்து அவனுடைய மனத்தைத் திருப்புவதற்கு அநேக மாதங்கள் வேண்டிவந்தன.



நரேந்திரன் குழந்தையா யிருக்கும்பொழுதே எவருடைய வார்த்தையையும், "இன்னார் சொல்லுகிறார்; ஆதலால் அது உண்மைதான்" என்று நம்புகிறது வழக்கமில்லை. நரேந்திரனு ஒரு ஷண்பக விருக்ஷத்திலே ஏறி விளையாடுவது வழக்கம்; ஒருநாள் இவனும் இவனுடைய நண்பன் ஒருவனுமாக அம் மரத்திலே ஏறித் தொத்தி விளையாடிக்கொண்டிருக்கையில், அடுத்த வீட்டிலிருந்த கிழவர் ஒருவர் வந்து, "அப்பா குழந்தைகளே! இம் மரத்தருகே போகாதீர்கள்; அதிலே ஒரு பிரஹ்மராக்ஷஸ் இருக்கிறது; அது பிடித்துக்கொள்ளும்" என்றார். நரேந்திரன், "அப்படியா? தாத்தா!" என்று கூறிவிட்டு, அக்கிழவர் அப்புறம் போனவுடனே, மறுபடியும் மரத்தின்மே லேறினான். நண்பன், "ஆ! ஆ!! நரேந்திரா! ஏறாதே; பிரஹ்மராக்ஷஸ் பிடித்துக்கொண்டா லென்செய்கிறது?" என்று கூவினான். ஆனால், நரேந்திரன் இவ்வார்த்தைகளைச் செவியில் போட்டுக் கொள்ளாமல் ஏறி, கிளைக்குக்கிளை தாவி, அதைத் தொத்திக் கொண்டு பிடித்து ஆடி, பின்னர் ஒரு கிளையில் உட்கார்ந்து கொண்டு தன்னுடைய தோழனை நோக்கி, "ஏ மூடா! அந்தக் கிழவன் சொன்னது உண்மையாயிருந்தால், பிரஹ்மராக்ஷஸ் என்னை இதுவரை விட்டுவைக்குமா? உடனே கழுத்தைப் பிடித்து நெறித்துக் கொன்றுவிடாதா? இப்பொழுதாவது அக் கிழவன் சொன்னது பொய் யென்று உனக்குப் படவில்லையா? இன்னார் சொல்கிறாரென்று எதையும் நம்பக் கூடாது" என்றான்.

இம்மாதிரியே நரேந்திரனுடைய குணாதிசயங்களைப் பற்றிக் கூறிக்கொண்டே போகலாம். நரேந்திரன் கல்லூரிப் படிப்புப் படிக்க ஆரம்பித்தவுடனே, மதவிசாரணையிலே மனம் போயிற்று; உடனே அப்பொழுது பிரபலமாக வங்காள தேசத்திலே வியாபித்து வந்த பிரஹ்மசமாஜத்திலே ஒரு அங்கத்தினனாகச் சேர்ந்துகொண்டான்; ஏராளமாகப் புத்தகங்கள் படித்தான். "எல்லாப் புத்தகங்களும், எப் புத்தகம் படித்தாலும் ஈஸ்வரன் ஒருவன் உண்டென்று கூறுகின்றன; அந்த ஈஸ்வரனை நேருக்கு நேர், பிரத்தியக்ஷத்தில் கண்டவர்கள் உண்டா?" என்று நரேந்திரனுக்கு ஒரு பெரும் சந்தேகம் பிறந்துவிட்டது. அப்பொழுது பிரஹ்மசமாஜத்திலே பிரக்கியாதி பெற்றவர்களாக இரண்டு தலைவர்கள் இருந்தார்கள்; ஒருவர், மகரிஷி தேவேந்திரநாத டாகூர்; இன்னொருவர் கேசவச் சந்திரசேனர். தேவேந்திரநாத டாகூர் வயது சென்றவர்; வங்காளத்திலே பெரும்பான்மையோராலும் மகாத்மாவாகக் கருதப்பட்டுவந்தார். நரேந்திரனும் அவருடைய உத்தரவுப் பிரகாரம் அந்தர்முகமாக மனத்தைச் செலுத்தி நிஷ்டை யப்பியசித்து வந்தான். தேவேந்திரநாதர் நரேந்திரனை உண்மையில் கண்டுகொண்டுவிட்டார்; நரேந்திரன் ஆத்மீகவிஷயத்திலே அபிவிருத்தியடைதற்கு அவர் வேண்டிய உதவிகளெல்லாம் செய்துவைக்கினர்.

சின்னாட்கள் இவ்விதமாக நரேந்திரன் பிரஹ்மசமாஜத்துக்கு வந்துகொண்டும் நிஷ்டை செய்துகொண்டும் இருக்க, "ஈஸ்வரன் ஒருவர் உண்டென்பது உண்மைதானா? அப்படியானால், நான் அவரைப் பார்க்கவேண்டும்" என்ற ஆசையானது அதிகரித்தது; இந்த நினைப்பு அவனுடைய மூளையிலே நெருப்புப்போலப் பற்றிக்கொண்டது. அப்பொழுது மகரிஷி தேவேந்திரநாதர் கங்காநதியிலே தமது பெரும்படகிலே வசித்துவந்தார். நரேந்திரனுக்கு இந்த ஈஸ்வர தாகம் அதிகரிக்க அதிகரிக்க, அவனால் அடங்கியிருக்க முடியவில்லை. 'தேவேந்திர நாதரைத் தனியே கண்டு, அவரிடத்திலே நேர்மையுடனே ஒரு கேள்வி கேட்டுவிட வேண்டும்' என்று நரேந்திரன் எண்ணினான்; உடனே ஓடினான் மகரிஷியினுடைய படகை நோக்கி; படகினுள்ளும் வெகு வேகமாகச் சென்று, தேவேந்திரநாதர் நிஷ்டையில் உட்கார்ந்திருந்த அறையின் கதவைச் சட்டென்று திறந்தான். தேவேந்திரர் நிஷ்டை கலைந்து நிமிர்ந்து பார்த்தார், அவர் நன்றாக நரேந்திரனைப் பார்க்கும்முன்னமேயே, "மகா ஞானியாகிய மகரிஷியே! தாங்கள் ஈஸ்வரனைப் பார்த்திருக்கிறீர்களா?" என்று நரேந்திரன் ஒரு கேள்வி கேட்டுவிட்டான்; அவர் அப்படியே பிரமித்துவிட்டார். அப்பொழுது நரேந்திரன் இக்கேள்வியை விளையாட்டாகக் கேட்கவில்லை; புத்தி விநோதத்தினாலே கேட்கவில்லை; இக்கேள்வி அவனுடைய ஹிருதயத்தின் உள்ளிலிருந்து வந்தது; அவனுடைய அந்தரங்க ஆத்ம ஸ்தானத்திலிருந்து வந்தது; அவனுடைய மனத்தைப் பிளந்துகொண்டு வந்தது. மகரிஷி மறுமொழியளிக்க வாயெடுத்தார், முடியவில்லை; மறுபடியும் முயன்றார், முடியவில்லை; மூன்றும் முறையும்

முயன்றார், முடியவில்லை. மகரிஷி பின்னர் நரேந்திரனுடைய கண்களையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு "புத்திரா! உனது கண்கள் யோகியினுடையவை" என்றார்.

இவ்விதமாக நரேந்திரர் ஈஸ்வரனுடைய உண்மைத் தன்மையை அறிவதற்கு ஆவல் மிகுந்தவராய் அங்கு ஓடினார், இங்கு ஓடினார், புத்தகங்களை யெல்லாம் படித்தார்; அவருடைய மனம் திருப்தி யடையவில்லை; அவருக்குக் குதூகல முண்டாகவில்லை.

---

## 15-வது அத்தியாயம்

## குருவும் சிஷ்யனும்

"என்னுடைய ஞானாநுபவங்களை யெல்லாம் நிரூபித்துக் காண்பிக்கும்படி கூறி என்னை வாதுக்கிழுக்கும் சிஷ்யனொருவனை எனக்குக் கொடுக்காயா?" என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் தேவியினிடம் பன்முறையும் பிரார்த்தித்துக் கேட்டுக்கொண்டிருந்தாரென்று நாம் முன்னமேயே கூறியிருக்கிறோம். ஸ்ரீ ராமகிருஷ்ணர் நரேந்திரர் பிறப்பதற்கு முன்னமேயே ஒருநாள் காலை நேரத்திலே காசிப் பக்கத்திலேயிருந்து கல்கத்தாவை நோக்கி ஒரு பெரும் ஜோதி வீசுவதுபோல ஒரு தர்சனம் கண்டார்; அப்பொழுதே அவர், "ஆ! இப்பொழுது எனக்கு வேண்டியவன் பிறந்துவிட்டான்" என்று உணர்ந்துகொண்டார்.



இதுபோலவே இன்னும் இரண்டு தர்சனங்கள் ஸ்ரீ ராமகிருஷ்ணர் கண்டனராம்.

ஒன்று: ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒருநாள் கண்மூடி, நிஷ்டையி லிருக்கையிலே, அகண்டசைதந்ய வஸ்துவானது இரண்டாகக் கண்டிக்கப்பட்டு, ஒரு புறத்திலே சகுணோபாசனை செய்கின்ற தமது சிஷ்யர்கள் உட்கார்ந்திருந்ததையும், இன்னுமொரு புறத்திலே ஒரு மகாத்மா, ஜோதியினாலே சூழப்பட்டு பிரஹ்ம நிஷ்டாபரராய் உட்கார்ந்திருப்பதையும் கண்டு, பிரமித்து, "இந்த மகாத்மா யாராயிருக்கலாம்" என்று ஆலோசித்து, "நரேந்திரா! நரேந்திரா!!" என்று அழைக்க, அம் மகாத்மா மெல்லக் கண்களைத் திறந்தார்.

இன்னுமொன்று: ஸ்ரீ ராமகிருஷ்ணர் சமாதியிலே லயித்திருந்தபொழுது, தான் ஒரு ஜோதி ஸ்வரூபக் குழந்தை வடிவெடுத்து யக்ஷ, கின்னர, கந்தர்வ, தேவாதிகள் வசிப்பனவும், மேன்மேலும் உயர்ந்தனவுமான மண்டலங்களுக்குச் சென்றதுபோலவும், இம்மண்டலங்களிற் சில முதலில் நீலவர்ணமுடையனவாக யிருந்தனபோலவும், பின்னர் சிவப்பு வர்ணமுடையனவாக இருந்தனபோலவும் கண்டார். மேன்மேலும், இன்னும் மேலே சென்றார்; கடைசியாக 'அகண்ட சச்சிதாநந்தமயமாகிய திவ்ய தேஜோமண்டலத்தை யடைந்தார். அவர் அந்த அகண்ட சைதந்ய சமுத்திரத்தினுள்ளே ஆழ்ந்து அதன் பெருமையிலே துள்ளிக் குதித்து நீந்தி விளையாடி, அதிலே தாம் கரைந்து

விடாமல் கரைவந்து சேர்ந்தார். அப்பொழுது அவர், சப்த ரிஷிகளும் ஆழ்ந்த நிஷ்டாரூடர்களா யிருக்கக் கண்டார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் இவர்களை யொவ்வொருவராகப் பார்த்துக்கொண்டே சென்று, கடைசியாக ஒருவரிடம் வந்து, அவரிடத்திலே தமது அன்பையெல்லாம் செலுத்தி, அவருடைய நிஷ்டையைக் கலைக்க முயன்றார். அந்த மகரிஷி கண்களைத் திறந்தார்; அதுவும் ஒரு நிமிஷமே; அதுவும் அதுதான் ஒரேதடவை. ஆனால், ஸ்ரீராமகிருஷ்ணர் தமது திடசங்கற்பத்தினாலே அவருடைய நிஷ்டை கலையும்படி செய்து, அவரைப் பிரபஞ்சப் பிரக்ஞைக்குக் கொண்டுவந்தார். அந்த மகரிஷி மறுபடியும் கண்ணைத் திறந்தார்; அவருடைய சரீரத்திலிருந்து ஒரு ஜோதி புறப்பட்டு உலகிலே இறங்கிற்று. ஸ்ரீராமகிருஷ்ணர், "இந்த ஜோதியே நரேந்திர வடிவமாக வந்திருந்தது" என்று தீர்மானித்துக்கொண்டார்.

இரண்டு பெரிய புருஷர்கள் இப்பொழுது சந்திக்கப் போகிறார்கள்; உலகிலே உத்தமமான மனங்கள் இரண்டு ஒன்றை யொன்று கலக்கப்போகிறது; ஸ்ரீ ராமகிருஷ்ணராகிய கங்கையும் விவேகாநந்தராகிய யமுனையும் ஒன்றுசேரப்போகின்றன. உலகமானது, முக்கியமாக இந்தியதேசமானது இந்தச் சங்கத்திலே ஸ்நானம் செய்து உயிர்பெறப்போகின்றது. நரேந்திரர் உண்மையை நாடி அதைத் தைரியத்துடனே உபதேசிக்கவல்ல உத்தமனைத் தேடி உலகெலாம் ஓடிக்கொண்டிருந்தாரென்று நாம் முன்னமேயே கூறியிருக்கிறோம். நரேந்திரருக்குச் சமீப பந்து ஒருவர்



இருந்தார்; அவருடைய பெயர் ராமச்சந்திரதத்தர். இவருக்கு நரேந்திரரிடத்திலே ஒரு பிரத்தியேக வாற்சல்லியம் இருந்தது. நரேந்திரர் முதன்முதலில் ஆங்கில பாஷை படிக்க மறுத்தபொழுது, "ஆங்கில பாஷை படிக்கவேண்டியது அவசியம்" என்று அவருக்கு விளக்கி, உடனே யல்லாவிட்டாலும் சில மாதங்கள் கழிந்தாவது அவர் ஆங்கிலம் கற்றுக்கொள்ளும்படி செய்தது இந்த ராமச்சந்திர தத்தர்தாம். நரேந்திரருக்கும் ராமச்சந்திர தத்தரிடத்திலே ஒரு பிரத்தியேக மதிப்பும் மரியாதையும் உண்டு. தவிர, ராமச்சந்திர தத்தர் ஒரு வேதாந்தி; ஹிருதய சுத்தியுள்ள புருஷர்; இவர், நரேந்திரர் உண்மையை நாடிப் பிராஹ்ம சமாஜத்திலும் மற்றும் போய்த் திருப்தியடையாது திண்டாடிக்கொண்டிருப்பதைக் கவனித்துக்கொண்டே வந்தார். இவர் ஸ்ரீராமகிருஷ்ணரிடத்திலே அத்தியந்த பக்தர்; அடிக்கடி ஸ்ரீராமகிருஷ்ணரிடம் போகும் வழக்கமுண்டு. ஒருநாள் இந்த ராமச்சந்திரதத்தர் நரேந்திரனை நோக்கி, "நரேந்திரா! நீ உண்மையை நாடி பிராஹ்ம சமாஜத்துக்கும் மற்றும் போவதினால் பயனில்லை; நீ உண்மையை நாடுவது உண்மையானால், நீ தக்ஷிணேஸ்வரத்துக்குச் செல்வாய்; அங்கு உண்மையே ஓர் உருவாய் வந்ததுபோன்று ஸ்ரீராமகிருஷ்ணர் என்று ஒரு மகாத்மா இருக்கின்றார்; அவரிடத்தில் போனால், நீ நிறைவுற்றவனாய் விடுவாய்; உன் மனம் திருப்தியடைந்து சுகப்பட்டுவிடும்; நீ இப்பொழுதுபோல அங்கும் இங்கும் வீணே சுற்றிக்கொண்டிருப்பதினால் யாதுபயனு மில்லை" என்றார். நரேந்

திரர் "நல்லது, அவரையுந்தான் பார்த்துவிடுகிறேன்" என்று சொல்லி, அந்த ராமச்சந்திர தத்தரையும் கூடவே யிட்டுக்கொண்டு ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் தக்ஷிணேச்வரத் தோட்டத்துக்கு வந்தார்.

நரேந்திரரோ மேனாட்டு நாகரிகத்தின் அவதாரம்; பிரஹ்மசமாஜம் என்றாலே முக்காலே மூன்று வீசம் கிறிஸ்தவ மதமும் மேனாட்டு நாகரிகமு மல்லவா? சர்வ சங்க பரித்தியாகிகளான ஹிந்து மகான்களிடத்திலே இந்த பிரஹ்மசமாஜத்தினர்களுக்கு மதிப்பு ஏற்படுவது அபூர்வம். நரேந்திரருடைய மனநிலையும் அப்படியேதான். ஆனால், இப்பொழுது நரேந்திரர் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் வந்தவுடனே, ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு நரேந்திரர் நெடுநாள் அந்தரங்கமாகத் தம்முடன் பழகியிருந்தவர்போல ஞாபகப் படுத்திக்கொண்டார்; இவ்வித ஞாபகம் சட்டென்று அவருடைய மனத்திலே உதித்தது. அநேக நாட்களாக அந்யோந்ய நட்பு அதிகரித்துள்ளவர்களை எப்படி நடத்துவரோ அம்மாதிரி அன்புடனே ஸ்ரீ ராமகிருஷ்ணர் நரேந்திரரை நடத்தினார். நரேந்திரருக்கும் தம்மை யறியாமலே ஏதோ ஒரு ஆகருஷண சக்தி தம்மை அவர் முகமாக இழுப்பதுபோல ஒரு உணர்ச்சி யுண்டாயிற்று. அவ்வுணர்ச்சியி னடியிலேயுள்ள ஆந்தரார்த்தம் இன்னதென்று நரேந்திரருக்குப் புலப்படவில்லை. ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம்மைப் பார்த்தவுடனே அவ்வளவு ஆநந்த மடைந்ததற்குக் காரணமும் இன்னதென்று நரேந்திரருக்கு விளங்கவில்லை.



இதற்குக் காரணம் நரேந்திரருக்கு விளங்கவில்லை. க்கி, ருடைய சந்நிதானத்திலே கவலைகளற்று மனமானது ங்கி சாந்தி யடைகின்றதோ, எவருடைய சந்நிதானத்திலே துன்பமும் துக்கமும் தாமே போய்விடுகின்றனவோ, எவருடைய சந்நிதானத்திலே ஆநந்தம் தன்னை யறியாமலேயே யுண்டாகின்றதோ அவரே குருவாவர். இந்த நியதியை நரேந்திரர் அறிந்தவரல்லர். நரேந்திரர் பாடிய பாட்டைக் கேட்டவுடனே ஸ்ரீ ராமகிருஷ்ணர் சமாதியிலே லயித்தது நரேந்திரருக்கு விநோதமா யிருந்தது. ஸ்ரீ ராமகிருஷ்ணரைச் சுற்றிலும் எண்ணற்ற பக்தர்கள், ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய அன்பும் ஆநந்தமும், சரீரப் பிரக்ஞையற்று அவர் சமாதியிலே லயித்துவிடுதல், அவரைச் சுற்றிலும் வீசி பரிமளிக்கின்ற அத்தியாநந்தகந்தம், அவருடைய அமிர்தச் சமானமான மொழிகள், தமக்கே தெரியாமல் தமக்கு ஒருவித உள்ளப் பூரிப்பு உண்டாயிருத்தல்—இவ்வளவும் நரேந்திரருக்கு விநோதமா யிருந்தது. சிறிது நேரம் நரேந்திரர் அங்கு இருந்துவிட்டுப் பின்னர் விடைபெற்று வீட்டுக்குச் சென்றார். விடை பெற்றுக்கொண்டபொழுது, ஸ்ரீ ராமகிருஷ்ணர் நரேந்திரரை நோக்கி, "அடிக்கடி வந்துகொண்டிரு" என்றார். அவரும் அப்படியே வாக்குறுதி கொடுத்துச் சென்றார்.

"என்ன பைத்தியம் இது? நமது இராமச்சந்திரதத்தர் கடைசியாக நம்மை ஒரு பைத்தியக்காரனிடத்திலா கொண்டுவந்து விட்டார்? ஸ்ரீ ராமகிருஷ்ணர் பைத்தியக்காரனே

ளர்; று எனது மூளை கூறுகிறது; ஆனால், எனது ஹிருதயம் டாரிடத்திலே ஆகருஷிக்கப்படுகிறது. இந்தப் வைத்தியக் ருளர் ஒரு ஆச்சர்ய புருஷர்தான், அவருடைய ஆகருஷண சக்தியும், வசீகர சக்தியும் ஆச்சரியமாயிருக்கிறது; அவருடைய அன்போ அதைவிட ஆச்சரியமாயிருக்கிறது; அவர் தற்த்தியக்கார என்றுதான் நான் கருதுகிறேன்; ஆனால், பேரிடத்திலே எனக்கு அளவற்ற மதிப்பும் மரியாதையும் இடபடுகிறது; இது ஆச்சர்ய மல்லவா?

வே சின்னாட்கள் கழித்து நரேந்திரர் சில பிரஹ்ம சமாஜ நண்பர்களுடனே ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் சென்றார். அப்பொழுதும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் நரேந்திரரைப் பாடும் படி கேட்டுக்கொண்டார். அவர் தமது குரலையெடுத்துப் பாடப்பாட, சபையினர் அப்படியே லயித்துச் சித்திரப் பதுமைகள்போல நின்றுவிட்டார்கள்; நரேந்திரரும் மற்றெல்லாவற்றையும் மறந்து, தமது பாட்டிலே தாமே லயித்து இரசத்தை அநுபவித்துக்கொண்டே அழகாகப் பாடினார். இப்படி இவர் பாடிக்கொண்டேயிருக்கும்பொழுது, ஸ்ரீ ராமகிருஷ்ணர், "பாருங்கள்! சரஸ்வதியின் ஒளி அவரிடத்திலிருந்து எப்படி வீசுகிறது என்பதைப் பாருங்கள்!" என்று கூறினார். இவர் இப்படிச் சொல்லக் கேட்ட மற்றவர்கள் திடுக்கிட்டு நரேந்திரரை ஆச்சர்யத்துடனே பார்த்தார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணர் இங்ஙனம் கூறியது அவர்களுக்கு விநோதமாயிருந்தது. உடனே ஸ்ரீ ராமகிருஷ்ணர், நரேந்திரரை நோக்கி, "நீ உறங்குவதற்கு முன்னே ஒரு



இராமச்சந்திரதத்தர் ஸ்ரீ ராமகிருஷ்ணரை நோக்கி "ஸ்வாமி! இவர் எனது பந்து; அதி புத்திசாலி; ஊபலத்திலே பெரிய பரீட்சைகள் கொடுத்திருக்கிறார்; வே பொழுது சில மாதகாலமாக இவர் சத்தியத்தை யறிய வேண்டுமென்ற கருத்துடனே பிரஹ்ம சமாஜத்துக்கேல மற்றும் போய்க்கொண்டிருக்கிறார்; ஆயினும், இவருடைய மனம் சாந்தியடையவில்லை; இவருடைய குரல் மிக இனியது; ஈஸ்வரனை நினைந்துகொண்டு அடிக்கடி பாட்டு பாடி வருகிறார்" என்று சொல்லவே, ஸ்ரீ ராமகிருஷ்ணர் "நல்லது, எல்லாம் நன்றாகும். எங்கே? அப்பா! ஒரு பாட்டுப் பாடு, பார்க்கலாம்" என்று நரேந்திரரிடம் சொன்னார். நரேந்திரரும்,

"ஏ, எனது மனமே! நமது யதாஸ்தானத்துக்கு போவோம் வா; மாறுதலே சுபாவமாக உடையதும், அநித்யமுமாகிய இவ்வுலகில் அந்நியனுடைய உடை தரித்து ஏன் வீணே சுற்றுகிறாய்?" என்று பொருள் படும்படி யாரம்பித்து, "ஆத்மாவுக்கு ஹிருதய ரகஸ்யத்திலே பரிசுத்தமாகிய நிதியை, இந்த நிதியை வைத்துக்கொள்" என்று பொருள்படும் இடத்துக்கு வந்தார்; இதுவரை நரேந்திரர் பாடிவந்தவுடனே ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய கண்களிலே கண்ணீர் உதிர ஆரம்பித்தது; அவர் நரேந்திரரை நோக்கி "எனது புத்திரா! எனது குழந்தாய்! ஆ! எத்தனையோ வருஷங்களாக நான் உனக்காகக் காத்துக்கொண்டிருக்கிறேனே; அப்பா! இப்பொழுது நீ வந்துவிட்டாய்" என்

பெச்சுட்டனே யப்படியே ஆநந்த சமாதியில் அமர்ந்துவிட் டார். பின்னர் சிறிதுநேரம் கழித்து ஸ்ரீ ராமகிருஷ்ண ருடைய மனமானது பகிர்முகப்படவே, அவர் மறுபடியும் நரேந்திரரை நோக்கி, "எனது புத்திரா! இத்தனை நாட்க ளாக நான் உனக்காகக் காத்துக்கொண்டிருந்தேன்; நீ வருவ தற்கு ஏன் இவ்வளவு தாமதம்? உலக மனத்தினருடனே அளப் பேசி எனது உதடுகள் எரிந்து கரிந்து போகின்றன; இனிமேல் நான் உன்னுடனே பேசிப் பேசி சுகமடை வேன்" என்றார்.

அப்பொழுது ஸ்ரீ ராமகிருஷ்ணரைச் சுற்றிலும் அநேக ஜனங்கள் உட்கார்ந்திருந்தார்கள்; சிலர் கிழவர்கள், பலர் நடுத்தர வயதுடையவர்கள்; சுமார் இருபது பெயர்கள் பாவையில் நரேந்திரருடைய வயதினர். இவர்களெல்லோரும் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடத்திலே அத்தியந்த பக்தி செலுத்து வோர்கள். நரேந்திரருக்கு இவர்களிற் சிலரைத் தெரியும்; பலரைத் தெரியாது; வேறு சிலரைப்பற்றிக் கேள்விப் பட்டிருந்தார். இது நரேந்திரருக்கு ஒரு புதிய உலகமா யிருந்தது. "ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய மூளையிலே ஒரு ஆணி தளர்ந்திருக்கிறது" என்றும், "அவர் ஒரு பைத்தியக் காரரே" என்றும், "அவருடைய சிஷ்யர்களும் அப்படியே பைத்தியக்காரர்களும் மூட நம்பிக்கையி லாழ்ந்தவர்க ளும்" என்றும் நரேந்திரர் நினைத்தார். ஆயினும், ஸ்ரீ ராம கிருஷ்ணருடைய சந்நிதானத்திலே நரேந்திரர் ஒரு வித மான குதுகலத்தை, ஒருவிதமான ஆநந்தத்தை யுணர்ந்தார்;



பெரும் ஜோதியைப் பார்ப்பதுண்டா?" என்று கேட்டார். நரேந்திரர் தமது குழந்தைப் பருவத்திலிருந்து தாம் அம் மாதிரி ஒரு ஜோதியைப் பார்த்து வருவதுண்டென்று கூறி னார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் அதை அதிக ஆவலுடனே கேட்டு "ஆ, சரிதான், வாஸ்தவந்தான்; இவர் தியானசித்தர்; அவருடைய நித்திரையே ஈஸ்வரதியானம் போன்றது" என்றார்.

நரேந்திரர் ஆச்சர்யப்பட்டு விழித்தார். அவருடனே கூடவந்த பிள்ளைகள் நரேந்திரரைக் கண்டு ஆச்சர்யப்பட்டு விழித்தார்கள். ஆனால், நரேந்திரர் அன்று யோசனைசெய்ய ஆரம்பித்தார். மகரிஷி தேவேந்திர நாதரும் அன்றொரு நாள், "புத்திரா! உனது கண்கள் யோகியினுடையவை" என்றார்; இப்பொழுது ஸ்ரீ ராமகிருஷ்ணர், "இவர் ஒரு தியான சித்தர்" என்றார். ஒருவருக்கு இருவர் கூறியதிலே, இவர்களுடைய கூற்று உண்மையா யிருக்குமா?

நரேந்திரர் முதலாவது தடவை ஸ்ரீ ராமகிருஷ்ண ரைப் பார்த்துவிட்டு வந்தவுடனேயே, தம்மை யிட்டுக் கொண்டு சென்ற ராமச்சந்திர தத்தரிடத்திலே ஸ்ரீ ராம கிருஷ்ணரைப்பற்றி விவரமாக விசாரித்தார். ராமச்சந் திரதத்தர், "ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒரு அற்புத புருஷர்; மகாஞானி; அவரிடத்திலே காம உணர்ச்சியே கிடையாது; அவர் பொன்னை யிகழ்கிறார்; பெண்ணை மாதாவாகக் கருது கிறார்; அவர் உண்மையான யோகபுருஷர்; அவர் ஈஸ்வர

னைப் பிரத்தியக்ஷத்தில் நேராகக் கண்டவர் என்பதில் சந்தேகமில்லை'' என்றார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் நரேந்திர ரிடத்தில் அளவற்ற அன்புகாட்ட ஆரம்பித்துவிட்டார். நரேந்திரனைப் பார்த்தால் போதும், ராமகிருஷ்ணருடைய மனத்திலே ஆநந்தம் பொங்கும். நரேந்திரர் மூன்றாவது தடவையாக ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் வந்தபொழுது, ஸ்ரீ ராமகிருஷ்ணர் மெய்மறந்து ஆநந்தலயநிலையடைந்து, அந்த நிலையிலிருந்துகொண்டே, நரேந்திரரை நோக்கி, ''நாராயணா! நீ என்பொருட்டு இச்சரீரம் எடுத்திருக்கிறாய்; நான் இந்த மானிட வடிவெடுப்பதற்கு முன் ஜகன்மாதாவை நோக்கி, அம்மா! நான் எப்படித் தனித்துச் செல்வேன்? சம்பாஷிப்பதற்குப் பெண்ணினாலும் பொன்னினாலும் பிடிக்கப்படாத ஒரு பரிசுத்த பக்தன் இல்லாவிட்டால் நான் உலகிலே எப்படியிருக்கமுடியும்?'' என்று பிரார்த்தித்தேன்; கடைசியாக நேற்றிரவு நீ வந்து இதோ நான் வந்துவிட்டேன்'' என்று கூறி என்னை யெழுப்பினாய்'' என்றார்.

* * * * * *

பின் ஒருநாள் ஞாயிற்றுக்கிழமை; பிரஹ்மசமாஜத்தினர்கள் கிறிஸ்தவர்கள் போல ஞாயிற்றுக்கிழமைகள் தோறும் ஜபாலயத்தில் கூடிக் கடவுளைத் தொழுவது வழக்கம். அப்படியே அன்றும் பிரஹ்மசமாஜ மண்டபத்திலே ஏராளமான ஜனங்கள் கூடியிருந்தார்கள். பிரஹ்மசமாஜத்து அங்கத்தினர்களுள் பலர் ஐசுவர்யவான்கள், பெரும் பதவி



வகித்தவர்கள், பொது ஜனங்களாலே உயர்ந்தோரென்று மதிக்கப்பட்டவர்கள் இருந்தார்கள். இவர்களுள் சிலர் இன்று வந்திருந்தார்கள். இந்த பிரஹ்மசமாஜ அங்கத்தினர்களுள் சிலர் வாத்திய கருவிகளை வைத்துக்கொண்டு தேவகீதங்கள் பாடுவதும், மற்றவர்கள் அப்படியே கண்மூடி, ஈஸ்வரதியானம் செய்வதும் வழக்கம். அன்று அப்பொழுதுதான் ஒரு தேவகீதம் பாடி முடிந்தது; அம்மண்டபத்தின் பின்பக்கத்திலே ஒருவர் வந்து நின்றார்; அவருடைய முகத்திலே துன்பம் துலங்கிற்று; அவருக்கு ஒரே நினைப்புத்தான் இருந்தது. அச்சமயத்தில் அவருக்கு உலகில் வேறெதுவும் நினைப்பில்லை. இவர்தான் நமது ஸ்ரீ ராமகிருஷ்ணர். நரேந்திரர் இவரிடம் வந்துவிட்டுப் போய் அநேக நாட்களாய்விட்டன. ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு நரேந்திரரைப் பார்க்கவேண்டுமென்ற ஆசை நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே வந்தது. கடைசியாக அவரால் அவ்வாசையை அடக்க முடியவில்லை. தக்ஷிணேஸ்வரத்திலிருந்து ஸ்ரீ ராமகிருஷ்ணர் நரேந்திரரைத் தேடிக்கொண்டு புறப்பட்டு கல்கத்தா வந்து சேர்ந்தார். இங்கே பிரஹ்மசமாஜத்தில்தான் அப்பொழுது இருப்பாரென்று உணர்ந்துகொண்டு பிரஹ்மசமாஜ மண்டபத்துக்கே வந்துவிட்டார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் பித்தனைப்போ லிருக்கிறார்; அழுக்காடை கட்டியிருக்கிறார்; நாகரிகமென்பது அணுவளவும் அவரிடத்தில் இல்லை. ''நரேந்திரா! நரேந்திரா!!'' என்று ஒரு சத்தம் கேட்டது. கூடியிருந்தவர்கள் எல்லோரும் இந்தச் சத்தத்

தைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தார்கள். ஆங்கிலம் பயின்று, அறிவு மேலாகி, அழகு ஜவலித்து விளங்கும் இந்த வாலிபனிடத்தில் இந்த அழுக்காடைக் கந்தலுடுத்திய பைத்தியக்காரனுக்கு என்ன வேலை? நரேந்திரரும் இந்த சப்தத்தைக் கேட்டார். அப்பொழுதுதான் நரேந்திரர் தேவகீதத்தின் கடைசி பதத்தைப் பாடி முடித்தார். அவர் அம்மண்டபத்தை விட்டு நீங்கி வெளியே வந்தார்; தம்மைக் கூப்பிட்டது தக்ஷிணேஸ்வரத்து ஸ்ரீ ராமகிருஷ்ணர் என்று தெரிந்துகொண்டார்; ஸ்ரீ ராமகிருஷ்ணரும் நரேந்திரரைப் பார்த்தவுடனே சந்தோஷ பூரிதராய், "புத்திரா! நீ ஏன் என்னைப் பார்க்க வரவில்லை? நீ வருவாய் வருவாயென்று நான் எத்தனை நாட்கள் காத்திருப்பது? உன்னைக் காணாவிட்டால் நான் படும்பாடு எவரே யறிவார்?" என்று சொல்லிக்கொண்டிருக்கையிலேயே பிரஹ்மசமாஜத்து பஜனை கோஷ்டியார் இன்னும் ஒரு கீதம் பாட ஆரம்பித்துவிட்டார்கள். ஈஸ்வரனுடைய மகிமையைப்பற்றி அவர்கள் பாடிய பாடல் ஸ்ரீ ராமகிருஷ்ணரைச் சமாதியில் அழுத்திவிட்டது; ஸ்ரீராமகிருஷ்ணருடைய சரீரம் அப்படியே விறைத்துவிட்டது; கண்கள் திறந்தவண்ணமே யிருந்தன; ஆனால், விழி சற்றும் ஆடவில்லை; அவர் சில நிமிஷங்களுக்குள்ளாகப் பகிர்முகப்பிரக்ஞை யடைந்துவிட்டார்; மனமானது வெளிப்பட்டபொழுது, அவர் ஈஸ்வரநாமத்தைக் கூறிக்கொண்டே உலகைப் பார்த்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணர், பின்னர் நரேந்திரரை நோக்கி, "புத்திரா! போகலாம் வா! நான் உன்னைப் பார்க்க எவ்வளவு அவாக்கொண்டிருக்கின்



றேன்" என்றார். நரேந்திரர் அக்கூட்டத்தை விட்டு அகன்றார். "இது யார் இந்தக் கிழவன? இரண்டு மூன்று தடவை சுமார் ஒரு மாதத்திற்கு முன்னே நான் போய்ப் பார்த்ததுண்டு, உண்மைதான்; அவன், சமாஜத்திலே வந்து ஏன் இக்கலக்கத்தை யுண்டுபண்ணினான்? எல்லோரும் பைத்தியக்காரனென்றல்லவோ நினைப்பார்கள்" என்று நரேந்திரர் தனக்குள்ளேதானே யோசனை செய்துகொண்டார். அப்பொழுது நரேந்திரர் ஸ்ரீ ராமகிருஷ்ணரைச் சரியானபடி தெரிந்துகொள்ளவில்லை; சில சமயங்களிலே அவர் ஸ்ரீ ராமகிருஷ்ணரை, "மூளை வியாதி பிடித்த ஒரு கிழவர்" என்று நினைத்தார்; வேறு சில சமயங்களிலே ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய வைராக்கியத்தையும் அவருடைய கடுந்தவத்தையும்பற்றி ஆச்சரியப்பட்டார்.

---

## 16-வது அத்தியாயம்

## "நீங்கள் ஈஸ்வரனைப் பார்த்ததுண்டா?"

பிரஹ்மசமாஜத்திலே ஸ்ரீ ராமகிருஷ்ணர் வந்து நரேந்திரரைக் கூப்பிட்டு ஒரு சிறு கலக்கம் உண்டுபண்ணிய சங்கதியை நரேந்திரர் மனத்தில் தரித்துக்கொள்ளவில்லை. நரேந்திரருக்கு நாளுக்குநாள் ஈஸ்வரதாகம் அதிகரித்தது. மகரிஷி தேவேந்திர நாதர் ஈஸ்வரனைப் பிரத்தியக்ஷத்தில் பார்த்ததில்லை; பார்த்திருந்தால் நரேந்திரர் கேட்ட கேள்விக்கு, "நான் பார்த்திருக்கிறேன்" என்று

பதில் கூறியிருக்கமாட்டாரா? பிரஹ்மசமாஜத்துக்குப் பெரிய தலைவராயும், 'மகரிஷி' எனப் பட்டம் பெற்றும் இருக்கின்ற அவரே ஈஸ்வரனைப் பார்த்ததில்லையென்றால் பிரஹ்மசமாஜத்திலேயுள்ள மற்றவர்கள் ஈஸ்வரனைப் பார்த்திருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா? அப்படியானால் ஈஸ்வரனை எங்குத்தான் காண்பது? உலகிலுள்ள தத்துவ ஞானப் பேச்சும் வாதமுமெல்லாம் திரணம் மாத்திரமே; இவையெல்லாம் அவாச்சிய வஸ்துவை வர்ணிப்பதற்குள்ள முயற்சிதானே. "புத்தகங்களிலே கடவுளைக் காண முடியாது" என்று சொல்லி நரேந்திரர் தமது மேஜை மீது இருந்த மதக்கிரந்தங்களையெல்லாம் எடுத்து ஒருபுறமாக எறிந்தார். அப்படியானால் ஈஸ்வரனை எங்கேதான் காணலாம்? ஸ்ரீ ராமகிருஷ்ணரிடத்திலே கேட்டுப்பார்ப்போமா? "ஸ்ரீராமகிருஷ்ணர் ஈஸ்வரனைப் பிரத்தியக்ஷத்தில் தரிசித்தவர்" என்று அன்றொருநாள் ராமச்சந்திரதத்தர் கூறினாரே; அது உண்மையாயிருக்கலாகாதா? அங்கு அவரிடத்தில்தான் போய் இந்தக் கேள்வியைக் கேட்டுப் பார்க்கலாமே; அவர் என்ன சொல்லுகிறார், தெரியட்டும்; அவரும் மகரிஷி தேவேந்திரநாதரைப்போல மறுமொழி சொல்லிவிட்டால் என்ன செய்கிறது? ஆனாலும், அவரிடத்தில் போய்க் கேட்காமலிருக்கக்கூடாது. நரேந்திரன், சட்டை போட்டுக்கொண்டு, தொப்பியையும் எடுத்துத் தரித்துக்கொண்டு புறப்பட்டான். அவனுடைய தாயார் பார்த்தாள்; "எந்தன் செல்லமே! எங்கே போகிறாய்?" என்று கேட்டாள். அவர், "நான் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம்



செல்கிறேன்" என்றார். புவனேஸ்வரிமாதா யோசனை செய்ய ஆரம்பித்தாள். நரேந்திரர் இதற்கு முன்னே சில தடவைகளில் ஸ்ரீ ராமகிருஷ்ணரைப்பற்றித் தமது தாயாரிடம் பிரஸ்தாபித்திருக்கிறார்; இப்பொழுது நரேந்திரர் இவ்வளவு வேகமாக ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் போகப் புறப்பட்டதைப் பார்த்தால், அவ்வம்மையாருக்குப் பலமான சந்தேகங்கள் உண்டாயின. "ஸ்ரீ ராமகிருஷ்ணர் மெல்ல மெல்ல நரேந்திரருக்குத் தியாகோபதேசம் செய்து, சந்யாசியாக்கிவிட்டாலென்ன செய்வது? கூடவே கூடாது; தவம் புரிந்து பெற்றபிள்ளை சந்யாசியாக எந்தத் தாயார்தான் சம்மதிப்பாள்? அப்படியானால், புவனேஸ்வரிமாதா தன்னாலான மட்டும் தடுப்பதாகத் தீர்மானித்துக்கொண்டாள். ஆயினும், ஈஸ்வர சங்கற்பத்துக்கு விரோதமாக எவர்தான் என்ன செய்ய முடியும்?

நரேந்திரர் தக்ஷிணேஸ்வரத்துக்கு ஓடினார்; அங்கே ஸ்ரீ ராமகிருஷ்ணர் தனியே, ஏகாந்தத்திலே இன்ப மநுபவித்துக்கொண்டிருந்தார். நரேந்திரர் ஸ்ரீ ராமகிருஷ்ணரை யணுக அணுக, அவருக்குப் பக்தி யொருபக்கம், பயமொருபக்கம் உண்டாயின. மகரிஷியைக் கேட்ட கேள்வியை ஸ்ரீ ராமகிருஷ்ணரிடத்தில் கேட்கலாமா? ஸ்ரீ ராமகிருஷ்ணர் சரியானபடி, திருப்திகரமாகப் பதில் சொல்லாவிட்டால், என்ன சொல்வது? ஆனாலும், கேட்டுப் பார்த்துவிடலாம். நரேந்திரர் தமது மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு, மகா தைரியத்துடனே ஸ்ரீ ராமகிருஷ்ண

ரை நோக்கி, "ஸ்வாமி! ஸ்வாமி!! நீங்கள் ஈஸ்வரனைப் பார்த்ததுண்டா?" என்று கேட்டார். ஸ்ரீ ராமகிருஷ்ணர், ஆநந்தபூரிதராய் நரேந்திரரை ஆசையுடனே பார்த்தார்; ஆ! ஆ!! என்ன ஆச்சர்யம்! ஆ! ஆ!! என்ன ஆச்சர்யம்!! உடனே ஸ்ரீ ராமகிருஷ்ணர் சிறிதும் யோசனையில்லாமல், சிறிதும் யோசனை செய்யாமல் சட்டென்று, "ஆம், எனது புத்திரா! நான் ஈஸ்வரனைப் பார்த்திருக்கிறேன்; நான் என் முன்னே உன்னை எப்படிப் பார்க்கிறேனோ, அப்படியே அது போலவே நான் ஈஸ்வரனையும் பார்க்கிறேன்; ஆனால், நான் ஈஸ்வரனை மிக மிக அதிக சூட்சுமமாகப் பார்க்கிறேன்; நான் அவரை உனக்கும் காண்பிக்கக்கூடும்" என்றார். "என்ன இது? என்ன இது? இதோ ஒருவர் ஈஸ்வரனைத் தாம் நேரில் பார்த்துள்ளதாகக் கூறுகிறார்; அது மாத்திரமன்று; 'பிறருக்கும் காண்பிக்க முடியும்' என்று கூறுகிறார்; ஆனால், அவருடைய வார்த்தைகளிலே கள்ளங் கபடில்லை; அவருடைய பார்வையிலே கள்ளங் கபடில்லை; அவருடைய முகத்திலே மாறுதலில்லை. ஆனால் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய அம்மொழிகள் அவருக்கு வேதமொழிகள் போன்று ஒலித்தன. நரேந்திரருக்கு ஆநந்தம் பொங்கி விட்டது. ஆ! ஆ!! என்ன ஆநந்தம்! ஈஸ்வரனை நேரே கண்டவர் ஒருவர் இதோ இருக்கிறார்; இதைவிட ஆநந்தம் வேறு யாது வேண்டும்? இத்தகையதென்று வர்ணிக்க முடியாத ஆநந்தம்! நரேந்திரர் இவ்வாநந்தாதிக்கத்தைத் தாங்க முடியவில்லை; அவர் இவ்வுலகை விட்டு நீங்கி வேற்றுலகு புகுவதுபோல உணர்ந்தார். ஆ! ஆ!! எத்தனை மாத



காலமாக அவர் இவ்விஷயத்தைக் குறித்து வருந்திக் கொண்டிருந்தார்; ஆ! ஆ!! எத்தனை மாதகாலமாக அவர் இவ்விஷயத்தைக் குறித்து மனவேதனைப்பட்டுப் பெருமூச்செறிந்துகொண்டிருந்தார்? எத்தனை நாட்கள் அவர் இராப்பகலாய் இதே கவலையாயிருந்தார்? ஆ! ஆ!! கடைசியாக இன்று அவருடைய கவலைக்கு ஒழிவு ஏற்பட்டது; அவருடைய துக்கம் தொலைந்தது.

ஆயினும், ஈஸ்வரனைத் தரிசித்துள்ள ஒருவரைப் பார்த்துவிட்டால் போதுமா? அவர் ஈஸ்வரனைத் தரிசிக்க வேண்டாமா? ஆகையால், அவர், அஞ்ஞானத்துடனே-அந்தகாரத்துடனே கடும்போராடவேண்டியிருந்தது. ஆதலால், அவருடைய ஆநந்தம் சட்டென்று மாறிவிட்டது; இந்த ஈஸ்வரப் பித்துப் பிடித்த ஸ்ரீ ராமகிருஷ்ணருடனும் இவர் போராடவேண்டியிருந்தது. ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய கூற்றுக்களை இவர் சாதாரணமாக ஒப்புக்கொண்டதில்லை; ஒவ்வொரு வார்த்தையையும் உடைத்து உடைத்து, ஆய்ந்து பார்த்து, அவற்றில் உயிர் இருந்தால்தான் ஒப்புக்கொள்வார். ஆனால், கடைசியாக நரேந்திரர் ஸ்ரீ ராமகிருஷ்ணரைத் தமது குருவாக ஒப்புக்கொள்ளவேண்டி வந்துவிட்டது.

ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு எப்பொழுதும் நினைப்பெல்லாம் நரேந்திரர்மேலேயேதான். ஆனால், முதலிலே நரேந்திரருக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர்மீது அவ்வளவு அன்பு விழவில்லை. நரேந்திரர் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் வந்துவிட்டுப்

போய் அநேக நாட்களாய்விட்டன. ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குப் பொறுக்க முடியவில்லை; நரேந்திரரைத் தேடிக்கொண்டு ஸ்ரீராமகிருஷ்ணர் கல்கத்தாவுக்கு வந்து சேர்ந்தார். அப்பொழுது நரேந்திரர் என்ன செய்துகொண்டிருக்கிறார், தெரியுமா? தமது பள்ளித் தோழர்கள் பலருடனே உல்லாசமாக உட்கார்ந்துகொண்டு பலபல விஷயங்களைப்பற்றிச் சம்பாஷணை செய்துகொண்டிருந்தார். அத்தோழர்களுக்குள்ளே ஒருவன், நரேந்திரரிடத்திலே உண்மையன்பு அதிகம் வைத்தவன், 'நரேந்திரர் ஸ்ரீராமகிருஷ்ணரிடம் அடிக்கடி போய் வந்துகொண்டிருப்பதினால் உலகைத் துறந்து சந்யாசியாய்விட்டால் என்ன செய்வது?' என்று மிகமிக வருந்திக்கொண்டிருப்பவன், மற்ற தோழர்களை நோக்கி, "நண்பர்காள்! நரேந்திரன் இவ்வளவு சாதுர்யமாகப் பேசுகிறானே; எடுத்ததற்கெல்லாம் குயுக்திகள் பேசி நம்மை வாயடங்கச் செய்கிறானே; இவ்வளவு புத்தியும் சமர்த்தும் வாய்ந்த இவன், தக்ஷிணேஸ்வரத்திலே பித்தப்பிடித்துப் புலம்பிக்கொண்டிருக்கும் ஒரு காட்டுமிராண்டிக் கிழவனிடத்திலே கைகட்டி வாய் பொத்தி நிற்பதைப் பார்த்தால், அநியாயமாக இவனுக்கும் அம்மாதிரி பித்துப் பிடித்துவிடுமோ? என்று எனக்கு மிகப் பயமாயிருக்கிறது. இனிமேல் இவன் அந்தப் பைத்தியக்காரனிடம் போகக்கூடாது. போனால், மிகக் கெட்டுப்போய்விடுவான். இதற்கு நாம் ஒருவழி செய்யவேண்டும். (நரேந்திரரைப் பார்த்து) "நரேந்திரா! நீ கலாகுமார பரீட்சையில் தேறிவிட்டாய்; ஆங்கிலபாஷையிலேயுள்ள புத்தகங்களின்



அநேகமாக எல்லாவற்றையும் அதி தாகத்துடனே படித்துக்கொண்டுவருகிறாய்; அந்த தக்ஷிணேஸ்வரத்துக் கிழவனுக்கு அ-என்ற அக்ஷரம் தெரியுமா? அவனுக்கு மூளையிலே ஏதோ நோவுபோலிருக்கிறது? அடிக்கடி கண்ணை மூடி மூர்ச்சைபோய்விடுகிறான். இவ்விதமாகப் பைத்தியமும் பிணியும் பலமாகப் பிடித்துள்ள அந்தக் கிழவனிடத்திலே ஆங்கிலக் கல்வியில் தேர்ந்த, ஐரோப்பிய நாகரிகத்திலே ஈடுபட்டுள்ள ஒருவன், அதிலும் பிரஹ்மசமாஜத்திலே அங்கத்தினனாயுள்ள ஒருவன் போவதென்றால், வெட்கமாயிராதா?" என்று ஸ்ரீ ராமகிருஷ்ணரைப்பற்றி மிகமிக இழிவாகச் சரமாரியாகப் பிரசங்கம் ஒன்று செய்தான். நரேந்திரர் ஒன்றுமே பேசவில்லை; அந்த நண்பனுடைய இவ்விழியுரைகளையெல்லாம் மிகப் பொறுமையுடனே கேட்டுக்கொண்டிருந்தார். ஆனால், அந்த நண்பன் கூறியதெல்லாம் உண்மைபோலத்தான் தோன்றிற்று; ஆயினும், நரேந்திரருக்கு அவரையறியாமலே ஸ்ரீ ராமகிருஷ்ணரிடத்தில் ஒருவித அசாதாரணமான பக்தியும் விசுவாசமும் ஏற்பட்டிருந்தது. இதற்குக் காரணம் நரேந்திரருக்கே தெரியவில்லை. ஆனால், "ஈஸ்வரனை நேரில் நான் பார்த்திருக்கிறேன்" என்று சொல்லத் துணிந்தவர் ஸ்ரீராமகிருஷ்ணர் ஒருவர்தானே.

இவ்விதமாக அந்த நண்பன் தங்கு தடையின்றி ஸ்ரீ ராமகிருஷ்ணரைப்பற்றி மிகக் குறைவாகப் பேசி, அப்பேச்சு உச்சஸ்வரத்தை யடைந்துவரும் சமயத்திலே,

"நரேந்திரா! நரேந்திரா!!" என்று ஒரு சப்தம் கேட்டது. எல்லோரும் திடுக்கிட்டு எழுந்தார்கள்; இவ்விதமாக நரேந்திரரைக் கூப்பிட்டது யார்? ஆ! ஸ்ரீ ராமகிருஷ்ணர்தான். வேறு யார் தேடிவந்து இவ்வளவு அருமையாக, இவ்வளவு செல்லமாகக் கூப்பிடப்போகிறார்கள்? நரேந்திரர் தமது தோழர்களை மேல் மாடியிலேயே விட்டுவிட்டு, படிக்கட்டின் வழியாகக் கீழே யிறங்கினார்; அப்பொழுது ஸ்ரீ ராமகிருஷ்ணர் படிக்கட்டின் வழியாக மேலே ஏறுகிறார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் நரேந்திரரைக் கண்டவுடனே ஆநந்தம் பொங்கிற்று; சந்தோஷக் கண்ணீர் சொரிந்தார். "நரேந்திரா! ஏன், அப்பா! நீ என்னை அநேக நாட்களாகப் பார்க்க வரவில்லை?" என்றார். ஸ்ரீராமகிருஷ்ணர், ஒரு கள்ளங்கபடற்ற சிறு குழந்தை மழலைச்சொல் பேசுவதுபோல, இவ்வளவு அருமையாகக் கேட்டது நரேந்திரருடைய ஹிருதயத்தை யுருக்கிவிட்டது. இருவரும் உபர மேல்மாடியறைக்கே சென்றார்கள். அங்குப்போய் உட்கார்ந்தவுடனே, ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது கந்தையின் ஒரு மூலையிலே முடிந்து வைத்திருந்த முடிச்சு ஒன்றை அவிழ்த்தார். என்ன அது? ஸ்ரீ ராமகிருஷ்ணர் வரும் வழியிலே, மிட்டாய்க் கடையில் நரேந்திரருக்கென்று மிட்டாய் தினுசுகள் வாங்கி வந்தார். அவற்றை யவிழ்த்தெடுத்து, நரேந்திரரை யருகிலழைத்து, பெற்ற மாதா பிள்ளைக்கு அன்னம் ஊட்டுவதுபோல, நரேந்திரருடைய வாயைத் திறக்கும்படி சொல்லித் தாமே தமது கையினால் அவருக்கு அம்மிட்டாயை யூட்டினார். ஆ! ஆ! என்ன ஆச்சர்யம்! இப்படியும்



உண்டா? ஈஸ்வரன் எவ்விதமாகவெல்லாம் ஜீவகோடிகளைத் தடுத்தாட்கொள்கிறார், பார்த்தீர்களா? பேரின்பாமிருதம் ஊட்டப்போகும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் அதற்கு அஸ்திவாரமாக இப்பொழுது இம்மிட்டாய் வர்க்கங்களை யூட்டினார் போலும்! "குரு சிஷ்யனைத் தேடுகிறார், சிஷ்யன் குருவைத் தேடுகிறான்" என்பது சிருஷ்டி நீதி. உண்மையும் உள்ளன்பும் உள்ள முமுட்சுவைத் தேடி ஈஸ்வரன் ஓடியோடி வருகிறான். ஈஸ்வரா! உனது திருக்கூத்துத்தான் என்னே! உன்னை நம்பவும் முடியவில்லை; நம்பாமலும் இருக்க முடியவில்லை.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் நரேந்திரருக்கு மிட்டாய் வர்க்கங்களை யூட்டிய பின்னர், "நரேந்திரா! ஒரு பாட்டுப் பாடு, கேட்போம்" என்றார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவ்வறைக்குள் நுழைந்தவுடனே, அங்கிருந்த மற்றப் பிள்ளைகள் எல்லோரும் எழுந்து நின்று அவருக்கு மரியாதை செய்தார்கள். சில நிமிஷங்களுக்கு முன்னே ஸ்ரீ ராமகிருஷ்ணரை இழிவாகக் கூறிக்கொண்டிருந்த வாலிபனும் இப்பொழுது எழுந்து நின்று மரியாதை செய்தான். இப்பொழுதுதானே ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பைத்தியக்காரனென்றும் பிணியாளனென்றும் இழித்துரைத்தான்; அப்படியிருக்க, அவன் ஏன் எழுந்து மரியாதை செய்தான்? இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு; ஒன்று: இந்தியாவிலே துறவிகளுக்கு மரியாதை செய்வதென்பது இயற்கையிலேயே ஏற்பட்டுள்ள ஒரு குணம். துறவி மற்றவர்களினும் உயர்ந்தவன், சிரேஷ்டமானவன், பெரியோன், பூஜ்ய

னைக் குரியவன் என்பது ஹிந்துக்களுடைய அபிப்பிராயம்; இது ஆயிரக் கணக்கான வருஷங்களாகப் பரம்பரை பரம்பரையாக ஏற்பட்டு வருகிற அபிப்பிராயம்; இவ்வபிப்பிராயம் ஹிந்துக்களுடைய ரத்தத்திலே ஊறிவிட்டது; அவர்களுடைய நரம்புகளிலே ஓடுகின்றது; அவர்களுடைய நாடிகளிலே துடிக்கின்றது; அவர்களுடைய எலும்புகளிலே பற்றியிருக்கின்றது; ஆகலால். ஹிந்துக்கள் தங்களுடைய மதத்தையும் ஆசாரங்களையும் பெரியோரையும் அந்நிய நாட்டு நாகரீக சம்பந்தத்தின் பயனாக இழித்துரைக்கலாம்; ஆயினும், அநுபவத்திலே ஹிந்து ஹிந்துவேயாவன்; ஆதலால்தான் நமது ஸ்ரீ ராமகிருஷ்ணரை இழித்துரைத்த அந்த வாலிபனும் இப்பொழுது அவரைக் கண்டமாத்திரத்திலே எழுந்து மரியாதை செய்தான்.

இரண்டாவது காரணம்: ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய முகம் இயற்கையில் அவ்வளவு வசீகர சக்தி வாய்ந்ததன்றாயினும், அவருடைய முகத்திலே ஒருசாந்தகளை வீசிற்று; அவருடைய கண்கள் ஒருவித இன்பவொளியை உமிழ்ந்தன; அவருடைய உதடுகள் அவருள்ளே அடங்கியிருக்கும் ஆநந்தத்தை யடிக்கடி வெளிப்படுத்தின. ஆகையால், அவரைப் பார்த்த எவரும் அவரிடத்தில் ஒருவித அன்பும் மரியாதையும் உண்டாகாமற் போகாது ஆதலாலும் அவ்வாலிபன் மரியாதை செய்தான்.

நரேந்திரர் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய வார்த்தைக்கு மறுவார்த்தை பேசாது, பாடுவதற்காகத் தமது தம்பூரை



யெடுத்து மீட்டினார். எல்லோரும் கீழே யுட்கார்ந்தார்கள். நரேந்திரர் ஜகன்மாதாவைக் குறித்து அற்புதமான ஒரு கீர்த்தனை பாடினார். மற்றவர்கள் அப்படியே மௌனமாய் மெய்மறந்து உட்கார்ந்திருந்தார்கள். அவ்வறையிலே அற்புதமான மௌனமும் அடக்கமும் விளங்கின. சில நிமிஷங்களுக்குள்ளே ஸ்ரீ ராமகிருஷ்ணர் பிரபஞ்சப் பிரக்ஞையற்றுவிட்டார்; அப்பாடலுக்கு ஒத்தவாறு அவருடைய உணர்ச்சிகள் கிளம்பின; கடைசியாக அவர் ஜகன்மாதாவினுடைய மடியிலே செல்லக் குழந்தைபோல் துயில்வதற்குச் சென்றுவிட்டார்; ஜகன்மாதாவினிடத்திலே லயமாய்விட்டார். அச்சமயத்திலே அவ்வறையில் ஒரு ஜோதி சாந்நித்தியம் நிரம்பிற்று. நரேந்திரருடைய நண்பர்கள் தாங்கள் ஒரு புதிய உலகத்துக்குச் சென்றுவிட்டதுபோல உணர்ந்தார்கள். நரேந்திரர் அப்பாட்டைப் பாடி முடித்த பின்னர், தம்பூரைக் கீழே வைத்துவிட்டு, ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய பாதங்களினருகே வந்து உட்கார்ந்துகொண்டு, ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பார்த்தவண்ணமாக இருந்தார். மெல்ல மெல்ல ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய மனமானது பகிர்முகப்பட்டது. அவ்வறை ஒரு ஆலயமாய்விட்டது; சூர்யன் அஸ்தமித்தான்; அருகேயிருந்த க்ஷேத்திரங்களிலே அடிக்கும் மணியோசைகளும் பக்தர்களுடைய ஸ்தோத்திரங்களும் நன்றாகக் கேட்டன. இவ்வறையாகிய க்ஷேத்திரத்திலே எல்லோரும் மௌனமாகிய ஸ்தோத்திரம் செய்தார்கள்.

## 17-வது அத்தியாயம்

## குரு ஸ்பர்சம்

ஸ்ரீ ராமகிருஷ்ணர் அத்தியாற்புதமான சக்திகள் அநேகம் உடையவராயிருந்தார்; ஒரு பார்வையினாலே, ஒரு ஸ்பர்சத்தினாலே, இச்சாமாத்திரத்தினாலே, தம்மிடத்திலுள்ளதைப் பிறரும் அடையும்படி செய்யும் சக்தி அவரிடம் இருந்தது. நாம் நம் எதிரேயுள்ள பொருள்களைப் பார்ப்பதுபோல, அவர் பிறருடைய மனத்தினூடே புகுந்து, நினைப்புக்களைப் பார்த்தறிந்துகொள்வார். வெகு சுலபமாக ஒருவனுடைய வாசனை யின்னதென்று கண்டுகொள்வார். ஸ்ரீராமகிருஷ்ணர் தமது சிஷ்யர்களைத் தாம் பொறுக்கித் தேடி யெடுத்துக்கொண்டார். அவர்களுடைய பூர்வ ஜன்மவாசனை புண்ணியவாசனை யென்று தெரிந்த பின்னரே, அவர்களை சிஷ்யர்களாக்கிக்கொண்டார். அவர், தாம் எந்த அவஸ்தையி லிருக்க விரும்பினாலும் அந்த அவஸ்தையில் எவ்வித பிரயாசையுமின்றி யிருந்து கொள்ள முடியுமாம்படி தமது மனத்தை யவ்வளவு தூரம் அடக்கி வைத்துக்கொண் டிருந்தார். அவர் அன்பு செலுத்திய எவரையேனும் பார்த்துவிட்டால் போதும், பிரபஞ்சப்பிரக்ஞையற்று ஆநந்த உலகு எய்திவிடுவார்; அவர் அன்பு செலுத்திய எவரேனும் ஒரு வார்த்தை சொன்னாலும் போதும், அவர் ஆநந்த உலகடைந்துவிடுவார்; அவர் அன்பு செலுத்திய எவரேனும் பாடக்



கேட்டாலும், அப்படியே அவர் அவ்வுலகு போய்விடுவார்; ஏனெனில், ஆநந்தத்துக்குக் காரணம் அன்புதானே.

ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் நரேந்திரர் வந்தபொழுது ஸ்ரீராமகிருஷ்ணர் நன்றலர்ந்த ஞானத் தாமரையாயிருந்தார். அவரிடத்திலே ஆநந்தமாகிற தேன் நுகர்தற்பொருட்டு, அநேக தேனீக்கள் வந்தன; ஸ்ரீராமகிருஷ்ணர் சில வருஷங்களுக்கு முன்னே, "தேவி! ஜகன்மாதா! என்னுடைய பக்தர்கள் எங்கே?என்னுடைய சிஷ்யர்கள்எங்கே? அவர்களை யென்னிடம் இட்டுக்கொண்டுவருவாய்" என்று அநேக தடவை கதறியிருக்கிறார். இப்பொழுது அவர்கள் வந்துவிட்டார்கள்; அவர்களுக்குத் தலைவராக நரேந்திரர் வந்துவிட்டார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் இவர்களுக்குச் சத்தியத்தினிடத்து இட்டுச்செல்லும் பல மார்க்கங்களையும் உபதேசித்தார். அவர் அவர்களுக்கு உயிரும் ஒளியும் அளிக்குமொரு ஞானக்கொழுந்தா யிருந்தார். ஈஸ்வரதியானத்தின் மூலமாக லௌகீக வாழ்க்கையாகிய அந்தகாரமானது பறந்துவிட்டது; மனமானது உலகப்பொருள்களையெல்லாம் உதறிவிட்டு, "ஆநந்தம் எங்கே? எங்கே?" என்று தேடியோடுகின்றது. தக்ஷிணேஸ்வரத்துத் தோட்டமானது பிரஹ்மலோகம்போ லாய்விட்டது. ஆ! ஆ! என்ன பக்தி! என்ன பக்தி! ஈஸ்வரநாம சங்கீர்த்தனம் செய்வார்கள்; ஈஸ்வரநாம மகிமையிலே மெய் மறந்து ஆடுவார்கள்; அவர்கள் நின்ற மண்ணும் பரிசுத்தமாகிவிட்டது; அவ்விடத்திலே ஈஸ்வர நாமம் தத்தளித்து ஓடவில்லையா?

ஆயினும், நரேந்திரர் முதலில் இந்த ஆனந்த நிர்த்தனங்களில் கலந்ததில்லை; அவர் பின்பற்றி வந்த ஐரோப்பிய நாகரிகம் அவரை அவ்வானந்த நிர்த்தனத்தின் உண்மையை அறியும்படி விடவில்லை. இந்த ஆட்ட பாட்டங்களெல்லாம் அவருக்கு விளங்கவில்லை; இவற்றிலே மூளைக்கு வேலையில்லையே; ஹிருதயந்தானே துடிக்கின்றது. ஆகையால், நரேந்திரருடைய கல்வியும் அறிவும் இந்த ஆட்டபாட்டங்களை வெறுத்தன; ஆனால், இந்தக் கூட்டத்திலே தாம் ஒருவராயிருப்பதில் அவருக்கு ஒரு குதூகல முண்டாயிற்று. அவர், "இதெல்லாம் மூடத்தனம்; என்றேனும் ஒருநாள் காளியென்பதெல்லாம் கட்டுக்கதை யென்று இந்தக் கிழவர் (ஸ்ரீ ராமகிருஷ்ணர்) தெரிந்துகொள்வார்; அப்பொழுது அவர் தம்முடைய இப்பொழுதிய அபிப்பிராயங்களை மாற்றிக்கொள்வார்; அப்பொழுது அவருக்கு ஒரு உயர் திருஷ்டியுண்டாகும்" என்று தாமே நினைத்துக்கொண்டார். ஆயினும் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய ஒவ்வொரு நடையிலும் ஒவ்வொரு அசைவிலும் நரேந்திரர் ஆனந்தத்தைக் கண்டு அநுபவித்தார்.

நரேந்திரர் ஒருநாள் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் வந்தார். வழக்கம்போல் ஸ்ரீராமகிருஷ்ணர் அவரை யொருபாட்டுப் பாடும்படி கேட்டுக்கொண்டார். ஸ்ரீராமகிருஷ்ணர் நரேந்திருடைய கீதத்தைக்கேட்டுக்கொண்டே சமாதியில் லயித்துவிட்டார். பாட்டு முடிந்தது. ஸ்ரீராமகிருஷ்ணர் மெல்லக் கண்களை விழித்தார். ஆனால், ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய



முகத்திலே தினந் தோன்றும் உபசாந்தக் களையில்லை; ஏதோ தீர்க்க சிந்தனையுள்ளவர்போலக் காணப்பட்டார். அவருடைய மனமானது ஏதோ ஒரு விசேஷ விஷயத்தைப் பற்றியதுபோலத் தோன்றிற்று. மற்ற சிஷ்யர்கள் ஸ்ரீராமகிருஷ்ணரிடத்திலே இதுவரை யொருநாளும் காணாத தோற்றத்தைக் கண்டு, "இன்று என்ன விசேஷம் நேருமோ?" என்று ஆச்சர்யத்துடனே எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது மனத்தை நரேந்திரர்மீது ஒருமுகப்படுத்திவிட்டார்; நரேந்திரர்மீதே தமது கண்களையும் செலுத்தி விழித்தது விழித்தபடி பார்த்துக்கொண்டிருந்தார். பின்னர் ஸ்ரீராமகிருஷ்ணர் எழுந்து, நரேந்திரரை யிட்டுக்கொண்டு தக்ஷிணேஸ்வராலயத்துத் தோட்டத்திலேயே வெகுதூரம் மூலைக்கு இட்டுக்கொண்டுபோய், மகாரகஸ்யமொன்று மொழிந்தார். "உன்னிடத்திலே சிவம் இருக்கிறது; என்னிடத்திலே சக்தி யிருக்கிறது; இரண்டும் ஒன்றேயாம்" என்றார் ஸ்ரீ ராமகிருஷ்ணர். உண்மையிலேயே ஸ்ரீ ராமகிருஷ்ணர் விஷ்ணுவின் அம்சமாகப் பிறந்தவரென்று அவருடைய பெற்றோர்கள் கூறியதினாலும், நரேந்திரர் சிவனுடைய அம்சமாகப் பிறந்தவரென்று அவருடைய பெற்றோர்கள் நம்பியிருந்ததினாலும், இக் கூற்றுக்களை யெடுத்துக்கொண்டு பார்த்தால்கூட, ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறியது உண்மையே யென்று விளங்குகின்றது. விஷ்ணு எப்பொழுதுமே பெண்பால், சிவன் எப்பொழுதுமே ஆண்பால்; சிவமே ஆத்மா, அவருடைய தே ஆநந்தம்; மாதாவாகிய காளி மகாசக்தி, பெண்பால்,

இதைக் கேட்டவுடனே நரேந்திரர் புன்னகை புரிந்தார். "கிழவனுக்குப் பைத்தியம் பலமாய்விட்டது; உளறுகிறான்; ஆனால், காமப்பித்துப் பிடித்துத் திரியும் காதலர்கள் தங்கள் காதலிகளை வர்ணிப்பதுபோல, இந்தக் கிழவனும் என்மீது எப்படியோ அளவற்ற அன்புவைத்துவிட்டான்; இப்படியிவன் தாறுமாறாக உளறுவதற்குக் காரணம் அவ்வளவுக்கு மிஞ்சிய அன்பேயாகும்; பைத்தியமென்றால் இதுதான் பைத்தியம்; இப்படியும் உளறுகின்ற இக்கிழவனை எப்படி மகாத்மாவென்று கூறுவது?" என்றெல்லாம் நரேந்திரர் நினைத்தார். ஆயினும், ஒன்றும் சொல்லவில்லை. ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய ஞானாநுபூதியென்பதெல்லாம் பைத்திய அநுபவங்களை தவிர வேறொன்றுமில்லையென்று நரேந்திரர் தம் மனத்திலே நினைத்துக்கொண்டார். ஆனால், ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய மனம் மாத்திரம் ஒரு சிந்தனையுமற்றுச் சும்மாயிருந்ததா? நரேந்திரர் தம்மிடம் ஐந்தாறு முறை இதுவரையில் வந்துவிட்டார்; அவருடைய சந்தேகங்கள் நிவிர்த்தியாகவில்லை; அவருடைய புத்தி தெளியவில்லை; ஹிருதயம் பிரகாசிக்கவில்லை; ஆகையால், இனிமேல் சும்மாயிருக்கக்கூடாது; நரேந்திரருடைய சம்சயங்களைப் போக்கடித்து அவருடைய மனத்தை ஸ்திரப்படுத்துவதற்குக் காலம் வந்துவிட்டது. ஆகையால், ஸ்ரீராமகிருஷ்ணர் ஒருயோசனைசெய்து தீர்மானித்துக்கொண்டார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் நரேந்திரரை யிட்டுக்கொண்டு தமது அறைக்கு வந்து சேர்ந்தார். சிறிதுநேரம் பஜனை



நடந்தது; சிறிதுநேரம் வேதாந்த சம்பாஷணை நடந்தது. இப்படியாக நேரம் கழிந்து மாலை நெருங்கிற்று. ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சிஷ்யர்களின் ஹிருதயங்களிலே ஒருவித அடக்கமும் ஆநந்தமும் அன்று உண்டாயின. அன்று ஏதோ விசேஷ சம்பவம் நடக்கும்போல அவர்கள் உணர்ந்தார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணர் * சமாதி நிஷ்டராகிச் சிறிதுநேரம் இருந்துவிட்டுப், பின் கண்விழித்துத் தீர்க்க திருஷ்டியுடையவராய்ச் சிறிதுநேரம் இருந்துவிட்டுப், பின்னர் எழுந்திருந்து நரேந்திரர் உட்கார்ந்திருந்த இடம் நோக்கி வந்தார்; எல்லோரும், "குருமூர்த்தி என்ன செய்யப்போகிறாரோ?" என்று ஆச்சர்யப்பட்டார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது வலது திருக்கரத்தை நரேந்திரர் மார்பின்மீது வைத்து, தமது பாதத்தை நரேந்திரர் தோளின்மீது வைத்து அழுத்தினார்.

ஆ! ஆ!! நரேந்திரருக்கு அவ்வறை, தாழ்வாரங்கள், க்ஷேத்திரம், தோட்டம், அங்குக் கூடியிருந்தவர்கள், ஸ்ரீ ராமகிருஷ்ணர் எல்லாம் மங்கி மறையத் தொடங்கிவிட்டன. நரேந்திரர் கஞ்சா தின்றவன்போல உலகை மறக்க ஆரம்பித்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஸ்பர்சித்ததுதான், இதுவரை கர்வமடைந்திருந்த நரேந்திரருடைய அறிவு கரையத் தொடங்கிவிட்டது. நரேந்திரர் திடுக்கிட்டு நடுநடுங்கி, "ஐயையோ! என்ன இது; ஐயா! என்னை என்ன செய்கிறீர்கள்? எனக்கு வீட்டிலே பெற்றோர் இருக்கின்றனரே" என்றார். ஆ! ஆ!! சற்று முன்னே அவர் கர்வப்

பட்டுக்கொண்டிருந்த அறிவுக்கு அப்பொழுது ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய ஸ்பர்ச பலனை எதிர்த்து நிற்பதற்குத் தைரியமில்லாமற் போய்விட்டது. ஏ, உலக அறிவை உயர்ந்ததெனக்கொண்டு உழலும் அறிவிலிகாள்! உங்களுடைய அறிவு சாக்ஷாத் சைதந்யப்பிரகாசத்தின் முன்னே எம்மாத்திரம்? உலக *இன்பம் சிற்றின்பம் என்பதுபோல, உலக அறிவும் சிற்றறிவுதானே!

பின்னர் நரேந்திரருக்குப் பகிர்முகமாக ஒன்றும் விளக்கமேயில்லை. அவர் இதுவரை கண்டது, கேட்டது, காணாதது, கேட்காதது எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக அவர் முன்னே தோன்றிக் கரையத் தொடங்கிவிட்டன. அவருடைய பாட்டனார் துர்க்காசரணதத்தர் தோன்றி, "நான் தான்" என்று சொல்லி மறைந்துவிட்டார். அவருடைய தகப்பனார் விஸ்வநாததத்தர் தோன்றி "நான்தான்" என்று சொல்லி மறைந்துவிட்டார். அவருடைய தாயார் அப்படியே தோன்றி மறைந்துவிட்டார், அவருடைய சகோதரர்கள்—சகோதரிகள், அவருடைய நண்பர்கள், பழக்கமுள்ளவர்கள் எல்லோரும் தோன்றி மறைந்துவிட்டார்கள். அவருடைய வீடுகூட அவர் முன் தோன்றி "நான்தான்" என்று கூறி மறைந்து விட்டதுபோலத் தோன்றிற்று. உலகமே ஒன்று சேர்ந்து அவர் முன்னே தோன்றி, "நான்தான்" என்று கூறி மறைந்தது. இப்பொழுது எல்லாம் எங்கோ மறைந்துவிட்டன; ஆனால், நரேந்திரருக்கு "நான் தான்" என்று அவை யொவ்வொன்



றும் கூறிய மொழி செவிகளில் தொனித்துக்கொண்டேயிருந்தது, சிறிது நேரத்துக்கெல்லாம் அந்தத் தொனியும் போய்விட்டது; எல்லாம் போய்விட்டது; பிரக்ஞையேயில்லை. நரேந்திரர் சிறிதுநேரம் இந்த நிலைமையிலிருந்தார்; பின்னர் ஸ்ரீ ராமகிருஷ்ணர் மறுபடியும் நரேந்திரருடைய மார்பின்மீது கை வைக்கவே, நரேந்திரருக்கு மெல்ல மெல்லப் பிரக்ஞை வந்தது. நரேந்திரர் கண்களை விழித்துச் சுற்றிலும் பார்த்தபொழுது அவருடைய சரீரமும் மனமும் ஒரு புதிய உயிர் பெற்றனபோல அவருக்குத் தோன்றிற்று.

ஆனால், அவர் பிரக்ஞையற்றிருந்தபொழுது, என்ன நடந்ததென்பது அவருக்கு அப்பொழுது ஒன்றும் தோன்றவில்லை. நாம் முன் கூறியதெல்லாம் எப்படித் தெரிந்தது என்றால், நரேந்திரர் யோகானுஷ்டானம் ஆரம்பித்து, சமாதியநுபூதி ஸ்திரப்பட்டவராகிவிட்டகாலத்தில் இவ்வநுபவம் அவருடைய ஞாபகத்துக்கு வந்தது. நரேந்திரர் முதலில் அடைந்த அநுபவத்தை அவர் அவ்வளவு சீக்கிரத்திலே தெரிந்துகொள்ளக்கூடாதென்பது ஸ்ரீராமகிருஷ்ணருடைய சித்தமோ? என்னவோ? நரேந்திரர் எடுத்ததற்கெல்லாம் சந்தேகப்பட்டுக்கொண்டேயிருந்ததினாலே, ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது யோகபலசக்தியையும் ஞானபலசக்தியையும் அவருக்குக் காண்பிக்க விரும்பினார்போலும்.

நரேந்திரருக்கு ஸ்ரீ ர்மகிருஷ்ணர் மகிமையுள்ள புருஷர் என்பதில் நம்பிக்கை உண்டானதோடு, அவ

ரிடத்திலே இவருக்குப் பயமும் மரியாதையும் ஏற்பட்டன; பக்தியும் விஸ்வாசமுங்கூட அதிகரித்தன. புத்திக்கு மேலே ஒரு சக்தி யுண்டென்று இப்பொழுதுதான் நரேந்திரருக்குத் தெரியவந்தது. புத்தியென்பது என்ன? நம்முடைய மூளைக்குள்ளே கட்டுப்பட்டுக் கிடக்கும் ஒரு சக்திதானே! வரையறுக்கப்பட்டு இவ்வளவுதான் என்று எல்லோராலும் மதிக்கப்படுகின்ற புத்தி: அகண்டமாய், அளவு கடந்ததாய், நித்தியமாய், நிர்விகாரமாய் உள்ள பிரஹ்ம சக்தியை மேம்பட முடியுமோ? தற்கால நாகரிகத்தினர்களே, கேளுங்கள்! உங்களுடைய கோழைப் புத்திக்கு மேம்பட்ட சக்தி கிடையாதென்ற நம்பிக்கை வேண்டாம். இவ்வீரேழு பதினான்கு லோகங்களிலும் வியாபித்து, ஈ யெறும்பு முதலிய எண்பத்துநான்குலக்ஷம் ஜீவராசிகட்கும் புத்தியை யளித்து, எல்லோருடையவும் இன்பத்துக் காரணமாயிருக்கும் ஈஸ்வரசக்தியைவிட உங்களுடைய அணுமாத்திரமான புத்தி பெரிதாய்விடுமா? உங்களுக்கு வெட்கமில்லையா? சிச்சி! வாயை மூடுங்கள். என்ன அநியாயம் இது? உங்களுடைய புத்திக்கும் புத்தியளிக்கும் அந்த சக்தி யில்லாவிட்டால், உங்களுடைய புத்தி பிரகாசிக்குமா?

புத்தியினாலே அறிவை அபிவிருத்திசெய்து கொள்ளுங்கள்; இந்த அகிலலோகங்களையும் அடக்கி வைத்துக் கொள்ளுங்கள்; அண்டபிண்ட சராசரங்களையெல்லாம் உங்களுடைய இஷ்டப்படி யாட்டுங்கள்; ஆயினும் நீங்கள் ஆநந்தம் அடைய முடியுமா! ஆநந்தமென்பது அறிவுக்கு அடங்குவதா? அறிவு என்பது ஆநந்த முண்டுபண்ணுவதா? எல்லாவற்றையும் யோசனைசெய்யுங்கள். உங்களுக்கு ஆநந்தம் வேண்டுமா? அல்லது அறிவு போதுமா? உண்மையை உரையுங்கள். ஆநந்தம் வேண்டுமென்றால் நீங்கள் இவ்வறிவை—இவ்வுலக அறிவை—ஐம்புலன்களாலாகும் அறிவை—அப்புறப்படுத்தி விடவேண்டும். இந்த அறிவு—ஜடவஸ்துக்களைப்பற்றிய இந்த அறிவு—ஆநந்த முண்டுபண்ணவே செய்யாது. ஆநந்தம் அளிப்பதுபோலக் காட்டி, இன்னும் அதிக துக்கத்திலேயே அழுத்துவதாம்.



---

## 18-வது அத்தியாயம்

## சிஷ்யவாற்சல்யம்

ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு நரேந்திரரிடத்திலே ஒரு பிரத்தியேக வாற்சல்யமுண்டு என்று முன்னமேயே கூறியிருக்கிறோம். காமப்பித்துப் பிடித்த ஒரு காதலன் தன்னுடைய கள்ளக் காதலியை இரவும் பகலும் நினைத்து ஏங்கி யேங்கி யழுவதுபோல, ஸ்ரீ ராமகிருஷ்ணர் இரவும் பகலும் நரேந்திரரையே நினைத்துக்கொண்டிருந்தார். நரேந்திரர் வராவிட்டால், ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு ஊண் இறங்காது; உறக்கம் வராது. நரேந்திரர் சில நாட்கள் சேர்ந்தாப்போல வராவிட்டால், ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு ஆறாத்துக்கம் பொங்கி

விடும். அவர் தனியே உட்கார்ந்துகொண்டு அழ ஆரம்பித்துவிடுவார். நரேந்திரர் தம்மிடம் வருமாறு ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஜகன்மாதாவை நோக்கி இடைவிடாப் பிரார்த்தனை செய்வார். அவர் இம்மாதிரி அழுது பிரார்த்தித்தால், அவருடைய அன்புக்குப் பாத்திரமான நரேந்திரர் ஏதோ ஒரு சக்தியினாலே இழுக்கப்பட்டவர்போல வந்துசேர்வார். நரேந்திரர் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் வருவதற்கு முன்னமேயே, அவருடைய சிஷ்யர்கள் இவருடைய இச் செய்கையைப் பார்த்துப் பிரமிப்பார்கள். இதுவரையில் ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு இம்மாதிரி வழக்கமில்லையே! இதன் அந்தரார்த்தம் அவர்களுக்கு விளங்கவில்லை. சிலர் ஸ்ரீ ராமகிருஷ்ணர்மீது குற்றம் கூறினார்கள்; சிலர், "ஸ்ரீராமகிருஷ்ணருக்குப் பற்றுதல் உண்டாய்விட்டது" என்றார்கள்; சிலர், "ஸ்ரீ ராமகிருஷ்ணரை உலகுக்கிழுக்கும் ஒரு பாசமாகப் பையன் நரேந்திரன் வந்து தோன்றியிருக்கிறான்" என்றார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கும் இவ்வபிப்பிராயங்களெல்லாம் எட்டின. ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒன்றுமே சொல்லவில்லை. அவருக்கு ஒரே ஆசைதான்; அதாவது, நரேந்திரர் தம்மிடம் வரவேண்டும். என்பதேயாம். இது வெகு ஆச்சர்யமாயிருந்தது. நரேந்திரருக்கே இதன் பொருள் விளங்கவில்லை. நரேந்திரர் 20 வயது வாலிபர்தானே. அவருக்கு என்ன தெரியும்? அவர் ஸ்ரீ ராமகிருஷ்ணரைக் கண்டு பயந்தார். பின்னர், சிலசமயங்களிலே, அவர், "அந்தக் கிழவர், பாபம், நல்லெண்ண முள்ளவர்தான்" என்று தாமே சொல்லிக்கொள்வார். வேறு சில சமயங்களிலே அவர் ஸ்ரீ ராம



கிருஷ்ணருடைய அன்பினாலே ஜயிக்கப்பட்டவராகி, அவரிடத்திலே அடிமைபோல பக்தியும் பணிவும் பூண்டிருப்பார். "என்னிடத்திலே இந்த ஸ்ரீ ராமகிருஷ்ணர் அன்பு செலுத்துவதுபோல வேறெவர் செலுத்துகிறார்கள்? ஆ! ஆ! இச் சமயத்திலேதான் நரேந்திரருக்குக் குடும்பக் கஷ்டங்கள் அதிகரித்தன. நரேந்திரர் தமது மனம் கவலையடைந்து துன்புற ஆரம்பித்துவிட்டால், மனச்சாந்தி யடைவதற்கு அவர் தக்ஷிணேஸ்வரத் தோட்டத்துக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சந்நிதானத்தை நாடி ஓடுவார்.

நரேந்திரர் ஒருநாள் தக்ஷிணேஸ்வரம் வந்துசேர்ந்தார். மற்ற சிஷ்யர்களும் இருந்தார்கள். நரேந்திரர் அன்று சந்தோஷமாகவும் கவலையற்றவராகவும் இருந்தார். நரேந்திரர் ஸ்ரீராமகிருஷ்ணரிடத்தில் வெகுதாராளமாகப் பழகிவந்தார். மற்ற சிஷ்யர்களெல்லாம் பயபக்தி மேலீட்டால் வெகு விநயமாக இருப்பார்கள்; ஆனால், நரேந்திரரோ அன்பின் மேலீட்டால், அதிக ஸ்வதந்திரங்களை ஸ்ரீராமகிருஷ்ணரிடம் அநுபவித்துவந்தார். இந்த அன்பின் மேலீட்டாலேயே அவர் ஸ்ரீ ராமகிருஷ்ணரை நேருக்கு நேரே வாதிக்கவும் குற்றம் கூறவும் செய்துவந்தார். நரேந்திரர் சத்திய ஆராய்ச்சியொன்றையே கருத்தாகக்கொண்டு தம்முடனே வாதுபுரிகிறாரென்று ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு நன்றாகத் தெரியுமாதலாலே, ஸ்ரீராமகிருஷ்ணர் நரேந்திரருடைய துணிச்சலான கேள்விகளைப்பற்றிச் சந்தோஷப்படுவார். இல்லாவிட்டால், நரேந்திரர் விவேகாநந்தராயிருக்க முடியுமா?

இப்பொழுது நரேந்திரர் அநேக நாட்களாக ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் வராமலிருந்துவிட்டு இன்று வந்தார். அதுவும், ஸ்ரீ ராமகிருஷ்ணர் நரேந்திரரை யிட்டுக்கொண்டு வரும்படி ஆள்மேல் ஆளாக அநேகம் ஆட்கள் அனுப்பின பிறகு—ஒருதரமாவது வந்துவிட்டுப் போகும்படி அநேகந்தரம் சொல்லி யனுப்பிய பிறகு—நரேந்திரர் இப்பொழுது வந்து சேர்ந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவரைப் பார்த்தவுடனே அடைந்த சந்தோஷத்துக்கு அளவேயில்லை. ஸ்ரீ ராமகிருஷ்ணர் நரேந்திரரிடத்திலே க்ஷேமலாபங்களெல்லாம் விசாரித்தபின், "என்ன? அப்பா! நிரம்ப நாட்களாக நீ வராம லிருந்துவிட்டாயே. நியாயமா?" என்றார்

நரேந்திரர், "என்னை ஏன் அவ்வளவு அதிகமாக எப்பொழுதும் நினைக்கிறீர்கள்?" என்று சொல்லிவிட்டு, சிறிது பரிகாச மொழியாக, "ஜடபரதன் மான்குட்டியையே நினைத்துத் தன்னுடைய தபாநுஷ்டானங்களை யெல்லாம் கைவிட்டு மறுஜன்மத்திலே மானாக ஜனித்ததுபோல, நீங்களும் என்னைப்பற்றியே இடைவிடாமல் நினைத்துக்கொண்டிருந்தால், என்னைப்போலவே ஆய்விடுவீர்கள்" என்றார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் அதற்கு மறுமொழி ஒன்றுமே பேசவில்லை; ஆனால், ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு நரேந்திரருடைய இவ்வார்த்தைகள் ஹிருதயத்தைப் பிளந்தனபோன்று இருந்தன. என்ன? நரேந்திரரிடத்துத் தமக்குள்ள ஆசையானது தமது மோக்ஷபதவிக்குத் தடையாய், ஒரு பந்தமாய் விடுமா? அவர் ஒன்றுமே பேசவில்லை. நரேந்திரர் இப்படிக்



கூறியதைப் பக்கத்திலிருந்து கேட்ட மற்ற பக்தர்களும் சிஷ்யர்களும் பிரமித்துவிட்டார்கள். நரேந்திரரும் ஆச்சர்ய மடைந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு எவ்விதத்திலும் மனத்துன்ப முண்டுபண்ண வேண்டுமென்ற எண்ணம் நரேந்திரருக்கு எள்ளளவும் கிடையாது.

பகலெல்லாம் கழிந்தது; மாலை நெருங்கிற்று; கோவில் மணிகள் கணகணவென்று அடிக்க ஆரம்பித்தன. ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது அறையினின்றும் நீங்கிக் கோவிலினுள்ளே சென்று, சந்நிதியிலே நின்று, தூபதீபாராதனை முடிகிற சமயத்திலே சமாதியஸ்தராய்விட்டார். பூஜை முடிந்துவிட்டது; சாம்பிராணி வாசனை கோவிலெல்லாம் கமகமவென்று வீசுகிறது; கோவில் மணிகளின் சப்தமடங்கிற்று. ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஜகன்மாதாவின் திவ்ய திருநாமத்தைச் சொல்லிக்கொண்டே, பிரபஞ்சப் பிரக்ஞை யடைந்தார்; உடனே அங்கிருந்து நீங்கித் தமது அறைக்குச் சென்றார். நரேந்திரர் இன்னும் அவ்வறையிலேயேதான் உட்கார்ந்துகொண்டிருந்தார். இன்னும் சிலர் அங்கே யிருந்தார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணர் சென்று தமது ஆசனத்தி லமர்ந்தார்; மற்றவர்கள் அவரை நெருங்கிச் சூழ்ந்து உட்கார்ந்துகொண்டார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணர் நரேந்திரரை நோக்கி, 'நரேந்திரா! மாதா என்னிடம் எல்லாம் சொல்லிவிட்டாள்; 'நரேந்திரன் பையன்தானே, என்ன? இப்பொழுது வயது வந்துவிட்டதா? ஆகையால், அவனுடைய வார்த்தைகளை நீ ஏன் கவனிக்கிறாய்? அவனிடத்திலே நீ நாராயணனைப் பார்க்கிறதினாலே, உனக்கு

அவன்மீது அவ்வளவு பிரியம் ஏற்பட்டிருக்கிறது' என்று மாதா சொல்கிறாள். ஆகையால், நீ சொன்ன வார்த்தைகளை நான் லக்ஷியம் செய்யவில்லை; அவை எனக்கு ஒருபொருட்டு மன்று; நான் உன்னிடத்திலே என்று நாராயணனைப் பார்க்கிறதில்லையோ, அன்றுமுதல் நான் உன்முகத்திலே விழிக்க மாட்டேன்'' என்று கூறினார். அவ்வறையில் உடனே ஒரு மௌனம் விளங்கிற்று. எவரும் மூச்சுவிடக்கூடத் துணியவில்லை. ஸ்ரீராமகிருஷ்ணர் நரேந்திரரிடத்து இவ்வளவு பிரியம் வைத்திருந்ததற்குக் காரணம் இப்பொழுது விளங்கிவிட்டது. எல்லோரும் இப்பொழுது தெரிந்துகொண்டார்கள். நரேந்திரர் மௌனமாய் உட்கார்ந்திருந்தார்; அவருக்குச் சிறிது வெட்கம் தோன்றிற்று; நரேந்திரருடைய கண்கள் ஸ்ரீராமகிருஷ்ணருடைய பாதங்களினிடத்தே செலுத்தப்பட்டிருந்தன; அவருடைய செவிகளில் ஸ்ரீராமகிருஷ்ணர் இப்பொழுது கூறிய வார்த்தைகள் ஒலித்துக்கொண்டேயிருந்தன. நரேந்திரரிடத்தில் தாம் ஈஸ்வரனைப் பார்ப்பதாகவும், ஆதலால், நரேந்திரரிடத்துச் செலுத்தும் பிரியம் ஈஸ்வரபக்தியேயென்றும் ஸ்ரீராமகிருஷ்ணர் கூறிவிட்டார். 'நரேந்திரரிடத்தே ஏதோ விசேஷ ஈஸ்வரசக்தி யடங்கியுள்ளது' என்றும், 'அதனாலேயே ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவரிடத்து அதிக பிரியம் பாராட்டுகிறார்' என்றும் மற்ற சிஷ்யர்கள் கண்டுகொண்டார்கள். ஸ்ரீராமகிருஷ்ணர் மற்ற சில சிஷ்யர்களிடத்தும் ஈஸ்வரத்தன்மையை அதிகமாகக் கண்டார்; ஆனால், நரேந்திரரிடத்தில் மிக மிக அதிகமாகக்



கண்டார். ஆதலால்தான் ஸ்ரீராமகிருஷ்ணர் நரேந்திரரை அதிகமாக நாடினார்.

இன்னொரு சமயத்திலே, ஸ்ரீராமகிருஷ்ணர் தமக்கும் தமது சிஷ்யர்களுக்குமுள்ள சம்பந்தத்தைப்பற்றிப் பேசுகையில், "——ர் நான் இந்தப் பையன்களைப் பார்க்கக் கவலைமிகுந்தவனாவதுபற்றி என்னைக் கண்டிக்கிறார். 'ஈஸ்வரனை எப்பொழுது நினைப்பீர்கள்?' என்று கேட்கிறார். நான் மனவருத்தமடைந்து மாதாவினிடம் சென்று, 'நரேந்திரரையும் மற்றப் பையன்களையும்பற்றி நான் ஏன் இவ்வளவு அதிகமாகக் கவலைப்படவேண்டும்? என்று——ர் கேட்கிறாரே' என்று சொன்னேன். மாதா உடனே தானே மனுஷ்ய வடிவங்கள் எடுப்பதாக எனக்கு நிரூபித்துக் காண்பித்தார். அவள் பரிசுத்த சரீரங்களிலே வியக்தமாகிறாள். நான் அதைப் பார்த்துவிட்டு, சமாதிகலைந்து வெளியே வந்தபொழுது,—ர் பேரிலே எனக்குக் கோபமுண்டாயிற்று. 'ஆ! மூடன்! எனது மனத்தை எப்படிக் கலைத்துவிட்டான்? ஆனாலும், அவனை ஏன் குறை கூறவேண்டும்? அவனுக்கு உண்மை எப்படித் தெரியும்?'' என்று கூறினார்.

இன்னும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறியதாவது:—"இப்பையன்கள் நாராயணனுடைய அவதாரமே யென்பதை நான் அறிவேன். நான் முதன்முதலில் நரேந்திரனைப் பார்த்த பொழுதே, அவனுக்குச் சரீர எண்ணமில்லையென்று கண்டுகொண்டேன்; நான் அவனுடைய ஹிருதயத்தைத் தொட்டவுடனே அவனுக்குப் பகிர்முகப் பிரக்ஞை

யில்லாது போய்விட்டது............மெல்ல மெல்ல அவனை அடிக்கடி பார்க்க வேண்டுமென்ற ஆசை எனக்கு உண்டாயிற்று; அவனைப் பாராவிட்டால் எனது ஹிருதயம் நொந்து துடிக்க ஆரம்பித்தது; நான் போலநாதரிடத்திலே, "நான் இவ்விதமாக—அதுவும் ஜாதியில் காயஸ்தனாகிய ஒரு பையனைப்பற்றி—இவ்வளவு தூரம் உணர்வதற்குக் காரணமென்ன?" என்று கேட்டேன். அப்பொழுது போலநாதர், "ஸ்வாமி! இதெல்லாம் சரிதான்; 'சமாதியஸ்தனுடைய மனமானது சாதாரண நிலைமைக்கு வருகிறபொழுது, அது சத்துவகுண புருஷர்களுடைய சங்கத்திலே சந்தோஷமடைகிறது; அப்புருஷன் மிக மிக சிரேஷ்டமான ஆத்மஞானமுள்ள புருஷர்களைக் கண்டு சந்தோஷிக்கிறான்' என்று மகாபாரதத்திலே விரித்துரைக்கப்பட்டிருக்கிறது" என்றார். இதைக் கேட்டு நான் மனச் சமாதானம் அடைந்தேன். ஆனால், சில சமயங்களில் நான் நரேந்திரனைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை யதிகரித்து, மன வேதனையுண்டாகி அதனால் உட்கார்ந்துகொண்டு அழுவது வழக்கம்."'

ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒரு சமயத்திலே தம்மைச் சூழ்ந்திருந்தவர்களை நோக்கி, "நல்லது, கேசவச்சந்திர சேனரிடத்திலே பெருமைக்குரிய ஒரு அடையாளமுண்டானால், நரேந்திரனிடத்திலே அப்படிப் பத்தொன்பது அடையாளங்கள் இருக்கின்றன. நான் ஒரு தோற்றத்திலே கேசவரிடத்தில் ஞானமானது ஒரு மெழுகுவர்த்தி வடிவத்தில் கொளுத்தப்பட்டிருந்ததைக் கண்டேன்; நரேந்திரனிடத்



தில் ஞானமானது சூர்யனாகவே ஜ்வலிப்பதைக் கண்டேன்" என்றார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் நரேந்திரரைத் தமக்கு எவ்விதப் பணிவிடையும் செய்யச் சம்மதிப்பதில்லை. ஹிருதயம் சுத்தியடையும்பொருட்டுத்தானே குரு சிசுருஷை விதிக்கப்பட்டிருக்கிறது; முன்னமேயே சுத்தியடைந்துள்ள ஹிருதயமுடையவர்களுக்குக் குரு சிசுருஷை ஏன்? ஆனால், நரேந்திரர் சும்மாயிராமல் ஏதேனும் பணிவிடை செய்ய முன்வருவார்; ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒரே பிடிவாதமாக நரேந்திரரை அப்படிச் செய்யவொட்டாது தடுத்து, "உன்னுடைய மார்க்கம் வேறு" என்று கூறுவார். நரேந்திரரைப் பார்த்தமாத்திரத்திலேயே ஸ்ரீ ராமகிருஷ்ணர் அநேகந் தடவை ஆநந்த சமாதியி லாழ்ந்திருக்கிறார். ஒரு சமயத்தில் நரேந்திரர் சேர்ந்தாப்போல சில நாட்கள் வராமலிருந்துவிட்டு ஒரு நாள் வந்தார்; ஸ்ரீ ராமகிருஷ்ணர் எதிர்சென்று அவரை அஸ்த மஸ்தக சையோகம் செய்து, பிரணவத்தை யுச்சரித்துக்கொண்டே ஆநந்த சமாதியிலாழ்ந்துவிட்டார்.

நரேந்திரர் ஸ்ரீராமகிருஷ்ணர் முன்னிலையிலேயே சில சமயங்களில் மற்ற சிஷ்யர்களுடன் அல்லது வேறு வந்திருப்பவர்களுடன் தர்க்கம் ஆரம்பித்துவிடுவார். நரேந்திரருடைய கல்வியையும் புத்திசாதுர்யத்தையும் வாசாலகத்தையும் கண்டு வியந்து பிரமித்து ஸ்ரீ ராமகிருஷ்ணர் அப்படியே சமாதியில் லயித்துவிடுவார். நரேந்திரர் கல்வி

யையா காட்டிவந்தார்? தாம் கல்விக் களஞ்சியமாம் சரஸ்வதியேயென்று நிரூபித்து வந்தார். தைரியமாக, பக்ஷபாதமற்றுத் துணிந்து ஆராய்ச்சி செய்தல், இதுவே நரேந்திரருடைய குணமாயிருந்தன. இது தான் சிவசக்தி'' என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறுவது வழக்கம். ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது ஞானதிருஷ்டியினாலே நரேந்திரரிடத்தில் மாயாதீதமாயுள்ள இந்தத் திவ்ய சக்தி யுண்டென்று கண்டிருந்தார். ஒரு சமயத்திலே ஸ்ரீ ராமகிருஷ்ணர் நரேந்திரரை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு அவரை, ''சிவமே! சிவமே!!'' என்று கூவி யழைத்தார். இன்னொரு சமயத்திலே ஸ்ரீராமகிருஷ்ணர் அநேக சிஷ்யர்கள் சூழப் பஞ்சவடி நிழலிலே யுட்கார்ந்திருந்தபொழுது, நரேந்திரர் அவ்விடம் வந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவரைப் பார்த்தவுடனே, ''இதோ பாருங்கள்! இதோ பாருங்கள்! நரேந்திரனைப் பாருங்கள்! ஆ! ஆ! அத்தகைய ஞானசக்தி அவனிடத்திலே பிரகாசிக்கிறது! ஆ! ஆ! அது கரையற்ற பிரபா சமுத்திரம்போ லிருக்கிறது! மாதாவாகிய மகாமாயை கூட அவனுக்குப் பத்து அடி தூரத்திலேயே நிற்கவேண்டும்; அவனுக்கு அவளே பாலித்த கிருபையினால் அவன் அடைந்திருக்கும் மகிமைக்கு அவள் அடங்கியிருக்கிறாள்'' என்றார்.

நரேந்திரரிடத்திலே இத்தகைய ஞானசக்தியையும் பிரபையையும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் அடிக்கடி கண்டு வந்தாராயினும் ''எங்கே நரேந்திரர் ஞானத்திலே லயமாகி உல



குபகாரமாக ஒன்றும் செய்யாதவராய்ப் போய்விடுவாரோ?'' என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் பயந்து, அடிக்கடி ஜகன்மாதாவை நோக்கி, ''நரேந்திரருடைய பிரபையைச் சிறிது குறைக்கவேண்டும்'' என்று பிரார்த்திப்பார். ''ஏ, ஜகன்மாதா! எல்லாம் வல்ல இறைவி! எந்தன் தாயே! பரதேவதை! நரேந்திரன், கண்மூடி ஞானியாகிக் கலக்கமற்றுச் சமாதிநிலைமையில் இருப்பதற்கா இவ்வுலகில் பிறந்துள்ளான்? உலகை ஒருபடி உயர்த்தவல்லவோ இவன் அவதரித்திருக்கின்றான்? உனது மாயையில் ஒரு சிறிதேனும் நரேந்திரனுக்குள்ளே புகுத்தி வைப்பாய்'' என்பதுவே ஸ்ரீ ராமகிருஷ்ணர் பன்னாட்கள் செய்துவந்த பிரார்த்தனை.

வெகு விநோதம்; ஸ்ரீராமகிருஷ்ணர் இங்ஙனம் பிரார்த்தனை செய்து வந்ததின் கருத்து ஸ்ரீ ராமகிருஷ்ணரே யல்லாமல் வேறு எவர் அறிவார்? மற்ற சிஷ்யர்கள் ஆச்சரியமடைந்தார்கள். ஸ்ரீராமகிருஷ்ணர், என்ன, மெல்லவா மனதிலேயேயா பிரார்த்தித்துக்கொள்கின்றார்? ஊரெங்கும் கேட்க, உலகெலாம் பார்க்க, உயரமான இடங்களிலே நின்றுகொண்டு, உரக்க உரக்கக் கூவிப் பிரார்த்திக்கிறார், ஆகையால், மற்ற சிஷ்யர்கள், ''என்ன? நமது குருமூர்த்திக்கு நரேந்திரனிடத்திலே இவ்வளவு பெரிய பாசம் விழுந்துவிட்டதே'' என்று பிரமித்தார்கள். ஆயினும், நரேந்திரர் ஸ்ரீ ராமகிருஷ்ணரை மிகமிக நேசித்து வந்ததினாலும், மிக மிக உயர்வாக மதித்து வந்ததினாலும் மற்ற சிஷ்யர்களும் மாற்றெண்ணமே யில்லாது நரேந்திரனை

மிகமிக உயர்வாக நேசித்தும், மிகமிக உயர்வாக மதித்தும் வந்தார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணர் நரேந்திரர் விஷயத்திலே மாத்திரம் சிறிது அளவுக்கு மிஞ்சிய பாசமுள்ளவராகக் காணப்பட்டபொழுதிலும், அதனால் அவருடைய சிஷ்யர்கள் அவரைக் குறையுற்றவரெனக் குறித்துக் கொள்ளவில்லை. அவருடைய அபாரசக்தியும் வைராக்கியமும் வாய்ந்த "காமினி - காஞ்சன" ஜயம் அவர்களுக்குத் தெரியாதா? அவர்கள்* ஒவ்வொருவரையும் அவர் முதன்முதலாவதாகக் கண்டபொழுது அவரவர்களுடைய மனப்போக்கும் வாசனையும் இத்தகையன வென்று அவர் அவரவர்களிடத்திலே உடனே கூறிவிடவில்லையா? அவர் ஸ்பர்சமாத்திரத்தினாலே அவர் அதி திவ்ய சக்திகளையும் அநுபூதியையும் சிலருக்கு அளிக்கவில்லையா? இவற்றையெல்லாம் அந்த சிஷ்யர்கள் பிரத்தியக்ஷமாகப் பார்த்திருந்தும், அந்த ஸ்ரீ ராமகிருஷ்ணர் நரேந்திரரை உயர்வாக மதித்துப் புகழும்பொழுது இதைமாத்திரம் எப்படிச் சந்தேகிக்கமுடியும்? ஸ்ரீ ராமகிருஷ்ணர் நரேந்திரரைக் குறித்து மற்றவர்களிடத்திலே, "சாக்ஷாத் பரமசிவனுடைய சக்திகளில் பத்தொன்பது நரேந்திரனுக்குண்டு" என்று அடிக்கடி சொல்வார். மற்ற சிஷ்யர்களும் இதை ஆச்சர்யத்துடனே கேட்டு, அப்படியே நம்பினார்கள்.

நமது தேசத்திலே நமது ஜனங்கள் பெரியோரைத் தர்சிக்கச் சென்றால், "வெறுங்கையோடே* போகாதவண்ணம்" ஏதேனும் பழவர்க்கங்கள், மிட்டாய் வர்க்கங்கள்



முதலியவற்றை எடுத்துக்கொண்டு செல்வது வழக்கம். "அரசனிடத்திலும், ஆசார்யரிடத்திலும், பெரியோரிடத்திலும், குழந்தைகளிடத்திலும், கோவிலுக்குச் செல்லும்பொழுதும் வெறுங்கையோடு போகலாகாது" என்பது நமது முன்னோர்களின் விதி. இவ்விதியை யநுசரித்துப் பலரும் ஸ்ரீ ராமகிருஷ்ணரைத் தர்சிக்க வரும்பொழுது, பழங்கள், மிட்டாய் வகையறாக்கள், கற்கண்டு, திராக்ஷப் பழம் முதலியன பெரிய பெரிய தட்டுக்களிலே வைத்துக் கொண்டு வருவார்கள்; பால் செம்பு செம்பாகச், சில சமயங்களில் குடம்குடமாகக்கூட வந்து நிறைந்திருக்கும். இவற்றைக் கொண்டுவருபவருடைய முகத்தைப் பார்த்தமாத்திரத்திலே, ஸ்ரீ ராமகிருஷ்ணர், 'அவற்றை யங்கீகரித்துக் கொள்ளலாம் அல்லது கூடாது' என்று தீர்மானித்துக் கொண்டுவிடுவார். துர்க்குணம் அல்லது துர்நடத்தையுள்ளவர்கள் கொண்டுவந்து வைத்தால் ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவற்றை ஏற்றுக்கொள்ள மறுத்துவிடுவார். தாம் ஏற்றுக்கொள்ளாமற்போவது மாத்திரமன்று; அவற்றை யெடுத்து மற்ற சிஷ்யர்களுக்கும் கொடுக்கமாட்டார்; ஆனால், நரேந்திரர் அவற்றை யெடுத்துக்கொள்ளலாம், உபயோகிக்கலாம்; அவரை எதுவும் பாதிக்கமுடியாது. அவர் பரிசுத்தமேயாம் காடாக்கினி; நெருப்பினிடத்திலே அழுக்கு ஒட்டுமா? அல்லது பூச்சி அண்டுமா? "நரேந்திரன்: அழுக்குக்களை, அசுத்தங்களை, குப்பை செத்தைகளை யெல்லாம் ஏகமாக எரித்துச் சாம்பராக்கும் காட்டுத்தீ. அவன் மாட்டிறைச்சி தின்று மதுபானம் செய்தபொழுதிலும், அவனுள்ளே

யிப்பொழுது அடங்கிக்கிடக்கின்றதும் கூடிய சீக்கிரத்தி
லே கொழுந்துவிட் டெரியப்போவதுமாகிய ஞான சக்தி
க்கு அதனால் எவ்வித பங்கமும் உண்டுபண்ண முடியாது”
என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் அடிக்கடி கூறுவார். துர்க்குண
முள்ளவர்கள் அல்லது துர்நடத்தை யுள்ளவர் ஆஷாடபூதி
வேஷம் தரித்துக், கழுத்திலே ருத்திராட்சமணி பூண்டு;
உச்சந்தலைமுதல் உள்ளங்கால்வரையில் பஸ்மோத் தூளித
ராய், “மகாதேவ! மகாதேவ!!” என்ற வார்த்தை தவிர
வேறொன்றும் உச்சரியாதவராய், பக்த சிரேஷ்டரென நடி
த்துக்கொண்டு ஸ்ரீ ராமகிருஷ்ணரிடத்தில் வந்தால், ஸ்ரீ
ராமகிருஷ்ணர் வந்தவருடைய மனத்தினுள்ளே தமது
மனத்தைச் செலுத்தி அவருடைய உண்மைத் தன்மையை
ஒரு விநாடி நேரத்திலே கண்டுகொள்வார்; அவர் கொண்டு
வந்ததைத் தாமும் எடுத்துக்கொள்ளார்; தமது மற்ற சிஷ்
யர்களையும் அவற்றை யெடுத்துக்கொள்ள விடமாட்டார்.
ஆனால், அவற்றையெல்லாம் நரேந்திரனுக்கென்று தனியே
ஒதுக்கி வைக்கும்படி சொல்வார். சில சமயங்களிலே நரேந்
திரர் வராவிட்டால், சமயம் பார்த்து ஸ்ரீ ராமகிருஷ்ணர்
இவற்றை நரேந்திருடைய வீட்டுக்கே அனுப்பிவிடுவார்.
இவ்விதமாக ஸ்ரீ ராமகிருஷ்ணர் செய்துவந்தது முதலில்
நரேந்திரருக்கு வியப்பை யுண்டாக்கிற்று. நரேந்திரருக்கு
ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சந்நிதானத்திலும். அமிருத வச
னங்களிலுமே ஆநந்தம் ஏற்பட்டுவிட்டபொழுதிலும், ஸ்ரீ
ராமகிருஷ்ணர் சொல்வதையாவது செய்வதையாவது அவர்
குருட்டுத்தனமாக ஒருபொழுதும் அங்கீகரித்துக் கொண்



டதேயில்லை. அவர் ஸ்ரீ ராமகிருஷ்ணருடனே பலமாக,
எதிரியும் எதிரியும் நேருக்குநேர் நின்று வாதிப்பதுபோல,
வாதப்போர் நடாத்தித் தெளிந்துகொள்வார்; இன்னும்,
ஸ்ரீ ராமகிருஷ்ணரை வேறு பல விதங்களாலும் பரிசோ
தனை செய்துபார்ப்பார். “ஸ்ரீ ராமகிருஷ்ணர் இங்ஙனம் சிலர்
கொண்டுவந்ததை ஏற்றுக்கொள்வதும் வேறு சிலர்கொண்டு
வந்ததைத் தொடாததும் ஏதோ ஒரு மூட நம்பிக்கையி
னாலேயேயாம்” என்று நரேந்திரர் முதலில் நினைத்தார்.
இந்த நினைப்பை வைத்துக்கொண்டு நரேந்திரர் ஸ்ரீ ராம
கிருஷ்ணருடனே நேரே போராடினார். ஸ்ரீ ராமகிருஷ்ணர்
தாம் எடுத்துக்கொள்ளாத வஸ்துக்களைக் கொண்டுவருகிற
வர்கள் கட்டாயமாகத் தீய ஒழுக்க முள்ளவர்களே என்று
சாதித்தார். இது நரேந்திரருக்கு அத்தியாச்சர்யமா யிருந்
தது. “உண்மைதானா? பரிசோதித்துப் பார்க்கவேண்டும்”
என்று நரேந்திரர் தீர்மானித்துக்கொண்டார். ஆகையி
னாலே, நரேந்திரர் பரிசோதிக்க ஆரம்பித்தார். ஒரு ஆஷாட
பூதி வந்தார்; ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவர் கொண்டுவந்ததை
எடுத்துக்கொள்ள மறுத்துவிட்டார். நரேந்திரர் இதைக்
கவனித்துக்கொண்டே யிருந்து, அந்த ஆஷாடபூதியி
னுடைய உண்மைத் தன்மையைப்பற்றி விசாரிக்க ஆரம்பித்
தார். விசாரணையிலே அந்த ஆஷாடபூதி ஆஷாடபூதியே
யென்று நரேந்திரருக்குத் தெளிவாகத் தெரியவந்தது.
இம்மாதிரியே இன்னும் சில சந்தர்ப்பங்களிலே கவனித்துப்
பரிசோதித்துப் பார்த்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய அபிப்
பிராயம் மிகமிகச் சரியாயிருந்தது. “ஆ! ஆ! என்ன

ஆச்சர்ய புருஷர்! பிறருடைய குணங்களைப் பார்வைமாத்திரத்திலே கண்டுகொள்கிறார்; ஏ, ஸ்ரீ ராமகிருஷ்ணா! நீயே யோகி, நீயே ஞானி, சாக்ஷாத் ஸ்ரீ மந்நாராயணன் நீயே. உன்னுடைய குணாதிசயங்கள் எவருக்கு விளங்கும்?

ஸ்ரீ ராமகிருஷ்ணர் சிஷ்யர்களிடத்திலே வைத்திருந்த வாற்சல்லியமும் ஒற்றுமையும் அவரிடத்திலே சிஷ்யர்களாயிருந்தவர்களுக்குத்தான் நன்றாகத் தெரியும். ஸ்ரீ ராமகிருஷ்ணரிடத்திலே இனிமையிருந்தது, இரக்கம் இருந்தது, இளக்கம் இருந்தது, ஏகத்துவம் இருந்தது; இவையெல்லாம் இயற்கையாகவேயிருந்தன; இவையெல்லாம் செயற்கையில் ஏற்பட்டனவல்ல. அவருடைய அன்பு லௌகீக அன்பு அன்று; இப்பாழ் உலகினருடைய அன்பு அன்று; ஜடத்தினிடத்தே செலுத்தும் அன்பு அன்று; அவருடைய லக்ஷணமே ஈஸ்வரத்தன்மை வாய்ந்ததாயிருந்தது; ஆகையால், அவருடைய அன்பும் இவ்வுலகத்தினதாயிராமல், ஈஸ்வரத்துவ அன்பாயிருந்தது; அவருடைய போதனையின் சாரமானது அருட்சக்திக்கும் மேற்பட்டதாயிருந்தது; அவருடைய சந்நிதியிலே ஆநந்தம் சதா சர்வகாலமும் பொங்கித் ததும்பிக்கொண்டிருந்தது; அவருடைய சந்நிதானத்திலே ஈஸ்வரசாந்நித்தியம் எப்பொழுதும் உணரப்பட்டது. ஸ்ரீ ராமகிருஷ்ணரும் அவருடைய சிஷ்யர்களும் அந்யோந்யம் அந்தரங்க அன்பு மிகுந்து திரிகரணங்களிலும் ஒன்றாகவே விளங்கினார்கள். அத் தோட்டத்திலேயுள்ள விருக்ஷங்களின் அடியிலே அவர்கள் நெடுநேரம்



உட்கார்ந்து அந்யோந்யம் எவ்வளவு அந்தரங்கமாகச் சம்பாஷித்திருப்பார்கள்! இவ்விருக்ஷங்களினடியிலும், க்ஷேத்திரத்துக்கு அருகாமையிலுமிருந்து ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய அறையிலும் இவர்கள் ஈஸ்வரநாமத்தை மகிமைப்படுத்திக்கொண்டு எவ்வளவு சிரித்திருப்பார்கள்! உள்ளடக்கி எவ்வளவு புந்நகைபுரிந்திருப்பார்கள்! இடியும் நடுங்கும்படி இவர்கள் ஈஸ்வரநாமத்தை எப்படி கோஷித்திருப்பார்கள்! எத்தனை லீலைகள் புரிந்து எப்படியெல்லாம் விளையாடியிருப்பார்கள்! சாதாரண உலக விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டே சிரித்துக்கொண்டிருப்பார்கள்; ஸ்ரீ ராமகிருஷ்ணர் திடீரென்று உயர் ஞானத்தைக் குறிப்பிடும் ஒரு வார்த்தை சொல்லிவிடுவார்; உடனே உலக விஷயப் பேச்சினால் உண்டான சந்தோஷமானது உயர் ஞானத்தில் லயித்து பிரஹ்மாநந்தமாக மாறிவிடும்.

ஸ்ரீ ராமகிருஷ்ணரும் அவருடைய சிஷ்யர்களுமாகக் கங்காநதி தீரத்திலே நிலவு வெளிச்சத்திலே யுட்கார்ந்திருப்பார்கள்; அல்லது அகன்று பரந்து பெரிதாய் விளங்கிய அந்த தக்ஷிணேஸ்வரத்துத் தோட்டத்தின் ஒரு மூலையிலே உட்கார்ந்திருப்பார்கள்; அவ்வழியே, அதாவது இவர்கள் இருக்கும் இடத்துக்குச் சற்றுத் தூரத்திலே போகிறவர்கள், காரணம் ஒன்றும் தங்களுக்கே விளங்காமல் அவ்விடத்துக்கு ஆகருஷிக்கப்படுவார்கள். இவ் வழிப்போக்கர்கள் என்ன அவசர கார்யத்தைக் கருதிப் புறப்பட்டிருந்த பொழுதிலும், இவர்கள் இருக்கும் இடத்துக்குச் சமீப

மாகப் போகும்படி நேரிட்டுவிட்டால், ஸ்ரீ ராமகிருஷ்ணரும் அவருடைய சிஷ்யர்களும் இன்ன இடத்தி லிருக்கிறார்களென்று அவர்களுக்குத் தெரியாதிருந்த பொழுதிலும், அவ்விடம் நோக்கி ஆகருஷிக்கப்படுவார்கள். இவ்வழிப்போக்கர்கள் சில சமயங்களிலே க்ஷேத்திர கட்டத்திலே படகைக் கொண்டுவந்து நிறுத்தி இறங்குவார்கள்; அவர்கள் கரைவழியாகப் போய்க்கொண்டிருந்தால், வழி தவறி அந்தத் தோட்டத்து விருக்ஷங்களினூடே புகுந்து எப்படியாவது இவ்வாநந்த உல்லாச சாதுக்கள் இருந்த இடத்துக்குத்தான் வந்து சேர்வார்கள். உடனே அவர்கள் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய பாதார விந்தங்களில் சாஷ்டாங்கமாகப் பணிந்து வீழ்ந்து எழுந்து கீர்த்தனங்கள் பாடுவார்கள்; சிலர் ஆநந்த வெறிமிகுந்து ஆடுவார்கள். ஏ, தற்கால நாகரிகப் பேயினால் பீடிக்கப்பட்ட தலைகால் தெரியாமல் குதிக்கின்ற தறிதலையர்களே! இந்த ஆட்டத்தினுடையவும் பாட்டினுடையவும் அருமை உங்களுக்குத்தெரியுமா? இவற்றினா லுண்டாகும் ஆநந்தத்தின் ருசி இத்தகையதென்று உங்களுக்குத் தெரியுமா? மண், பெண், பொன் என்ற மாயா பிசாசங்களினால் பீடிக்கப்பட்டு வருந்தும் மானிடர்களே! மயக்கத்தை விட்டொழியுங்கள்! என்றுமுள்ள ஒன்றை, ஈஸ்வரனை நம்புங்கள்!



## 19-வது அத்தியாயம்

## சிஷ்ய வாற்சல்லியம்

(தொடர்ச்சி)

சில சமயங்களிலே ஸ்ரீ ராமகிருஷ்ணரும் அவருடைய சிஷ்யர்களும் சூழ்ந்து உட்கார்ந்துகொண்டு அவரவர்கள் கண்மூடி நிஷ்டையி லிருப்பார்கள்; இவர்களுடைய சக்தியினால் ஆகருஷிக்கப்பட்டு இங்கு வருகிறவர்கள் இவர்களைச் சுற்றிலும் உட்கார்ந்துகொண்டு மௌனமாய் இவர்களையே உற்றுப் பார்த்துக்கொண்டே யிருந்து, இவர்களிடத்திலே மனத்தை லயம்செய்து கரைத்துவிட்டு அவர்களும் நிஷ்டாபரர்களாய்விட்டார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய மௌன நிஷ்டை: எத்தனையோ வேதங்களை எண்ணற்ற நாக்கள் கொண்டு எடுத்தெடுத்துக் கோஷிப்பதுபோலிருந்தது. அவருடைய மௌனமானது இவ்வுலகின் உண்மையைப் பளிச்பளிச்சென்று விளக்கிக்காட்டிற்று; அவருடைய மௌனத்திலிருந்து ஈரேழு பதினான்கு உலகங்களும் எழும்பினபோலத் தோன்றின; அவருடைய மௌனத்திலிருந்தே இவ்வண்டபிண்ட சராசரங்கள் ஆக்கப்பட்டனபோலத் தோன்றின; அவருடைய மௌனத்திலிருந்து மும்மூர்த்திகளும் முளைத்தனர்போலத் தோன்றிற்று; அவருடைய மௌனத்திலிருந்தே மூன்று அவஸ்தைகளும் உண்டாயினபோலத் தோன்றின. மாயையாகிய மகாசக்தி இம்மௌனத்திலே அடங்கி யொடுங்கி நின்றாள். சமஸ்தலோக சராசரங்

கட்கும் உற்பத்தி ஸ்தானம் இந்த மௌனமே; சமஸ்த லோக சராசரங்களும் லயமடைவதும் இந்த மௌனத்திலேயே; ஆகையால், வந்தவர்கள் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய மௌன நிஷ்டையைப் பார்த்துவிட்டுத் தாங்களும் மௌன நிலை யடைவார்கள்.

சில சமயங்களிலே ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஹிருதய ஆழத்திலிருந்து ஹிருதய ஆகாசத்துக்கு ஏகவஸ்துவை யெடுத்துச் சென்று இன்பமாரி பொழிந்துகொண்டேயிருப்பார். அவருடைய அமிருதவசனங்கள் அல்லும் பகலும் அனைவரையும் கண்கட்டி வித்தைபோலக் கலக்கித் தெளிவித்துச் சுகத்தையே கொடுக்கும். அவர் எழுதப் படிக்க நன்றாகத் தெரியாதவராதலினாலே, அவருடைய உபதேசங்களிலே மூளையைக் குழப்பும்படியான நீண்ட பதங்கள் இல்லை; வார்த்தைகளைச் சித்திரவதை செய்தல் கிடையாது; அவருடைய ஹிருதயத்துக்கும் உனது ஹிருதயத்துக்கும் இடையிலே எவ்வித தங்கு தடையுமின்றி நேருக்குநேர் செல்லும் ஆநந்தமே அவருடைய மொழிகள். வருகிறவர்கள் இவ்வார்த்தைகளைக் கேட்க ஆரம்பித்தவுடனேயே, தாங்கள் கருதிப்புறப்பட்ட முக்கியமான, அவசர கார்யங்களை யெல்லாம் மறந்து, ஸ்ரீ ராமகிருஷ்ணரிடத்திலே லயித்து மெய்மறந்து நின்றுவிடுவார்கள். எப்பொழுதும் ஸ்ரீ ராமகிருஷ்ணரைச் சுற்றி இருபது முப்பது சிஷ்யர்கள் இருந்துகொண்டேயிருப்பார்கள்; நரேந்திரரும் அநேகமாக இருப்பார்.



சில சிஷ்யர்கள், சூர்யாஸ்தமனமாயும் வீட்டுக்குப்போக மனம் வராமல் "ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய ஈஸ்வர சங்கத்திலேயே இரவுப்பொழுதும் கழியட்டும்" என்று தங்கிவிடுவார்கள். சிலர், குருமூர்த்தியினுடைய அறைக்குத் தென்கிழக்கு மூலையிலுள்ள தாழ்வாரத்திலே படுத்து நித்திரை செய்வார்கள்; வேறு சிலர், குருமூர்த்தியினுடைய அறையிலேயே நித்திரை செய்வார்கள். மணி இரவு பன்னிரண்டுக்கு எல்லோருக்கும் தீர்க்க நித்திரையாயிருக்கும். ஆனால், ஸ்ரீ ராமகிருஷ்ணர் மாத்திரம் உறங்கினதில்லை; சாதாரண நித்திரையில் உறங்கினதேயில்லை. சரீரத்துக்குச் சமாதியிலே கிடைக்கின்ற சுகமானது சாதாரணமாக நித்திரையினின்றும் உண்டாகின்ற சுகத்தைவிடப் பெரிதேயாம். இரண்டு அல்லது மூன்று மணிக்கு ஊரடங்கியிருக்கும்; உலகம் அடங்கியிருக்கும்; எங்கும் மௌனம் தன்னரசு புரியும்; ஆனால், மௌன அரசாட்சிக்கு முடிவு வந்துவிட்டதோவென்று பலருக்கும் சந்தேகம் உண்டாகும்படியான அறிகுறிகள் தோன்றும். அச்சமயத்திலே ஸ்ரீ ராமகிருஷ்ணர் எழுந்து பகவந்நாம ஸ்தோத்திரம் செய்து, "விழித்துக் கொள்ளுங்கள், எழுந்திருங்கள்" என்று எல்லோரையும் எழுப்புவார். "பிராஹ்மிய முகூர்த்தம் வருகின்றது, நிஷ்டை செய்வதற்கு இதுவே நேரம்; விழித்துக்கொள்ளுங்கள், எழுந்திருங்கள்" என்பார் ஸ்ரீ ராமகிருஷ்ணர் பகவந்நாம சங்கீர்த்தனங்களைப் பாட ஆரம்பித்துவிடுவார்; சிஷ்யர்கள் ஒவ்வொருவராக நித்திரை தெளிந்து எழுவார்கள். எல்லோரும் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய பகவந்நாம சங்கீர்த்-

தனத்திலே சேர்ந்துகொள்வார்கள்; சிறிது நேரம் கழிய வே, எல்லோரும் அப்படியப்படியே நிஷ்டையில் உட்கார்ந்துவிடுவார்கள். இதற்கு முன்னே நித்திரா மௌனம்—மூடத்தனி மௌனம்—தாமச மௌனம்—எங்கும் வியாபித்திருந்தது; இப்பொழுது நிஷ்டா மௌனம்—பிரஹ்ம மௌனம்—சத்துவ மௌனம்—எங்கும் வியாபித்துக்கொண்டது. ஆ! ஆ! சாந்தி! சாந்தி!! உபசாந்தி!!!

ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சங்கமே ஒரு தவமாம், ஒரு சாதனமாம்; அதுவே சரீர எண்ணங்கள், புலனுணர்ச்சிக் கட்டுப்பாடுகள் இவற்றுக்கெல்லாம் அதீதமானதொரு நிலைமையாம். ஆநந்தம், ஆநந்தமே. ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சங்கமானது எப்பாமரனையும் கூட ஈஸ்வரமுகமாகச் செல்லும்படி செய்யவல்ல சக்தி வாய்ந்தது. அவருடைய சந்நிதானத்திலே மனம் ஒருமுகப்பட்டு நிலைப்பது நிச்சயம்; ஹிருதயம் அகன்று விரிவது நிச்சயம். ஆத்மாநுபூதி யடைதற்கு அநுகுணமான சாதனங்கள் லபிப்பது நிச்சயம். அவருடைய சந்நிதானத்திலே நரேந்திரர் கட்டவிழ்ந்த காளைபோல ஆநந்தக் கும்மாளமிடுவார். தன்னை மிகச் செல்லமாக வளர்க்கும் ஒரு பணக்காரப் பிதாவின் முன்னே குழந்தை எவ்வளவு தாராளமாயோடியாடுமோ, அதேமாதிரி நரேந்திரர் ஸ்ரீ ராமகிருஷ்ணர் சந்நிதானத்தில் நடந்துகொண்டார். ஆத்மீக சக்தியானது அவரிடத்திலே வெள்ளமாகப் புரண்டு புறப்படும்போலத் தோன்றிற்று. ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு இது தெரிந்தது. நரேந்



திரர் சில சமயங்களில் தமது பேச்சுக்களினாலும் தமது செய்கைகளினாலும் ஸ்ரீ ராமகிருஷ்ணரைச் சமாதியில் வீழ்த்தியதுண்டு. ஸ்ரீ ராமகிருஷ்ணர் எந்தச் சிஷ்யருக்கும் கட்டுப்பாடான உபதேசங்கள் செய்து பந்தப்படுத்தின தில்லை. அதுவும், நரேந்திரர் விஷயத்திலே, கட்டுப்பாடு என்பது சொப்பனத்திலும் கிடையாது. நரேந்திரருடைய மனமே நரேந்திரருக்குக் குருவாகுமாறு ஸ்ரீ ராமகிருஷ்ணர் விட்டுவிட்டார். ஹிருதயம் பரிசுத்தமடைந்து விரிய விரிய, மனமும் ஒருமுகப்பட்டு உத்தமஞானம் பிரகாசிக்கும். ஸ்ரீ ராமகிருஷ்ணர் இந்த நியதியை நன்றாக அறிந்தவராதலினாலேதான், நரேந்திரர், தமது கூற்றுக்களை—தமது அநுபவங்களைச்—சந்தேகித்துத் தம்முடனே வாதிக்கும்படி இடம் கொடுத்துவந்தார். "நான் சொல்கிறேனென்ற காரணத்தினாலே நீ எதையும் ஏற்றுக்கொள்ளாதே; நீயே எல்லாவற்றையும் சோதனை செய்து பார்த்துக்கொள்; வெறுமே ஏற்றுக்கொண்டு விடுவதினாலாவது அல்லது ஏற்றுக்கொள்ளாமலிருந்துவிடுவதினாலாவது லக்ஷியம் அடையப்படுகிறதில்லை; ஸ்வாநுபவத்தினாலேயே அடையப்படவேண்டும்" என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் நரேந்திரரிடம் அடிக்கடி சொல்வது வழக்கம்.

குருக்கள் என்று பெயர் வைத்துக்கொண்டு குவலயத்துக்கெல்லாம் "குல்லாய் போடப்" பார்க்கும் (ஏமாற்றப் பார்க்கும்) குறுக்கு புத்தியுள்ள மடையர்களே! ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய குணத்தைக் கவனித்தீர்களா? அகம்பாவ

மும் அகங்காரமும் மேலிட்டு, "ஆயிரக் கணக்கானவர்கள் தமக்குச் சிஷ்யர்கள்" என்று சொல்லிக்கொண்டு அவனியிலே புரட்டும் உருட்டும் செய்துவருகின்ற மடாதிபதிகளே! நீங்கள் மடமைக்கு அதிபதிகளேயாவீர். கவனியுங்கள், கவனியுங்கள். இக்காலத்து அவதார புருஷரின் அற்புதமான குணத்தைப் பின்பற்றுங்கள்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் நரேந்திரரைப் பார்த்தது முதலே அவரை ஒரு விசேஷ புருஷராகக் கொண்டாடிவந்தாரென்பது எல்லோருக்கும் தெரியும். நரேந்திரருள்ளே அடங்கியிருந்த பெருமையையெல்லாம் ஸ்ரீ ராமகிருஷ்ணர் அப் பெருமைகள் வெளிப்பட்டுப் பிரகாசிப்பதற்கு முன்னமேயே, தெரிந்துகொண்டுவிட்டார்; ஆகையால், நரேந்திரர் உலகிலே அரிய பெரிய கார்யங்கள் பல செய்யவேண்டியிருக்கிறதென்று தெரிந்துகொண்டுதான் அவரைப் பயிற்றுவிப்பதிலே ஸ்ரீ ராமகிருஷ்ணர் விசேஷ கவனம் செலுத்தலானார்.

நரேந்திரரைப்பற்றி ஸ்ரீ ராமகிருஷ்ணர், "நரேந்திரனுடைய லக்ஷியமானது நிர்க்குணப் பிரஹ்மமாகும். அவன் வீர, புருஷ வர்க்கத்தைச் சேர்ந்தவன். எத்தனையோ பக்தர்கள் வருகிறார்கள்; ஆனால், அவரைப்போலெவருமேயில்லை. சில சமயங்களில் நான் இச் சிஷ்யர்களெல்லோரையும் சிந்தனைசெய்து ஒருவரோடொருவரை என் மனத்திலே ஒப்பிட்டுப் பார்க்கிறேன். ஒருவன் பத்து இதழ்களுள்ள தாமரைபோன்று இருக்கின்றான்; இன்னொருவன் பதினாறு இதழ்கள் உள்ள தாமரைபோன்று இருக்கின்றான்; வேறொருவன் அதிகமாய்ப்போனால் நூறு இதழ்கள் உள்ள தாமரைபோன்று இருக்கின்றான்; ஆனால், தாமரைகளுக்குள்ளே, நரேந்திரன் ஸகஸ்ரதள பத்மமாயிருக்கின்றான்" என்று கூறுவது வழக்கம்.



"மற்றவர்கள் மண் டம்ப்ளர்களாயும் சிறு ஜாடிகளாயும் மற்றும் இருக்கலாம்; என்றாலும், நரேந்திரன் நூறு காலன் தண்ணீர் கொள்ளும்படியான பெரியதொரு தண்ணீர்த் தொட்டியாயிருக்கிறான்; குளங்களுக்குள்ளே நரேந்திரன் ஆழ்ந்து பிரமாண்டமாயுள்ள ஒரு திகி (ஏரி) யாயிருக்கிறான்; மச்சங்களுக்குள்ளே நரேந்திரன் ரத்தாக்ஷி மச்சமாயிருக்கிறான், மற்றவர்கள் சிறு மீன்களாயிருக்கிறார்கள். அவன் ஏராளமாக அநேக, அநேக வஸ்துக்களை ஏற்றுக்கொள்கின்ற ஒரு பெரும் பாத்திரமாகின்றான்."

"நரேந்திரன் எதன்மீதும் சார்ந்திருக்கவில்லை. அவன் பற்றுதலுக்கும் இந்திரிய போகங்கட்கும் உட்பட்டவனல்லன். நரேந்திரன் புருஷன். நரேந்திரன், சபையிலேயிருக்கும்பொழுது, பலமும் தைரியமும் நிறைந்த ஒரு [illegible] என்னிடத்தே யுண்டாகிறது."

நரேந்திரனுடைய பார்வையே ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குப் பிரஹ்மநிஷ்டையை யுண்டாக்கிவிடும். நரேந்திரனைப் பார்த்தமாத்திரத்திலேயே அவர் பிரஹ்மத்திலே லயித்துவிடுவார். ஒரு சமயத்திலே கி[illegible], ஸ்ரீ ராமகிரு

ஷ்ணர், "நரேந்திரன் மிகவுயர்ந்த அந்தஸ்துள்ள வாலிபன்; அவன் அநேக விஷயங்களிலே—சங்கீத வாத்தியங்கள் வாசிப்பதிலும் பாடுவதிலும் வித்தையின் பல கலைகளிலும் நன்றாகத் தேர்ந்தவன்; அவனிடத்தே அடக்கமும் சத்தியமும் இருக்கின்றன; இன்னும் என்ன? 'ஈஸ்வரனே யுண்மையானவர்' என்றும், 'உலக வஸ்துக்கள் அழிவுறும் தன்மையனவே' என்றும், 'ஆதலால், மனிதன் அவற்றினிடத்தில் பற்றுதல் வைக்கலாகாது' என்றும், அவன் இப்பொழுதே அறிய ஆரம்பித்துவிட்டான். அவனிடமுள்ள குணங்களும் லக்ஷணங்களும் பலபல" என்று கூறினார்.

இன்னொரு சமயத்திலே ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது சிஷ்யர்களை நோக்கி, "நீங்கள் எல்லோரும் இப் பையனைப் பார்க்கிறீர்கள்; அவன் மிக அடக்கமும் விநயமும் பொருந்தியவனாயிருக்கிறான்; அவன்போன்ற ஒரு பையன் என்னும் பரிபூர்ணர்களாயுள்ள நித்திய சித்தர்களின் கோஷ்டியைச் சேர்ந்தவனாவன்; அவர்கள் பிறப்பிலேயே பிரஹ்மஞானிகளாவார்கள்; அவர்கள் இவ்வுலக பந்தங்களினாலே ஒருபொழுதும் கட்டுப்படுகிறதில்லை; அவர்களுக்குக் குழந்தைப் பருவத்திலேயே விழிப்பு உண்டாய்விடுகிறது; அவர்கள் உடனே ஈஸ்வரமுகமாக நடந்துவிடுகிறார்கள்; அவர்கள் ஈஸ்வர கோடிகள் என்ற வகுப்பைச் சேர்ந்தவர்கள்; அவர்கள் மானிட வர்க்கத்துக்கு ஆசாரியர்களாக உலகுக்கு வருகிறார்கள்; அவர்களுக்கு இவ்வுலகப் பொருள்களினிடத்தே பிரியம் கிடைத்தது; நரேந்திரன் எல்லாவற்றி



லும் நிபுணனாயிருக்கிறானென்பதை நீங்கள் பார்க்கிறீர்கள்; அன்றொருநாள் அவன் கேதாரத்துடனே வாதித்தான்; ஆனால், கேதாரத்தினுடைய நியாயங்கள் சொல்லப்பட்டவுடனேயே அவனால் (நரேந்திரனால்) துண்டுதுண்டு ஆக்கப்பட்டுவிட்டன" என்று உரைத்தார்.

இப்படி நரேந்திரரை ஸ்ரீ ராமகிருஷ்ணர் மெச்சிவந்தது அவரிடத்தேயிருந்த உண்மையையும் பெருமையையும் ஞான திருஷ்டியின் மூலமாகக் கண்டுகொண்டதினாலேயேயொழிய, அவரை முகஸ்துதி செய்யவேண்டுமென்ற எண்ணத்தினாலன்று. ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒருவரை முகஸ்துதி செய்பவரா? அதினாலென்ன அவருக்கு லாபம்? தேவேந்திர பட்டத்தையும் திரணமாக நினைத்து உட்கார்ந்திருக்கும் புருஷன் எவரை முகஸ்துதி செய்வான்? அதிகாரமும் ஐசுவர்யமும் மிகுந்தவர்களாயினும் சரியே அவர்கள் வேஷதாரிகள் என்று தெரிந்துவிட்டால், ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவர்களை நிஷ்பக்ஷபாதமாகக் கண்டிக்காமல் விடுகிறதில்லை. நரேந்திரருடைய உண்மையும் பெருமையும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறிவந்தவாறேயிருக்கிறதென்று வைத்துக்கொண்டாலும், ஸ்ரீ ராமகிருஷ்ணர் நரேந்திரரைப் புகழ்ந்துவந்ததற்கு இன்னொரு காரணமும் கூறலாம்.

ஒருவன் சிறிது புத்திசாலியாயும், சமர்த்து வாய்ந்தவனாயுமிருந்தால், அவனை, "நீ மிக புத்திசாலி; உன்னைப்போல எவருண்டு?" என்று எப்பொழுதும் சொல்லிக்

கொண்டிருந்தால், அவன் தன்னுடைய புத்திசாலித்தன்மையையும் சமர்த்தையும் ஸ்திரப்படுத்திக்கொள்ளுதற்காகத் தனது புத்தியை விருத்திசெய்துகொள்வான்; அல்லது, அவனுடைய புத்தி அவனறியாமலே பிரகாசிக்க ஆரம்பித்துவிடும். ஒருவன் சிறிது புத்திசாலித்தனத்துடனே ஏதேனும் ஒரு காரியம் செய்ய ஆரம்பித்தால், அவனை, "இவன் என்ன? இவனுடைய புத்தியென்ன? இத்தகைய பெருங் காரியம் செய்தற்கு இவன் அவ்வளவு கெட்டிக்காரனா? இவனுக்கேன் இந்த வேலை? இவன் தன்னுடைய வேலையைப் பார்த்துக்கொண்டு இருக்கக்கூடாதா?" என்று நமது தேசத்தவர் நாலாபக்கங்களிலும் கூறி அவனுக்கு இருக்கும் சிறிது புத்தியையும் குன்றச் செய்துவிடுகின்றனர். இது மகாபாபமென்பதையும், நமது தேசம் கெட்டுப்போனதற்கு இதுவே காரணம் என்பதையும் நமது தேசத்தார் இன்னும் அறிந்துகொள்ளவில்லை.

ஸ்ரீ ராமர் சீதையைத் தேடிப் புறப்பட்டு எங்கும் காணாமல் கடைசியாகக் கந்தமாதன பர்வதத்திலே லக்ஷ்மண சகிதராய் வந்து உட்கார்ந்துகொண்டு யோசனை செய்தார். அப்பொழுது வானராதிபனான சுக்கிரீவனும் அவனுடைய மந்திரிமார்களும் படைத்தலைவர்களும் ஸ்ரீராமரைக் கண்டு அவருடைய நட்புக் கொண்டபின், சங்கதியை யறிந்துகொண்டு, தாங்களும் யோசிக்கத் தொடங்கினார்கள். கடைசியில் சீதை லங்காதீவுக்குக் கொண்டுபோகப்பட்டிருக்கிறதாகத் தெரியவந்தபொழுது, "அங்கு போய்ப் பார்த்து வருவது எவர்?" என்று ஒரு கேள்வியுண்டாயிற்று. ஒரு வானரத் தலைவன், "நான் இலங்கை போய்ச் சேர்ந்துவிடுவேன்; திரும்பி வருதல் முடியாதுபோலத் தோன்றுகிறது" என்றான். இன்னொருவன், "நான் போய்த் திரும்பியும் பாதி தூரம் வருதற்கு எனக்குச் சக்தியுண்டு" என்றான். இம்மாதிரியே ஒவ்வொருவரும் சொல்லிக்கொண்டிருக்க, ஹனுமார் ஒரு மூலையிலே தம்முடைய சக்தியைத் தாம் உணராதவராய் ஒன்றும் பேசாது மௌனமாய் உட்கார்ந்திருந்தார். "இலங்கைக்குச் சென்று சீதையின் இருப்பைத் தெரிந்துகொண்டு திரும்பி வந்து சமாச்சாரம் சொல்லுதற்குச் சமர்த்துள்ளவர்கள் இல்லையே" என்று எல்லோரும் ஏங்கிக்கொண்டிருக்கும் சமயத்தில், அக் கூட்டத்திலே ஒருவராயுட்கார்ந்திருந்த ஜாம்புவான், ஹநுமாரைப் பார்த்து, "ஸ்வாமி! 'தாங்கள் நினைத்தால் முடியாத காரியமொன்றுண்டா? தாங்கள் சாக்ஷாத் பரமசிவனுடைய அம்சமாயிற்றே; ருத்திராவதாரமாயிற்றே; இவ்வீரேழு பதினான்கு உலகங்களையும் தாங்கள் கையிலே ஒரு செண்டுபோலெடுத்து விளையாட முடியுமே; இந்த லங்கைக்குச் சென்று திரும்பிவருதல் தங்களுக்கு அசாத்தியமா?" என்று பலவாறு ஸ்தோத்ரம் செய்ய ஆரம்பித்தார். இவர் இப்படிச் செய்துகொண்டே போகப்போக ஹநுமாரின் உள்ளே அந்தர்க்கதமாயடங்கியிருந்த ஆத்மீகசக்திகள் விகசிக்கத் தொடங்கின. என்றுமில்லாத விஸ்வரூபமொன்றை ஹநுமார் அடைந்தார்; ஆகாசத்துக்கும் பூமிக்குமாக நின்றார். மற்றவர்கள் பார்த்து ஆச்சர்யப்பட்டார்கள்.

திடீரென்று ஹநுமார் கிளம்பினார் ஆகாச மார்க்கமா— அவர் போகின்ற வேகத்தினாலே மலைகளின் சிகரங்கள் சிதறுண்டனவென்று சொல்லப்படுகிறது. ஒரு மூலையிலே ஒன்றும் பேசாது, தன் பலம் தான் அறியாது உட்கார்ந்திருந்த ஹநுமாருக்கு இந்தப் பலமும் பராக்கிரமும் எப்படி யுண்டாயிற்று? ஜாம்புவான் அவரை ஸ்தோத்ரம் பண்ணி அவருள்ளே அடங்கியிருந்த பலத்தையும் பராக்கிரமத்தையும் வெளியே பிரகாசிக்கும்படி செய்தார். அது போன்றே, மனிதன் ஒவ்வொருவனுள்ளும் அகண்ட சக்தி, ஆத்மபலம் அடங்கிக் கிடக்கின்றன. மனிதனுக்கு அவனுடைய உண்மைத் தன்மையை விளக்கி, அவனுள்ளே யிருக்கும் அந்த ஆத்மபலத்தை வெளியே கொண்டுவரவேண்டும், அப்படிச் செய்வதற்குப் பதிலாக, ஏற்கனவே அந்தகாரத்தில் அகப்பட்டுத் திண்டாடும் மனிதனை இன்னும் அதிலேயே அமிழ்த்தித் தத்தளிக்கும்படி செய்வது தர்மமாகாது, நியாயமாகாது; பெரும் பாபமேயாகும். ஆகையால், ஸ்ரீ ராமகிருஷ்ணர் நரேந்திரரை ஸ்தோத்ரம் செய்து ஸ்தோத்ரம் செய்து அவருள்ளே யடங்கியிருந்த சக்திகளையெல்லாம் வெளியே பிரகாசிக்கும்படி செய்தாரென்றும் சொல்லலாம்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் இரவும் பகலும் நரேந்திரரையே நினைத்து, நரேந்திரரைப் பயிற்றுவிப்ப தொன்றையே தமது ஜீவிதகால நோக்கமாகக் கொண்டிருந்தார்போலத் தோன்றுகிறது, ஒருநாட் காலையிலே ஸ்ரீ ராமகிருஷ்ணர்



நரேந்திரரை நோக்கி, “புத்திரா! நேற்றிரவு நான் உறங்கிக்கொண்டிருந்தபொழுது நீ வந்து என்னை எழுப்பி, ‘இதோ நான் வந்திருக்கிறேன்’ என்று நீ என்னிடம் சொன்னாய்” என்றார். நரேந்திரர் பிரமித்தார். குருமூர்த்தி, என்ன, இப்படிச் சொல்லுகிறீரே; நரேந்திரர் கல்கத்தா நகரிலல்லவா நேற்றிரவு காலம் கழித்தார்.

ஆ! ஆ! ஸ்ரீ ராமகிருஷ்ணர் நரேந்திரரிடத்துக் காண்பித்துவந்த வாற்சல்யம் என்ன ஆச்சர்யத் தன்மையுடைத்து? எவ்வளவு அபாரமானது! உலகிலே அப்படியொருவர் இன்னொருவரை நேசித்ததுண்டா? இராது. ஏனென்றால், உலக அன்பெல்லாம் ஏதேனும் ஒரு காரணத்தை யுத்தேசித்துச் செலுத்தப்படும் அன்புதானே! ஆகையால், அவ்வன்பு அழுகிவிடுகிறது, வெம்பிவிடுகிறது; அவ்வன்பினிடத்தே ருசியில்லை, ஆநந்தமில்லை. பிரதி பலனை எதிர்பாராது அன்பின் பொருட்டுச் செலுத்தப்படும் அன்பே பரிபூர்ணமானது; அதிலேதான் ஆநந்தம் ஊறிப் பொங்கித் ததும்பிக் கொந்தளிக்கிறது. ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய அன்பு இத்தகையது.

நரேந்திரருடைய பிதா மரித்துவிட்டார்; அவருடைய குடும்பம் வறுமையிலாழ்ந்தது; நரேந்திரர் எத்தனையோ நாட்கள் பட்டினி கிடக்கும்படி நேர்ந்தது. ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு இது தெரியவந்தது. ஒருநாள் ஸ்ரீ ராமகிருஷ்ணர் நரேந்திரருடைய நண்பர் ஒருவரிடத்திலே—இந்த நண்பர் தனவந்தர்—“நரேந்திரனுடைய பிதா மரித்து

விட்டது உங்களுக் கெல்லாருக்கும் தெரியுமே; அவர்கள் வறுமையி லாழ்ந்து வருந்துகிறார்கள்; நரேந்திரனுடைய நண்பர்களாகிய நீங்கள் யாராவது உதவி செய்தால் நன்றாயிருக்கும்" என்றார். அந்தத் தனவந்தர் விடை பெற்றுச் சென்ற பின்னர், நரேந்திரர் ஸ்ரீ ராமகிருஷ்ணரை நோக்கி மிக மனவருத்த முடையவராய், "ஸ்வாமி! தாங்கள் அவ்விடம் ஏன் சொன்னீர்கள்?" என்றார். நரேந்திருடைய குடும்ப வறுமையை வெளியே சொல்லி அவருடைய தன்மதிப்புக்குத் தாம் பங்கமுண்டாக்கிவிட்டதாக நரேந்திரர் உணர்ந்தாரென்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் உடனே அறிந்துகொண்டு, கண்களில் கண்ணீர் ததும்ப, நரேந்திரரை நோக்கி, "ஆ! எனது நரேந்திரா! எனது அருமையான நரேந்திரா!! நான் உன்பொருட்டு எதுவேண்டுமோ செய்வேன் என்பது உனக்குத் தெரியாதா? உனக்காக நான் வீட்டுக்கு வீடு இரந்தும் செல்வேன்" என்றார். நரேந்திரருக்கு இப்பொழுது ஸ்ரீ ராமகிருஷ்ணர் காண்பிவித்த அத்தியந்த அன்பு, பொறுக்க முடியவில்லை; நரேந்திரர் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய பாதாரவிந்தங்களிலே சாஷ்டாங்கமாகப் பணிந்து, "ஏ, குருமூர்த்தி! தங்களுடைய கிருபை என்மீது பரிபூர்ணமா யிருக்கும்வரையில் எனக்கு என்ன குறை?" என்று நமஸ்கரித்தார். இதன்றோ, அன்பு? இதுதான் ஸ்வயநலமற்ற அன்பு; இதுதான் ஈஸ்வரனிடத்து வேகமாக இட்டுச் செல்லவல்ல அன்பு. நரேந்திரரே பிற்காலத்தில், "அவர் (ராமகிருஷ்ணர்) என்மீது செலுத்திய அவருடைய பேரன்பினாலே என்னை யவருடைய அடிமை



யாக்கிக்கொண்டுவிட்டார் என்பது உண்மையே" என்று கூறினார்.

நரேந்திரருக்கு விவாகப் பிரயத்தனங்கள் செய்யப்பட்டுவந்த காலத்தில், ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குப் பயமுண்டாய்விட்டது. நரேந்திரர் எல்லோரும்போல மாம்ச பிண்டங்களைக் கட்டிக்கொண்டு மாரடித்துக்கொள்ளவா பிறந்தார். ஐயையோ! அவருடைய பெற்றோரும் மற்றவர்களும் ஈஸ்வர சங்கற்பத்துக்கு விரோதமாகப் பெரும் பிரயத்தனங்கள் செய்கிறார்களே. விவாகம் செய்துகொண்டு, பன்றி குட்டி போடுவதுபோலப் பல பிள்ளைகளைப் பெற்று, இப்பாழ் உலக வாழ்க்கை வாழ்தற்கா நரேந்திரன் அவதரித்திருக்கிறான்? ஸ்ரீ ராமகிருஷ்ணர் நரேந்திரர்மீது வைத்த அன்பெல்லாம் வீணாய்விடுமே. நரேந்திரர், 'ஈஸ்வரனைத் தாங்கள் நேரில் பார்த்ததுண்டா?' என்று ஒவ்வொரு பெரியோரையும் கேட்டுவந்த கேள்வி வீணாய்விடுமே. ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஜகன்மாதாவின் பாதங்களிலே சாஷ்டாங்கமாக விழுந்து, கண்களிலே கண்ணீர் ஆறாக ஓட, அந்த விக்கிரகத்தின் பாதங்களிலே சிரசை வைத்து, அப்பாதங்களை தமது இரு கைகளாலும் பலமாகப் பிடித்துக்கொண்டு, "தாயே! ஜகதம்பாள்! மாயாமோகினி! மகாசக்தி! நரேந்திரனுக்கு விவாகம் செய்விப்பதற்கு நடக்கும் ஏற்பாடுகளை யெல்லாம் தகர்த்தெறிவாய்; நரேந்திரன் சம்சார சாகரத்திலே அமிழ்ந்திவிடாது காத்தாரக்ஷிப்பாய்" என்று இடைவிடாமல் பிரார்த்தனை செய்வார்.

நரேந்திருடைய பிதாவாகிய விசுவநாததத்தர் மரித்து, நரேந்திரர் வறுமையிலும் பல கஷ்டங்களிலும் வருந்திக்கொண்டிருக்கவே, ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமக்குத்தான் அவ்வறுமையும் கஷ்டங்களும் வந்துவிட்டனபோலக்கருதி, ஜகன் மாதாவினுடைய க்ஷேத்திரத்தினுள்ளே சென்று, தமது பிரதம சிஷ்யராகிய நரேந்திரருக்குக் காலக்ஷேபத்துக்குக் கஷ்டமில்லாது பணம் கொடுக்கும்படி தேவியைப் பிரார்த்தித்தார். பணம் என்ற பேச்சை பாஷாணமாகக் கருதிய ஸ்ரீராமகிருஷ்ணர் தமது சிஷ்யர் நரேந்திரருக்குப் 'பணம் வேண்டும்' என்று பிரார்த்தித்தார். ஆ! ஆ! என்ன அன்பு! என்ன அன்பு! சிறிது நேரத்துக்கெல்லாம், ஜகன் மாதாவே அவர்முன் தோன்றி, "இனிமேல் அவர்கள் கஷ்டப்படமாட்டார்கள். அவர்களுடைய காலக்ஷேபத்துக்குப் போதுமானவை கிடைக்கும்" என்று சொல்லி மறைந்தது போல ஒருதோற்ற முண்டாயிற்று.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் நரேந்திரரிடத்து இவ்வளவு அத்தியந்தப் பிரியம் வைத்திருந்தபொழுதிலும், நரேந்திரர் தீய சகவாசம் எப்பொழுதும் யதேச்சையாகவாவது செய்யும்படி நேரிட்டுவிட்டால், மிகவும் கடூரமாகக் கண்டிப்பார்; நரேந்திருடைய மனத்திலே அசுத்த நினைப்பு அணுவளவேனும் நுழைந்துவிட்டால், ஸ்ரீ ராமகிருஷ்ணர் உடனே அதைக் கண்டுபிடித்துவிடுவார். எவனாவது ஒரு தீயோனுடன் நரேந்திரர் சகவாசம் செய்துவிட்டுப் பின்னர் தம்மிடம் வந்தால், ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவருடைய முகத்தை



ஏறிட்டுக்கூடப் பார்க்கமாட்டார்; நரேந்திருடைய கையிலிருந்து எதையும் வாங்கி யுண்ணமாட்டார். நரேந்திரர் எப்பொழுதும் யதேச்சையாகத் தீயோருடனே சகவாசம் செய்யும்படி நேரிட்டு, ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் வந்து அவருக்கு ஏதேனும் ஆகாரம் கொடுத்தால், இவர் தீயோருடனே பழகியது ஸ்ரீராமகிருஷ்ணருக்குத் தெரியாமலிருந்தும், ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய கையானது ஆகாரத்தை வாய்க்குக் கொண்டு செல்ல மறுத்துவிடும். ஸ்ரீராமகிருஷ்ணர் வியாதியாய்ப் படுத்திருந்தபொழுது ஒரு சமயத்தில் அவருடைய கை ஆகாரத்தை வாய்வரையில் கொண்டு போய்க் கொடுத்தும், அவரால் உண்ண முடியவில்லை.

இவை சாதாரணமாகப் பொது ஜனங்களால் நம்பத்தக்கனவல்ல; ஆனால், ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது மனத்தையும் சரீரத்தையும் அவ்வாறு பயிற்றிவைத்திருந்தார். அவையெல்லாம் சூட்சுமதிருஷ்டி விஷயங்களாம்; தற்காலத்து சரீரதர்ம சாஸ்திரிகளுள் முதன்மையாகச் சிறந்து விளங்குபவர்களும் "இவ்வாறு நடத்தல் சாத்தியமே" என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

ஆ! ஆ! ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருடைய பாதாரவிந்தங்களிலே யுட்கார்ந்து சாதுசங்கத்திலே இன்புறுவது எல்லோருக்கும் கொடுத்துவைக்குமா? தக்ஷிணேஸ்வரமே உலகில் புண்ணியஸ்தலமாய்விட்டது. அங்குப் பேசிய ஒவ்வொரு பேச்சும், ஒவ்வொரு நடையும், ஒவ்வொரு சுவாசமும் கூட ஞானம் நிரம்பியதாயிருந்தது. ஸ்ரீராமகிருஷ்ண

ருடைய சந்நிதான மகிமையினாலேயே மிகமிகத் தீயோர்களும் பெரியோர்களாய்விட்டார்கள் என்பது ஆச்சர்யமாகாது. இதற்குத் திருஷ்டாந்தமாக ஒன்று கூறுவோம்:—

பாவஹாரி பாபா என்று ஒரு மகாத்மா இருந்தார். நரேந்திரர் அவரிடத்திலே அதிக பக்தி பூண்டிருந்தார். அவர் ஒரு சமயத்திலே தாம் தமது குகையிலே பூஜை முதலியன செய்துவிட்டு, கண்மூடி நிஷ்டையி லிருந்தபொழுது, ஒரு கள்வன் அக்குகையினுள்ளே நுழைந்து, அங்கிருந்த பூஜாபாத்திரங்களையெல்லாம் எடுத்து மூட்டையாகக் கட்டிக்கொண்டு குகையை விட்டு வெளியே புறப்படப்போகும் சமயத்திலே, பாவஹாரி பாபா நிஷ்டை கலைந்து கண்களை விழித்தார். அக்கள்வன் பயந்து அந்த மூட்டையைப் போட்டுவிட்டு ஓடினான். பாவஹாரி பாபா அம்மூட்டையைத் தம் கையி லெடுத்துக்கொண்டு அவன் பின்னேயோட, அவன் தன்னைத் துரத்திக்கொண்டு அவர் ஓடிவருவதாக நினைத்து இன்னும் வேகமாக ஓடினான். அவர் அவனை விடாது பின்பற்றியோடிக் கடைசியாக அவனைப் பிடித்து நிறுத்தித், தாம் சுமந்துவந்த அம்மூட்டையை அவனுடைய காலடியில் போட்டு, "அப்பா! இதை நீ இச்சித்தாய்; இது உன்னுடையது; தபவுசெய்து ஏற்றுக்கொள்" என்று கெஞ்சி அம்மூட்டையை அவனிடம் கொடுத்துவிட்டுப் போய்விட்டார். பின்னர் அக்கள்வன் சங்கதி யொன்றுமே தெரியாம லிருந்தது. நரேந்திரர் ஸ்வாமி விவேகாநந்தரெனப் பெயர் பெற்று அமெரிக்கா



சென்று வேதாந்த கர்ச்சனைசெய்து திரும்பிவந்தபின்னர், ஹிமோத்கிரிப் பிரதேசத்திலே அல்மோரா என்னும் ஊரிலே போயிருந்தபொழுது அங்கே ஒரு மகான் இருப்பதாகக் கேள்விப்பட்டு அவரைப் பார்க்கச் சென்றார். அம்மகானுடைய முகத்திலே தேஜஸ் ஜ்வலிக்கின்றது; ஆநந்தம் ததும்புகின்றது. நரேந்திரருக்கு அவரிடத்திலே அதிக அன்பு விழுந்துவிட்டது; வெகுநேரம்வரையில் இருவருமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். சம்பாஷணை மத்தியிலே அம்மகான் நரேந்திரரை நோக்கி, "ஸ்வாமி! நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன்; அது என் மனத்தினிடத்தே யொரு பெரும்பாரம்போ லிருக்கிறது; தங்களிடம் சொல்லி விட்டால் அப்பாரம் இறங்கிவிடும்போலத் தோன்றுகிறது; நானும் ஆறுதலடைந்து தேறிவிடுவேன்" என்றார். நரேந்திரர், "அது என்ன?" என்று கேட்க, அவர் "பாவஹாரி பாபா என்று ஒரு மகாத்மா இருந்தாரே; அவரைத் தாங்கள் அறிவீர்களோ?" என்று கேட்டார்.

"ஆம்; அறிவேன்; அவருடனே கூட நான் சில நாட்கள் வசிக்கும்படியான பாக்கியம் பெற்றேன்".

"அவருடைய குகையினுள்ளே அவர் நிஷ்டையிலிருந்த காலத்தில் ஒரு கள்வன் நுழைந்து அவருடைய பூஜாபாத்திரங்களைத் திருட யத்தனித்தானென்பதும், அவர் கண்விழிக்கவே கண்டு ஓடினானென்பதும், அவர் அப்பாத்திரங்களை யெடுத்துக்கொண்டு அவன் பின்னேயோடிச்

சென்று அவ்விடத்தில் கொடுத்துவிட்டு வந்தாரென்பதும் தங்களுக்குத் தெரியுமா?"

"ஆம்; கேள்விப்பட்டிருக்கிறேன்."

"அந்தக் கள்வன் நான்தான்."

ஆ! ஆ!! பாவஹாரி பாபா இக்கள்வனுக்கு ஒரு மொழியும் உபதேசிக்கவில்லை; ஆயினும், அவருடைய அருளினாலே இக்கள்வன் மகாத்மாவாய்விட்டான். பெரியோருடைய மகிமையை என்னென்று கூறுவது!

---

## 20-வது அத்தியாயம்

## ஸ்ரீ ராமகிருஷ்ணர் பெருமை

ஸ்ரீ ராமகிருஷ்ண ரிடத்திலே விசேஷமா யிருந்த ஒரு குணம் யாதெனில், அவர் குற்றம் செய்தவர்களிடத்தே, குறைவுற்றவர்களிடத்தே, தாழ்மை யுற்றவர்களிடத்தே, தாழ்ந்தவர்களெனக் கருதப்படுபவர்களிடத்தே, பாபிகளிடத்தே, சண்டாளர்களிடத்தே அதிக அன்பும் அநுதாபமும் காட்டிவந்தார். அவரிடத்துக்குப் பாபிகளும் பலர் வந்தார்கள். பாபத்திலும் பலமிருந்தால், அந்தப் பலத்தை அவர் மெச்சுவார்; ஏனென்றால், அந்தப் பலத்தை உபயோககரமான வழிகளிலே திருப்பிவிட முடியுமென்று அவர் அறிந்திருந்தார். இவ்விதமாக ஸ்ரீ ராமகிருஷ்ணர்



எல்லோரிடத்தும் அன்பு செலுத்துவது நரேந்திரருக்கு ஆச்சர்யமா யிருந்தது. ஸ்ரீ ராமகிருஷ்ணருடனே பழகும் பாக்கியம் பெற்ற ஒவ்வொருவரும் ஏதேனும் ஒரு விதத்தில் மாறுத லடைந்தார்கள். பலவித ஒழுக்கமும் மாதிரியும் வாய்ந்த பலரும் வந்தார்கள். நரேந்திரர் பார்த்துப் பார்த்து ஆச்சர்யப்பட்டார். நரேந்திரரே புத்தி சக்தியிலே மாற்றுரு அடையப்பெற்றார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணரிடத்தே மகம்மதியர்கள் வந்தார்கள்; கிறிஸ்தவர்கள் வந்தார்கள்; சீக்கியர்கள் வந்தார்கள்; வைஷ்ணவர்கள் வந்தார்கள்; சைவர்கள் வந்தார்கள்; தேவியுபாசகர்கள் வந்தார்கள். எல்லோரும் தாங்கள் எதை எதை லக்ஷியமாகக் கொண்டிருந்தார்களோ அந்த லக்ஷியம் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடத்தே நிறைந்து நிற்கின்றது என்பதைக் கண்டார்கள். எல்லோருக்கும் இவரைத் தரிசித்தவுடனே ஈஸ்வர சிந்தனையும் பக்தியும் உண்டாயின. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் லக்ஷியமே ஸ்ரீ ராமகிருஷ்ணராக அவதரித் துள்ளதாகக் கருதி, பிரஹ்மாநந்த மடைந்தார்கள்.

வங்காளத்திலே நாடக கவியெனப் பெயரும் பிரசித்தியும் பெற்ற கிரீசச்சந்திரர் என்பவர் ஸ்ரீராமகிருஷ்ணரிடம் வந்தார். இவர் உலக வாழ்க்கையிலே உழன்றவர்; உலகாநுபவம் நிரம்பப்பெற்றவர்; உலகை உண்மையென நம்பி உலக போகங்களைக் கண் தலை தெரியாமல் அநுபவித்தவர். இவர் கல்கத்தாவிலே ஸ்ரீ ராமகிருஷ்ணரை யொருமுறை

பார்த்தார்; "தக்ஷிணேசுவரத்திலே சென்று ஸ்ரீராமகிருஷ்ணரைத் தர்சிக்கவேண்டும்" என்று இவருள்ளே ஒருஎண்ணமானது தூண்டிற்று; தக்ஷிணேஸ்வரம் சென்றார்; மகாகாளி க்ஷேத்திரத்தினுள்ளே அப்பொழுது ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது சொந்த தாயாரிடத்திலே தாராளமாகப் பேசுவதுபோலப் பிரார்த்தனை பண்ணிக்கொண்டிருந்தார். கிரீசர் இதைக் கேட்டு, "இவர் தெய்வ நிந்தனை செய்யும் துஷ்டனாயிருக்கவேண்டும்; இல்லையேல் மகாத்மாவாயிருக்கவேண்டும்" என்று தமக்குள்ளேயே சொல்லிக்கொண்டாராம். இவர் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடத்திலே சிஷ்யரான கதை நீண்டதோர் பெருங்கதை. உலகமானது கிரீசரைப் பாபியென்று சொல்லும்படி அவர் நடந்துவந்தபொழுதிலும் 'அவரிடத்திலே உண்மையும் திடவிஸ்வாசமும் இருக்கின்றன' என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் கண்டுகொண்டார். கிரீசர் ஒரு சமயத்திலே ஸ்ரீராமகிருஷ்ணரை நோக்கி, "ஸ்வாமி! நான் ரக்ஷைப்படுதற்கு மார்க்கமென்ன?" என்று கேட்க, ஸ்ரீ ராமகிருஷ்ணர், "எனது நாமத்தைத் தினந்தோறும் மூன்றுதரம் உச்சரிப்பாய்" என்று கூறினார். அதற்குக் கிரீசர், "ஸ்வாமி! நான் உலகிலே உழலுபவன் என்பது தங்களுக்கு நன்றாகத் தெரியும்; நான் ஒரு பெரும் பாபி; அப்படியிருக்கத் தங்களுடைய நாமத்தை நான் எப்படி மூன்றுதரம் தினந்தோறும் உச்சரிக்க முடியும்?" என்று கேட்க, ஸ்ரீ ராமகிருஷ்ணர், "அப்படியானால் எனது நாமத்தை ஒரு நாளைக்கு இரண்டுதரமாவது உச்சரிப்பாய்" என்றார். கிரீசர் அதற்கும் பின்வாங்க, ஸ்ரீ ராமகிருஷ்ணர் "சரி, நீ



எனது நாமத்தை ஒருதரம் உச்சரித்தாலே போதும்" என்றார்; கிரீசர், "ஆ! ஆ! ஸ்வாமி! என்னவோ எனக்கு அதுகூட முடியுமோ? என்று பயமாயிருக்கிறது" என்று உண்மையாய், வேஷம் போடாமல் சொல்லிவிட்டார். அப்பொழுது குருமூர்த்தி, "நல்லது, நல்லது; நீ உன்னை என்னிடம் அர்ப்பணம் செய்துவிட்டு, மனச்சாந்தியடைந்திரு; உனக்கு மோக்ஷம் நான் அளிக்கின்றேன்" என்றார். ஒருதரம்கூட ஸ்ரீராமகிருஷ்ணருடைய நாமத்தை உச்சரிக்கப் பின்வாங்கிய இந்தக் கிரீசகவி பின்னே ஸ்ரீராமகிருஷ்ணருடைய பெயரையே ஜபித்துக்கொண்டிருந்ததுமன்றியில், அந்நாமத்தை உச்சரித்துக்கொண்டே உயிர் துறந்தார். ஸ்ரீராமகிருஷ்ணர் கிரீசரை நோக்கி, "கிரீசா! ஜனங்கள் உன்னைப் பார்த்து ஆச்சர்யப்படும்படியான காலம் வரும்" என்று கூறியிருந்தார். அப்படியே கிரீசர் மகாத்மாவாய்விட்டார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் மனிதர்களின் நடத்தையைப் பாபம், புண்ணியமென்று பகுக்கவில்லை; பலம், பலயீனம் என்று பகுத்திருந்தார். 'எல்லோராலும் இப்பொழுதல்லாவிட்டாலும் எப்பொழுதாவது பலயீனத்தை ஜயிக்க முடியும்' என்பது ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய அபிப்பிராயம். மனிதன் பலம் மிகுந்தவனாக வேண்டும். பாபங்களுள் சிறந்தது பலயீனமே; பலயீனமே பஞ்சமகா பாதகங்களுக்கும் காரணமாவது; பலயீனமே பொறாமை, மதம், மாச்சர்யம், துவேஷம் முதலிய துர்க்குணங்களுக்கு உற்பத்தி ஸ்தானமா

யிருப்பது. பலமே புண்ணியம்; பலமே மோக்ஷத்துக்கு மார்க்கம்; பலமே உலகை ஜயிப்பதற்கு வழி; பலமில்லா விட்டால், அம் மனிதனால் எதுவும் முடியாது.

பிரக்கியாதிபெற்ற புருஷர்கள், வைத்திய, சாஸ்திரிகள், நூலாசிரியர்கள், சட்ட நிபுணர்கள், பண்டிதர்கள், மதாசார்யர்கள் பலரும் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் வந்து செல்வார்கள்; அவர்கள் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் பாதங்களிலே விழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து அவருடைய பாத தூளியை எடுத்துச் சிரமேல் அணிந்துகொள்வார்கள். நரேந்திரர் இதையெல்லாம் பார்ப்பார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஆச்சர்யபுருஷர் என்பதில் சந்தேகமென்ன? வெவ்வேறு குணங்களும் தன்மைகளுமுள்ள பலரும் இவரிடத்திலே வந்து கூடுவதே இவர் ஆச்சர்யபுருஷரென்பதை ரூபிக்கிறதல்லவா? வைத்திய சாஸ்திரிகள் அவரைச் சோதனை செய்து பார்ப்பார்கள். அவர் சமாதியிலே அமர்ந்துவிட்டால், அவர்கள் ஒரு நாணயத்தையெடுத்து அவருடைய சரீரத்துடனே சம்பந்தப்படுத்திப் பார்ப்பார்கள்; அந்த நிமிஷத்திலேயே அவருடைய சரீரம் முழுதும் நடுங்கும். அவருடைய உபதேச மொழிகளையெல்லாம் வருகிறவர்கள் குறித்தெடுத்துக்கொள்வார்கள்.

ஸ்ரீ ராமகிருஷ்ணரைச் சுற்றிலுமிருந்த ஆகாயமே ஈஸ்வரச் சைதந்யமாயிருந்தது. ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குத் தயை தாக்ஷிண்யம் கிடையாது; உலகத்திலே பெரும் பதவி வகிக்கிறார்களேயென்று அவர் அவர்களுக்கு மதிப்பு அளி



ப்பதில்லை. எவரிடத்தேனும் கர்வம் இருந்தால், அவர் உடனே அதைக் [illegible] விடுவார். ஒரு கோடீஸ்வரன் தான் மகாஞானியென்று நடித்துக்கொ[illegible] கான்; அவன் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் வருவது போவது வழக்கம்; ஒருநாள் ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவனை நோக்கி, "நீ உலகினால் கட்டுப்படுத்தப்பட்டு, பூச்சி புழுக்களினால் அரிக்கப் படுகின்ற கிரகஸ்தன்" என்றார். பொதுஜன உபகாரியென்று பெயர் பெற்ற இன்னொருவர் ஸ்ரீ ராமகிருஷ்ணர் முன்னே நியாய விரோதமான மொழியொன்று கூற, ஸ்ரீ ராமகிருஷ்ணர் "ஜனங்கள் உன்னைப் பெரியோனென்கிறார்கள்; ஆனால், நான் உன்னை யப்படி நினைக்கமாட்டேன்; நீ மிகச் சிறு மனத்தினன்; நீ இழிபிறப்பினன்" என்றார். இப்படியெல்லாம் ஸ்ரீ ராமகிருஷ்ணர் நிர்த்தாக்ஷிண்யமாக எவரையும் கடிந்துகொண்டபோதிலும், எவரும் கோபித்துக்கொள்ளமாட்டார்கள்; ஏனெனில், ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய ஹிருதயத்திலே விஷமில்லையே! ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு உலகினர்கள் அவர்கள் எவ்வளவு உயர்ந்த அந்தஸ்து வாய்ந்தவர்களாயிருந்தபோதிலும், துரும்பு மாத்திரமாம்; ஸ்வாநுபூதியின்றி வெறும் புத்தகப் படிப்புமாத்திரம் உள்ள பண்டிதர்கள் தூசிபோன்றவர்களாம்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் நரேந்திரரை நோக்கி, "புத்திரா! கேட்பாய்! உலகினர்கள் ஈஸ்வர ஜனங்களுக்கு விரோதமாய் எல்லாவித விஷயங்களையும் பேசுகிறார்கள்; ஆனால், அவர்கள் தன் பின்னே குலைத்துக்கொண்டு ஓடிவருகின்ற நாய்

களைக் கவனியாது தெருவிலே செல்கின்ற யானைபோன்று நடக்கவேண்டும். யானையானது அவர்[illegible] கவனியாது தன் வழியே [illegible]து. ஏ, புத்திரா! ஜனங்கள் உன்[illegible]ன்றுகொண்டு உன்னைப்பற்றித் தீயன புகன்றால் நீ அவர்களைப்பற்றி என்ன நினைப்பாய்?" என்று கேட்டார்.

நரேந்திரர், "நான் அவர்களைக் குலைக்கும் நாய்களின் ஒரு கூட்டம்போலக் கருதுவேன்" என்றார். குரு—ஸ்ரீ ராமகிருஷ்ணர் புன்னகை புரிந்துகொண்டே "வேண்டாம், வேண்டாம்; நீ அவ்வளவு தூரம் போகவேண்டாம்; நீ அவற்றைக் கவனிக்க வேண்டாம்; நீ ஒவ்வொருவரையும் ஸ்ரீ நாராயணனைப்போல நினைக்கவேண்டும்; ஈஸ்வரன் எல்லா ஜீவராசிகளிலும் வசிக்கிறார்; ஒருவன் மகாத்மா நாராயணனாயிருக்கலாம்—இன்னொருவன் பாபி நாராயணனாயிருக்கலாம்" என்றார்.

ஒரு சமயத்திலே நரேந்திரர் ஸ்ரீ ராமகிருஷ்ணருடனே வெவ்வேறு மதக் கோட்பாடுகளைப்பற்றிப் பலமான [illegible]கள் புரிந்துகொண்டிருந்தார். அப்பொழுது நரேந்திரர் சில வகுப்புக்களையும் [illegible] பூஜையையும்பற்றி நிர்த்தாக்ஷிண்யமாக நிந்தித்துக் கண்டிக்க ஆரம்பித்தார். நரேந்திரர் அப்பொழுது ஆவேசம் மேலிட்டு ஆங்காரம் மிகுந்தவரானார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் மிகுந்த அன்புடனே அவரைப் பார்த்து, "புத்திரா! எனது ஞானச் செல்வமே! ஒவ்வொரு வீட்டுக்கும் கொல்லைப்புறத்து வாசல் ஒன்று உண்டே. மனிதனுக்கு அந்த வாசலின் வழியாக வீட்டுக்



குள்ளே நுழைவதற்கு இஷ்டமிருந்தால், நாம் ஏன் அவனைத் தடுக்கவேண்டும்? ஆனால், தெருவிலேயுள்ள வாசல்தான் மிகமிக நல்லதென்பது வாஸ்தவமே; நானும் ஒப்புக்கொள்ளுகிறேன்" என்றார். ஆ! ஆ! என்ன ஆழ்ந்த உண்மை ஒரு சிறிய வாக்கியத்திலே! என்ன அற்புதமான உபதேசம்! ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய இத்தகைய மொழிகள்தாம் எல்லோரையும் அவரிடத்தில் ஈடுபடச்செய்தன. நரேந்திரர் பிரஹ்மசமாஜக் கொள்கைகளை மெல்ல மெல்ல மாற்றிக்கொண்டு சுத்த ஆர்யசிரேஷ்டராவதற்கு இத்தகைய உபதேசங்களே காரணமாயிருந்தன. "பாபம்" என்ற பதத்தையே ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது காதினால் கேட்கப் பொறார். "பலம், பலயீனம்" என்ற இரண்டு வார்த்தைகளின் மூலமாக ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது சிஷ்யர்களுக்கு மோக்ஷபக்ஷ உண்மைகளைப் போதித்தார். ஒரு மனிதன் தவறிக் கீழே விழுந்துவிடுகிறான்; ஆனால் என்ன? அதனால் அவனைக் கீழேபோட்டு மிதித்து வைத்துவிடுவதா, அல்லது அவனை வெறுத்துத் தள்ளிவிடுவதா?

ஒரு சமயத்திலே நரேந்திரர் பள்ளிப் பிள்ளைகளிடத்துள்ள சில குற்றங்கள் அவர்களுடைய ஒழுக்கத்தைக் கெடுக்கின்றனவாயிருக்கின்றனவே, அக் குற்றங்களை நிஷ்பக்ஷபாதமாக எடுத்துக் கண்டித்துக்கொண்டிருந்தார்; அப்பொழுது ஸ்ரீராமகிருஷ்ணர் அவ்வழியே போகும்படி நேரிட்டது. நரேந்திரர் கோபக்குறி காட்டிக் குறித்துக் குதித்துப் பேசுவதை ஸ்ரீராமகிருஷ்ணர் கண்டு, நரேந்திர

ரை யழைத்துச் "சங்கதி யென்ன?" என்று கேட்டுத் தெரிந்துகொண்டு, "ஏன் இந்த விஷயங்களைப்பற்றிப் பேசி வீண்காலம் கழிக்கிறாய்? ஈஸ்வரனைப்பற்றிப் பேசு; வேறொன்றையும்பற்றிப் பேசாதே" என்றார். உண்மைதானே; வீண் வியவகாரங்களைப்பற்றி இரவும் பகலும் பேசிச் சோம்பேறித்தனத்திலே காலங் கழித்தால், அதனிலும் பெரிய பாபம் ஒன்றுமேயில்லை. மனத்தை ஈஸ்வரனிடத்தே அசையாது நிறுத்திவைத்தல், இதுதான் ஜீவித நோக்கம்; இதுதான் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய உபதேசம். வேறு விஷயங்களைப்பற்றி ஏன் பேசவேண்டும்? ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம் முன்னே லௌகிக விஷயங்கள் சம்பாஷிக்கப்பட, சகிக்கமாட்டார். சில சமயங்களில் அவரைப் பார்க்கவருகிற ஜனங்கள் அவர் முன்னே யுட்கார்ந்துகொண்டு உலக விஷயங்களைப்பற்றிப் பேச ஆரம்பித்தால், ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குத் துக்கம் பொங்கிவிடும்; "தாயே! மகாகாளி! இந்த ஜனங்களை இவ்விடத்துக்கு ஏன் கொண்டுவந்தாய்?" என்று கதறிப் பிரார்த்தித்து அழுவார். உலக விஷயங்கள் அவருக்கு எட்டிக்கொட்டைபோன்றிருந்தன. சொப்பனத்திலும் அவருடைய சிஷ்யர்கள் உலக வியவகாரங்களை விட்டு ஒழிந்திருக்க வேண்டுமென்று அவர் வற்புறுத்திவந்தார். ஆ! ஆ! இவ்விஷயத்திலே ஸ்ரீ ராமகிருஷ்ணர் எவ்வளவு உண்மையும் நேர்மையு முடையவரா யிருந்தார்; தம்முடைய சிஷ்யர்கள் எப்பொழுதும் ஈஸ்வரனிடத்திலேயே மனத்தை நிறுத்தியவர்களாக இருக்கவேண்டுமென்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் மிகமிகப் பாடுபட்டார். ஸ்ரீராமகிருஷ்ணரிடத்திலே



வயதில் மூத்த பிராஹ்மண சிஷ்யர் ஒருவர், ஸ்ரீ ராமகிருஷ்ண ரருகில் நிஷ்டையி லுட்கார்ந்தார். இன்னும இரண்டொரு சிஷ்யர்களும் அவ்வாறே கண்மூடி நிஷ்டையி லுட்கார்ந்தார்கள். சிறிது நேரம் கழித்து ஸ்ரீ ராமகிருஷ்ணர் நிஷ்டையி லுட்கார்ந்திருப்பவர்களைச் சுற்றிப் பார்த்தார்; இந்தப் பிராஹ்மணர் முகத்தைச் சிறிது கூர்ந்து பார்த்தார்; இன்னும் சற்று கூர்ந்து பார்த்தார்; தமது ஆசனத்தினின்றும் எழுந்து அந்தப் பிராஹ்மண ரண்டையில் வந்து கொடுத்தார் ஒரு அறை கன்னத்தில். அந்தப் பிராஹ்மணர் திடுக்கிட்டுக் கண்களைவிழித்து, தம்மையடித்தது குருமூர்த்தியென்று தெரிந்துகொண்டு, அவருடைய பாதங்களின்மேல் பணிந்து, "ஸ்வாமி! தங்களுக்கு இத்தகைய கோப முண்டாகுமாறு நான் யாது செய்தேன்? எக்குற்றம் புரிந்தேன்? என்ன செய்தாலும் ஏழையேனுக் கிரங்கி யருள்புரிய வேண்டியது தங்களுடைய கடமை யல்லவா?" என்று வேண்டிநிற்க, ஸ்ரீ ராமகிருஷ்ணர், "நீ நிஷ்டை செய்யுங் காலத்திலே உனது மனம் எங்குச் சென்றிருந்தது? உள்ளதைப் புகல்வாய்" என்றார். அப் பிராஹ்மணர், "ஸ்வாமி! அடிபட்டதற்குக் காரணத்தை அறிந்துகொண்டேன்; இனிமேல் ஜாக்கிரதையா யிருக்கிறேன்; இந்தப் பாழான மனம் உலக விஷயங்களையே நாடுகின்றது; ஆயினும், என்னாலானமட்டும் பிரயாசைப்பட்டு நான் அதை யடக்கி அந்தர்முகமாக நிறுத்துகிறேன்" என்றார்.

இதுபோலவே ராணிரஸமணி தேவியும்—இவ் வம்மையாரும் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சிஷ்யர்தானே—

கிஷ்டை சமயத்திலே மனத்தை யொருமுகப்படுத்த முடியாமல் உலக விஷயங்களை நாடும்படி விட, ஸ்ரீ ராமகிருஷ்ணர் உடனே அறிந்துகொண்டு அவ் வம்மையாரையும் கன்னத்தி லறைந்து, தப்பிதத்தை யெடுத்துக் காட்டிச் சரிப்படுத்தினார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய அநுபவங்க ளெல்லாம் அவருடைய பரிசோதனையின் பலன்களேயாம். ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஆத்மீக விஷயத்திலே மிகமிக நேர்மையும் உண்மையும் வாய்ந்தவரா யிருந்தார். அவர் தமது அநுபவங்களைத் தாமே சந்தேகித்து, "ஏ, மாதா! மகாமாயி!- இது உண்மையானால், மனோகற்பனை யன்றானால், இன்னார் என்னிடம் வரட்டும்" என்று எதிர்பாராத ஜனங்களை வரும்படிப் பிரார்த்திப்பார்; அம்மாதிரியே அன்றே அந்த ஜனங்கள் வந்துவிடுவார்கள். ஆ! ஆ! ஸ்ரீராமகிருஷ்ணருடைய கபடற்ற, கள்ளமற்ற சோதனை எப்படித் தெரியுமா? தாம் இரவும் பகலும் தக்ஷிணேஸ்வ ராலயத்திலே திரிகரண சுத்தியுடன் உபாசித்துவரும் ஜகன்மாதா உண்மையிலேயே உள்ளவளா? அல்லது வெறுங் கற்பனையா? என்பதைப் பரீக்ஷித்துப் பார்க்கும்பொருட்டு ஸ்ரீ ராமகிருஷ்ணர் கொஞ்சம் பஞ்சை யெடுத்து அந்த விக்கிரகத்தின் மூக்குக்கு நேரே வைப்பார். ஆ! ஆ! அவருடைய திருஷ்டிக்கு அந்தப் பஞ்சு காற்றி லசைவதுபோல, அவ் விக்கிரகத்தினுடைய மூக்கிலிருந்து வருகின்ற சுவாசத்தினாலே அசையும். "இந்த (ஏதோ ஒரு அநுபவத்தை)



அநுபவம் உண்மையானால், இந்தக் கல் தவளை குதிக்கிறது போலக் குதிக்கட்டும்" என்றார். ஆ! ஆ! ஆ! ஆச்சர்யம்! ஆச்சர்யம்!! சாதாரண ஜனங்கள் நம்பமுடியாத காரியமாயினும், அந்தக் கல்லானது, அவருடைய திருஷ்டிக்குத் தவளை குதிப்பதுபோல, அநேகம் தடவை குதித்தது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம்முடைய அநுபவங்களெல்லாம் உண்மையே யென்று பரீக்ஷித்துப் பார்த்துத் தெளிந்துகொண்டார். ஆகையால்தான் அவர் எப்பொழுதும், "நான் எது போதிக்கிறேனோ அதைப் பார்த்திருக்கிறேன்" என்று கூறுவது வழக்கம்.

நரேந்திரர் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய அநுபவங்களைச் சந்தேகித்துக் கடோரமாகத் தர்க்கம் செய்தால், ஸ்ரீ ராமகிருஷ்ணர் நரேந்திரர் கேட்கும் கேள்விகளுக்கு ஏற்ற விடைகளைச் சொல்லியனுப்பிவிட்டு, க்ஷேத்திரத்தினுள்ளே சென்று, "ஜகன்மாதா! எனது அநுபவங்கள் உண்மைதானா? உண்மைதானா?" என்று கதறுவார். அவருக்கு அவருடைய பிரக்ஞாதீத திருஷ்டியிலே அவருடைய அநுபவங்களெல்லாம் உண்மையே யென்று ஜகன்மாதா அவருக்கு விளக்கிக்காட்டினாள். பின்னர், அவர், க்ஷேத்திரத்தினின்று வெளியே போந்து, நரேந்திரரிடம் வந்து, "குழந்தாய்! நீ சிறு பிள்ளை; உனக்கென்ன தெரியும்? 'உனது சந்தேகமெல்லாம் மூடத்தனமும் அறிவீனமுமே' என்று மாதா எனக்குக் காண்பித்துவிட்டாள்; எனது மாதா எனக்குச் சத்தியத்தைக் காண்பித்துவிட்டாள்" என்று சொன்னார்.

## 21-வது அத்தியாயம்
## சிஷ்யவர்க்கம்

ஸ்ரீ ராமகிருஷ்ணரைச் சுற்றிலும் தினந்தோறும் நூற்றுக்கணக்கான ஜனங்கள் வந்துகொண்டும் போய்க்கொண்டும், தொண்டு புரிந்துகொண்டும் இருந்தபொழுதிலும், ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய பிரத்தியேக வாற்சல்லியத்துக்கும் கவனத்துக்கும் பாத்திரர்களாகச் சிலர் பொறுக்கியெடுக்கப்பட்டிருந்தார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணர் இவர்களுக்கு மிகமிக சிரேஷ்டமான அநுபவமார்க்கங்களையெல்லாம் உபதேசித்து, இவர்களுடைய பயிற்சி விஷயத்திலே பிரத்தியேக கவனம் செலுத்திவந்தார். இந்தப் பிரத்தியேக சிஷ்யர்கள் இருவகையாவர்; ஒருவகையார்: கிரகஸ்தர்கள்; மற்றொருவகையார்: ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சந்நியாசிச் சிஷ்யர்களெனப் பெயர்பெற்ற பதினெட்டு வாலிபர்கள்.

கிரகஸ்த சிஷ்யர்களுக்குள்ளே ராமச்சந்திரதத்தர் என்பவர் ஒருவர்; இவர் மகாபக்தர்; ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குப் பழைய சிஷ்யர்; நரேந்திரருக்கும் பந்து; நரேந்திரரை முதன்முதலில் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் இட்டுக்கொண்டு வந்தவரும் இவரே. இவர் உண்மையாய்க் கிரகஸ்த தர்மத்தை வகிக்கவேண்டியமாதிரி அதை வகித்துப், பற்றற்றுத், தாமரையிலைத் தண்ணீர்போல உலகில் வாழ்ந்து வந்தார். இவர் கிரகஸ்தரேயாயினும் கடும் தவம் பல புரிந்



திருக்கிறார். இவர் ஆதிமுதல் கடைசிவரையில் ஸ்ரீ ராமகிருஷ்ணரை, சரீரத்தை விட்டுப் பிரியாத சாயைபோல, விட்டுப் பிரியாமல் மிகுந்த பக்தி சிரத்தையுடன் பணிவிடைகள் பல செய்து வந்தார். கிரகஸ்தர்கள் உண்மைப் பக்தர்களாவதும் உண்மை ஞானிகளாவதும் அபூர்வம். ஆனால், ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சந்நிதானத்திலே அசாத்தியமென்பது ஒன்றுண்டோ? நிவிருத்தி மார்க்கத்தை யநுசரித்து, சர்வசங்கபரித்தியாகம் செய்து, வேறு எக்கவலையுமில்லாதவனாய் ஈஸ்வரத்தியானம் ஒன்றினையே செய்பவனைப் பார்க்கிலும் பிரவிருத்தி மார்க்கத்திலேயே நின்று உலக விஷய சுகதுக்கங்களிலே அல்லும் பகலும் உழன்று ஓய்வு ஒழிவில்லாதவனாய்த் துன்பப்பட்டுக்கொண்டிருந்தாலும் இத்துன்பங்களினிடையே யெல்லாம் ஈஸ்வரனை மறவாதிருப்பவன் பெரியோனல்லவா? மற்ற மூன்று ஆச்ரமத்தாரும் கிரகஸ்தாச்ரமத்தானையே சார்ந்து நிற்கவேண்டியிருத்தலால், மனிதன் உண்மையான ஞானத்தை யடைந்து கிரகஸ்த தர்மத்தை எப்படி நடத்தவேண்டுமோ அப்படி மாத்திரம் நடத்துவானேயானால், அவனே—அவ்வில்லறத்தவனே—ஞானியாம்; அவனே இவ்வுலகு முழுவதையும் தாங்குபவனும்; அவனுடைய முன்னோர்களுடைய நற்கதி அவனுடைய பின்னோர்களின் நற்காலத்துக்கும் அவனே காரணமாவன். அவனிருக்கும் தேசத்திலே பஞ்சமும் பிணியும் கனவிலேனும் தோன்றுமா? அவன் இருக்கும் இடம் பிரதேசம் பவித்திரம் அடையும்; அவனைச் சுற்றியுள்ள ஜனங்கள் மகா பரிசுத்தர்களாய்விடுவார்கள்; அவனை

வையகமும் வானகமும் வந்து எதிர்கொண்டு வணங்கும்; அவனே பெரியோன்; அவனே பிரபு; அவனே சிருஷ்டிகர்த்தா; அவனே ஸ்திதி கர்த்தா; ஆகவே அவனே சம்ஹார கர்த்தா. அத்தகைய இல்லறத்தோர்கள் பெருகிவிட்டால், உலகில் பாபம் என்று ஒன்று இருக்குமா; பலயீனம் என்று ஒன்று இருக்குமா?

இந்தக் கிரகஸ்த சிஷ்யராகிய ராமச்சந்திர தத்தர் பகிர்முகத்திலே காஷாயம் தரித்து சந்நியாசியென்று வெளியே வராவிட்டாலும், தமது அந்திய காலத்திலே சந்நியாச வாழ்க்கையே வாழ்ந்து வந்தார். சற்குரு ஸ்ரீ ராமகிருஷ்ணர் மகா சமாதி யடைந்தபின்னர் இவர் கல்கத்தாவினருகே யோகோத்தியானம் என்ற பெயருடன் ஒரு ஆச்ரமம் ஏற்படுத்திப், பல சிஷ்யர்கள் சூழ வசித்துவந்தார்.

சுரேந்திரநாதமித்ரர் என்பவர் ஒரு கிரகஸ்த சிஷ்யர்; இவருக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணரிடத்திலே இருந்த பக்தி யிவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது. இரவும் பகலும் ஸ்ரீ ராமகிருஷ்ணரைத் தியானம் செய்வதே இவருடைய மதம். இவர்தாம் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய மகா சமாதிக்குப் பின், நரேந்திரருடைய தலைமையின் கீழ் ஒன்று சேர்ந்திருப்பதற்குக் கூடிய ஒரு சில வாலிப சந்யாசிகளுக்கு வேண்டியன அளித்து ஆதரித்து வந்தவர்.

பின்னர், மகாத்மா நாகமஹாஷயரும், பலராமவஸு என்பவரும். இவர்களும் கிரகஸ்தர்கள்தாம்; ஆயினும், பக்தி-



யும் ஞானமும் ததும்பப் பெற்றவர்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணர் நரேந்திரரைக் குறித்து, "நரேந்திரன் உறையிலிருந்து உருவப்பட்டிருக்கும் வாளாகும்; இவ்வார்த்தைகள் அவருடைய வாயிலே எல்லாம் சரியேயாம்" என்று சொன்ன பொழுது, இவர் (நாகமஹாஷயர்) நரேந்திரருடைய பாதங்களிலே விழுந்து பணிந்தார். இந்த நாகமஹாஷயர் நரேந்திருடனே ஈஸ்வர கிருபையைக் குறித்துத் தர்க்கம் செய்துகொண்டிருக்க, நரேந்திரர், "கடவுள் என்பது யார்? நானே ஈஸ்வரன்! நான்தான் பரமாத்மா! அகண்டத்துவமே எனது லக்ஷணம்! நானே அவன்! நானே அவன்!" என்று கூறினார். அச்சமயத்திலே நரேந்திரர் அத்வைத உணர்ச்சி நிறைந்தவராயிருந்தார். நாகமஹாஷயர் ஸ்வாமி விவேகானந்தரை சாக்ஷாத் பரமசிவனுடைய அவதாரமே யென்று கருதினார். நாகமஹாஷயரோ மகாஞானி! ஈஸ்வர பக்தி பழுத்துக் கனிந்து ஹிருதயம் கரைந்துகொண்டிருப்பவர். அவர் எல்லா வஸ்துக்களிலும் ஈஸ்வரனைப் பார்த்தார்; சர்ப்பத்திலேகூட ஈஸ்வரனைப் பார்த்தார்; ஒரு சமயத்திலே ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய பால்ய சந்நியாசிகள் அவருடைய மகா சமாதிக்குப் பின் வராநகரத்திலே ஸ்ரீ ராமகிருஷ்ண மடமென்று ஒன்று ஸ்தாபித்துக்கொண்டு அதிலே வசித்து வருகையில், ஒருநாள் நாகமஹாஷயர் வந்திருந்தார்; அப்பொழுது ஒரு பெரிய கிருஷ்ண சர்ப்பமானது அங்குத் தோன்றிற்று; பாம்பென்றால் படையும் நடுங்குமல்லவா? ஆனால், நாகமஹாஷயர் தமது இரு கைகளையும் கூப்பி வைத்துக்கொண்டு அந்த சர்ப்பத்தை

நோக்கி, "தாயே! உனது ஸ்வஸ்தானத்துக்குச் செல்வாய்" என்று கூறலும், அது நகர்ந்து நெளிந்து அம்மடத்துக்கு வெளியே போய்விட்டது. இது போன்ற பல கதைகள்— இவ்வளவு உண்மையானவையா யிருந்தால் பாதகமில்லை— நாகமஹாஷயருடைய மகிமையைப்பற்றிச் சொல்லப்படுகின்றன.

இன்னொருவர் பலராமவஸு. இவர் தமது கிரகத்தை ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கும் அவருடைய சிஷ்யர்களுக்கும் தாராளமாக வரப்போக, சம்பாஷிக்க, சகல சௌகர்யங்களும் அநுபவித்துக்கொள்ள, ஒரு சத்திரம்போலத் திறந்து விட்டுவிட்டார்; இவர் ஐஸ்வர்யம் மிகுந்த ஒரு ஜமீந்தார்; தர்மப்பிரபுவென வங்காளமெங்கும் பெயரெடுத்தவர்; "இல்லை" என்று வந்தவர்க்கு "இல்லை" என்னாது எடுத்தெடுத்துக் கொடுக்கும் இயல்புடைய இல்லறஞானி; கொடையிலே கர்ணன் என்று சொல்லலாம்; கர்ணனிலும் மேற்பட்டவரென்றும் சொல்லலாம். கர்ணன் சொர்ண தானம் மாத்திரந்தான் செய்தான்; அன்னதானம் செய்தானில்லை. நமது பலராமரோ இரண்டும் இல்லை என்னாது செய்துவந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் இவரை மிகவும் உயர்வாகக் கருதி அங்ஙனமே மதித்துவந்தார். ஏனென்றால், "ஒரு ஒட்டகம் ஒரு ஊசித் துவாரத்தினுள்ளே நுழைந்தாலும் நுழைய முடியும்; தனவந்தன் மோக்ஷத்துக்குச் செல்ல முடியாது" அல்லவா? ஆகையால், இப்பெரிய தனவந்தர் இயேசுவினுடைய அம்மொழியைப் பொய்யாக்கி



விட்டாரே. மோக்ஷம் தன்னுடையதே யென்று அவர் ஸ்தாபித்துக்கொண்டுவிட்டாரே. அவர் உயர்ந்தோரல்லரா? பெரியோரல்லரா? இவருடைய வீட்டிலே ஸ்ரீ ராமகிருஷ்ணராவது அவருடைய சிஷ்யர்களுள் எவரேனுமாவது எப்பொழுதும் இருந்துகொண்டே யிருப்பார்கள். அவருடைய மாளிகை, பக்தர்கள் கூடுகின்ற ஒரு பெரிய மடமேயாகும். இன்றும் கல்கத்தாவிலே பாக்பஜார் என்ற பிரதேசத்திலே யுள்ள அவருடைய மாளிகையின் ஒரு பாகம் அநேகமாக ஒரு மடம்போலவே யிருக்கிறது. ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த சந்யாசிகளுள் சிலர் எப்பொழுதும் அங்கே யிருந்துகொண்டே யிருக்கிறார்கள். பூரி அல்லது ஜகந்நாத க்ஷேத்திரத்திலே பலராமருடைய புத்திரருக்கு ஒருவீடு இருக்கிறது; அதுவும் அப்படித்தான்; எப்பொழுதும் சாதுக்களும் சந்யாசிகளும் வந்து தங்கும் ஒரு மடம்போலவேயிருக்கிறது. பலராமருடைய குடும்பமே பரம்பரையாக பக்தர்கள்; இன்றும் அவருடைய குடும்பத்தினர் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சிஷ்யர்களையும் சந்நியாசிகளையும் மிகுந்த பக்தியுடனே உபசரித்துவருகிறார்கள்.

கிரீசச் சந்திரகோஷ் என்பவரைப்பற்றி நாம் முன்னமேயே கூறியிருக்கிறோம்; இவர் தமது வாழ்நாட்களை யெல்லாம் உலக போகங்களிலேயே கழித்தவர்; சிற்றின்பத்திலேயே உழன்றுகொண்டிருந்தவர்; ஸ்திரீயையே ஈஸ்வரனாகக் கொண்டாடிக்கொண்டிருந்தவர். இவர் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய கிருபையினாலே வாழ்க்கை மாறி, பிற்கா

லத்திலே மகாத்மாவாய்விட்டார். “நல்லது, பிறரிடத்திலே நூற்றுக்கு இவ்வளவென்று புத்தி யிருக்குமானால், கிரீசருடைய புத்தி நூற்றுக்கு நூற்றைம்பதாயுள்ளது” என்றார் ஸ்ரீ ராமகிருஷ்ணர். இவர் வங்காளி பாஷையிலே எண்பது நாடகங்கள் வரையில் இயற்றியுள்ளார். இவருடைய பெயர் வங்கதேசத்திலே பால்மணம் மாறாப் பச்சைக் குழந்தைக்கும் தெரியும். இவருடைய பாடல்கள் தெருவிலே வண்டிக்காரர்களால் கூடப் பாடப்படுகின்றன.

ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு மிகமிகப் பிரியமான சிஷ்யரான இன்னொருவர் மதுரநாதர்; இவர் ராணிரஸமணி தேவியினுடைய மருமகப்பிள்ளை. இவர்தாம் ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு முதல்முதற் சிஷ்யர். இவரைப்பற்றி நாம் முன்னமேயே வெகுவாக எடுத்துக் கூறியிருக்கிறோம்.

காளிபாதகோஷ் என்பவர் இன்னொரு பக்தர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் மூன்றுபெயர்களைப் பரமசிவனுடைய தானவர்கள் என்று கூறுவது வழக்கம். இந்தத் தானவர்களுள் ஒருவர் காளிபாதகோஷ்; சுரேந்திரரும் கிரீசரும் மற்றிரண்டு தானவர்களாம். இவர்கள் ஆஜானுபாஹுக்களாய், ராக்ஷஸர்களினதுபோன்ற சரீரக்கட்டு வாய்ந்தவர்களாய், அபாரமான திடசித்தம் உள்ளவர்களாயிருந்ததினால், ஸ்ரீ ராமகிருஷ்ணர் இவர்களைத், “தானவர்கள்” என்றார். தவிர, இம்மூவரும் உலக போகங்களிலே அழுந்திக் கிடப்பவர்கள்; சிற்றின்பமே மேலெனக் கொண்டவர்கள்; மதுபானப்பிரி



யர்கள்; உலகமானது பாபிகளென்று அழைப்பதற்குத் தகுந்த லக்ஷணங்கள் வாய்ந்தவர்கள். இவர்கள் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் வந்து, அவரிடத்தில் பக்திபூண்டது ஆச்சரியமே; இவர்கள் தங்களுடைய உலக யுக்திகளையும் அநுபவங்களையும் ஆதாரமாகக்கொண்டு ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் வந்து வாதுக் கழைத்தார்கள்; இவர்களுள் ஒருவர் தம்மை ஸ்ரீ ராமகிருஷ்ணர் சீர்திருத்தும்படி செய்யாவிட்டால், அவரை லகுவில் விடுவதில்லையென்று பயமுறுத்தவும் செய்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் புன்னகையுடனே அவர்களுக்கு நல்வரவு கொடுத்து, மெல்ல மெல்ல அவர்களுடைய இச்சைகளையும் வாசனைகளையும் மாற்றி, அவர்கள் ஆத்மஞானம் அடையுமாற்றை உபதேசித்தார். அவர்கள் பாபம் செய்வதிலே எவ்வளவு தீவிரமும் திடசங்கற்பமு முடையவர்களாயிருந்தார்களோ, அவ்வளவு இப்பொழுது சீர்திருந்திக்கொள்வதிலும் தீவிரமும் திடசங்கற்பமு முடையவர்களானார்கள். அவர்களுடைய பாபங்களெல்லாம் பறந்தோடிவிட்டன; அவர்கள் எல்லோரும் மகாத்மாக்களாய்விட்டார்கள்.

ஸ்ரீ ராமகிருஷ்ணரிடத்திலே ஒரு விசேஷகுண மிருந்தது. தம்மிடம் வருபவருடைய பக்குவநிலையை யறிந்துகொண்டு அவரவர்க்கேற்ப உபதேசிப்பார். அவர் பாபிகளிடத்திலே அவர்களுடைய பாபங்களின் மூலமாகப் பேசுவார்; உலக நிந்தைக்கு மிகமிகப் பாத்திரமான புருஷர்களும் ஸ்திரீகளுமெல்லோரும் தம்மிடம் தாராளமாக வரு

தற்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் இடங் கொடுத்தார். இதனால், அவரைக் குறை கூறினவர்கள் அநேகர் உண்டு.

பின்னர், மகேந்திரநாத குப்தர் இன்னொரு சிஷ்யர். இவர் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய உபதேசங்களை ஆங்கிலத்திலும் வங்காளி பாஷையிலும் என்றென்றும் எல்லோருக்கும் பயன்படும்படி புத்தகரூபமாக எழுதிப் பிரசுரித்து, அழியாக்கியாதியை யடைந்திருக்கிறார். இவர் மிகமிக அதிக விநயமுள்ளவர். இவர், பெயருக்கு ஆசைப்படாமல் தமது புத்தகத்தை வெளியிட்டிருப்பதே இவருடைய விநயத்தை நிரூபிக்கிறது. இவர் ஒரு பெரிய பரோபகாரி. நமது பிள்ளைகளின் கல்வி விஷயத்திலே மிகுந்த ஊக்கமும் சிரத்தையுமுள்ளவர்; மார்ட்டன் கலாசாலையென்று ஒரு பெரிய பள்ளிக்கூடமொன்று நடத்திக்கொண்டுவருகிறார். ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய ஜீவிதத்தையும் உபதேச மொழிகளையும் மிக ஜாக்கிரதையாக அவ்வப்போது கவனித்துக் குறித்து வைத்திருந்து இப்பொழுது அவற்றை உலகோபகாரார்த்தமாகப் புத்தகரூபத்தில் வெளியிட்டிருக்கிறார். ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய உபதேச மொழிகளை உலகம் கேட்டறிவதற்குக் காரணமாயிருந்தவர் இவரே; உலகம் இவரிடத்து மிக மிகக் கடமைப்பட்டிருக்கிறது.

இன்னும் ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு, எத்தனையோ கிரகஸ்த சிஷ்யர்கள் இருந்தார்கள். அவர்களில் முக்கியமானவர்கள் சிலருடைய பெயர்களை யிங்குக் குறிப்பிடுவோம். அவர்களாவன:—மனமோஹனர், கேதாரர், சிஷோரி, தேவேந்திரர், அக்ஷயர், நவகோபாலர், அதுலர், நவசைதந்யர், மஹேந்திரமுக்கர்ஜி, பிரியமுக்கர்ஜி, விபினர், நித்தியகோபால கோஸ்வாமி, அதாரர், வைகுந்தர், உபேந்திரர், ஹரமோஹனர்.



கிரகஸ்த சிஷ்யர்களுக்குள்ளே வாலிபர்கள் சிலர் இருந்தார்கள். இவர்களுக்குள்ளே பூர்ணச்சந்திரகோஷ் என்பவர்மீது ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு அத்தியந்தப்பிரியம். "நரேந்திரன் மாம்பழங்களுக்குள்ளே மிகமிகச் சிறந்த பழமானால், இவன் (பூர்ணச் சந்திரகோஷ்) அடுத்தபடி சிறந்த பழமாம்" என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறுவார். இந்த வாலிப கிரகஸ்த சிஷ்யர்களுள் முக்கியமானவர்கள் சிலருடைய பெயர்களாவன:—நரேந்திரநாதமித்ரர் (இவரை ஸ்ரீ ராமகிருஷ்ணர் "சோட்டா நரேந்திரர்" அதாவது, "சின்ன நரேந்திரர்" என்று கூப்பிடுவார்), தாரகர், பவநாதர், பிரமதநாதர், நாராயணர், நித்தியகோபாலர்.

இனிமேல் இவ்வுலகில் ஆங்காங்குச் சென்று ஸநாதன தர்மத்தினுடைய மகிமையை எடுத்துரைத்து எல்லோருக்கும் அறிவையும் அன்பையும் ஊட்டுவதற்கு ஸ்ரீ ராமகிருஷ்ணராலே தயார் செய்யப்பட்ட சந்நியாசிச் சிஷ்யர்கள் சிலரைப்பற்றிக் கூறுவோம்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் அத்தியந்த பிரியத்துடனே தமது ஞான புத்திரனைப் பாவித்துப் பரிபாலித்துவந்த ரகலர் "ஸ்வாமி பிரஹ்மாநந்தர்" எனப் பெயர் பெற்று ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துக்கு முதல் அதிபதியானார்.

பாபுராம் என்பவர் "ஸ்வாமி பிரேமாநந்தர்" ஆனார்.

யோகீந்திரர் என்பவர் "ஸ்வாமி யோகாநந்தர்" ஆனார்.

நித்திய நிரஞ்ஜனர் என்பவர் "ஸ்வாமி நிரஞ்ஜனாநந்தர்" ஆனார்.

சாரதர் என்பவர் "ஸ்வாமி சாரதாநந்தர்" ஆகி, அமெரிக்காவுக்குச் சென்று ஆத்மஞான போதனை செய்தார். இவர் ஸ்ரீ ராமகிருஷ்ண தர்மாலயத்துக் கார்யதர்சி.

ஸோஷி என்பவர்: தமது வாலிபத்திலே சம்சயவாதத்தைப்பற்றி ஒருநூல் எழுதினார். இவர் "ஸ்வாமி ஸ்ரீ ராமகிருஷ்ணாநந்தர்" ஆகி, சென்னையிலேயுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தை ஸ்தாபித்தார். இவர் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய அந்தியகாலத்திலே தமது ஊண், உறக்கம் முதலியவற்றை வெறுத்து, ஸ்ரீ ராமகிருஷ்ணர் பக்கல்நின்று பணிவிடை செய்வதொன்றையே விரதமாகக் கொண்டிருந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய மற்ற சிஷ்யர்கள் இவருக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணரிடத்துள்ள தாச பாவத்தைப் பார்த்து இவரை, "ஹநுமான் மகாவீரன்" என்பார்கள். இன்னும் இவர் தமது சகோதர சிஷ்யர்களுக்குத் தாய்போல வேண்டியன செய்து அவர்களைப் பராமரித்துவந்தார். இவருடைய குருபக்தி அளவிடற்கரியது. குருபக்தி யின்னதென உலகுக்குக் காண்பிப்பதற்கு உருவெடுத்து வந்தவரோவென்று பிறர் பார்த்து ஆச்சர்யப்படும்படி அவ்வளவு பக்தி செலுத்திவந்தார் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடத்தில்.



ஹரி என்பவர் "ஸ்வாமி துர்யாதீதர்" ஆகி, அமெரிக்காவுக்கு ஆத்மஞான உபதேசம் செய்யச் சென்றார்.

கோபால்—தா என்பவர் "ஸ்வாமி அத்வைதாநந்தர்" ஆகினார்.

காளி என்பவர் "ஸ்வாமி அபேதாநந்தர்" ஆகி, அமெரிக்காவுக்குச் சென்று, ஒரு வேதாந்த ஆலயம் ஸ்தாபித்து வேதாந்த போதனை செய்தார்.

தாரகர்: "ஸ்வாமி சிவாநந்தர்" எனப் பெயர் பெற்று, காசி ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துக்கு அக்கிராசனரானார்.

கங்காதரர் என்பவர் "ஸ்வாமி அகண்டாநந்தர்" ஆகி, மூர்ஷிதாபாத் ஜில்லாவிலே அநாதைப் பிள்ளைகளுக்கு ஒரு பள்ளிக்கூடமும் கைத்தொழில் கற்றுக் கொடுப்பதற்கு ஒரு பள்ளிக்கூடமும் ஏற்படுத்தினார்.

சாரதர் என்பவர் "ஸ்வாமி திரிகுணாதீதர்" ஆகி, அமெரிக்காவுக்குச் சென்று வேதாந்த உண்மைகளைப் போதித்து, அமெரிக்காவிலே முதலாவது ஹிந்து க்ஷேத்திரமொன்றை ஸ்தாபித்தார்.

லட்டு என்பவர் "ஸ்வாமி அற்புதாநந்தர்" ஆனார்.

துளசி என்பவர் "ஸ்வாமி நிர்மலாநந்தர்" ஆகி, பெங்களூர் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துக்கு அக்கிராசனாதிபதியாயிருக்கிறார். இவரும் அமெரிக்காவுக்குச் சென்று வேதாந்த வியாபகத்தின்பொருட்டு வேலை செய்தவர்தான்.

சுபோதர் என்பவர் "ஸுபோதானந்தர்' ஆனார்.

இத்தனை சந்நியாசிச் சிஷ்யர்களும், "சாக்ஷாத் நிர்க்குணப் பிரஹ்மவஸ்துவே ஸ்ரீ ராமகிருஷ்ண சொரூபமாகச் சகுணமூர்த்தமாய் விளங்கிற்று" என்று நம்பி, பக்தி செலுத்துகிறார்கள். இன்னும் இவர்கள் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய போதனைகளை உலகெங்கும் பரப்பி, இந்தியாவுக்கு ஒரு நூதன மகிமையை அளித்துவிட்டார்கள்.

---

## 22-வது அத்தியாயம்
## நரேந்திரருடைய குருபக்தி

நரேந்திரர் சம்சயவாதியாகி, உண்மையைக் கண்டுபிடிக்க முடியாமல், அவருடைய பந்து ஒருவர் மூலமாகக் கடைசியாக ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் வந்து சேர்ந்தாரென்று முன்னமேயே கூறியிருக்கிறோம். நரேந்திரருக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய வெளிவடிவமும் நாகரிகமற்ற விகாரமான வடிவமும் உடையும் சற்றும் பிடிக்கவில்லை; ஆயினும், அவருடைய இருதயம் அவரைப்பற்றி நிற்கின்றது. அவருடைய வாயிலிருந்து வரும் மொழிகள் கரடுமுரடாயிருக்கின்றன; நேர்த்தியாயில்லை. ஆயினும், காதுக்குக் கரடுமுரடாயிருந்தாலும், காதின்வழியாக உள்ளே நுழைந்தமாத்திரத்தில் ஒருவித உள்ளப் பூரிப்பை யளிக்கின்றது. இதன் பொருள் நரேந்திரருக்கு முதலில் விளங்கவில்லை. 'ஸ்ரீ ராமகிருஷ்ண ரிடத்தில் ஏதோ ஒரு அற்புதமான சக்தி



யிருக்கிறது' என்று மாத்திரம் நரேந்திரர் சீக்கிரம் தெரிந்துகொண்டார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணரைச் சுற்றித்தான் ஆனந்தம் வீசுகிறது; அவருடைய சந்நிதானத்திலே துக்கமென்பதும் தோன்றுமோ? நரேந்திரருடைய பிதாவின் மரணத்துக்குப் பின்னர், அவருடைய குடும்பமானது சகிக்கொணாத வறுமையிலே ஆழ்ந்துவிட்டது; தினந்தோறும் ஒருவேளை ஆகாரமும் வயிறு நிரம்பக் கிடைப்பது அரிதாய்விட்டது. விவேகானந்தர்—நரேந்திரர்—இப்பொழுது எதிர்த்து நிற்க வேண்டிய கஷ்டங்கள் பல உண்டாயின. வீட்டுக்கு இவரே மூத்தவர்; ஆதலால், எல்லோருக்கும் ஆகாரம் தேடி யளிக்கக் கடமைப்பட்டவர். என்ன செய்வார்? பாவம்! இவரோ ஈஸ்வர நாட்டத்தி லிருக்கின்றார்; இவருடைய குடும்பமோ பட்டினிப் பிணியால் வருந்துகின்றது. நரேந்திரருக்குக் கஷ்டங்கள் பொறுக்க முடியாமல், சிலவேளைகளில் ஏக்கத்தி லாழ்ந்துவிடுவார்; தக்ஷிணேஸ்வரத்திலேயுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ணரை நினைந்துக்கொள்வார்; உடனே பாதி கவலைகள் பறந்துவிட்டனபோலத் தோன்றும். "ஸ்ரீ ராமகிருஷ்ணரைச் சுற்றித் துக்கம் என்பது அண்டக்கூடாதே; அங்குச் சென்றால் சிறிது விஸ்ராந்தி பெற்றிருக்கலாம்" என்று கருதி, நரேந்திரர் தக்ஷிணேஸ்வரத்திலே ஸ்ரீ ராமகிருஷ்ணர் நிஷ்டையி லுட்கார்ந்திருக்கும் இடம் நோக்கி ஓட்டமாக ஓடுவார். அந்தோ! கல்கத்தாவிலிருந்து வழிமுழுதும் நரேந்திரர் ஓடியே வந்தார். ஓடிவந்த வேகத்திலும் ஆத்தி

ரத்திலும் அவர் கால்களிலே அணிந்திருந்த செருப்புக்களில் ஒன்று எங்கோ கால்களினின்றும் நழுவிவிட்டது; அவர் அதைக் கவனிக்கவேயில்லை; ஒற்றைக்கால் செருப்புடனே ஓடிவந்திருக்கிறார். நேர்வழியே போனால் சிறிது தூரமென்று நினைத்து, நரேந்திரர் குறுக்குவழியாகக் காட்டினூடே நுழைந்து ஓட, அவருடைய உடைகள் புதர்களாலும் முட்செடிகளாலும் கிழிபட்டன. இத்தகைய பரிதாபகரமான நிலைமையுடனே நரேந்திரர் ஸ்ரீ ராமகிருஷ்ணர் முன்னே சென்று நின்று, "ஸ்வாமி! நான் என்ன செய்வேன்? நான் என்ன செய்வேன்? உங்களால் முடியுமானால் என்னை ரக்ஷியுங்கள்; இந்தப் பயங்கரமான கதியிலிருந்து என்னைக் காப்பாற்றுங்கள்; நான் ரக்ஷைப்படுதற்கு வழியே யில்லைபோலத் தோன்றுகிறதே" என்று கதறினார்; உடனே ஓடிவந்த களைப்பினாலே மூர்ச்சித்து விழுந்துவிட்டார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவரைத் தூக்கியெடுத்து உட்காரவைத்து, அவருக்கு மூர்ச்சை தெளியும்படி செய்யவே, நரேந்திரர், "ஸ்வாமி! என்னை ரக்ஷிக்கவேண்டும், என்னை ரக்ஷிக்கவேண்டும்" என்றார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் அன்புடனே நரேந்திரரை நோக்கி, "புத்திரா! க்ஷேத்திரத்தினுள்ளேசென்று ஜகன்மாதாவை நோக்கிப் பிரார்த்தனை செய்; உனக்கு யாது வேண்டுமோ அதை யவள் அளிப்பாள்" என்றார். நரேந்திரர் க்ஷேத்திரத்தினுள்ளே சென்றார். அவர் வெளியே வந்தபொழுது, வேற்றுருப் பெற்றிருந்தார். அன்றுமுதல் நரேந்திர



ருடைய குடும்பமானது காலக்ஷேபத்துக்குக் கஷ்டமின்றி வாழ்ந்தது.

"ஆகாசத்திலிருந்து விழுகின்ற மழைத்துளிகள் எங்கே விழுந்தபொழுதிலும், எல்லாம் சமுத்திரத்தையே போய்ச் சேர்கின்றனபோல, எல்லாத் தேவர்களையும் நோக்கிச் செய்கின்ற நமஸ்காரமானது சாக்ஷாத் கேசவனையே போய்ச் சேர்கின்றது." இது ஹிந்துமத கிரந்தங்களிலேயுள்ள ஒரு ஆணித்தரமான உண்மை. "ஏகம் ஸத்; விப்ரா பெகுதா வதந்தி"—"ஒன்றேயுள்ளது; பெரியோர் பலவிதமாகக் கூறுகிறார்கள்"—இது ஸ்ருதிகோஷம். இத்தகைய உலகு முழுதும் அணைத்து ஒற்றுமையை உண்டாக்கக்கூடிய உண்மைகள் நமது கிரந்தங்களிலே நிறைந்திருந்தும், நமது வேதாந்திகளும் அறிவாளிகளும் இவற்றையநுபவத்தில் கொண்டுவரவும் பிறருக்குப் போதிக்கவும் செய்யாது, கிணற்றுத் தவளைகள்போலக் குறுகிய எண்ணங்களையே கொண்டு, அவற்றுக்கேற்ற மேற்கோள்களையெடுத்துக் காட்டி உலகை மயக்கி ஏமாற்றிவிடுகிறார்கள்.

"ஸ்வாநுபூதி யடைதற்கு—ஆத்மாநுபூதி யடைதற்கு—பிரஹ்மாநுபூதி யடைதற்கு—எல்லா மதங்களும் மார்க்கங்களேயாம்" என்று உலகுக்கு ஒளியாமல் எடுத்துரைத்தவர் நரேந்திரராகிய ஸ்வாமி விவேகாநந்தரே யாவர். "மதமென்பது வெளிவேஷமன்று; சடங்குக் கிரியைகளல்ல; கோட்பாடுகளுமல்ல; ஸ்வாநுபூதியே மதத்தினுடைய லக்ஷியமாம்" என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் அடிக்கடி தமது சிஷ்யர்

களுக்கு வற்புறுத்தி உபதேசித்துவந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் பல வேறு மதங்களையும் அநுபவத்திலே அப்பியசித்து, அவையெல்லாம் இட்டுச் செல்லும் லக்ஷியம் ஒன்றேயென்று தமது அநுபவத்திலே தெளிவாகக் கண்டுகொண்டாராதலால், அவர் தமது சிஷ்யர்களுக்கு அவ்வுண்மையையே—"ஏகம் ஸத்; விப்ரா பெகுதா வதந்தி" என்னும் உண்மையையே—தமது போதனைகளுக்கெல்லாம் அஸ்திவாரமாகப் போதித்துவந்தார். இதை நன்றாய்க் கிரகித்துக்கொண்டவர் நரேந்திரரேயாவர். இப்பேருண்மையைத் தமக்குத் தெளிவுற உபதேசித்து உய்வித்த பிரபுவினிடத்திலே நரேந்திரருக்கு எவ்வளவு பக்தியிருக்கவேண்டும்?

சம்சயவாதியாகிய நரேந்திரருக்கு—கிறிஸ்தவ மதச் சார்பினதாயேற்பட்ட பிரஹ்மசமாஜத்து அங்கத்தினராகிய நரேந்திரருக்கு—ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சகவாசம் எவ்வளவு பெருமையையும் நன்மையையும் அளித்தது என்பதை நரேந்திரருடைய ஜீவிதசரித்திரத்திலே காணலாம். ஆநந்தமும் அநுபவமும் நிறைந்த இவ்வாகாயத்திலே இடைவிடாமல் வசிக்கும் நரேந்திரர் ஆத்மீக சக்திகளை ஆச்சர்யமான வேகத்துடனே அபிவிருத்தி செய்துகொள்ள வேண்டியது இயற்கைதானே. சாதாரண சிஷ்யன் பெறும்படியான உபதேசமும் பயிற்சியுமா நரேந்திரர் அடைந்தார்? அவர் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய பிரக்ஞாஸ்திதிகளையெல்லாம் வெகுவேகமாக அடைந்துவிட்டார். ஆ! ஆ! நரேந்திரருக்கு



ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் ஏற்பட்ட மதிப்புக்கு ஓரளவேயில்லை. அவர் தமது குருவுடனே வாதுபுரிவார்; சத்தமிடுவார்; சண்டை செய்வார்; ஆனால், ஸ்ரீ ராமகிருஷ்ணரைப்பற்றி அவர் வேறு எவரிடத்தும் பேசும்படி நேரிட்டவிடத்து, அவரை மிகமிக உயர்வாகவே பேசி, அவரை அவதார புருஷரென்று மெச்சுவார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய அநுபவங்கள் பொய்யென்று எவரேனும் நரேந்திரருடைய காது கேட்கச் சொல்லத் துணிவாரானால், அவர் நரேந்திரரிடமிருந்து தப்பித்துக்கொண்டு செல்லுதல் துர்லபம். நரேந்திரர் அப்படிச் சொன்னவரை வாதுக்கழைத்து, அவருடைய "பொய்"க் கூற்றை ருசுப்படுத்தும்படி கூப்பிடுவார். திருஷ்டாந்தமாக: ஸ்ரீ ராமகிருஷ்ணர் தக்ஷிணேஸ்வரத்திலிருந்து சிகிச்சையின் பொருட்டு கல்கத்தாவிலுள்ள ஸ்யாம்புகூர் கிரகத்துக்குக் கொண்டுபோகப்பட்டிருந்தபொழுது, பெயர் பெற்ற ஒரு வைத்தியர் ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குச் சிகிச்சை செய்ய வந்தார். இவர், "எல்லா மனிதர்களும் சமமானவர்களே" என்றும், "மற்றவர்களினும் உயர்ந்தவரல்லர்" என்றும், "ஆதலால், ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய பாதங்களிலே விழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரிப்பது கூடாது" என்றும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் முன்னிலையிலேயே கூறி, தமது கூற்றை அநுபவபூர்வமாக உண்மைப்படுத்துவதற்காக, அந்த வைத்தியர் ஸ்ரீ ராமகிருஷ்ணரை மாத்திரம் அன்று, அங்கிருந்த எல்லோரையுமே சாஷ்டாங்கமாகப் பணிந்தார். ஸ்ரீ ராமகிருஷ்

ணரை சாக்ஷாத் ஈஸ்வரன் போலவே, ஈஸ்வரனாகவே கருதி வந்த சிஷ்யர்களும் பக்தர்களும் "இந்த வைத்தியருக்கு எப்படிப் பதிலுரைப்பது?" என்று தெரியாமல் விழித்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது நரேந்திரர் அந்த வைத்தியரை நோக்கி, "ஐயா, நாங்கள் குருமூர்த்தியை ஈஸ்வரன் போன்ற ஒரு புருஷரென்று கருதுகிறோம்; எனது அபிப்பிராயத்தை நான் தங்களுக்குத் தெளிவாக்குகிறேன்; தாவர சிருஷ்டிக்கும் மிருக சிருஷ்டிக்கும் இடையே ஓரிடத்தில் ஒரு வஸ்து மிருகமா அல்லது செடியா என்று கூறுவது கஷ்டமான ஒரு இடம் உள்ளது. அதுபோலவே மனுஷ்யவுலகத்துக்கும் ஈஸ்வரவுலகத்துக்கும் இடையே ஒருவர் மனுஷ்யனா அல்லது ஈஸ்வரனா என்று நிச்சயமாய்ச் சொல்ல முடியாத ஓரிடமுண்டு; நாங்கள் அவரை ஈஸ்வரனாகக் கருதவில்லை; ஆனால், ஈஸ்வரன் போன்ற ஒரு புருஷனாகக் கருதுகிறோம்; ஆகையால், நாங்கள் ஈஸ்வரனைப் பூஜிப்பது போலவே அவரையும் பூஜிக்கிறோம்" என்றார். இப்பொழுது ஈஸ்வரன் போன்று ஸ்ரீ ராமகிருஷ்ணரைக் கருதி வந்த நரேந்திரர் இன்னும் கொஞ்சக் காலத்துக்குள்ளே ஸ்ரீ ராமகிருஷ்ணரை ஈஸ்வரனாகவே கருதிவிடுகிறார்.

நரேந்திரருடைய சம்சயங்களெல்லாம் பறந்துவிட்டன; குயுக்திகளெல்லாம் ஓடிவிட்டன; ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய உண்மைப் பெருமையை அறிந்துவிட்டார்; ஸ்ரீராமகிருஷ்ணரிடத்திலே தம்மை அர்ப்பணமாக ஒப்புவித்துவிட்டார். "படிப்பும் பேச்சும் மற்றெல்லாம் பயனற்றவையே



ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய கிருபையொன்றே வேண்டியது" என்று நரேந்திரர் கண்டு தெளிந்துகொண்டார்.

ஒருநாள் நரேந்திரர் ஸ்ரீ ராமகிருஷ்ணர் முன்னிலையில் உட்கார்ந்திருந்தார். ஸ்ரீராமகிருஷ்ணர் அப்பொழுது ஏதோ ஒரு பெரிய வேதாந்த விஷயத்தைப்பற்றி விரித்துரைத்து வியாக்கியானம் செய்துகொண்டிருந்தார். நரேந்திரருடைய மனமானது எதையோ சிந்தித்துக்கொண்டிருந்தது போலத் தோன்றிற்று. ஸ்ரீ ராமகிருஷ்ணர் நரேந்திரரை நோக்கி, "எனது புத்திரா! கவனித்துக் கேள்" என்றார். நரேந்திரர் ஸ்ரீ ராமகிருஷ்ணரை நிமிர்ந்து பார்த்தார். ஸ்ரீராமகிருஷ்ணருடைய பார்வையிலே அன்பு ஜ்வலித்தது; ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய வார்த்தைகளிலே அன்பு கசிந்தது. நரேந்திரரை, "கவனித்துக் கேள்" என்று சொல்லி, ஸ்ரீ ராமகிருஷ்ணர் கெஞ்சிக் கேட்டுக்கொண்டதுபோலிருந்தது. நரேந்திரர், "நான் தாங்கள் பேசுவதைக் கேட்க இங்கே வரவில்லை" என்றார். ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குச் சிறிது மனவருத்தமுண்டாயிற்று; "அப்படியானால் நீ எதற்குத்தான் வந்தாய்?" என்றார் குருமூர்த்தி. நரேந்திரருடைய ஹிருதயமும் கரைந்தது. "நான் தங்கள் முகமாக ஆகருஷிக்கப்படுகிறேனாகையினாலே, நான் தங்களை நேசிக்கிறேனாகையினாலே, நான் தங்களைத் தர்சிக்க வந்திருக்கிறேன்" என்றார் நரேந்திரர். உடனே ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய முகத்திலே புன்னகை பொலிந்தது. அவர் ஆநந்தக் கிளர்ச்சியுடனே எழுந்திருந்து, நரேந்திரரை யணுகி,

அவரை யணைத்துக்கொண்டார். நரேந்திரருக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் பிரஹ்ம தர்சனமாகிய ஞான வாழ்க்கையே ஆய்விட்டார்; நரேந்திரருக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஞான திருஷ்டியின் அவதாரமே யாய்விட்டார்; மௌனகோஷமே யாய்விட்டார். இதோ நேருக்கு நேரே, பிரத்தியக்ஷத்தில் ஈஸ்வரத்தன்மை நிறைந்த ஒருவர் இருக்க, வேறு அவதார புருஷர்களைப்பற்றி ஏன் நினைக்கவேண்டிய?

நரேந்திரர் ஸ்ரீ ராமகிருஷ்ணர் முகத்தை யுற்றுப் பார்த்துக்கொண்டே யிருப்பார். சத்தியமே விரிந்து உலகமா யிருப்பது தோன்றும். நரேந்திரருக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் சத்திய கிரந்தமேயா யிருந்தார். ஈஸ்வர நாமமானது ஸ்ரீ ராமகிருஷ்ண வடிவமாகப் பிரத்தியக்ஷானுபூதியில் வந்திருப்பதாகக் கண்டார். "ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஈஸ்வர புருஷரே" என்பதை யுணர்ந்தார். க்ஷேத்திர தர்சனம் எதற்கு? இதோ நேரே தேவி பேசுகிறாளே! இதோ குருமூர்த்தியினுடைய அநுபவத்திலே ஈஸ்வர சாந்நித்தியம் விளங்குகிறதே. ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சந்நிதானத்திலே துக்கத்துக் கிடமேது? துன்பத்துக் கிடமேது? கவலைகட்கு இடமேது? தொந்தரவுகட்கு இடமேது?

ஒரு சமயத்திலே நரேந்திரர் ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பற்றித் தமது சகோதர சிஷ்யர்களிடத்திலே, "எனது அபிப்பிராயத்தை நீங்கள் கேட்டால், அவர் அன்பின் அவதாரமே யென்று நான் சொல்வேன்" என்றார்.



நரேந்திரருக்குத் தாம் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடத்திலே சிஷ்யராகும்படியான பாக்கியமடைந்து விட்டதைப்பற்றி மிகவும் கர்வம் உண்டாகும். தாம் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சிஷ்யர், தாம் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சிஷ்யர் என்று எப்பொழுதும் இதே ஞாபகமா யிருப்பார். இந்தக் கர்வத்திலே இவருக்கு ஒரு கம்பீரத் தோற்றம் உண்டாயிற்று; ராஜ நடைபொன்று தோன்றிற்று; தெருவிலே செல்லும்பொழுது, அலக்ஷியமாக அசைந்து ஆடி யானை நடப்பதுபோல நடப்பார்; ஜனங்கள் நின்று இவரைப் பார்ப்பார்கள். இவருள்ளே தாம் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சிஷ்யர் என்ற எண்ணம் இருக்கிறபொழுது, வேறு எவர் லக்ஷியம்?

ஒரு சமயத்திலே நரேந்திரருடைய குடும்ப வறுமையும் கஷ்டங்களும் பொறுக்கமுடியாமற்போய்விடவே, நரேந்திரர், "குடும்பத்தை ஈஸ்வரன்வசம் ஒப்புவித்துவிட்டு, எங்காவது ஓடிவிடுவது, எங்காவது ஓடிவிடுவது" என்று தீர்மானித்துவிட்டார். நரேந்திரர் ஒரு போர்வையையும் ஒரு லோட்டாவையும் எடுத்துக்கொண்டு வீட்டைவிட்டுப் புறப்பட்டார். அப்பொழுது ஒருவர் அவரிடத்திலே ஸ்ரீ ராமகிருஷ்ணர் கல்கத்தாவுக்கு வந்திருப்பதாகவும், சமீபத்திலே ஒரு பக்தருடைய கிரகத்தில் இருப்பதாகவும் சொல்ல, நரேந்திரர், "இந்தக் கிழவர் என்மீது கொஞ்சம் அன்பு வைத்திருக்கிறாரே; ஆதலால், நான் இந்தப் பயங்கரமான நிலைமையில் இருக்கிறபடியால் திரும்பி வருவேனோ, வர

மாட்டேனோ? தெரியவில்லை. ஆதலால் இந்தக் கிழவரையும் கடைசியாக ஒருமுறை பார்த்துவிட்டுப் போய்விடுவோம்'' என்று ஆலோசனை செய்துகொண்டு, ஸ்ரீ ராமகிருஷ்ணர் வந்திருந்த இடம் தேடிச் சென்றார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவருடைய நினைப்பை யறிந்துகொண்டு அவரை தக்ஷிணேஸ்வரத்துக்குக் கூடவே யிட்டுச் சென்று அன்றிரவு அவருக்குச் சில தியான மார்க்கங்களை உபதேசம் செய்தார். அன்றுமுதல் நரேந்திரருடைய மனத்துன்பம் நீங்கிவிட்டது.

நரேந்திரர் முதல் இரண்டு வருஷங்கள் தக்ஷிணேஸ்வரத்துக்கு அடிக்கடி வந்துகொண் டிருந்தார்; மூன்றாவது வருஷத்திலே இன்னும் அதிகமாக வரத் தொடங்கினார்; நான்காவது வருஷத்திலே இடைவிடாமல் வந்தார்; ஐந்தாவது வருஷத்திலே ஸ்ரீராமகிருஷ்ணர் மகாசமாதி யடைந்தவரையில், தக்ஷிணேஸ்வரத்திலே அல்லது குரு இருக்கும்படி நேரிட்ட வேறிடங்களிலே குருவைவிட்டுப் பிரியாது குருவுடனேயே வசித்துவந்தார்.

நரேந்திரர் ஸ்ரீராமகிருஷ்ணரை நன்றாக அறிந்துகொண்டார்; "மூளைவியாதி பிடித்த கிழவரை" இப்பொழுது 'ஜீவரக்ஷகர்' என்றும், 'ஈஸ்வராவதாரம்' என்றும் கருத ஆரம்பித்தார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது அந்திய காலத்திலே ஒரு பெரிய தொண்டைப் பிளவையினால் அவஸ்தைப்படும்



படி நேர்ந்தது. அப்பொழுது ஆகாரம் சரியாக உள்ளே யிறங்குகிறதில்லை; கஞ்சி யிறங்குவதே கஷ்டமாயிருந்தது. டாக்டர் மஹேந்திரலால் சர்க்கார்—இவர் வங்காளத்திலே பெயர் பெற்ற வைத்திய சிரோன்மணியும் பொது ஜன உபகாரியுமாம்—ஸ்ரீராமகிருஷ்ணருக்குச் சிகிச்சை செய்து வந்தார். ஒருநாள் டாக்டர் மஹேந்திரலால் சர்க்கார், ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குச் சிகிச்சை செய்ய வந்தபொழுது, நரேந்திரர் அங்கேயில்லை; அவர் எங்கோ, ஏதோகார்யார்த்தமாகவெளியே சென்றிருந்தார். மற்ற சிஷ்யர்கள் அனைவரும் ஸ்ரீ ராமகிருஷ்ணரைச் சூழ்ந்திருந்தார்கள். டாக்டர் மஹேந்திரலால் சர்க்கார் ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குச் செய்ய வேண்டுவனசெய்து முடித்துவிட்டு, அங்கிருந்து புறப்படும்பொழுது சிஷ்யர்களைத் தனியே அழைத்து, வியாதி தொத்துவியாதி" என்றும், "ஆதலால் ஸ்ரீராகிருஷ்ணரிடம் நெருங்கிப் பழகுகிறவர்கள் ஜாக்கிரதையா யிருக்கவேண்டும்" என்றும் சொல்லிவிட்டுப் போனார். அவர் போனவுடனே, சிஷ்யர்கள் அந்த டாக்டர் சொன்ன விஷயத்தைப் பற்றி ஆலோசனை செய்துகொண் டிருந்தார்கள். அப்பொழுது வெளியே போயிருந்த நரேந்திரர் திரும்பிவந்தார். தமது சகோதர சிஷ்யர்கள் வாடிய முகத்துடன் ஏதோ ஆலோசனையி லாழ்ந்திருப்பதைக் கண்டு, அவர்களிடம் சென்று, "சங்கதி யென்ன?" என்று கேட்க, அவர்கள் டாக்டர் மஹேந்திரலால் சர்க்கார் தங்களிடம் கூறிவிட்டுப் போனதை நரேந்திரரிடம் சொன்னார்கள். நரேந்திரர், "ஏ, மூடர்களே! இதற்கா இவ்வளவு யோசனை செய்கிறீர்

கள்? உங்களுக்குக் குருபக்தி யென்பது கிஞ்சிற்றும் இல்லை; நீங்கள் இத்தனை வருஷகாலமாக இந்த ஈஸ்வராவதார புருஷனுடனே வசித்தும், உங்களுக்கு உலக மயக்கம் விடவில்லை; உங்களிடத்திலே உண்மையான ஞானாக்கினி யிருக்குமானால், இதுபோன்ற வியாதி ஆயிரம்தான் சேர்ந்தாலும் என்ன செய்ய முடியும்? அப்படியே உங்களுடைய சரீரங்களை வியாதி பிடித்துக்கொண்டாலும், போனால் போகட்டுமே; உங்களுடைய ஆத்மாவை வியாதி பிடிக்காது என்பது உங்களுக்கு நிச்சயமாகத் தெரியுமல்லவா? அப்படியிருக்க நீங்கள் ஏன் யோசனை பண்ணவேண்டும்?

"நமக்கு ஞானோபதேசம் செய்து அறிவூட்டி ஆனந்தமளித்த குருமூர்த்தியே வியாதியினால் பீடிக்கப்பட்டு வருந்த, நம்மை வியாதி பீடித்தாலாகாதோ? தேகாபிமானத்தை விட்டுவிடுங்கள்; தோல்மூடி நாட்டத்தைத் தொலைத்துவிடுங்கள்; வாருங்கள், நமது குருமூர்த்தியண்டை போகலாம்" என்று மற்ற சிஷ்யர்களையும் கூட்டிக்கொண்டு அங்குச் செல்ல, ஸ்ரீராமகிருஷ்ணர் பக்கத்திலே ஒரு பாத்திரம் வைக்கப்பட்டிருந்தது. அதிலே பாதி கஞ்சியும் இன்னும் கக்கலும் கரிசிலும் இருந்தன. நரேந்திரர் அதைப் பார்த்துவிட்டு, அங்கே சிசுருஷை செய்துகொண்டிருந்த ஒரு சிஷ்யரிடத்திலே, "இது என்ன?" என்று கேட்டார். அவர், "நமது குருநாதருக்குக் கஞ்சி கொடுத்தேன்; கஞ்சியுள்ளே யிறங்கவில்லை; அப்பாத்திரத்திலேயே நமது குருமூர்த்தி சிறிது வாந்தி யெடுத்தார்; இன்னும் அதைக்



கொண்டுபோய்க் கொட்டவில்லை" என்றார். அப்பாத்திரத்திலே தொண்டைப்புண்சீழ் அப்படியப்படியே கட்டிகட்டியாய் விழுந்திருந்தது. நரேந்திரர், மற்ற சிஷ்யர்களெல்லாரும் பார்த்துக்கொண்டிருக்க, அப்பாத்திரத்தை யெடுத்து, அதனுள்ளே யிருந்ததைத் தாம் குடித்துவிட்டார். எல்லோரும் பார்த்துப் பிரமித்து ஆச்சர்யப்பட்டார்கள். இதுவல்லவோ குருபக்தி? இத்தகைய குருபக்தர் உலகை ஜயித்தது ஒரு ஆச்சர்யமாமோ?

ஸ்ரீராமகிருஷ்ணர் வியாதியாய்ப் படுத்த படுக்கையில் இருக்கிறார். நாளுக்கு நாள் சரீரம் இளைத்துத் துரும்பாய் விட்டது. ஸ்ரீராமகிருஷ்ணர் அநுபவிக்கும் ரோகவேதனை பொறுக்க ஒண்ணாததாயிருக்கிறது. சிஷ்யர்கள் கதறுகிறார்கள். "அன்பே அவதாரமாய் வந்துள்ள குருமூர்த்தியினுடைய நோவைத் தணிப்பதற்கு நம்மால் முடியவில்லையே" என்று நரேந்திரர் ஏங்க ஆரம்பித்துவிட்டார். ஓர் இரவில் நரேந்திரருக்கு இதே வியாகுலம் மிகுந்து, அவர் பைத்தியம் பிடித்தவர்போலாய்விட்டார். தமது குருமூர்த்தியின் நோவை நிவிருத்தி செய்வதற்கு வல்லமையுள்ள கடவுள் உண்டா? இல்லையா? என்று பரீக்ஷித்துப் பார்த்துவிடுவதாக ஒரு சங்கற்பம் செய்துகொண்டார். மாலை நெருங்கிற்று; நரேந்திரர், "ராமா! ராமா!!" என்று ராமநாமத்தை உச்சரித்துக்கொண்டே அந்த வீட்டைப் பிரதக்ஷிணம் செய்ய ஆரம்பித்தார்; வர வர அவருடைய உச்சரிப்பின் சப்தம் உயர்ந்தது; உலகத்தை மறந்தார். "குருமூர்த்தி சொஸ்த

மடையவேண்டும்'' என்ற ஒரு தாபாக்கினி பிரமாதமாக அவருள்ளே எரிய ஆரம்பித்துவிட்டதாகத் தோன்றிற்று. இரவில் எங்கும் சப்தமடங்கிற்று; ஆனால், நரேந்திரருடைய ''ராமா! ராமா!!'' சப்தம் மாத்திரம் சற்றும் குறையாது, எங்கு ஒலியும் எதிரொலியுமாய் நிறைய ஆரம்பித்துவிட்டது. அர்த்தராத்திரிக்குமேலே ஆய்விட்டது; நரேந்திரருடைய 'ராமா! ராமா!!' கூச்சல் மாத்திரம் பெருகிற்று. ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு நரேந்திரருடைய சப்தம் காதிலே விழுந்தது. உடனே ஸ்ரீராமகிருஷ்ணர் நரேந்திரரைக் கூட்டிக்கொண்டு வரும்படி ஆக்ஞாபித்தார். ஒருவர் சென்று நரேந்திரரைக் கூப்பிட, அவர் கவனிக்கவேயில்லை. அவருக்கு உலகப் பிரக்ஞையே யில்லை. கடைசியாகச் சிலர் நரேந்திரரைப் பிடித்துக் கூட்டிக்கொண்டு வந்தார்கள்; அப்பொழுதும் அவர் ''ராமா! ராமா!'' என்று கூச்சலிட்டுக் கொண்டே யிருந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமக்கு அந்திய காலம் கிட்டிவிட்டதென்று அறிந்துகொண்டாராதலினாலே, நரேந்திரர் வீண்முயற்சி செய்கிறாரென்று தெரிந்து கொண்டு, மிகுந்த அன்பான பார்வையுடனே, ''எனது அரிய நரேந்திரா! இதெல்லாம் செய்வதில் பயன் இல்லை; நீ இன்றிரவு கழித்ததுபோல, எனது ஜீவிதத்தில் பன்னிரண்டு வருஷங்கள் கழிக்கப்பட்டன. அவை சுழல்காற்றுப் போலப் போய்விட்டன. புத்திரா! நீ ஓரிரவு முயற்சியினால் என்ன செய்யமுடியும்?'' என்றார்.

நரேந்திரருடைய குருபக்திக்கு உவமைகூற நம்மால் முடியவில்லை. நரேந்திரர் ஸ்வாமி விவேகானந்தரெனப்